# புதிய உடன்படிக்கை ஊழியன்

கிறிஸ்தவ ஊழியனின் ஒப்பற்ற தகுதி



சகரியா பூனன்

# புதிய உடன்படிக்கை ஊழியன்

(கிறிஸ்தவ ஊழியனின் ஒப்பற்ற தகுதி)

**சகரியா பூணன்**

"புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்"
(2 கொரி. 3:6)

* ஐந்தாம் பதிப்பு 2017

## மேய்ப்பனின் அடிச்சுவட்டில் . . .

1. அழைப்பு பெற்றவர்களையே ஆயத்தம் செய்கிறார்! – 5
2. தன் ஊழியர்களை கண்டிப்புடன் நடத்தும் தேவன்! – 13
3. மூப்பர்களை கடிந்து கொள்ளும் ஆண்டவர்! – 25
4. பிறர் பின்பற்றும்படியான மாதிரியான ஜீவியம்! – 47
5. பரிசுத்தாவியையே சார்ந்து கொள்ள வேண்டும்! – 66
6. பிறருக்கு ஓர் தகப்பனாய் இருந்திட வேண்டும்! – 90
7. மாசில்லா சபை கட்டும் பணி! – 104
8. தகுதியான புருஷர்களே தேவனுக்குத் தேவை! – 120

புதிய உடன்படிக்கை ஊழியன் New Covenant Servant - 1995

Copyright - ZAC POONEN

இந்த புத்தகம் பதிப்புரிமை பெற்றுள்ளது. இந்த பணியின் எந்த பகுதியும் மறுபதிப்போ அல்லது எந்த ரூபத்திலும் கடத்தல் கூடாது. அதாவது, பதிப்பாளர் எழுதித்தந்த அனுமதி இல்லாமல் மின்னனு சாசனமோ அல்லது எந்திர சாசனமோ (ஜெராக்ஸ் உட்பட) பதிவு செய்தல் கூடாது.

**மேலும் விபரங்களுக்கு**

Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149, Karnataka, India
email: cfc@cfcindia.com

வல்லரசின் சிகரமான “அமெரிக்க தேசத்தை”
ஆளும் “அமெரிக்க அதிபதியின்” பொறுப்பையும்
உத்திரவாதத்தையும் காட்டிலும்
தேவனுடைய மந்தைக்கு மேய்ப்பனாய்
புதிய உடன்படிக்கையின் ஊழியனாய்
இருக்கும் பொறுப்பும் உத்திரவாதமும் மிக
அதிகமாகும்! தியாகத்தின் உருவாய்,
தன் சொந்த ஜீவனையும் அற்பமாய்
எண்ணி மந்தையைக் காத்திடும்
“உத்தம மேய்ப்பர்கள்”எங்கே?
ஆம், தேவன் தேடுகிறார்.... அவர் தேடும் அந்த
புதிய உடன்படிக்கை ஊழியன் எங்கே?

## அழைப்பு பெற்றவர்களையே
## ஆயத்தம் செய்கிறார்!

1

*தன்னுடைய ஊழியப்பணியை நிறைவேற்றுவதற்கு தேவனுக்கு மனுஷர்கள் தேவை! ஏனென்றால் இந்த பூமியில் அவருடைய ஊழியங்கள் அனைத்தும் மனுஷரைச் சார்ந்திருக்கும்படியான நிலையிலேயே தேவன் ஏற்படுத்தி வைத்துள்ளார். ஆனால் தேவன் அழைத்திடும் அந்த மனுஷன் ஆயத்தமாயிராத பட்சத்தில், தேவனுடைய பணி தாமதமாகிறது அல்லது பாதிக்கப்படுகிறது. இருப்பினும் தேவனுடைய அழைப்பிற்கு ஒருவன் இணங்குவதற்குத் தவறும் போதோ, தேவன் வேறொருவனை அழைத்து விடுவார்!*

*'ஊர்' என்ற தேசத்திலிருந்த* **ஆபிரகாம்** *தன்னுடைய வீட்டையும், தன் உறவினர்களையும் விட்டுவிட்டு அறியப்படாததோர் தேசத்திற்கு செல்லும்படி தேவன் அழைத்தார். இவ்வேளையில் கீழ்படிவதற்கு ஆபிரகாம் விருப்பமற்றவனாய் இருந்திருந்தால் தேவன் அவரைக் கட்டாயப்படுத்தியிருக்கவே மாட்டார். ஆம், தேவன் வேறொருவரைத் தனக்கென அழைத்திருக்கக்கூடும். நாமும் ஆபிரகாமைக் குறித்து கேள்விப்பட்டிருக்கக்கூட மாட்டோம்.*

**தேவனால் அழைக்கப்பட்டு அவருக்கென ஊழியம் செய்வது ஓர் சொல்லி முடியாத பாக்கியமாகும்!** *ஆனால், இந்த அழைப்புடன் மாபெரும் பொறுப்பும் உத்திரவாதமும் சேர்ந்தே வருகிறது!*

*யாக்கோபின் சந்ததியைக்குறித்த தேவனுடைய பூரண திட்டத்தில், அவர்கள் சரியாக நான்கு நூற்றாண்டுகள் (நானூறு வருடங்கள்) எகிப்து தேசத்தில் வாழ்ந்திட வேண்டும். இவ்வாறு ஓர் அந்நிய தேசத்தில் 400 - வருடங்கள் அடிமைகளாய் சேவிப்பார்களென ஆபிரகாமுக்கு அநேக வருடங்கள் முன்பே தேவன் கூறி விட்டார் (ஆதி.15:13).*

ஆனால் முடிவில் இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து தேவன் விடுவித்த போது, அவர்கள் 430 - ஆண்டுகள் எகிப்து தேசத்தில் வாழ்ந்து விட்டார்கள் (யாத்திராகமம்.12:40).

இவ்வாறு இஸ்ரவேலரைக் குறித்த பூரண திட்டத்திற்கு முரணாக, அவர்கள் ஏன் 30ஆண்டுகள் அடிமைத்தனத்தில் இருக்க வேண்டியிருந்தது?

இந்தக் கேள்விக்கு நாம் என்ன பதிலைச் சொல்லுவோம்? ஆம், ஜனங்களை நடத்திச் சென்றிட மோசே இன்னுமும் ஆயத்தமாக வில்லை! இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து விடுதலையாக்கிட தேவனுக்கு ஓர் மனிதன் தேவைப்பட்டான்..... ஆனால் அந்த மனிதனோ ஓர் ஆவிக்குரிய தலைவனாய் மாறுவதற்கு தேவனால் முதலாவது ஆயத்தம் செய்யப்பட வேண்டியதாயிருந்தது.

**தேவனுடைய ஊழியர்கள் உடைபடுதல் வேண்டும் :**

மோசே 40 வயதாய் இருந்த போது, தனக்குத்தானே வலிமை கொண்டவனாய் இருந்தது மாத்திரமல்லாமல் தான் இஸ்ரவேலருக்குத் தலைவனாய் இருப்பதற்குத் தகுதியும் பெற்றிருப்பதாக எண்ணிக் கொண்டான். ஆனால் தேவனுடைய பார்வையிலோ மோசே இன்னமும் ஆயத்தமாகவில்லை!

மோசே 40-வயதாகையில், "எகிப்தியருடைய சகல சாஸ்திரங் களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்" (அப்.7:22) என வேதம் கூறுகிறது. மோசே ஒரு நாள் தன்னுடைய இஸ்ரவேல் சகோதரர்களைச் சந்தித்த போது அவர்களில் ஒருவன் ஒரு எகிப்தியனால் அநீதியாய் நடத்தப்பட்டதைக் கண்டான். அவ்வேளையில் அந்த இஸ்ரவேலனின் சார்பாக மோசே நின்று கொண்டு எகிப்தியனைக் கொன்றான். இச்சம்பவத்தின் மூலமாய் "தான் இஸ்ரவேலர்களுக்கு தேவனால் நியமிக்கப்பட்ட தலைவன்" என்பதை இஸ்ரவேலர்கள் கண்டு கொள்வார்கள் என மோசே எண்ணினான். ஆனால், அவர்களோ மோசே எண்ணியவிதமாய் அவனைத் தங்களுக்குத் தலைவனாக ஏற்றுக்கொள்ளவில்லை!

ஆம், "ஓர் தேவ ஊழியனாய் இருப்பதற்குரிய" தகுதியின் வெளிச்சத்தை மோசே இன்னமும் அறியாதவனாகவே இருந்தான்!!

எனவேதான், தன் மனுஷீக பெலத்திலும் ஞானத்திலும் மோசே கொண்டிருந்த நம்பிக்கையை உடைக்கும்படியாய் தேவன் அவனை வனாந்திரத்திற்கு கொண்டு போனார். இந்தப் பயிற்சியானது தேவனுடைய பரிபூரணத்திட்டத்தில் 10-வருடங்கள் மாத்திரமே கால வரையறை கொண்டிருந்தது. ஆனால் இதற்கு மாறாக, மோசே உடைபடுவதற்கு 40-வருடங்கள் பிடித்தது. இதனிமித்தமே தங்களுடைய தலைவன் ஆயத்தமாவதற்கு இஸ்ரவேலர்கள் மேலும் 30-வருடங்கள் காத்திருத்த வேண்டியதாகி விட்டது.

தேவன் தெரிந்தெடுக்கும் தலைவர்கள், குறிப்பிட்ட காலங்களில்

உடைபடாத பட்சத்தில் அவருடைய திட்டங்கள் தாமதமாகி விட வாய்ப்பிருக்கிறது. நாம் உடைபடுவதற்கென "ஓர் குறிப்பிட்ட கால அளவை" தேவன் நிர்ணயம் செய்து வைத்திருக்கிறார். அந்த கால அளவை நாம் ஒரு போதும் குறைத்திட முடியாது. ஆனால் தேவனுடைய பயிற்சிக்கு நம்மை ஒப்புக்கொடுக்காத பட்சத்தில், அக்கால அளவை நாமாகவே நீடித்து விட முடியும்! இவ்வாறு, ஒரு ஒப்புக் கொடுக்காத கடினத்தன்மை உடையவர்களாய் இருந்தால், நமக்குத்தான் அதிக இழப்பு ஆகும்!! தேவனுடைய பணியும் பாதிக்கப்படும்!!

மோசேயைப் போலவே நாமும் வேத உபதேசங்களை நன்கு கற்றவர்களாயும், தேவனுடைய முழு ஆலோசனைகளையும் அறிந்தவர் களாயும், பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்றவர்களாயும், நம்முடைய பார்வையில் "வாக்கிலும் செய்கையிலும் வல்லவர்களாயும்" காணப்பட முடியும். இன்னமும் ஒருபடி அதிகமாய் நாம் மோசேயைப் போலவே, தோல்வியினால் கட்டுண்ட நம்முடைய சகோதரர்களுக்காக கரிசனை கொண்டவர்களாயும் இருக்க முடியும். இதனிமித்தமாய் இப்போது "தேவனை சேவிப்பதற்கு நாம் முழு ஆயத்தம் பெற்றவர்கள்" என நாமாகவே எண்ணிக்கொள்ள முடியும். ஆனால் நாமோ உண்மையில் இன்னமும் ஆயத்தமாகவில்லை!

நாம் மோசேயைப் போல "வார்த்தைகளில் வல்லவர்களாய்" பேச்சுத்திறமை கொண்டிருக்க முடியும். நம் பிரசங்கத்தை மற்றவர்கள் சுமார் 1 மணி நேரம் கூட கவனித்து கேட்க ஆர்வம் கொண்டிருக்க முடியும். ஆனால் அது எல்லாம் தேவனுடைய தகுதிக்கு சிறந்த நிரூபணம் இல்லை. ஏனெனில் இந்நாட்களில் ஜனங்கள் அரசியல் தலைவர்களின் பேச்சைக் கூட 2 அல்லது 3 மணி நேரங்கள் கேட்பதற்கு விருப்பத்துடன் இருக்கிறார்கள். ஆகவே, நாம் தேவனை நம்முடைய சுபாவமான திறமைகளை வைத்து சேவிக்காதிருக்க ஜாக்கிரதையாய் இருக்கக் கடவோம். ஏனென்றால், நாம் எவ்வளவு அதிகம் வரம் பெற்றிருக் கிறோமோ அந்த அளவு "மனுஷீகத் திறமைகளைச்" சார்ந்து தேவனை சேவிப்பதற்குத் துணியும் அபாயம் நம்மிடம் இருக்கிறது. **இதனிமித்தமே** நாம் உடைபட வேண்டியது அவசியமாயிருக்கிறது.

அந்நாட்களிலிருந்த இஸ்ரவேலர்களுக்கு மோசேயின் மீது நம்பிக்கை உண்டாகவில்லை. மோசேயை ஜனங்களுக்குத் தலைவனாக நியமித்திட அவன்மீது தேவனுக்கும் நம்பிக்கை இல்லாதிருந்தது! இவ்வாறு தன்மீது தேவனோ அல்லது மனுஷர்களோ நம்பிக்கை வைக்காதிருக்கும்போது ஒருவன் எவ்வாறு மற்றவர்களை நடத்தும் தலைவனாக இருக்க முடியும்?

தேவனுடைய பிரதிநிதியாக, நம்மைத் தேவன் எடுத்து உபயோகப் படுத்துவதற்கு நாம் தகுதி கொண்டவர்கள்தான் என "நாமாகவே" நமக்குள் எண்ணிக்கொள்ளலாம். ஆனால் நாம் எண்ணுவதைப் போல தேவன் அவ்வாறு எண்ணாதிருக்க முடியும்! நாம் ஆண்டவருக்கு

வலிமையான ஊழியம் செய்ய வேண்டுமென்றால், நாம் செய்திடும் ஊழியத்தின் மீது தேவனுடைய அங்கீகார முத்திரையைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் தேவனோ நாம் "உடைபடும் வரை" நம்முடைய ஊழியத்தை ஒருபோதும் அங்கீகரிக்கவே மாட்டார்!!

எந்த மோசே "வார்த்தைகளில் வல்லவன்" என பெயர் பெற்றிருந்தானோ, இப்போது அதே மோசே உடைபட்ட பின்பு "ஆண்டவரே நான் திக்குவாயன், மந்தநாவும் உள்ளவன்!" என்றான் (யாத்.4:10). இந்த ஆச்சரியமான நிலைக்கு தேவன் எவ்வாறு மோசேயை உடைத்தார்? அவனை அவர் வறண்ட வனாந்திரத்திற்கு அனுப்பினார். அங்குதான் மோசேக்குத் திருமணமும் நடந்தது. மேலும் தன் மனைவியின் பெற்றோர்களுடைய வீட்டில்தான் மோசே வாழ வேண்டியிருந்தது. ஓர் நிர்கதியற்ற நிலையில் "தன் மாமனாரைச் சார்ந்து" வாழும் ஒருவன் எவ்வளவு துரிதமாய் உடைக்கப்படுகிறான் என்பதைக் காண்பது நமக்கு வியப்பாய் இருக்கிறது! இதே போலதான் மோசேக்கு பல வருடங்களுக்கு முன்பு யாக்கோபை தேவன் உடைத்தார்!!

இவ்வாறு மோசே, தன் மனைவி பிள்ளைகளுடன் மாமனார் குடும்பத்தோடு இருந்த சூழ்நிலையிலும்; தன் மாமனாரின் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்த சூழ்நிலையிலும்தான் தேவன் மோசேயை உடைத்து சிறுமைப்படுத்தினார். இவ்வாறு உடைபட வேண்டிய கல்வித் திட்டத்திற்கு 40-வருடங்கள் பிடித்தது. இவன் நொறுங்கும் வரை காத்திருக்க தேவன் ஆயத்தமாயிருந்தார். ஆகவே தேவமனிதன் ஆயத்தமாகும் வரை தேவ ஜனங்களும் காத்திருக்க வேண்டியதாகி விட்டது!

தேவன் இன்றும் காத்துக்கொண்டு தான் இருக்கிறார். நம், இந்திய தேசத்தின் பல பகுதிகளில், கிறிஸ்துவின் சரீரமாய் கட்டப்படவேண்டிய தேவையுள்ள ஆத்துமாக்கள் சிதறி இருக்கிறார்கள். ஆனால், இந்த 'சரீரத்தை' கட்டுவதற்கு, தான் உபயோகப்படுத்தப் போகும் தன் ஊழியர் களை தேவன் தெரிந்து கொண்டு..... அவர்களை உடைத்து... ஆயத்தம் செய்ய வேண்டியதாயிருக்கிறது!

ஆகவேதான், நம்முடைய வீடு மற்றும் வேலை செய்யும் சூழ்நிலை களை "தேவனுடைய பல்கலைக்கழகமாகக்" காண வேண்டியது நமக்கு அவசியமாய் இருக்கிறது. நம் மாமனார் குடும்பத்தோடும், சொந்த குடும்பத்தோடும் நாம் சந்திக்கும் நெருக்கமான சூழ்நிலைகள் யாவும் தேவனுடைய கல்வித்திட்டத்தின் வழிமுறைகளாகவே இருக்கிறது. இச்சூழ்நிலைகள் மூலமாகத்தான் அவர் நம்மைத் தன்னுடைய ஊழியர் களாய் ஆயத்தம் செய்கிறார். இவ்வித சூழ்நிலைகளில், உபதேசங்களைக் காட்டிலும் மேலான பாடங்களை நமக்கு கற்றுத் தருகிறார்.... அவர் நம்மை உடைக்கிறார்!

*ஆனால், தங்களைக் குயவனின் கையில் இருக்கும் களிமண்ணாக தங்களை தாங்களே அர்ப்பணிப்பவர்கள் மிக மிக கொஞ்சமாக இருப்பதையே தேவன் காண்கிறார். அவரிடம் பயிற்சிக்கு வருகிற அநேகர் முரட்டாட்டம் செய்து, "மரிப்பதற்கு" மறுக்கிறபடியால், தேவன் அவர்களைப் புறம்பே வைத்து புறக்கணிக்க வேண்டிய தாயிருக்கிறது!*

*மோசே இந்த 40-வருடங்களில் உபதேசங்களைக் கற்றுக் கொள்ளவில்லை. ஒருவன் புத்திசாலியாய் இருந்தால், உபதேசங்களைச் சொற்ப நாட்களில் கற்றுக் கொள்ள முடியும். ஆனால், "உடைபடுவதற்குத்தான்" அதிக காலம் ஆகிறது! எல்லா நேரங்களிலும் தன்னைக்குறித்து சிறிய எண்ணம் கொண்டு அதில் வேரூன்றி நிலைத்திருப்பது அவ்வளவு எளிதான கிரியை இல்லை! முதிர்ச்சியடைந்த விசுவாசிகள் மத்தியில் நாம் இருக்கும்போது நம்மை ஓர் முக்கியமானவனாய் எண்ணாதிருக்கலாம். ஆனால் நம் ஸ்தல சபைக்கு செல்லும் போது, அங்குதான் நம்மை முக்கியமானவர்களாய் கருதி சிந்திக்கத் தொடங்குகிறோம். இங்குதான் அபாயம் இருக்கிறது! நாம் போகும் ஒவ்வொரு இடங்களிலும் நம்மைப் "பரிசுத்தவான்கள் எல்லாரிலும் சிறியவன்" என்பதை நன்கு அறிந்து கொள்ளும் நிலைக்கு கொண்டு வர தேவன் அவ்வளவாய் நம்மை முற்றிலும் உடைக்க வேண்டியதாய் இருக்கிறது!!*

**இளம் வாலிபர்களை தேவன் அழைக்கிறார் :**

*இயேசு இளைஞர்களையே தன் அப்போஸ்தலர்களாக அழைத்தார். ஒருவன் அப்போஸ்தலனாய் இருக்க வேண்டுமென்றால் அவன் குறைந்தது 60 அல்லது 65 இருக்க வேண்டுமென அநேகர் எண்ணுகிறார்கள்! ஆனால் இயேசு தெரிந்து கொண்ட முதல் அப்போஸ்தலர்கள் சுமார் 30 வயது நிறைந்தவர்களாகவே இருந்தார்கள். எல்லோருக்கும் முன்னோடியான இயேசுவும் கூட, அவர் மரிக்கும் போது 33½ வயது உடையவராகவே இருந்தார். அவருடைய 11 - அப்போஸ்தலர்கள் அவரைக்காட்டிலும் இளம் வயதுடையவர்களாகவே இருந்தார்கள். பொதுவாக, யூதர்களின் போதகர்கள் தங்களைக் காட்டிலும் இளையவர்களையே தங்கள் சீஷர்களாக தெரிந்து கொள்வார்கள். இதன்படி, பெந்தேகொஸ்தே நாளில் யோவான் அப்போஸ்தலன் 30 வயது நிறைந்தவராகவே இருந்திருக்கக் கூடும் என அறிகிறோம்.*

*இயேசு இந்த இளைஞர்களைத் தெரிந்துகொண்ட போது, அவர்களுடைய அனுபவத்தை அவர் பார்க்காமல் அவர்களின் முழு இருதயத்தைப் பார்த்தார். பெந்தேகொஸ்தே நாளில் இந்த இளைஞர்கள் யாவரும் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டு, ஆண்டவருடைய அப்போஸ்தலர்களாகப் பரத்தின் வல்லமையினால் உருவாக்கப்பட்டார்கள். அனுபவத்தையும் முதிர்ச்சியையும் பின்வரும் காலங்களில் தான் பெற்றார்கள். தீமோத்தேயும் கூட அப்போஸ்தலனாய் மாறிய போது இளமையான வாலிபனாகவே இருந்தார் (1தீமோ.4:12).*

*இன்றும் தேவன் தன்னுடைய ஊழியத்திற்கு வாலிபர்களையே அழைக்கிறார். ஆனால் அது போன்ற வாலிபர்கள்* **எப்போதும் தாழ்மையில்** *தங்கியிருப்பவர்களாய் இருக்க வேண்டும்.*

ஏனெனில் தேவனால் அழைக்கப்பட்ட எந்த ஒரு வாலிபனுக்கும் வரக்கூடிய பிரதானமான அபாயம் "ஆவிக்குரிய பெருமையாகும்".

*நம் இந்திய தேசத்தில் தேவனுடைய ஊழியர்களாய் அழைக்கப் பட்ட அநேகம் இளைஞர்கள் தங்களுடைய அழைப்பிலிருந்து வீழ்ச்சியடைந்த ஏராளமான துயர சம்பவங்களை அறிந்திருக்கிறேன். சிலருடைய வீழ்ச்சி எப்படியெனில், தேவன் அவர்களை ஏதாகிலும் ஒரு வகையில் உபயோகப்படுத்தத் துவங்கியவுடன் "பெருமையினால்" உப்பி, தேவனுக்குரிய மகிமையைத் தாங்கள் எடுத்துக்கொள்ள முயற்சிக்கிற படியால்..... அவர்களை தேவன் ஒதுக்கி வைத்து விடுகிறார். இன்னும் சிலருடைய வீழ்ச்சியில், அவர்கள்* **"உலகத்தின் சொகுசை"** *விரும்புகிற படியால், அவர்களின் விருப்பத்திற்கேற்ப ஏராளமாய் சம்பளத்தை வாரி வழங்கும் மேற்கத்திய கிறிஸ்துவ ஸ்தாபனங்களுக்கு கூலிக்கு வேலை செய்பவர்களாய் மாறிவிடுகிறார்கள். இவ்வாறாகவே இவர்கள் 'பிலேயாமைப் போல' வழி விலகிப்போகிறார்கள். இன்னும் சிலருடைய வீழ்ச்சியில்,* **சௌந்தரிய மிக்க தெலீலாக்களால்** *ஈர்க்கப்பட்டு, சிம்சோனைப் போல தங்கள் அபிஷேகத்தை இழந்து நிற்கிறார்கள். இவ்வாறாக இந்த அருமையான வாலிபர்கள் மனுஷருடைய புகழ்ச்சிக்காக, பணத்துக்காக அல்லது தங்கள் இச்சையை திருப்தி செய்யும் சௌந்தரிய மிக்க ஸ்திரீகளுக்காக* **தங்கள் மேன்மையான அழைப்பையும், அபிஷேகத்தையும் பலி கொடுத்து விட்ட** *துயரத்தை நான் கண்டிருக்கிறேன்.*

*இன்று நம் இந்திய தேசத்தில், பணத்தையும், மயக்கும் மாதுக் களையும் அல்லது மனுஷரின் அங்கீகாரத்தையும் துச்சமென மதித்து தேவனுடைய வார்த்தையை அச்சமின்றி பிரகடனம் செய்யும் தேவனுடைய தீர்க்கதரிசிகள் எங்கே இருக்கிறார்கள்? இப்படிப் பட்டவர்களைக் காண்பது இன்று மிகமிக அரிதாகி விட்டதே! தேவனால் அழைக்கப்பட்டவர்களில் அநேகர், தங்கள் ஊழிய பயணத்தில் தடுமாறி வீழ்ச்சியடைந்து விட்டார்கள்!!*

*தேவனுக்கு உகந்த பலி நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான ஆவியே ஆகும். நாம் நொறுங்குண்டு தாழ்மையானவர்களாய் இருந்தால் நம்மை* **எப்போதும்** *தேவன் உபயோகப்படுத்திக் கொண்டே இருப்பார். ஆனால், நாம் தேவனிடத்திலிருந்து பெற்ற வெளிப்பாட்டின் நிமித்தமோ அல்லது தேவன் நமக்குத்தந்த வலிமையான ஊழியத்தினி மித்தமோ... "இப்போது நான் விசேஷித்தவனாக மாறியிருக்கிறேன்" என என்னும் நாளிலிருந்து மாபெரும் வீழ்ச்சியை நோக்கி நாம் செல்லத் துவங்கி விடுவோம்! தேவனும் நம்மை ஒதுக்கி வைத்து விடுவார் .இது துயரம்!!*

இந்நிலைக்கு வந்துவிட்ட நாம் இன்னமும் கூட சில சபைகளில் மூப்பர்களாய் இருக்கும் ஸ்தானத்தைத் தக்க வைத்துக் கொண்டவர்களாய் இருக்கலாம். ஆனால் நாமோ நம்முடைய ஜீவியத்தை வீணாக்கிவிட்டோம் என்பதை நிச்சயமாக நித்தியத்தில் காண்போம்!

**தேவன் பூஜ்யமானவர்களையே அழைக்கிறார் :**

1கொரிந்தியர் 3:5-ல் "பவுல் யார்? அப்பொல்லோ யார்?" என்ற கேள்வியை பவுல் கேட்டார். இந்தக் கேள்விக்கு நாம் பதில் சொல்வோமென்றால், "பவுலா, அவர் ஓர் மாபெரும் வல்லமை நிறைந்த கர்த்தருடைய அப்போஸ்தலன், மரித்தவனை உயிரோடு எழுப்பினவன், ஏராளமான சபைகளை ஸ்தாபித்தவன்... இன்னமும் சொல்ல வேண்டுமென்றால் வேத வாக்கியங்களை தன் கைப்பட எழுதியவன்..." என்றெல்லாம் நாம் பவுலைக் குறித்து கூறுவோம். ஆனால், பவுல் அந்த கேள்விக்கு விடை கூறும்போது, "பவுல் யார்? ஊழியக்காரன்தானே!" என தன்னைக்குறித்து கூறினார். உண்மையிலேயே பவுல் தன் ஜீவிய காலமெல்லாம் தன்னைக் குறித்து கொண்டிருந்த எண்ணம் அவ்வளவுதான்!! ஆம், பவுல் தன் ஊழியப்பாதையில் ஒரு தடவை கூட விழாதிருந்ததில் நமக்கு ஆச்சரியம் ஏதுமில்லை "நாம் பிறருக்கு ஊழியர்கள் அல்லது வேலைக்காரர்கள்" என்ற எண்ணத்தை விட வேறுவிதமாய் சிந்திக்கத் துவங்கினால் நமக்கு அக்கணமே பின்மாற்றம் துவங்கி விடும்!

பவுல் கூறும் போது, "நான் நட்டேன், அப்பொல்லோ நீர் பாய்ச்சினான்" எனக்கூறினார். இங்கே பவுல் கூறிய இருவரில் யார் பெரியவர்? நட்டவரை எடுத்துக் கொள்ளுங்கள் - இவர் சொல்லப்பட்டிராத இடங்களுக்கு மிஷினரியாகச் சென்று தேவனுடைய ஊழியத்தைச் செய்து சுவிசேஷத்தை நட்டவர்! இப்போது நீர்ப் பாய்ச்சிய வரை எடுத்துக்கொள்ளுங்கள். இவர் நட்டவருக்கு பின்பாக வந்து 'செடிகளுக்குத்' தேவனுடைய வார்த்தைகள் மூலம் தண்ணீர் பாய்ச்சி விசுவாசிகளை ஒரே சரீரமாய் கட்டியவர்! இவர்களில் யார் பெரியவர்? என்ற கேள்வியை மீண்டும் கேட்டுப்பாருங்கள்... அதற்கு பவுலே விடை கூறுகிறார்: "நடுகிறவனானாலும் ஒன்றுமில்லை! நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை!" (1கொரி.3:7). ஆம் இருவருமே "ஒன்று மில்லை!!" அதாவது, இருவருமே பூஜ்யங்கள்!! அப்படியானால் இங்கு வேறு எதுதான் காரியம்? அதற்கும் பவுல் விடை கூறுகிறார், "விளையச் செய்கிற தேவனே எல்லாமாகும்!"

பவுல் தன் ஜீவியத்தின் முடிவுவரைத் தன்னை ஓர் பூஜ்யமாகவே கருதியிருந்தார். ஆகவேதான் தேவன் அவருடைய ஜீவியத்தின் கடைசி வரை உபயோகிக்க முடிந்தது. ஆம், பவுலுக்கு தேவனே எல்லமாக இருந்தார்!

ஒரு சமயம் பிலேயாமோடு பேசுவதற்கு ஆண்டவருக்கு ஒரு **'கழுதை'** தேவையாய் இருந்தது. இன்னொரு சமயம் எருசலேமுக்கு பவனியாக வந்திடவும் அவருக்கு ஒரு 'கழுதை' தேவையாய் இருந்தது.

*இன்றும், அவருடைய காரியங்களை நிறைவேற்றிட அவருக்கு கழுதைகள் வேண்டும்! அப்படியானால் நாம் யார்? நம்மூலமாய் பேசுவதற்கோ அல்லது நமது மூலமாய் எங்காகிலும் செல்லுவதற்கோ, நாம் ஆண்டவர் தெரிந்து கொண்ட கழுதைகள் மாத்திரமே!!*

*எங்கெல்லாம் "தேவனே எல்லாமுமாய் இருக்கும்படி" சகோதரர்கள் "தங்களை* **ஒன்றுமில்லமால்** *இருப்பதற்கு" ஆர்வம் கொண்டிருக்கிறார் களோ, அங்கெல்லாம் தங்களில் யார் சிறந்த ஆவிக்குரியவன் அல்லது யார் பெரியவன் போன்ற போட்டிகளெல்லாம் ஒருக்காலும் ஏற்படவே ஏற்படாது!*

*ஒருவன் எப்போதெல்லாம் தன்னைத் தன்னுடைய குழுவிற்குத் "தலைவனாகக்"காட்டுவதற்கு முயற்சிக்கிறானோ, அவனை ஒரு அறையில் தேவன் ஒதுக்கி வைத்து விடுவார்! ஒவ்வொரு சபையையும் நடத்துவதற்குத் தலைவர்கள் வேண்டுமென்பது உண்மைதான். ஆனால், அந்த தலைவர்கள் "தேவன் தெரிந்து கொண்டவர்களாய்" இருக்க வேண்டும்.*

*ஒரு இடத்தில், வேறொரு சகோதரனுக்கு தேவன் கிருபையைக் கொடுத்து, மற்றவர்கள் அவனைத் தங்களை நடத்தும் தலைவனாக ஏற்றுக் கொள்ளப்பிரியமாக இருந்தால், நாம் "துரிதமாய்" நம்மைத் தாழ்த்தி தேவன் உருவாக்கியிருக்கும் அந்த நிலையை அப்படியே ஏற்றுக் கொள்பவர்களாயும் இருக்க வேண்டும். இதற்கு பதிலாய் நாம் அந்த சதோதரனின் ஊழியத்தையோ அல்லது அவருடைய ஸ்தானத்தையோ இச்சித்து பொறாமை கொண்டால், நாம் சாத்தானின் ஏஜெண்டுகளாய் மாறி, நம் ஸ்தலத்தில் கிறிஸ்துவின் சரீரம் கட்டப்படுவதற்கு நாமே இடையூறாய் இருந்து விடுவோம்!*

*தேவன் தன்னுடைய ஆளுகையில் அந்தந்த சபைகளை நடத்து வதற்கு சிறந்த நபர் யார் என அறிந்திருக்கிறார். அவர் திறமையான புத்திசாலிகளைப் பொறுக்கி எடுப்பதில்லை! மாறாக யாரெல்லாம் பெலஹீனர்களாய், நொறுங்குண்டவர்களாய்த் தங்களை "***பூஜ்யம்***" என உணர்ந்திருக்கிறார்களோ அவர்களையே அவர் தெரிந்து கொள்கிறார்!! இந்த உண்மையை உங்களால் நன்கு அறிந்து கொள்ள முடிகிறதா?*

# தன் ஊழியர்களை
# கண்டிப்புடன் நடத்தும் தேவன்!

2

ஒரு குறிப்பிட்ட காரியத்தை தேவனுடைய வார்த்தை துவக்கத்திலிருந்து கடைசிவரை வலியுறுத்திப் போதிக் கிறது. அது என்னவெனில், "எவர்களிடத்தில் தேவன் அதிகம் கொடுத்தாரோ அவர்களிடத்தில் அவர் அதிகம் எதிர்பார்க்கிறார்". தன்னுடைய ஊழியர்களிடம் 'தனக்குரிய அதிகமானதைத்' தேவன் ஒப்புக் கொடுத்திருக் கிறபடியால், அவர்களிடம் அவர் கண்டிப்பாய் நடந்து கொள்கிறார்.

"எரிகிற முட்செடியின் சமூகத்தில்" தேவனால் மோசே நியமிக்கப்பட்ட பின்பு, மோசே எகிப்தை நோக்கி சென்று கொண்டிருந்த அந்தப் பயணத்தில் தேவன் "அவனை கொல்லப் பார்த்தார்" (யாத்.4:24) என நாம் வாசிக்கிறோம். தன்னுடைய பணிக்கென 'இப்போது தான்' தேவன் மோசேயை அழைத்திருக்கும் வேளையில், தேவனுடைய இந்த செயல் நமக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தருகிறது. அது மாத்திரமல்ல, அந்நாட்களில் தேவனுடைய பணியை நிறைவேற்றுவதற்கு பூமியில் மோசேயைத் தவிர வேறுயாரும் தகுதி உடையவர்களாய் இல்லை! தேவனுடைய திட்டங் களை நிறைவேற்றுவதற்கென மோசேயைப் பயிற்சிப்பதற்கு தேவன் 80-வருடங்களை செலவழித் திருந்தார்!! ஆகவே பூமியில் மோசே மிகமிக முக்கியமான - விஷேித்த மனிதனாய் இருந்தான் என நாம் உறுதியாய் கூறலாம். அவ்வாறிருக்க, தேவன் மோசேயை ஏன் கொல்ல விரும்பினார்?

மோசேயின் மனைவி சிப்போராள் ஒரு யூத பெண் மணி அல்ல. ஆகவே அவள் தன் மகனுக்கு விருத்த சேதனம் செய்வதில் நம்பிக்கை இல்லாதிருந்தாள். தன்னுடைய மனைவியின் இந்த அபிப்பிராயத்தை மோசேயும் ஏற்றுக்

கொண்டு இவ்விஷயத்தில் தேவனுக்கு கீழ்படியாமலே இருந்து கொண்டிருந்தான். ஆனால் மோசேயோ **இப்போது** தேவ ஜனத்திற்கு ஓர் தலைவனாகப் போகிறான்! இந்த நிலையிலும் மோசே தன் மனைவியை இன்னமும் பிரியப்படுத்தி தன் சொந்த வீட்டிலேயே தேவனுக்கு கீழ்ப்படியாதிருந்தான். ஆகவே, தேவனுடைய சிட்சையில் மோசே மரித்துக் கொண்டிருந்த வேளையில், எதனால் இந்த வருத்தம் உண்டானது என்ற காரணத்தை சிப்போராள் உடனடியாக விளங்கி கொண்டாள். எனவேதான் அவள் தன் மகனுக்கு உடனடியாக விருத்தசேதனம் செய்தாள். அவ்வாறு செய்த பின்பு மாத்திரமே, தேவன் மோசேயின் ஜீவனை தப்பவிட்டார்.

இந்த நிகழ்ச்சியிலிருந்து தேவன் தன்னுடைய ஊழியர்களின் எந்தவித கீழ்படியாமையையும் அல்லது எவ்வித சத்தியத்தை விட்டுக் கொடுத்துவிடும் ஒத்த வேஷங்களையும் அல்லது மனைவியைப் பிரியப் படுத்தும் செயல்களையும் சகித்துக் கொள்வதில்லை என்ற உண்மையைக் காண்கிறோம். நாம் தேவ ஜனத்தை நடத்த வேண்டு மென்றால், **நாம் முதலாவது** தேவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிபவர்களாய் இருக்கவேண்டும். ஆம், தேவனிடத்தில் எந்தவித பட்சபாதமும் இல்லை! தன்னுடைய வலிமையான ஊழியர்களேயானாலும், அவர்கள் கீழ்படியாதிருக்கும் போது அவர்களையும் அவர் நியாயந்தீர்ப்பார்!!

**பொறுமையின் முக்கியத்துவம் :**

மோசே 120 வயதாய் இருந்த போது, தேவன் மோசேயை மீண்டுமாய் தண்டித்ததைப் பார்க்கிறோம். ஆனால் இந்த முறை அவர் தண்டனையைத் தளர்த்திக் கொள்ளவில்லை! தண்ணீர் பெறுவதற்கு, கன்மலையிடம் பேசும்படியே தேவன் மோசேயிடம் சொல்லியிருந்தார். ஆனால் மோசே தன்னுடைய நிதானத்தை இழந்து கோபமடைந்த வனாய், தேவனுடைய ஜனங்களோடு **ஆத்திரமுடன்** மோதிய பின்பு இப்போது கன்மலை மீதும் மோதியடித்தான் (எண். 20:7-13). இது ஒரு சின்ன தவறாக நமக்குத் தோன்றுகிறது. ஆனால் தேவனுடைய கண்களுக்கோ இந்த தவறு மிகவும் "சீரியஸான" தவறாகவே இருந்தது.

ஜனங்களிடம் மோசே மிகுந்த கோபத்துடன் "கலகக்காரரே, கேளுங்கள். . ." (எண்.20:10) என பேசிவிட்டான். இவ்வாறு கூறியதில் மோசே வெளிப்படுத்திய மனப்பான்மை யாதெனில், "மோசேயாகிய தன்னைத்தவிர எல்லா ஜனங்களும் கலகக்காரர்கள்!" என்பதுதான். ஆனால் உண்மை என்னவென்றால், அந்த வேளையில் தேவனுக்கு கீழ்படியாமலிருந்த மோசேகூட ஓர் கலகக்காரன்தான்! கோபத்துடன் மோசே பேசிய வார்த்தைகளில் தேவன் துக்கமடைந்தார். இதை குறிப்பிடுகையில், "அவர்கள் அவன் (மோசேயின்) ஆவியை விசனப் படுத்தினதினாலே, தன் உதடுகளினால் **பதறி** பேசினான்" (சங்.106:33) என வேதவசனம் எடுத்துக்கூறுகிறது.

இவ்வாறு மோசே தேவ ஜனங்களைத் தாக்கிய செயலில் "முரட்டாட்டம்" இருப்பதை உங்களால் காண முடிகிறதா? எத்தனையோ தடவைகளில், நாம் பேசும்படி தேவன் சொல்லாதிருக்கும் போது நாமோ அடிக்கடி பேசியிருக்கிறோம். இதனிமித்தமே, "யாவரும் கேட்கிறதற்கு தீவிரமாயும், **பேசுகிறதற்கு பொறுமையாயும்,** கோபிக்கிறதற்கு தாமதமாயும் இருக்கக்கடவன். ஏனென்றால், மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே" (யாக்.1:19,20) என வேதவசனம் நம்மை எச்சரிக்கிறது.

நம்முடைய பொறுப்பில் நாம் சரி செய்யவேண்டிய ஏதாவதொரு பிரச்சனையை நம் வீட்டிலோ அல்லது நம்முடைய சபையிலோ கண்டால், நாம் என்ன செய்கிறோம்? நாம் கர்த்தருக்குக் காத்திருக்காமல் உடனே பதறி பேசி துரிதமான நடவடிக்கைகளில் இறங்குகிறோமா? இதுதான் நம்முடைய நிலை என்றால், நீங்கள் உங்கள் வீட்டிற்குள்ளும், சபைக்குள்ளும் குழப்பத்தைக் கொண்டு வந்து தோல்வியடைந்ததில் எவ்வித ஆச்சரியமுமில்லை. இது போன்ற நேரங்களில், நம்முடைய கோபம் தேவனுடைய நீதியை நிறைவேற்ற முடியாது என்பதை நாம் நினைவு கூற வேண்டும்.

இவ்வாறு நம்முடைய இருதயத்தில் இளைப்பாறுதற்றவர்களாய் மற்றவர்கள் மீது கொதிப்புடன் இருக்கும்போது, நாம் செய்ய வேண்டிய சிறந்த செயல் "மௌனமாய்" இருப்பது தான்!

இவ்விதமாய் இருந்து விட்டால், நாம் குறைந்தபட்சம் தேவனுடைய ஊழியத்திற்கு எவ்வித சேதமும் விளைவிக்காமல் இருக்க முடியும்!!

நாம் தேவனுடைய ஊழியனாய் இருப்பது அதிக "சீரியஸான" விஷயம்! இத்தனை பெரிய பொறுப்பை நாம் இலேசாக எடுத்துக் கொள்ள முடியாது. தேவனுடைய ஊழியர்களிடம் சொல்லி முடியா வல்லமையும், அதிகாரமும் இருக்கிறது! "ஆனால்" அதே சமயம் அவர்கள் அதிக விழிப்புடன் சிறுசிறு விஷயங்களிலும் தேவனுக்கு கீழ்படிய கவனம் கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக, அவர்களின் **வாயின் வார்த்தைகள்!**

ஒரு சமயம் மோசேயின் சகோதரி **மிரியாம்** மோசேயை குறை கூறிய போது, அதற்கு மோசே எவ்வித பதிலும் சொல்லாமல் அமைதியாய் இருந்தார். இவ்வாறு மோசே நடந்து கொண்ட செயலைப் பரிசுத்த ஆவியானவர் அங்கீகரித்து மெச்சிக் கொண்டதை கீழ்கண்டவாறு தன் வேதப் புத்தகத்தில் குறிப்பிட்டார். "மோசேயானவன் பூமியில் உள்ள சகல மனிதரிலும் **மிகுந்த சாந்த குணமுள்ளவனாய்** இருந்தான்" (எண்.12:3). இன்னொரு சம்பவத்தில், **கோரா** ஒரு கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு மோசேக்கு விரோதமாக முரட்டாட்டம் செய்து மோசே பெற்றிருந்த அதிகாரத்தை கேள்விக்குறியாக்கிய போது, இங்கும் மோசே தனக்கு ஏற்பட்ட தூண்டுதலினிமித்தமாய் கோபப்படாமல் தன் முகம் குப்புற

*விழுந்து* "**மௌனமாய்**" *இருந்தான் (எண்.16:4) இத்தனை உயர்ந்த குணாதிசயம் கொண்ட மோசே, மோரிபாவில் ஜனங்கள் முரட்டாட்டம் செய்தபோது ஏன் மௌனமாய் இருக்கவில்லை? தன் ஜீவியத்தின் கடைசிப்பகுதியான ஓர் நிகழ்ச்சியில் போய் ஏன் பதறி பேசிவிட்டார்?*

*ஒரு தேவ ஊழியனிடமும், ஒரு அப்போஸ்தலனிடமும் காணப்பட வேண்டிய பிரதான அடையாளம்* "**பொறுமை**" *ஆகும்! (2தீமோ.2:24; 2கொரி. 12:12). நாம் மறுபடியும் மறுபடியுமாய் முகம் குப்புற விழுந்து ஓர் நீண்ட . . . பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். எனவே, இங்கு எழும் கேள்வி என்னவென்றால், "நம்மை நியாயமாய் தீர்ப்பு செய்பவருக்கு நம்முடைய அனைத்தையும் ஒப்புவித்து" வாழ்ந்தோமா? அல்லது சில ஆண்டுகள் சகித்தவர்களாய் இருந்துவிட்டு . . . முடிவில், நியாயப்படுத்தி, நம்மைத் தற்காத்துக்கொள்ள வாதாடுகிறவர்களாய் மாறி விட்டோமா? (1 பேதுரு.2:23) என்பதே நம்மை அண்டிவரும் கேள்வியாகும். நம்மை தேவன் எந்த சமயத்திலும் எந்த மனிதர்களைக் கொண்டும் "நம்முடைய திராணிக்கு மேல் சோதிக்கப்படுவதற்கு ஒரு போதும் அனுமதிப்ப தேயில்லை" (1கொரி. 10:13). ஆகிலும், நம்முடைய திராணிக்குரிய எல்லை மட்டும் நாம் சோதிக்கப்பட அவர் அனுமதி கொடுத்துவிடுகிறார். ஆனால், இவ்வேளைகளில் நாம் நமக்காகவும், நம்முடைய உரிமை களுக்காகவும், நம்முடைய மதிப்பிற்காகவும் மரிப்பதற்கு ஆயத்தமா யிருந்தால், நாம் பொறுமையாய் இருப்பதற்கு வேண்டிய* **கிருபையை** *தேவன் நிச்சயமாய் நமக்குத் தருவார்.*

*நாம் அவதூறாய் பேசப்பட்டு மோசமாய் நடத்தப்படும் போது இன்றும் நாளையும், அடுத்தவாரமும், அடுத்த மாதமும், அடுத்த வருடமும், நம் ஜீவியத்தின் முடிவு பரியந்தமும்,* **தேவனுக்கு முன்பாக முகம் குப்புற விழும் மனிதர்களாய்** *இருப்பதற்கு நம் எல்லோருக்கும் தேவன் உதவி செய்வாராக! அன்று போலவே இன்று மோரிபாவிலும் மோசே தேவனுக்கு முன்பாக முகம் குப்புற விழுந்திருப்பானென்றால், மோசே கானானுக்குள் பிரவேசித்திருக்க முடியும்! தன் ஜீவியத்தின் கடைசி நேரத்தில் போய் "இந்த ஒரு இடத்தில்" மோசே கவனம் இல்லாதிருந்த படியால் அவனுடைய இழப்பு பெரிதாயிருந்தது. இவ்வாறு மோசேயைப் போலவே, எத்தனையோ வருடங்கள் தங்கள் வாழ்க்கையில் தேவனுக் கென்று உண்மையாய் வாழ்ந்த அநேக தேவ ஊழியர்கள் இருந்திருக் கிறார்கள். ஆனால்..... இவர்கள் தங்கள் ஜீவியத்தின் இறுதிப் பகுதியில் போய் கவனமில்லாது ஜீவித்து வீழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். இதன் மூலமாய் அவர்களுடைய வாழ்வைக் குறித்த தேவனுடைய திட்டத்தை தங்கள் சொந்த கைகளினாலேயே அழித்துப் போட்டார்கள்!!*

*இவ்வாறு, கானானுக்குள் மோசே பிரவேசிக்கத் தடை செய்து தேவன் தண்டித்தது போலவே இஸ்ரவேலர்களையும் இதே விதமாய் தண்டித்தாரென நாம் வாசிக்கிறோம். ஆனால் இங்கு நாம் காணும் வித்தியாசம் யாதெனில், இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு முன்பாக*

*"பத்து முறை" முரட்டாட்டம் செய்தார்கள்! (எண்.14:22). இவ்வாறு இஸ்ரவேலர்களை தண்டிப்பதற்கு முன்பாக தேவன் அவர்களுக்குப்* **பத்து சந்தர்ப்பங்களை** *கொடுத்திருந்தார். ஆனால் மோசேக்கோ* **ஒரே ஒரு சந்தர்ப்பத்தையே** *தந்தார்! ஏன்? ஏனென்றால் இஸ்ரவேல் ஜனங்களைவிட மோசேயிடம் தேவன் அதிகம் எதிர்பார்த்தார்!!*

*இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய வெளியரங்கமான "கிரியைகளை" மாத்திரமே கண்டிருந்தார்கள். ஆனால் மோசேயோ தேவனோடு முகமுகமாய் பேசி உறவாடியதினிமித்தம் அவருடைய "வழிகளை" அறிந்திருந்தான்!(சங்.103:6). நாம் தேவனுடைய ஸ்தானத்தில் பிரதிநிதியாக நின்று அவருடைய வார்த்தையைப் பிரசங்கிக்கிறவர்களாக இருந்தால், நம் சபையில் உள்ள மற்றவர்களைக் காட்டிலும் நம்மிடம் தேவன் பத்து மடங்கு அதிகம் எதிர்பார்ப்பார்.*

*தேவனுடைய ஊழியர்கள் என்னதான் கோபம் கொள்ளும்படி தூண்டப்பட்டாலும், அவர்களுடைய வார்த்தையில் ஒருபோதும் கவனமில்லாமல் இருந்துவிடவே கூடாது. இவ்வாறு தங்களுடைய சம்பாஷனையிலிருந்து "தப்பான" வார்த்தைகளைப் பிரித்தெடுக்க கற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே "தேவனுடைய வாய் போல்" இருப்பார்கள்(எரேமியா.15:19).*

**சம்பூரணமாக கீழ்படிவதின் முக்கியத்துவம் :**

*இஸ்ரவேலை நடத்துவற்கு தேவன் தெரிந்து கொண்ட மற்றும் ஓர் மனிதன்தான் சவுல். இந்த சவுல், தான் ராஜாவாக மாற வேண்டுமென ஒரு போதும் விரும்பியதேயில்லை. அவனை தேவன் தான் இஸ்ரவேலின் சிம்மாசனத்தில் அமரச்செய்தார்! இஸ்ரவேலர்கள் சவுலைத் தங்களுக்கு ராஜாவாக்கிட வந்த போது, சவுல் தன்னை ஒளித்துக் கொண்டு, "நான் ராஜாவாய் இருப்பதற்கு எம்மாத்திரம்? என் குடும்பம் இஸ்ரவேலின் குடும்பங்களிலெல்லாம் அற்பமானதல்லவா?" என கூறினான் (1 சாமு.9:21). இந்த சவுலின் தாழ்மைதான் எவ்வளவு பெரிதென்று பாருங்கள்!*

*ஆனால் வெகு சீக்கிரத்தில் சவுல் தன்னுடைய பார்வையில் பெரியவனாகிவிட்டபடியால், தேவன் தன்னுடைய அபிஷேகத்தை அவனை விட்டு எடுத்துப் போட வேண்டியதாகி விட்டது. நாம் 1சாமுவேல் 15 ம் அதிகாரத்தில் வாசிக்கிறபடி, சவுல் தேவனுடைய கட்டளையை தனக்கேற்றபடி மாற்றிக்கொண்டு அமலேக்கில் தேவன் கூறியதுபடி "எல்லாவற்றையும்" சங்கரிக்கவில்லை. அவன் தன்னுடைய சொந்த புத்தியை சார்ந்து ஜனங்களுக்குப் பிரியமானதெதுவோ அதையே செய்தான். இன்றும், யாரெல்லாம் தங்கள் பார்வையில் பெரியவர்களாக மாறிவிடுகிறார்களோ, அவர்களும் இவ்வாறாகவே சவுலைப் போல் செய்கிறார்கள். ஆகவே இங்கு ஒவ்வொரு தேவனுடைய ஊழியனும் சந்திக்கும் இரண்டு பெரிய கண்ணிகளை நாம் காண்கிறோம். அது யாதெனில், 1) தன் சொந்த புத்திக்குப் பிரியமானவைகள் 2) ஜனங்களுக்குப்*

பிரியமானவைகள். இந்த இரண்டு விருப்பங்களும், தன்னைப்பற்றிக் கொள்ளுவதற்கு சவுல் அனுமதித்தபடியால், தன்னுடைய அபிஷேகத்தை இழந்து போனான். நம்முடைய சொந்த ஞானத்தின்படி தேவனுடைய எந்த கட்டளைகளையும் மாற்றியமைப்பதற்கு நமக்கு எவ்வித உரிமையும் இல்லை. இவ்வாறு நாம் மனுஷர்களைப் பிரியப்படுத்துகிறவர்களாய் இருந்தால் "நாம் கிறிஸ்துவின் ஊழியக்காரனாய் ஒரு போதும் இருக்கவே முடியாது" (கலா1:10) என வேதம் ஆணித்தரமாக எச்சரிக்கிறது.

சவுல் தன்னுடைய பார்வைக்கு சிறியவனாகவே நிலைத்திருந்திருப் பானென்றால் "தேவனுடைய அபிஷேகம்" அவனுடைய ஜீவியத்தின் கடைசிவரை அவன் மீது தங்கியிருந்திருக்கும். ஆனால் அவனோ தன்னுடைய **சிங்காசனத்தை** நேசிக்கத் துவங்கி விட்டான். இந்த காரணத்தினாலேயே இன்றும் அநேக தேவஊழியர்கள் தங்கள் அபிஷேகத்தை இழந்து இருக்கிறார்கள். நாம் விழிப்பாய் இல்லாத பட்சத்தில், ஜனங்களுக்கு முன்பாக தேவனுடைய பிரதிநிதியாய் பேசும் படியான நம்முடைய அழைப்பே, நமக்கு "தலைகனம்" கொண்டுவரும் வழியாய் மாறிவிட முடியும்!!

இங்கு சவுல், தான் தொடர்ந்து ராஜாவாய் இருப்பதைப் பற்றிக் கொண்டிருந்தவனாய் மாத்திரமல்லாமல், அபிஷேகம் நிறைந்த ஓர் இளைய சகோதரன் (தாவீது) முன்னேறி வருவதையும், ஜனங்கள் அவன் மீது நம்பிக்கை வைப்பதையும் கண்டவுடன், அவனை ஒடுக்குவதற்குத் திட்டம் தீட்டினான்! சவுலிடம் இல்லாத விசுவாசம் தாவீதிடம் இருந்தபடியால், தாவீதின் மீது சவுல் பொறாமையும் கொண்டான். அது மாத்திரமல்லாமல் ஜனங்கள் தாவீதைப் புகழ்ந்ததினிமித்தம் அவனைக் கொலை செய்யவும் விரும்பினான்!!

இவ்வாறு தேவன் தள்ளிவிட்ட பின்பும், தங்கள் சிங்காசனங்களில் ஒட்டிக் கொண்டிருக்கும் "இது போன்ற சவுல்களின்" செய்கைகளைத் தேவன் காணாததுபோல் விட்டு விடுவாரா? அவ்விதம் ஓர் நீண்டகாலம் தேவன் விட்டு வைக்க கூடும்! சவுலினுடைய விஷயத்தில் தேவன் அவனை 13 வருடங்கள் விட்டுவைத்தார். கோலியாத்தை தாவீது கொன்றபோது 17- வயதுடையவனாகவே இருந்தான். ஆனால் தாவீது 30 வயது நிரம்பிய பின்பு தான் ராஜாவாய் மாறினான். இவ்வாறு தாவீது தேவனால் அபிஷேகிக்கப்பட்டபின்பும், 13 வருடங்கள் வரை சவுல் இஸ்ரவேலின் இராஜாவாய் ஆளுகை செய்வதற்கு தேவன் அனுமதித்தார்.

இந்த நிகழ்ச்சி நமக்கு கற்பிக்கும் பாடம் யாது?

நாம் பின்மாற்றம் அடைந்து, ஆவியின் அபிஷேகத்தைப் பல வருடங்களுக்கு முன்பே இழந்திருந்தாலும்கூட, நாம் ஏதேனும் ஒரு ஊழியத்தில் இன்னமும் இருப்பதற்கு தேவன் அனுமதிக்கக் கூடும். பகுத்து நிதானிக்கும் தன்மை ஜனங்களிடத்தில் இல்லாதபடியால் "நாம் அபிஷேகத்தை இழந்து விட்டோம்" என்பதை அவர்கள் அறியாதிருக்க

முடியும். ஆகவே, அவர்கள் நம்மை இன்னமும் தேவ ஊழியர்களாகவே மதித்து ஏற்றுக்கொள்ள முடியும். ஏனென்றால் அவர்கள் நம்முடைய வயதினிமித்தமோ அல்லது வேத அறிவினிமித்தமோ அல்லது நம்முடைய அனுபவத்தினிமித்தமோ நமக்கு தொடர்ந்து மரியாதையை செலுத்திக் கொண்டிருப்பார்கள். இவ்வாறு ஜனங்கள் நம்மை ஏற்றுக் கொண்டதால், அதுவே நாம் தேவ ஊழியர்களாய் இருப்பதற்கு போதுமானது என ஒருக்காலும் எண்ணாதிருக்கக்கடவோம்.

**தேவன் நம்மை நிராகரித்த பின்பு மனுஷன் நம்மை ஏற்றுக் கொள்வதில் என்ன பிரயோஜனம்?** ஒரு மனிதன் தன்னுடைய ஜீவியத்தில் அபிஷேகத்தை இழந்த பின்பும் கர்த்தருக்கு ஊழியம் செய்வதோ அல்லது ஒரு சபையை நடத்துவதோ ஓர் கொடிய துயரமிக்க சம்பவமாகும்!

**அவசரப்பட்டு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு விலகியிருத்தல் :**

துரதிருஷ்டவசமாய், தாவீதுகூட தான் இராஜாவாய் மாறியவுடன் தேவனுடைய கட்டளைகளை சற்று மாற்றி அமைத்து விட்டான். இதற்காக தேவன் தாவீதையும் தண்டிக்க வேண்டியதாயிருந்தது. ஆம், தேவனிடத்தில் பட்சபாதமில்லை. தன்னை சேவிக்கும் எல்லோரிடத்திலுமே அவர் கண்டிப்பாக நடந்து கொள்கிறார்.

நாம் தேவனுடைய வார்த்தைக்குத் துல்லியமாய் கீழ்படியாத பட்சத்தில், எவ்வளவுதான் நம்முடைய நோக்கங்கள் நல்லதாய் இருந்தாலும், அவைகள் “தேவசித்தத்திலிருந்து விலகும்” கொடிய நிலையிலிருந்து நம்மைப் பாதுகாக்கவே முடியாது. இந்த உண்மையை நாம் 2 சாமுவேல் 6-ம் அதிகாரத்தின் மூலம் அறிந்து கொள்கிறோம். தாவீது தேவனுடைய உடன்படிக்கை பெட்டியை திரும்பவும் எருசலேமுக்கு கொண்டு வந்தான். . . இது ஒரு நல்ல செயல்தான்! ஆனால் தேவன் தன்னுடைய பிரமாணங்களில் கட்டளையிட்ட முறையின்படி அவன் அதைச் செய்யவில்லை. தேவனுடைய பெட்டியை **லேவியர்கள் தங்கள் தோள்களில்** சுமந்து வர வேண்டுமென்றே தேவன் கட்டளை கொடுத்திருந்தார். ஆனால் தாவீதோ தேவனுடைய பெட்டியை ஒரு **இரதத்தில் வைத்து** அந்த இரதத்தை **மாடுகள்** இழுத்து வரும்படியாய்ச் செய்தான். சில வருடங்களுக்கு முன்பு பெலிஸ்தியர்கள் தேவனுடைய பெட்டிக்கு இவ்விதமாகவே செய்தார்கள். இப்போது தாவீது அதே முறைமையின்படியே செய்யத் துணிந்தான் (1 சாமு.6:3-8).

இன்றும் இதே செயலைத்தான் கிறிஸ்தவ தலைவர்கள் செய்வதை தொடர்ந்து நாம் காண்கிறோம். இவர்கள் தங்கள் சபைகளை தேவனுடைய வார்த்தை போதிக்கிறபடி நடத்தாமல் இன்றைய வியாபார உலகின் திறமையான உபாயங்களை உபயோகித்து நடத்துகிறார்கள்!

தேவனுடைய பெட்டியை மாடுகள் சுமந்து கொண்டிருந்த போது அவைகள் மிரண்டு தள்ளாடியது. மாடுகள் மிரண்டதினிமித்தம் தேவனுடைய பெட்டியும் தள்ளாடியது. அச்சமயம் **ஊசா** என்பவன்,

பெட்டி கீழே விழாமல் இருப்பதற்குத் தன் கையை நீட்டி அதைப் பிடித்தான்! "அவனுடைய பயபக்தியற்ற துணிவினிமித்தம்" தேவன் ஊசாவை அந்த இடத்திலேயே அடித்தார். அங்கு அவன் தேவனுடைய பெட்டியண்டையில் செத்து விழுந்தான்!! (வசனம் 7).

இவ்வாறு தேவனுடைய மேய்ப்பர்கள் ஒரு தவறை செய்யும் போது, ஆடுகளும் துன்பமடைவது வருத்தமான செயலேயாகும். ஆனால் அதுதான் இன்றும் தொடர்ந்து சம்பவிக்கிறது. தாவீது செய்த ஒரு தவற்றிற்காக ஊசா துன்பமடைந்தான்! இந்த சம்பவத்தின் மூலமாய், தேவன் தன்னுடைய ஊழியர்களிடம் மிகுந்த கண்டிப்புடன் நடந்து கொள்கிறார் என்ற பாடத்தை தாவீது கற்றுக் கொண்டான்!

ஊசாவின் நோக்கம் மிக சிறந்ததுதான்... ஆனால் "ஊசாவின் மேல் கர்த்தருடைய கோபம் பற்றியெரிந்தது!" (வசனம் 7) என வேதம் கூறுகிறது. தேவனுடைய பெட்டியை லேவியர்கள் தான் தொட முடியும் என்ற சத்தியத்தை ஊசா தன் சிறு பிராயத்திலிருந்தே கற்றிருந்தான். ஆனால் அந்த வேளையில் **ஊசா** தேவனுடைய கட்டளையை சாதாரணமாய் எடுத்தபடியால் அதனிமித்தம் துன்பமடைந்தான்.

இன்றும், இதே "ஊசாவின் தவறு" திரும்பவுமாக நடந்திட முடியும். நம்முடைய சபையில் ஏதாவது தவறு நடப்பதை நாம் காணும்போது, உடனே நம்முடைய கைகளை நீட்டி"தேவனுடைய பெட்டியை" நிலைநிறுத்த முயற்சிக்கலாம். இவ்விதம் நம் நோக்கங்கள் நல்லதாய் இருந்தாலும் "நாம் நம்முடைய எல்கையைத்" தாண்டுகிற படியால் தேவன் நம்மையும் அடித்துவிடக்கூடும். 'நல்லது' என நம்முடைய புத்தி சொன்னதை வைத்து நாம் சிலவற்றை செய்திடக் கூடும். ஆனால், அந்த வேளையில் நாமோ கர்த்தருடைய சித்தம் என்ன வென்பதை அறிந்து கொள்வதற்கு காத்திருக்கவில்லை..... ஆம், நாம் அவசரமாய் செயல்பட்டு விட்டோம்!

இயேசு, "**நான்** என் சபையை கட்டுவேன்" (மத்.16:18) எனக் கூறினார். **சபையைக்கட்டுவது ஆண்டவருடைய பணியே ஆகும். நம்முடையதல்ல!** "இந்த குறிப்பிட்ட ஸ்தலங்களில் **நான்** சபையைக் கட்டுகிறேன்" என நாம் கூறுவது அகங்காரமான பெருமையே ஆகும். இவ்வாறு கிறிஸ்துவின் சரீரத்தை நம்முடைய சொந்த வியாபரத்தைப்போல் நாம் எண்ணத் துவங்கிவிட்டால், என்றாவது ஒரு நாள் ஊசா செய்த அதே பிழையை நாமும் நிச்சயமாய் செய்து விடுவோம் !!

சபை தடுமாறுவதை நாம் காணும்போது, அதை தேவனிடத்தில் சென்றே "ஆண்டவரே, நானல்ல **நீரே** சபையை கட்டிக் கொண்டிருக்கிறீர்! உம் சபையை காத்துக் கொள்ளும்!!" என ஜெபத்துடன் சொல்லக் கடவோம். சபையில் காரியம் எவ்வாறு நடக்க வேண்டுமோ, அவ்வாறு நடக்காததை நாம் காணும் போது "இந்தப் பணி யாருடையது? இந்தப் பொறுப்பு யாருடையது? பரிசுத்தாவியானவரா அல்லது நானா?" என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக்கொள்ளக்கடவோம்.

சில சமயங்களில் சில காரியங்கள் "உடனடியாக" செய்யப்பட வேண்டும் என நாம் உணரலாம். ஆனால் அதையும் பரிசுத்தாவியின் குரலைக் கேட்காமல் செய்தால், நாம் நிச்சயம் மாம்சத்தின்படியே செய்து விடுவோம். இவ்வித நம்முடைய செயல் எவ்வளவுதான் நல்ல நோக்கங்கள் கொண்டதாய் இருந்தாலும், நாம் ஒன்றும் செய்யாதிருப் பதைக் காட்டிலும் அதிக குழப்பத்தையே "நம் செயலால்" கொண்டு வருவோம். ஆகவே தான் நாம் ஆண்டவரிடம் சென்று, "ஆண்டவரே, நீரே இந்த பொறுப்பில் இருக்கிறீர். அரசாளும் கர்த்தத்துவம் உமது தோளின் மேல் இருக்கிறது. நீர் சொல்வதைக் கேட்கவே நான் விரும்புகிறேன். நான் என்ன செய்ய வேண்டுமென்பதை **நீர்** எனக்குச் சொல்லும்" எனக் கூறக்கடவோம்.

பலவிதமான முட்டாள்களைக் குறித்து நீதிமொழிகள் புத்தகம் விவரிக்கிறது. ஆனால் முடிவாக எல்லா முட்டாள்களுக்கும் மேலான முட்டாளை நீதிமொழிகள் புத்தகம் கூறும்போது, "தன் வார்த்தைகளில் (அல்லது செய்கைகளில்) **பதறுகிற (அவசரப்படுகிற)** மனுஷனைக் கண்டா யானால், அவனை நம்புவதைக் காட்டிலும் மூடனை நம்பலாம்" (நீதிமொழிகள். 29:20) என்றே கூறுகிறது!

இவ்வாறு ஒன்றைச் சொல்லுவதற்கோ அல்லது செய்வதற்கோ அவசரப்படுகிறவன், ஒரு சூழ்நிலையில் என்ன செய்ய வேண்டும் என்பதை "தனக்கு நன்றாகத் தெரியும்" என தனக்குத்தானே நம்பிக்கை கொண்டவனாய் இருக்கிறான். இவனுக்கு தேவனிடம் சென்று ஆலோசனை கேட்பதெல்லாம் அவசியமாய்த் தோன்றுவதில்லை. ஆம் இவன் தானாக எல்லாவற்றையும் செய்து விடுகிறான். இப்படிப்பட்ட ஒரு மனிதன் இவ்வுலகில் முட்டாள்களுக்கெல்லாம் மேலான முட்டாளாய் இருக்கிறான்!

இயேசு கிறிஸ்துவைப்பற்றி உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம், "கர்த்தருக்கு பயப்படுதல் அவருக்கு (இயேசுவுக்கு) உகந்த வாசனையாய் இருக்கும். அவர் தமது கண்கண்டபடி நியாயம் தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யமாலும்...." (ஏசா.11:13) எனக் கூறுவதைக் காண்கிறோம். எத்தனையோ நிகழ்ச்சிகளை தன் கண்ணால் காண்பதைத் தவிர்ப்பதும் இயேசுவால் முடியாது. ஏனென்றால் அவர் ஒன்றும் குருடர் இல்லை! அதே போல் எத்தனையோ விஷயங்களைக் கேட்காமல் தவிர்ப்பது அவரால் முடியாது, ஏனென்றால் அவர் ஒன்றும் செவிடர் இல்லை!! ஆனால், இயேசு தன் பிதாவுக்கு அதிகம் பயந்து ஜீவித்த படியால் தான் கண்டதை வைத்தும், கேட்டதை வைத்தும் மாத்திரமே ஒன்றை நிதானித்து நியாயம் தீர்த்திட அல்லது ஒரு அபிப்பிராயம் கொண்டிட அவர் ஒரு போதும் துணியவில்லை! இதை அவரே ஒரு சமயம் குறிப்பிடும்போது, "**பிதாவானவர் செய்ய குமாரன் காண்கிறதெதுவோ,** அதையேயன்றி வேறொன்றையும் தாமாய் செய்ய மாட்டார்" (யோவான். 5:19) என தன்னைப்பற்றி கூறினார்.

விபச்சாரத்தில் பிடிப்பட்ட ஸ்திரீயை இயேசுவினிடத்தில் பரிசேயர்கள் கொண்டு வந்தபோது, அவர்களுடைய கேள்விக்கு இயேசு கொஞ்ச நேரம் பதில் சொல்லவே இல்லை. ஆம், அவர் தன்னுடைய பிதாவினிடத்தில் கேட்கும்படி காத்துக் கொண்டிருந்தார். அதைக் கேட்ட பின்பு தான் இயேசு பேசினார். ஆனால் அது ஒரே ஒரு வாக்கியம் தான்! "உங்களில் பாவமில்லாதவன் இவள் மீது முதலாவது கல்லை எறியக்கடவன்" என்பதே அந்த வாக்கியம்! என்ன ஆச்சரியம், ஒரு மணி நேர நீண்ட பிரசங்கம் செய்து முடிக்க வேண்டிய செயலை, ஒரே ஒரு வாக்கியம் நிறைவேற்றி விட்டது!!

இதே போல், சிக்கலான பிரச்சனைகளோடு நம்மிடத்தில் யாராவது வரும்போது, அவர்களுக்கு நம்முடைய புத்திசாலித்தனத்தையும், நம்முடைய கடந்த கால அனுபவத்தையும் சார்ந்து ஆலோசனை கூறினால், அந்தப்பிரச்சனை இன்னமும் அதிகரித்து விடக்கூடும். ஆனால், பிதாவினிடத்திலிருந்து பெறும் ஒரே ஒரு ஞானமுள்ள வார்த்தை வியக்கத்தகு அற்புதங்களை அவர்கள் வாழ்வில் செய்துவிடும்!

ஆகவே, அடுத்த தடவை, "மாடுகள் இடறி தேவனுடைய பெட்டி தடுமாறுவதை" நீங்கள் காணும் போது, அந்த நாளின் முட்டாள்களின் பட்டியலில் உங்கள் பெயரை முதலாவதாய் எழுதிட முனைந்து நிற்காதீர்கள். **கண்கண்டபடியும், காது கேட்டபடியும் துரிதமாய் நியாயம் தீர்த்து தெய்வ பயமற்ற செயலை செய்யாதிருக்க விழிப்பாய் இருக்ககடவோம்.** இதற்கு மாறாக நம்முடைய முகத்தை ஆண்டவருக்கு முன்பாகப் புழுதியில் புதைத்து, "ஆண்டவரே நான் ஞானத்தில் குறையுள்ளவன். நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்?" என்றே கேட்கக்கடவோம்.

"நமக்கு ஞானம் குறைவாயிருக்கிறது" என ஒத்துக் கொள்வதே ஓர் கடினமான காரியமாகும். அதுவும் குறிப்பாக சபையில் உள்ள மற்றவர்களை நம்மை விட இளையவர்களாகவும், முதிர்ச்சியற்றவர் களாகவும் இருப்பதை நன்றாய் அறிந்த பிறகும்....... தனக்கு ஞான மில்லையென ஒத்துக்கொள்வது இன்னமும் அதிகக் கடினமேயாகும். ஆனால் மிகுந்த மனத்தாழ்மையோடு நம்முடைய குறையை தேவனிடத்தில் ஒத்துக்கொண்டால், அவர் தமது ஞானத்தை நமக்கு சம்பூரணமாய் கொடுத்து விடுவார்.

**நாம் சொல்லிய வாக்கை காத்து நடத்தல் :**

தன்னுடைய ஊழியர்களிடத்தில் தேவன் எவ்வாறு கண்டிப்பாய் நடந்து கொள்கிறார் என்பதை அறிவதற்கு மற்றும் ஒரு உதாரணத்தை 2 சாமுவேல் 21:1 -ம் வசனத்தில் காண்கிறோம். தாவீது, ராஜாவாய் இருந்த நாட்களில் தொடர்ச்சியாக மூன்று வருஷம் பஞ்சம் உண்டாயிருந்தது. இவ்விதமாக நம்முடைய சபையிலும் தொடர்ச்சியாக தீர்க்கதரிசனமான வார்த்தைக்கு பஞ்சம் உண்டாயிருந்தால் நாமும் தாவீதைப் போலவே கர்த்தரிடத்தில் காரணத்தை கேட்டு விசாரிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

என்ன காரணத்தினால் பஞ்சம் என கர்த்தர் தாவீதுக்கு கூறும்போது, “பல வருடங்களுக்கு முன்பு கிபியோனிடத்தில் இஸ்ரவேல் தான் செய்த வாக்குதத்தத்தை மீறியபடியால் இந்தப் பஞ்சத்தை உண்டாக்கினேன்” எனக் கூறினார்!

அதாவது, யோசுவாவின் காலத்தில் சுமார் 300 வருடங்களுக்கு முன்பு இஸ்ரவேல் கிபியோனியரிடம், “உங்கள் சந்ததிக்கு நாங்கள் எவ்வித தீங்கும் செய்ய மாட்டோம்” என வாக்கு கொடுத்திருந்தார்கள். ஆனால் சவுல் ராஜாவாய் வந்தவுடன் இந்த வாக்குதத்தத்தை அவமதித்து விட்டு அவர்களில் சிலரை கொன்று போட்டான். இந்த நிகழ்ச்சி நடந்து 30- வருடங்களுக்குப் பின்பு தான், இந்த பாவத்திற்கான தண்டனை இஸ்ரவேலைப் பிடித்துக் கொண்டது. பார்த்தீர்களா, தேவன் எவ்வளவு துல்லியமாய் தன்னுடைய கணக்குகளை வைத்திருக்கிறார்! நாம் ஏதாகிலும் தவறு செய்து அவைகளை தேவனுக்கு முன்பாக சரி செய்யாத பட்சத்தில், அத்தவறுகளில் ஒன்றையாகிலும் தேவன் மறந்து விடுவதில்லை. நம்முடைய தவறுகளை நாம் தேவனிடத்தில் சென்று ஒப்புவித்து சரிசெய்வதற்கென ஓர் நீண்ட 30 ஆண்டுகள் கூட(!) தருவார். ஆனால், என்றாகிலும் ஒரு நாள் அக்கணக்குகளைத் தீர்க்க அவர் வந்து விடுவார்!! ஆம், இஸ்ரவேல் தன் கணக்குகளை தேவனிடத்தில் சென்று சரிசெய்யும் வரை, அவர் இஸ்ரவேலின் மீதிருந்த பஞ்சத்தை நீக்கவில்லை.

கர்த்தரைச் சேவிக்கிற நாம் யாவரும் நாம் பேசுகிற வார்த்தையில் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும். கூட்டங்களில் மாத்திரமல்ல, நம் அன்றாட ஜீவியத்தின் வார்த்தைகளிலும் நாம் மிகுந்த கவனமாய் இருக்க வேண்டும். நாம் ஒரு காரியத்தை ஒருவருக்குச் செய்வதாக வாக்கு கொடுத்து விட்டு, அதை எளிதில் மறக்கிறவர்களாக இருக்கவே கூடாது. உதாரணமாய், “எனக்காக ஜெபியுங்கள்” எனக் கேட்டுக் கொள்பவர் களிடம், ஜெபிப்பதாக வாக்கு கொடுத்து விட்டு ஜெபிப்பதற்கு மறந்து விடக்கூடாது. தங்களுக்காக ஜெபிக்கச் சொல்லி கேட்டவர்களுக்காக, நாம் உடனே ஜெபிக்க முடியாத நிலையிலிருந்தால், நாம் நேர்மையுள்ளவர்களாய் இருந்து “உங்கள் வேண்டுதலை நான் **நினைவுகூறும் போது** நிச்சயமாக ஜெபிப்பேன்” எனக் கூறவேண்டும். அல்லது குறைந்தபட்சம் அவர்களுக்காக அந்த இடத்திலேயே உடனே ஜெபித்து விட வேண்டும். ஆனால் நாம் நிறைவேற்ற முடியாத ஒன்றை ஒரு போதும் வாக்கு கொடுக்கவே கூடாது.

சர்வசாதாரணமாய், நாம் ஜனங்களுக்கு வாக்கு கொடுக்கிறவர் களாயிருந்தால், தேவனுடைய வார்த்தையை நாம் எவ்வாறு அதற்குரிய கனத்தோடு பேச முடியும்? ஆகவே, நாம் பிறருக்கு வாக்குக் கொடுத்ததை நிறைவேற்ற முடியாத நிலையிலிருந்தால், அந்த உரிய நபரிடத்தில் நாம் சென்று, அவ்வாறு நிறைவேற்றமுடியாமல் போனதற்குரிய காரணத்தை விளக்கி அவர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். கொடுத்த வாக்கை மீறுவது அபாயகரமானது! இதை ஆண்டவர் இயேசு குறிப்பிடும் போது, “மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து

*நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" என எச்சரித்தார் (மத்தேயு.12:36).*

*நாம் பிறருக்குத்தரும் வாக்குகளைத் தேவன் மிகப்பெரிய விஷயமாய் எடுத்துக் கொள்கிறார். அவ்வாறு நாம் வாக்கு கொடுத்த நபர்கள் அவிசுவாசிகளோ அல்லது கிபியோனியர்களைப் போல வேலைக்காரர்களேயானாலும், நாம் சொன்ன வாக்கை மீறுவதற்கு நமக்கு எந்த உரிமையும் இல்லை!*

*நாம் சில இடங்களில் செய்த அநீதியான செயல் சரி செய்யப் படாமல் வைத்திருந்து, நீண்ட காலமாய் அதனிமித்தம் எந்த தண்டனையும் நமக்கு வராதபடியால் தேவன் அவைகளை மறந்து விட்டாரென நாம் எண்ணிக்கொள்ளலாம். ஆனால் தேவனோ அவைகளை ஒரு போதும் மறப்பதேயில்லை. தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் வருவதற்கு தாமதிக் கலாம், ஆனால், முடிவில். . . அது வந்தே தீரும்!*

*"ஆதலால் நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்கு பிரியமாய் ஆராதனை (ஊழியம்) செய்யக்கடவோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறாரே" (எபி.12:28,29).*

3

# மூப்பர்களை
# கடிந்து கொள்ளும் ஆண்டவர்!

*வெளிப்படுத்தின விசேஷம் 2,3-ம் அதிகாரங்கள் மூப்பர்களாகிய நாம் வாசித்து கற்றுக்கொள்ள வேண்டிய சிறந்த அதிகாரங்களாகும். ஏனெனில், இந்த அதிகாரங்களில் "பிரத்தியேகமாய்" சபையிலுள்ள மூத்த சகோதரர்களுக்கென்ற (தூதர்களுக்கென்றே) ஆண்டவர் செய்திகளைத் தந்துள்ளார். இங்கு குறிப்பிடப்பட்ட ஏழு சபைகளில், ஐந்து சபைகளில் பின்மாற்றம் அடைந்திருந்த மூப்பர்களை ஆண்டவர்* **பகிரங்கமாய்** *கடிந்து கொண்டார். இங்கு ஆண்டவர், யோவான் அப்போஸ்தலன் மூலமாக அவர்களுக்கு மாத்திரமேயுள்ள "நம்பிக்கைக்குப் பாத்திரமான அந்தரங்கக்" கடிதங்களை அனுப்பாமல் அந்தந்த சபைகளிலுள்ள எல்லா விசுவாசிகளும் வாசிக்கும் படியான பகிரங்க கடிதங்களையே யோவான் மூலம் அனுப்பினார்.*

**தன் ஆண்டவர் மீது கொண்டிருந்த அன்பின் தியானத்தை இழந்த எபேசு சபை :**

*பயங்கரமான பாவங்களில் விழுந்ததற்காக அல்ல.... மாறாக, தன் ஆதி நாட்களில் ஆண்டவர்மீது கொண்டிருந்த ஊக்கமான தியான பக்தியை இழந்ததற்காகவே எபேசு சபையின் மூப்பன் கடிந்து கொள்ளப்பட்டான் (வெளி.2:1-5). 'ஒரு வேளை' இந்த மூப்பன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் தான் பேச வேண்டிய பிரசங்கங்களில் அதிக கவனம் செலுத்தியதினிமித்தம், தன் சொந்த ஜீவியத்தில் ஆண்டவரோடு கொண்டிருந்த தியானத்தை உதாசினம் செய்திருக்கக் கூடும்! இவ்வாறு தன் ஆண்டவரிடம் கொண்டிருந்த தியானத்தை இழந்ததே அவனிடம் காணப்பட்ட மகாபயங்கரமான பிழையாயிருந்தது!!*

*“கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டிருக்கும் தியானத்திலிருந்து” இரண்டாம் தரமான வேறு காரியங்களுக்கு நம்மை திசை திருப்பவே சாத்தான் எப்போதும் முயற்சிக்கிறான் (2கொரி.11:3). ஆண்டவரைப் பற்றிக்கொண்டிருக்கும் பிரியத்திலிருந்து, அவருடைய ஊழியம் எப்போது நமக்கு பிரதானமாய் மாறுகிறதோ . . . அக்கணமே நாம் பின்மாறத் துவங்கிவிடுவோம். நாம் ஆண்டவரோடு கொண்டிருக்கும் தனிப்பட்ட நெருக்கமான ஐக்கியத்தின் உறவிலிருந்து, நாம் அவருக்காகச் செய்யும் எல்லா ஊழியங்களும் புறப்பட்டுச் செல்ல வேண்டும். இவ்வாறு இல்லையென்றால், நம்முடைய ஊழியங்களுக்கு எந்தவித ஆவிக்குரிய மதிப்பும் இருக்காது!! ஆம், அவைகள் செத்த கிரியையாகவும், ஓர் சமூக சேவையாகவும் தேய்ந்து போகும்!!*

*நம் ஆண்டவரைவிட வேறு ஏதேனும் எப்போதும் அதிக முக்கியத்துவம் பெறுகிறதோ, அப்போதே நாம் தொடர்ந்து புதிய உடன்படிக்கையின் ஊழியர்களாய் இருப்பதற்கு அருகதையற்றவர் களாகிவிடுவோம். ஏனென்றால் பழைய உடன்படிக்கை “கர்த்தருக்குச் செய்யும் ஊழியத்தை” வலியுறுத்துகிறது..... ஆனால், புதிய உடன்படிக் கையோ “ஆண்டவரோடு கொண்டிருக்கும் ஒரு தனிப்பட்ட நெருங்கிய உறவை” வலியுறுத்துகிறது. இந்த வித்தியாசத்தை நாம் தெளிவாய் அறியாத பட்சத்தில், நாம் ஒருக்காலும் கிறிஸ்துவின் சரீரத்தை கட்டவே முடியாது.*

**லௌகீக போதனைகளை சகித்துக் கொண்ட பெர்கமு சபை :**

*சபையை உலகப்பிரகாரமான லௌகீகத்திற்கும், பாவத்தை எளிதாக எடுத்துக் கொள்ளும் மனப்பான்மைக்கும் நடத்தும்படியான போதகங்களைப் போதிக்கும் ‘பிரசங்கிகளை’ அனுமதித்தபடியால், அவர் கடிந்து கொள்ளப்பட்டார் (வெளி.2:14,15). ஒருவேளை இந்த மூப்பன் அவனை பொருத்த மட்டும் நல்லவனாய் இருந்திருக்க முடியும். ஆனால் அவனோ “பிலேயாமின் உபதேசங்களைப்” பிரசங்கிப் பவர்களைச் சபையில் அனுமதித்து விட்டான். இதனிமித்தமே அவன் கர்த்தருக்கு முன்பாக குற்றமுள்ளவனாய் காணப்பட்டான். ஜனங்கள் பாவத்தை எளிதாக எடுத்துக்கொள்ளும் நிலைக்கு வழி நடத்தும் எந்த பிரசங்கங்களும் சபையில் பிரசங்கிக்கப்படாமல் காத்துக்கொள்ளும் உத்திரவாதத்தை மூப்பர்களின் பொறுப்பிலேயே தேவன் ஒப்படைத் திருக்கிறார். “தேவபக்திக்கேற்ற உபதேசங்கள்” (கிறிஸ்துவைப் போன்ற ஜீவியத்திற்குள் நடத்தும் உபதேசங்கள்) இருப்பதையும், அவைகளே “ஆரோக்கியமான உபதேசங்கள்”என்றும் 1தீமோ 6:3-ம் வசனத்தில் வாசிக்கிறோம். இதைத் தவிர வேறு எந்த உபதேசங்களும் அது கொஞ்ச அளவோ அல்லது அதிக அளவோ..... அவைகள் ஆரோக்கியமற்ற உபதேசங்களேயாகும்!!*

*பாவத்தை எளிதாக எடுத்துக்கொள்ளும் போதகங்களை இந்த மூப்பர் ஏன் அனுமதித்தார்? அநேகமாக இந்த மூப்பர் சபையில் உள்ள சகோதர சகோதரிகளை எந்த ஒரு காரியத்திற்காகவும் கண்டித்து*

திருத்தியிருக்கமாட்டார். அது ஏனென்றால், தான் "தாழ்மையான" "சாந்தமுள்ள" சகோதரன் என கருதப்பட்ட பெயரை பாதுகாத்திட இவன் விரும்பினான். ஆம், இந்த மூப்பன் சபையின் நன்மையைவிட தன் சொந்த நற்பெயரையே தேடினான்.

"தாழ்மை" "சாந்தம்" ஆகிய திவ்ய சுபாவங்களை, இயேசு நமக்கு உரைத்தபடி அவருடைய மாதிரியிலிருந்தே நாம் அவைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும் (மத்.11:29). இவ்வாறு இயேசு சொன்னபடி செய்யத் தவறும்போது, இக்குணாதிசயங்களுக்குத் தவறான அர்த்தத்தையே நாம் பெற்றிருப்போம்!

இயேசுவினிடத்திலிருந்த சாந்தமும், தாழ்மை குணமும், தேவாலயத்திலிருந்த காசுக்காரர்களை விரட்டுவதற்கு சிறிதும் தடையாய் குறுக்கிடவில்லை. அதைப் போலவே, "இயேசு சிலுவையைத் தவிர்க்க வேண்டும்" எனப் பேதுரு தவறான உபதேசத்தை இயேசுவிடம் பிரசங்கித்த போது அவனைப் பார்த்து "அப்பாலே போ சாத்தானே!" எனக் கடிந்து கொள்வதற்கும் அவரிடமிருந்த சாந்தகுணமும் தாழ்மையும் தடையாய் நிற்கவில்லை (மத்.16:22,23).

இவ்வாறு, சபையைத் தவறான பாதையில் நடத்தும்படி பேதுருவைப் போன்ற ஓர் நல்ல சகோதரனைக்கூட சாத்தான் உபயோகித்திட முடியும். எப்படியெனில், பேதுருவைப் போலவே நல்ல சகோதரர்கள் சில சமயங்களில் "சிலுவை உபதேசத்தின்" தரத்தை குறைக்கும் விதத்தில் பிரசங்கித்திடமுடியும். நாமோ, உடனடியாக இது போன்ற பிரசங்கங் களைச் "சாத்தானுடைய சத்தமென" அடையாளம் கண்டு கொள்ள ஜாக்கிரதை கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால், இவ்வித பிரசங் கங்கள் மூலமாகவே, சபையை தேவன் நடத்த விரும்பும் திசையிலிருந்து வேறு திசைக்குத் திருப்ப சாத்தான் முயற்சிக்கிறான்.

எத்திசை நோக்கி சபை நடத்தப்பட வேண்டுமோ, அதைத் தீர்மானிக்க வேண்டிய பெரிய பொறுப்பை சபை மூப்பர்களாகிய நாமே பெற்றிருக் கிறோம். அவ்வாறு நாம் நடத்திச் செல்லும் திசை உலகத்திற் குரியதாகவோ, ஒத்தவேஷத்திற்குரியதாகவோ ஒரு போதும் இருக்கவே கூடாது. மேலும் அந்த திசை பரிசேயத்துவமாகவும், சட்டதிட்ட ஆவிக்குட்பட்டதாகவும் ஒரு போதும் இருக்க கூடாது. **ஆம், சபையை நாம் நடத்தும் திசை தேவ சித்தத்திற்கு நேராய் நடத்தும் சிலுவையின் பாதையாகவே இருந்திட வேண்டும்!**

பொதுவாக, பிலேயாம் போன்ற பிரசங்கிகள் ஓர் வலிமையான "மனுஷீக-ஆத்துமவல்லமையைப்" பெற்றிருப்பார்கள். அதை உபயோகித்து, சபையில் உள்ள ஜனங்களிடத்தில் ஓர் ஆரோக்கியமற்ற கவர்ச்சியை உண்டாக்கி விடுகிறார்கள். இவ்வித வலிமையான கவர்ச்சிகளைப் பெற்றிருக்கும் பிரசங்கிகள், பிறரைத் தங்கள் வசப்படுத்தி, அவர்கள் கிறிஸ்துவையே தங்கள் தலையாகக் கொண்டு இணைவதற்குப் பெரும் தடையாய் நிற்கிறார்கள். இவர்கள், ஜனங்களை "தங்கள் பக்கம்"

ஈர்த்திருக்கிறபடியால் அவர்களை உண்மையான ஆவிக்குரிய தன்மை யிலிருந்து வழிவிலகச் செய்து, ஓர் மேலோட்டமான உலக வழக்கத்தின்படி வாழும் மார்க்க ஜீவியத்திற்குள் நடத்தி விடுகிறார்கள்!

"தங்களுடைய மனுஷீக-ஆத்தும வல்லமையை எங்ஙனம் மரணத்தில் ஊற்ற வேண்டும்" என்பதை விளங்கிக் கொள்ளாத எந்தப் பிரசங்கியும், தங்கள் விசுவாசிகளைத் தங்களோடுதான் இணைத்துக் கொள்வார்கள். ஆம், தலையாகிய கிறிஸ்துவினிடத்தில் அவர்களை இவர்கள் இணைப்பதில்லை! இப்படிப்பட்ட சபையில் உள்ள விசுவாசிகள், தங்கள் சபையின் ஊழியனைப் போற்றிப் புகழ்ந்து அவரையே குருட்டுத்தனமாய் பின்பற்றி விடுவார்கள்!! இது போன்ற இலட்சணத்தில் வாழுபவர்கள் தங்கள் ஜீவியகாலத்தில் ஒரு தடவை கூட, கோபத்தையோ, பாலிய இச்சையோ அல்லது உலகத்தையோ ஜெயித்து வாழ்ந்திட ஒருக்காலும் முடியாது!!

ஆவிக்குரிய வல்லமைக்கும், மனுஷீக ஆத்தும வல்லமைக்கும் ஏராளமான வித்தியாசங்கள் உள்ளன. இந்த இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை, நாம் செம்மையாய்ப் பகுத்தறியக்கூடியவர்களாய் இருக்க வேண்டும். ஓர் மனிதனிடம் ஏராளமான வேத அறிவும், பிரசங்க வரமும் இருக்கக்கூடும்..... இன்னமும், தன்னுடைய சபையில் உள்ள சகோதர சகோதரிகளை அன்புடன் உபசரிக்கக் கூடியவராகவும், பலவகையில் அவர்களுக்கு உதவி செய்யக் கூடியவராகவும் இருக்கக் கூடும். ஆனால், இவ்வித "மனுஷீக" நற்குணம் கொண்ட இவர், ஜனங் களை கிறிஸ்துவினிடத்தில் இணைக்காமல் தன்னோடு இணைத்துக் கொள்பவராய் இருந்தால், கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்கு இப்படிப்பட்டவர் பெரும் தடையாய் மாறிவிடுவார்!!

பிலேயாம் போன்ற பிரசங்கிகள் எப்போதுமே பிறரிடமிருந்து அன்பளிப்புகளையும், காணிக்கைகளையும் வாங்குவதில் மகிழ்ச்சியாய் இருப்பார்கள் (எண்.22:15-17). ஆம், **பரிதானம் அல்லது பரிசுப் பொருட்கள்** நம்முடைய கண்களை மறைத்து குருடாக்கிவிட முடியும்! (நீதி.17:8). மேலும் இவ்வித பரிசுகள், அதைக் கொடுத்தவர்களைப் பிரியப்படுத்தும் படி நடத்தி, முடிவில் நாம் அவர்களுக்கு அடிமைகளாகும் நிலைக்கு நடத்திவிட முடியும். இந்த கொடிய நிலை, நமக்கு உபகாரம் செய்த ஜனங்களுக்கு தேவனுடைய சத்தியங்களைப் பேசுவதற்கும், அவர்களை கடிந்து கொண்டு திருத்துவதற்கும் முடியாத இடத்திற்கு நம்மைக் கொண்டு வந்து விடும்!!

தேவ ஊழியர்களாகிய நாம், எப்போதும் "சுயாதீனத்தில்" நிலைத்திருப்பவர்களாய் இருக்க வேண்டும்! ஏனெனில் "நாம் கிரயத்திற்கு கொள்ளப்பட்டபடியால் மனுஷருக்கு அடிமைகளாகி விடக்கூடாது" (1கொரி.7:23) என வேதம் நம்மை எச்சரிக்கிறது.

பெர்கமு சபையிலோ பிலேயாமின் உபதேசங்கள் ஓங்கிச் செழித்து விட்டது! எப்படியெனில், அந்த சபையின் மூப்பர் பிலேயாமைப் போலவே "மனுஷர்களுக்கு" அடிமையாகியிருந்தார்.

*"பிலேயாமின் உபதேசம்"* - *என்ற போதகம் இரண்டு பகுதிகளை உடையதாகும். அவைகள் 1) பொருளாசை 2) வேசித்தனம் என வெளி. 2:14,15 வசனங்களில் காண்கிறோம்.*

*பணத்தை நேசிக்கிறவன் தேவனை பகைக்கிறான் என்றும்; உலகப் பொருட்களை பற்றிக் கொண்டவன் தேவனை அசட்டை செய்கிறான் என்றும் லூக்கா 16:13 - ல் இயேசு தெளிவாக கூறினார். இந்த சத்தியத்தை நாம் தெளிவாக நம்முடைய சபையில் பிரசங்கிக்காவிட்டால் "பிலேயாமின் போதகங்கள்" நம்முடைய சபையிலும் செழித்தோங்கி சபையில் உள்ள சகோதர சகோதரிகளைப் பணப் பிரியர்களாய் மாறும்படிச் செய்து விடும். இயேசு உபதேசித்ததைப் போலவே நாமும் உபதேசிக்க வேண்டு மென்றால்,* **பணத்தின் வலிமையான பிடியிலிருந்து முதலாவது நாம் விடுதலை பெற்றிருக்க வேண்டும்.** *பணத்தின் பிடியிலிருந்து விடுதலை பெறுவதைவிட கோபத்திலிருந்தும், கண்களின் இச்சையி லிருந்தும் விடுதலை பெறுவதை எளிது என்றே கூறலாம்! ஆம், ஓர் தொடர்ச்சியான யுத்தத்தின் மூலமாகவே இத்தீமையை நாம் ஜெயித்திட முடியும்!*

*பண ஆசையே "எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது" (1 தீமோ.6:10) என்ற உண்மையை நாம் தெளிவாய் கண்டிருக்கிறோமா? ஏனென்றால் கோபத்தையும், கண்களின் இச்சையையும் தீமையென அறிந்திருக்கும் அனேகர், பணத்தை நேசிப்பதை தீமையென அறியாதிருக்கிறார்கள். இதனிமித்தமே இன்று அநேகர் பணத்திற்கு அடிமைகளாய் மாறி விட்டார்கள். இவர்கள், "தாங்கள் தேவனை பகைத்து அவரை அசட்டை செய்கிறோம்" என்ற உண்மையை சிறிது கூட உணராதிருக்கிறார்கள்.*

*நம் இந்திய தேசத்தில் "***முழுநேர ஊழியர்கள்***" என அழைத்துக் கொள்ளும் அநேகர், பிலேயாமைப்போல "பண ஆசைக்கு" அடிமை களாயிருக்கிறார்கள்! இவர்கள் பணக்கார விசுவாசிகளின் வீடுகளையே அதிகமாய் சந்திக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் தங்களுக்கு கணிசமான காணிக்கைகளையும், அன்பளிப்புகளையும் தருவார்கள் என்பதை அறிந்திருக்கிறார்கள். இதனிமித்தமே, இப்பணக்கார... பிரபல்யமான ஜனங்களின் பாவங்களைக் கடிந்து கொள்வதற்கு முடியாமல் இவர்களின் வாய் அடைக்கப்பட்டு விடுகிறது. தங்களுக்கு கணிசமான காணிக்கைகள் கிடைக்கும் என நன்கு அறிந்திருக்கும் சபைகளுக்குப் பிரசங்கிக்கும்படியே இவர்கள் ஊழிய பயணம் செய்கிறார்கள். இது போன்ற பிரசங்கிகள் தேவனுக்கு எவ்வாறு ஊழியம் செய்ய முடியும்? அது, ஒருக்காலும் முடியாது!! இவர்கள் உலகப் பொருளுக்கும், பணத்துக்குமே ஊழியம் செய்கிறவர்கள்!! ஒருவன் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாதென இயேசு மிகத் தெளிவாய் கூறிவிட்டார்.*

*புதிய உடன்படிக்கையின் கீழ், தேவனுடைய ஊழியர்களாவதற்கு விரும்புகிற யாவருக்கும் மூன்று முக்கியமான தகுதிகள் வேண்டும் :*

*1) இவர் தன்னுடைய சொந்த வாழ்க்கையில் பாவத்திலிருந்து விடுதலைப் பெற்றிருக்க வேண்டும் (ரோ.6:26).*

*2) இவர் ஒரு போதும் மனுஷர்களைப் பிரியப்படுத்துகிறவராக இருக்கக் கூடாது (கலா.1:10).*

*3) இவர் பணத்தை வெறுத்து, அதை அசட்டை செய்கிறவராய் இருக்க வேண்டும் (லூக்கா. 16:13).*

*நாம் புதிய உடன்படிக்கை ஊழியனாய் இருப்பதற்கு தகுதி பெற்றிருக்கிறோமா அல்லது இல்லையா என்பதை அறிந்து கொள்ள இந்த மூன்று பகுதிகளையும் நம் ஜீவியத்தில் தொடர்ச்சியாய் சோதித்தறியக்கடவோமாக.*

*நாம் தேவனை வலிமையாக சேவிக்க வேண்டுமென்றால், நம் ஜீவியத்தைப் பணமும், உலகப் பொருட்களும் எந்தவிதத்திலும் நம்மைப் பற்றிக் கொண்டிருக்கவேகூடாது. மேலும், நாம் பிறரிடமிருந்து அன்பளிப்புகள் அல்லது பரிசுப் பொருட்களை வாங்குவதை வெறுப்ப வர்களாயும் இருக்க வேண்டும். ஏனென்றால் “வாங்குவதைக் காட்டிலும் கொடுப்பதே பாக்கியம்” (அப்.20:35) என இயேசு நமக்கு தெளிவாக கட்டளையிட்டிருக்கிறார்.*

*பணத்தின் மீது கொண்டிருக்கும் பிடிப்பிலிருந்து நாம் விடுதலை பெறாவிட்டால் நாம்* **தேவனை சேவிக்க வேண்டிய விதமாய் சேவித்து அவரில் அன்பு கூர்ந்திட** *முடியவே முடியாது. இந்நிலையில்,“தேவனை நேசிக்கும்படி” நாம் பிறரை வழி நடத்தவும் முடியாது. அது மாத்திரமல்ல, பிலேயாமின் போதகத்தில் கட்டுண்டவர்களை விடுவிக்கவும் நம்மால் முடியாது!*

*பிலேயாமின் போதகத்தில் மறைந்திருக்கும் மற்றொரு கேடு “வேசித்தனமாகும்” இந்த போதகம், சபையில் உள்ள சகோதர சகோதரிகள் எவ்வித தடையுமின்றி ஒருவரோடு ஒருவர் சுதந்திரமாய் சேர்ந்து பழகுவதற்கு அவர்களை ஊக்குவிக்கிறது. வெளி.2:14-ம் வசனம் சுட்டிக்காட்டுகிறபடி, மோவாபிய பெண்கள் இஸ்ரவேல் வாலிபர் களோடு தாராளமாய் பழகுவதற்கு இந்த பிலேயாம் வழிவகுத்தான் என வாசிக்கிறோம். இந்தச் செயல் இஸ்ரவேலர்களை மோசமான வேசித் தனத்திற்குள் அவர்களை நடத்திவிட்டது. இதனிமித்தம் தேவன் ஒரே நாளில் 24,000 - பேர்களை சங்கரித்தார்( எண்.25:1-9).*

*முடிவில், இஸ்ரவேல் ஜனங்கள் மீது உண்டான வாதையை “பக்தி வைராக்கியம் கொண்ட பினெகாஸின் ஈட்டி முனை” நிறுத்தியது. இதனிமித்தம் இஸ்ரவேல் மீது தேவன் கொண்டிருந்த கோபமும் தணிந்தது. பினெகாஸின் பக்தி வைராக்கியமான செய்கையைக்கண்ட தேவன் மிகுந்த மகிழ்ச்சி கொண்டவராய், ஓர் நித்திய ஆசாரிய பட்டத்துக் குரிய உடன்படிக்கையை அவனுக்குத் தந்தார் (எண்25 : 11-13). அன்று போலவே, இன்றும் சபையிலுள்ள சகோதர சகோதரிகள் தாராளமாய் பழகுவதற்கு எதிராய் தீவிர வைராக்கியம் கொண்டவர்களையே* **தேவன்** *எப்போதும் கனம் பண்ணுகிறார்!*

*இந்த இடத்தில் மூப்பர்களாய் இருக்கும் நாம்* **நம்முடைய சொந்த நடத்தையில்** *சிறந்த மாதிரியாய்த் திகழ வேண்டும். சபையிலுள்ள*

*நம்முடைய சகோதரிகளிடம் நாம் கொண்டிடும் நடத்தைகளில் மிகுந்த கவனமுடையவர்களாய் இருந்து, ஒருவித பக்தியற்ற நீண்ட சம்பாஷணைகளைத் தவிர்க்க வேண்டும். குறிப்பாய் நம்மிடத்தில் அடிக்கடி பேச விரும்பும் சகோதரிகளிடத்தில் மிகுந்த கவனம் கொண்டிருக்க வேண்டும்.*

**நாம் சகோதரிகளிடத்தில் பேச ஆசை கொண்டவர்களாய் இருந்தால் தேவனுடைய சபையை நடத்துவதற்கு நாம் தகுதியற்றவர்கள்!**

*ஓர் பூட்டிய அறைக்குள் சகோதரிகளிடம் நாம் ஒருக்காலும் தனித்துப் பேசவே கூடாது. சகோதரிகளுக்கு ஆலோசனை சொல்லும் போது, நம்முடைய மனைவியை கூட வைத்துக் கொண்டு அல்லது சபையிலுள்ள இன்னொரு மூத்த சகோதரனைக் கூட வைத்துக் கொண்டு ஆலோசனை சொல்லுவதே எப்போதும் நல்லது!*

*சமாரியாவின் கிணற்றண்டையில் இயேசு ஒரு ஸ்திரீயிடம் பேசுவதை சீஷர்கள் கண்டபோது, "அவர் ஸ்திரீயுடனே பேசுகிறதைப் பற்றி ஆச்சரியப்பட்டார்கள்" என எழுதப்பட்டிருக்கிறது (யோ.4:27). ஏனென்றால், பொதுவாக ஒரு ஸ்திரீயிடம் இயேசு ஒரு போதும் தனியாய் பேசியதேயில்லை! ஆம், "தோற்றத்தில்கூட தீமையாய்த் தோன்றுகிற" எந்தக் காரியத்தையும் செய்யாதிருக்க இயேசு மிகுந்த கவனம் கொண்டிருந்தார். இதுவே நாம் எல்லோரும் பின்பற்ற வேண்டிய நல்ல மாதிரியாகும்.*

**சபையை நடத்திட ஓர் ஸ்திரீயை அனுமதித்த தியத்தீரா சபை :**

*யேசபேல் என்னும் ஒரு ஸ்திரீயானவளை (மூப்பனின் மனைவி. வெளி.2:20) சபையின் விஷயங்களில் ஆளுகை செய்திட அனுமதித்த தினிமித்தம், தியாத்தீர சபை மூப்பரை ஆண்டவர் கடிந்து கொண்டார். இந்த ஸ்திரீயின் ஆளுகையினால் அநேகம் சகோதரர்கள் வழி தப்பிச் சென்றார்கள். இன்றைக்கும் இது போன்ற தேவ ஊழியர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். தங்கள் மனைவியோ அல்லது சபையில் உள்ள சகோதரிகளோ சபைக்குரிய விஷயங்களில் தலையிடுவதை தடுத்து நிறுத்த இவர்களால் முடிவதில்லை.*

*புதிய உடன்படிக்கை சபைகளைத் தலைமை வகித்து நடத்தும்படியான எந்தப் பங்கிற்கும் தேவன் ஸ்திரீகளை அழைக்க வில்லை. இந்த சத்தியம் மிகத் தெளிவாக 1தீமோ. 2:12-ல் போதிக்கப் பட்டிருக்கிறது. இருப்பினும் தங்கள் சபையை ஆட்கொண்டு நடத்த விரும்பும் வலிமையான சகோதரிகள் எல்லா இடங்களிலேயும் இருக்கிறார்கள். இது போன்ற ஸ்திரீகளே "யேசபேல்கள்" சகோதரிகள் "வீட்டில் தரித்திருந்து" பணி செய்வதற்கே அழைக்கப்பட்டிருக் கிறார்கள் (தீத்து. 2:5). இதற்கு மாறாக, இவர்கள் சபையின் விஷயங்களில் தலையிட ஆரம்பித்தால், சபையில் குழப்பம் நிச்சயம் உண்டாகும். ஒரு மூப்பனுடைய மனைவி, தன் கணவன் வீட்டிலிருக்கும்போது*

சபைக்குரிய விஷயங்களில் வலிமையாய் ஆட்கொள்கிறபடியால், இந்த சகோதரன் மூப்பர்களுடைய கூட்டத்தில் பேசுவதெல்லாம் வீட்டில் மனைவி அவனுடைய தலையில் ஏறி முழங்கிய "கொட்டு சத்தத்தின்" எதிரொலியாகவே இருக்கும்!

இது போன்ற மூப்பர்கள் கோழையான **பொண்டுகர்களாய்** இருப்பதால் தேவனுக்கு ஊழியம் செய்ய இவர்கள் கொஞ்சமும் தகுதியற்றவர்கள். இந்த மூப்பர்களை ஸ்திரீகளின் பட்டியலில் கூட சேர்த்து விடலாம்! ஆகவே, இப்படிப்பட்ட இவர்கள் சபையில் உள்ள எந்த தலைமைப் பொறுப்பை வகிப்பதற்கும் சிறிதும் தகுதியற்றவர்கள்!!

**புகழ்ச்சியில் தனது மனதை வைத்து வாழ்ந்த சர்தேயு சபை :**

இந்த சர்தேயு சபையின் மூப்பன் ஓர் மாய்மாலக்காரனாய் இருந்தபடியால் ஆண்டவர் அவனைக் கடிந்து கொண்டார். இந்த மூப்பனுடைய உண்மைநிலை ஆவிக்குரிய மரணத்தை அடைந்ததாய் இருந்த போதும், ஜனங்களுக்கு முன்பாகவோ "உயிருள்ளவன்" என்ற பெயரைப் பெற்றிருந்தான். இருப்பினும், இவ்வித நிலை கொண்ட சர்தேயு சபைக்குள் முழு இருதயமும் வைராக்கியமும் நிறைந்த சிலர் இருக்கத்தான் செய்தார்கள். இவர்கள் தங்கள் "வஸ்திரங்களைக்" கறை படாமல் காத்துக்கொண்டார்கள். இவ்வாறு மூப்பனை விட சபையில் உள்ள மற்ற சகோதரர்கள் அதிகமான தெய்வ பக்தியில் இருப்பார் களென்றால், இவ்வித நிலை ஓர் துயரமான நிலையேயாகும்.

சர்தேயு சபையின் மூப்பன் தன்னுடைய பிரசங்கத்தின் மூலமாகவும், தேவன் தன்மூலமாய் செய்த மகத்துவமான காரியங்களை சாட்சி பகர்ந்ததன் மூலமாகவும் **தனக்கென ஓர் பெயரைச் சம்பாதித்து வைத்திருந்தான்.** நம்முடைய ஊழியத்தில் வியக்கத்தகு அற்புதங்களை நாம் அனுபவித்திருக்க கூடும். ஆனால் அவைகளை பலரும் அறியும்படி விவரித்து பேசத் துவங்கிவிட்டால், இங்கு தான் அபாயம் தோன்றத் துவங்குகிறது.

நீங்கள் இயேசுவின் மாதிரியை நோக்கிப் பார்த்தால் அவர் ஒரு போதும் இவ்வித மகத்துவ காரியங்களை பிரபல்யப்படுத்தி பேசாதிருந்ததை கண்டிருக்க முடியும். **பல இடங்களில் அவர் செய்த அற்புதங்களை "சாட்சி" என்ற பெயரில் ஒரு தடவை கூட பேசவில்லை.** அவர் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்தாரேயொழிய "தன் மூலமாய்" பிதா என்ன செய்தார் என்பதை விவரிக்கத் துணியவில்லை. அவருடைய எல்லா நீதிகளும் கிரியைகளும் தன்னுடைய பிதாவுக்கு முன்பாக **அந்தரங்கத்திலேயே** செய்து முடித்தார்.

நாசரேத்தூரில் வாழ்ந்த 30-ஆண்டுகளில் வியக்கத்தகு பல ஆச்சரிய மான அனுபவங்களை இயேசு தன்னுடைய பிதாவோடு நிச்சயமாய் அனுபவித்திருப்பார். ஆனால், அவைகளில் ஒன்றையாகிலும் குறித்து "ஒரு வார்த்தை கூட" அவர் ஒரு போதும் பேசவில்லை. அவையாவும்

**அந்தரங்கமாய் இருக்க வேண்டியவைகள்** என்பதை இயேசு நன்கு அறிந்திருந்தார். மற்றவர்களுக்கு முன்பாக தனக்கென ஒரு பெயரை சம்பாதிக்க அவர் ஒரு போதும் நாடவேயில்லை. இந்த விஷயத்திலும் நாம் இயேசுவையே நமக்கு நல்ல மாதிரியாக கொள்ளக் கடவோம்.

நாம் ஒரு சாட்சியைக் கூறும்போது, அந்த சாட்சியில் வெகு எளிதில் நேர்மையற்றதும் மிகைப்படுத்துவதுமான காரியங்கள் புகுந்து விட முடியும். உதாரணமாய் நம்முடைய ஜெபத்தின் மூலமாய் "சிலர்" சுகமானதைப் பிறருக்கு நாம் சொல்லியிருப்போம். ஆனால் நாம் ஜெபித்தும் சுகம் பெறாமல் சென்ற 'நூற்றுக்கணக்கானவர்களைக்' குறித்து நாம் ஒரு வார்த்தைகூட சொல்லாது மறைத்து விட முடியும்! இவ்வித நிலையில், நாம் முழு உண்மையையும் பேசவில்லை என்பது தெளிவாய் விளங்குகிறது. நாம் கர்த்தருடைய ஊழியர்களாய் இருக்க வேண்டுமென்றால், "முழுக்க முழுக்க" நாம் நேர்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நம்முடைய உண்மையான நிலைமையைக் காட்டிலும் அதிகமான கவர்ச்சியை மற்றவர்கள் ஒருக்காலும் நம்மைக் குறித்து பெற்றுவிடவே கூடாது. நம்மைக் குறித்து மற்றவர்கள் குறைவான மதிப்புபெற்றிருந்தால் அதுவே சாலச்சிறந்ததாகும்!

உண்மையிலேயே தங்களுக்கு ஆவிக்குரிய வரங்கள் இல்லா திருந்தும், அவ்வித வரங்களைத் தாங்கள் பெற்றிருப்பதாக மேன்மை பாராட்டுகிறவர்கள், "கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற மழையில்லாத மேகங்களுக்கு ஒப்பான வஞ்சகர்கள்!" என நீதி 25 : 14 - ம் வசனம் இடித்துரைக்கிறது.

நீங்கள் மற்றவர்களுக்கு உங்களைக் காட்டிக் கொண்டபடி, நீங்கள் உண்மையாகவே விசுவாசத்தில் வல்ல புருஷன்தானா? நீங்கள் பதட்டமும் கவலையும் கொண்ட சந்தர்ப்பங்களை எண்ணிப்பாருங்கள்! இப்போது சொல்லுங்கள்..... நீங்கள் முதலில் சாட்சி கூறியபடி நீங்கள் மெய்யாகவே வலிமை கொண்ட விசுவாசவீரர்தானா? வேறுயாரைக்காட்டிலும் உங்களை நன்கு அறிந்திருக்கிற உங்கள் மனைவி, உங்களை விசுவாச வீரரென கூறுகிறார்களா? மற்றவர்களுக்கு முன்பாக புகழ்மணக்கும் பெயரைப் பெற்றிருக்கும் அநேகம் மூப்பர்கள் தங்கள் சொந்த மனைவி யினிடத்தில் அவ்வித புகழ்ச்சியைப் பெற்ற தில்லை! ஏனெனில், இந்த மூப்பனுடைய "உண்மை நிலை" என்ன என்பதை இந்த மனைவி நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள்!!

நம்முடைய உண்மையான நிலையை பிறர் அறிந்து கொள்வதற்கு நாம் ஏன் அஞ்சுகிறோம்? அவர்களைக் காட்டிலும் நம்மையே மேன்மை யானவர்களாய் காண்பிக்கத் தூண்டும் இச்சையே இவ்வித பயத்திற்கு காரணமாகும்! ஒரு வேளை நீங்கள், "எங்களுடைய தோல்விகளையும் நாங்கள் அறிக்கை செய்யத்தான் செய்கிறோம்!" எனக்கூறலாம். ஆனால், இவ்வாறு நீங்கள் அறிக்கை செய்த விஷயங்கள் "நான் போதுமான அளவு இன்னும் உபவாசிக்கவில்லை அல்லது போதுமான அளவு

ஜெபிக்கவில்லை...'' இன்னும் இது போன்ற ''பரிசுத்தப் பாவங்களைத் தானே'' அறிக்கை செய்தீர்கள்? இது போன்ற அறிக்கைகள் யாவும் **மாய்மாலம்** நிறைந்ததும் தன்னுடைய மதிப்பை **இன்னும்கொஞ்சம்** கூட்டிக் கொள்வதற்காக கூறப்பட்டவைகளேயாகும்! இது போன்ற மாய்மால மூப்பர்கள் மனம் திரும்ப வேண்டும்!!

''நம்மைப் போலவேதான் நாம் பெற்றெடுக்கும் பிள்ளைகளும் இருப்பார்கள்'' என்ற உண்மையை நாம் நன்கு அறிந்திருக்க வேண்டும். ஆதாம், ''தன் சாயலாக தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்றான்'' (ஆதி. 5 : 3) என வாசிக்கிறோம். நுண் ஆய்வு கருவி ( Microscope) மூலமாக மாத்திரமேயல்லாமல் வேறு யாரும் கண்டு பிடிக்க முடியாத பெலஹீனங்கள் (அல்லது வியாதிகள்!) நம்முடைய இரத்த ஓட்டத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன. எவ்வளவு நுண்ணியதாய் அவைகள் இருந்தாலும், நாம் பெற்றெடுக்கும் பிள்ளைகளிடத்தில் அவைகள் பரவி விடும்!

இதற்கு ஒப்பாகவே ஆவிக்குரிய நிலையும் இருக்கிறது. நுண்ணிய கிருமிக்கொப்பான 'பிறர் காண முடியாத' வீழ்ச்சிகள் நம்முடைய வாழ்க்கையின் மறைவாக இருக்கலாம். ஆனால், கொஞ்ச காலத்திற்குப் பின்பு நம்முடைய ஆவிக்குரிய பிள்ளைகளிடத்திலும் ''அதே பெலஹீனங்கள்'' அல்லது வீழ்ச்சிகள் சம்பவிப்பதை நாம் கண்ணார கண்டிட முடியும்.

இவ்வாறு ஒவ்வொரு சபையும், கடைசியில் அந்த சபைத் தலைவனுக்கொப்பாகவே மாறிவிடும்! இதனிமித்தமே வெளி. 2,3 - அதிகாரங்களில் காணும் ஏழு கடிதங்கள் முதலாவது சபையில் உள்ள தூதர்களுக்கே (மூப்பர்களுக்கே) விலாசமிடப்பட்டுள்ளது. அதற்கு பின்பு தான், ''ஆவியனாவர் **சபைகளுக்குச்** சொல்வதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்'' என கூறப்படுவதைக் காண்கிறோம்.

நம்முடைய அந்தரங்க ஜீவியத்தில் நாம் நேர்மையற்றவர்களாய் இருந்தால், முடிவில் நேர்மையற்ற சகோதர சகோதரிகளையே நாம் உருவாக்கிவிடுவோம். அந்தரங்க ஜீவியத்தில் இச்சை உள்ளவர்களாயும், கஞ்சத்தனம் செய்கிறவர்களாயும் இருந்தால் நம்மைப் போலவே நம்முடைய சபையில் உள்ள மற்றவர்களும் மாறிவிடுவார்கள்... ஒரு சிலரைத் தவிர! இந்த ஒரு சிலர் யாரெனில், நம்முடைய மாம்ஷீகத் தன்மையை தங்கள் ஆவிக்குரிய பகுத்தறிவைக்கொண்டு கண்டுபிடித்து, நம்முடைய முன் உதாரணத்தைப் பின்பற்றாதவர்கள்!! இவ்வாறு தங்கள் மூப்பர்களைப்போல் மாறிவிடாமல் தங்களைக் காத்துக் கொண்ட முழு இருதயமான இளம் விசுவாசிகள் சர்தேயு சபையில் இருந்தார்கள்.

நமக்கு இருக்கும் மிகப்பெரிய வஞ்சகங்கள் யாதெனில், ''**நமக்கு ஒரு பெயரை உண்டுபண்ணுவோம்**'' என்ற பாபிலோனின் ஆவியோடு கிரியை செய்கிறவர்களாக இருந்து கொண்டு, கிறிஸ்துவின் உண்மையான சபையை நாம் கட்டுவதாக எண்ணிக் கொள்வதுதான்!!

*வெளி 17,18-அதிகாரங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் "பாபிலோன்" இவ்வித போலியான சபையேயாகும். பாபேல் கோபுரத்திலிருந்து தோன்றியதே பாபிலோனின் தோற்றமாகும். அன்று பாபிலோனில் கூடியிருந்த ஜனங்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொண்ட போது, "நமக்கு பெயர் உண்டாகும்படி ஒரு கோபுரத்தைக் கட்டுவோம் வாருங்கள்" என்றே கூறினார்கள். இதுவே பாபிலோனின் சாரமாயிருக்கிறது.*

*தேவன் நம்முடைய ஊழியத்தை ஆசீர்வதித்திருக்கிறாரா? கர்த்தருக்கு ஊழியம் செய்ததின் மூலமாக நமக்கென ஓர் பெயர் பிரஸ்தாபம் உண்டாயிருக்கிறதா? அப்படியானால் இந்த இடத்தில் தான், நாம் நம்மை அறியாமலே "உண்மையற்ற மற்றவர்களைப் போலல்லாமல் நானோ மிகுந்த உண்மையுள்ளவனாய் இருந்திருக்கிறேன்" என்ற எண்ணம் நம் இருதயத் திற்குள் தோன்ற வாய்ப்பிருக்கிறது. நாம் விரைந்து பாதாளத்திற்குள் இறங்கி "ஆவிக்குரிய மரணத்தை" அடைவதற்குரிய மிக எளிதானதொரு வழியே "நாம் நம்மையே மெச்சிக்கொள்வதாகும்!" இந்த வழியைப் பின் தொடர்ந்தே நேபுகாத்நேச்சார் வீழ்ச்சியடைந்து ஒரு மிருகத்தைப் போலவே புல்லைத் தின்ன தொடங்கினான்! தானியேல் 4-ம் அதிகாரத்தில் இந்த நேபுகாத் நேச்சாரின் வீழ்ச்சியை வாசித்து கருத்துடன் தியானியுங்கள். நம் எல்லோருக்குமே தேவையான எச்சரிப்பின் செய்தி இந்த அதிகாரத்தில் அடங்கியிருக்கிறது. ஆம், நேபுகாத்நேச்சார்* **தன் இருதயத்திற்குள்** *" நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா?" (தானி.4:30) எனச் சொல்லிக் கொண்டான். நேபுகாத்நேச்சார் இந்த வாக்கியத்தை அங்கு 'வேறு யாரிடமும்' கூறவில்லை என்பதைக் கவனியுங்கள்! இந்த சிந்தை அவன் இருதயத்திற்குள்ளேயே தோன்றியது. ஆனால் தேவனோ அவனை உடனடியாக நியாயந்தீர்த்து, ராஜாவை ஒரு பைத்தியமாய் மாற்றி விட்டார்.*

*இந்த நிகழ்ச்சிதான் "***கிருபையிலிருந்து வீழ்ச்சியடைந்த***" எண்ணற்ற பிரசங்கிகளுக்கும், மூப்பர்களுக்கும் பல நூற்றாண்டு காலமாய் தொடர்ந்து சம்பவித்துக் கொண்டிருக்கிறது! இதே துயரநிலை தனக்கும் ஏற்பட்டு விடாதபடி ஜாக்கிரதை கொண்டிருக்க, காதுள்ளவன் எவனோ அவன் கேட்கக்கடவன்!*

*இன்று, தன்னைக்குறித்தும் கர்த்தருக்குத் தான் செய்த ஊழியத்தைக் குறித்தும் மேட்டிமையான எண்ணம் கொண்டிருக்கும் தன்னுடைய ஊழியனை தேவன் எவ்வாறு தாழ்மைப்படுத்துவார்? ஆம், வீழ்ச்சி யடையும் இந்த ஊழியன் தன்னுடைய இருதயத்திலும், தன்னுடைய சபையிலும் "மாம்ஷீகம் ஆளுகை செய்வதை" காணத் துவங்கி விடுவான்! தானே தன்னுடைய சிந்தை வாழ்க்கையில் தோற்கடிக்கப்படுவதையும் பணத்தின் நேசம் தனக்குள் தோன்றுவதையும் காண்பான்!! சபையில் உள்ள சகோதரர்களுக்குள் சுமூகமற்ற உரசல் தோன்று வதையும் காண்பான்!! சபையில் உள்ள அநேக குடும்பங்களின் ஜீவியம் பின்தங்கிச் சீரழிவை நோக்கிப் போவதையும் காண்பான்!!*

**சபையில் பல ஆண்டுகளாய் தீர்க்க தரிசன ஆவி இல்லாதிருப்பதையும் காண்பான். தான் கூடிவரும் சபைக் கூட்டம் மந்த நிலைக்குள்ளாகி போரடிப்பதையும் காண்பான்!!**

*மேலும், சபையின் உயர்ந்த சிங்காசனத்தில் தனிமையில் மூப்பனாய் அமர்ந்திருக்கும் அவனைத் தவிர வேறுயாரும் தலைமைப் பொறுப்பிற்கு வளர்ச்சியடையாது இருப்பதையும் காண்பான்!*

*இவையாவற்றையும் காணும் இந்த மூப்பன், தன்னிடத்திலோ அல்லது தன்னுடைய சபையினிடத்திலோ "ஆவிக்குரிய சரத்துக்கள்" மிக மிக குறைவாய் இருப்பதை உணரத் துவங்கிவிடுவான். ஒரு வேளை இந்த மூப்பனுடைய சபைக் கூட்டம் எண்ணிக்கையில் பெருகி யிருக்கலாம்..... ஆனால் ஆவிக்குரிய வளர்ச்சியோ பெருகவில்லை! இதற்கு மாறாக "ஆவிக்குரிய மரணமே" அச்சபையில் கண்கூடாய் இருப்பதை உணர்ந்திடுவான்.*

*இவ்வித நிலையைக் காணும் போது, அதிக பட்சமான மூப்பர்கள் இந்த நிலையை மற்றவர்களுக்கு மறைத்து சபையில் எல்லாம் சரியாக இருப்பதுபோல பாவனை செய்யவே முயற்சிக்கிறார்கள். இவ்வித மாகவே இவர்கள் தேய்வுற்று "சர்தேயு சபையின் மூப்பனைப்போல்" முடிவில் மாறிவிடுகிறார்கள்.*

*இப்படிப்பட்ட பின்தங்கிய அவலநிலையை நாம் கண்டு பிடிப்பதற்கு பல வருடங்கள் காத்திருக்க வேண்டியதில்லை. தேவன் நமக்கு பகுத்தறியும் தன்மையை கொடுத்து, சபையில் உள்ள இவ்வித நிலைமையை நாம் துரிதமாய் காணும்படி செய்வார். நாம் மனுஷருடைய கனத்தைக் குறித்து அக்கறையற்றவர்களாய் இருந்து தேவனுடைய கனத்தை மட்டுமே தேடுவதில் ஆர்வம் கொண்டிருந்தால் மாத்திரமே இப் பகுத்தறியும் தன்மையை தேவன் நமக்குத் தந்திடுவார்.*

*ஒரு சபை ஆவிக்குரிய வளர்ச்சியை அடையாமல் எண்ணிக்கையில் பெரிதாக மாறியிருந்தால் அதனிமித்தம் தேவன் ஒரு போதும் மகிழ்ச்சி யடைவதில்லை! இதை நாம் யாவரும் நன்கு மனதில் கொள்ளக்கடவோம்.*

*பவுல் கொரிந்திய கிறிஸ்தவர்களிடம் கூறும்போது, "நான் வரும் போது உங்கள் மாம்ஷீகத் தன்மையை காண நேரிட்டால்... என் தேவன் உங்களிடத்தில் என்னைத் தாழ்த்துவாரோ என பயந்திருக்கிறேன்" எனக் கூறினார் (2 கொரி.12:20,21). கொரிந்தியர்களின் மாம்ஷீகத்தன்மை பவுலை ஏன் சிறுமைப்படுத்த வேண்டும்? ஏனென்றால் பவுல் அவர்களுக்கு* **ஆவிக்குரிய தகப்பனாயிருந்தார்.** *பிள்ளைகளின் ஆவிக்குரிய நிலைக்கு பிதாக்களையே பொறுப்பாளிகளாய் தேவன் வைத்திருக்கிறார்.*

*நம்முடைய சபையிலும் இவ்வித மாம்ஷீக நிலையை நாம் காணும் போது, ஓர் ஆவிக்குரிய தலைவனுக்குரிய தகுதியிலிருக்கும்* **நம்முடைய தோல்வியையே** *தேவன் நமக்கு காட்டுகிறார். ஆகவே சபையில் உள்ள சகோதர சகோதரிகளை குறை சொல்லுவதற்குப் பதிலாக, நாம் தான் நம்மைத் தாழ்த்த வேண்டும். அதே போல நம் பிள்ளைகளுடைய*

லௌகீக நாட்டத்தைத் தேவன் காட்டும் போது, ஓர் தகப்பனா யிருப்பதற்குரிய தகுதியில் நம்முடைய தோல்வியையே தேவன் நமக்குக் காட்டுகிறார். இந்த நிலையில், நம்முடைய பிள்ளைகளை நாம் குறைகூறாமல், நாம் தான் நம்மைத் தாழ்த்த வேண்டும்.

நாம் வெறும் கூலியாட்களாய் இருந்தால், நம்முடைய சகோதர சகோதரிகள் வீழ்ச்சியடையும் போது அவர்களைக் குறை கூறவே எத்தனிப்போம். ஆனால், நாம் உண்மையான தேவ மனுஷர்களாய் இருந்தால் பவுலைப்போல துரிதமாய் நம்மை நாமே தாழ்த்தி, "ஆண்டவரே இது என்னுடைய தோல்விதான், என்னை மன்னியும்!" என ஜெபிக்கிறவர்களாய் காணப்படுவோம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

பவுலிடமிருந்த ஓர் மிகப்பெரிய மனபாரம் யாதெனில், அவர் கிறிஸ்துவுக்கு ஆதாயம் செய்த புறஜாதிகள், "பரிசுத்தாவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்குப் பிரியமான பலியாய் இருக்க வேண்டும்" என்பதேயாகும் (ரோ.15:15). பழைய உடன்படிக்கையில் ஜனங்கள் கொண்டுவரும் ஒவ்வொரு பலியும் பழுதற்றதாய் இருக்கிறதா என ஆசாரியன் சோதிக்க வேண்டும் (உபா.17:1). இது, ஒரு ஆசாரியனுக் குரிய பொறுப்பாகும். அவன் தேவனுக்கு எவ்விதத்திலும் ஊனமான பலியை செலுத்தவே முடியாது! தேவனுடைய பார்வையில் பழுதும் ஊனமான பலி எவ்வளவு பெரிய பாவமாய் கருதப்பட்டது என்பதை அறிய, மல்கியா 1,2 அதிகாரங்களை வாசித்துப் பாருங்கள். இப்போது புதிய உடன்படிக்கையில், தன்னுடைய சபையில் ஊழியத் திற்கென ஆண்டவர் அழைத்த யாவருக்கும் இதே பொறுப்பு இருக்கிறது. தேவனுக்கு முன்பாக இவர்கள் நிறுத்தும் ஜனங்கள், தேவன் ஏற்றுக் கொள்ளக் கூடியதாய் இருக்க வேண்டும்! இவ்வாறு "எந்த மனுஷனையும் **கிறிஸ்து இயேசுவிற்குள் தேறினவனாக** நிறுத்தும்படிக்கே" பவுல் அதிகமாய் பிரயாசப்பட்டார் (கொலோ.1:28).

கிறிஸ்துவின் நியாயாசனத்தண்டையில் சகலமும் ஒரு நாள் வெளியரங்கமாகப் போகிறது. "தேவனுக்கு மகத்துவமான ஊழியம் செய்கிறோம்" என நாம் எல்லோரும் கூறினாலும், நம்முடைய பிரயாசங்கள் ஆழமற்றதும், மாம்ஷீகத்திற்குரியதுமாய் இருப்பதை அந்நாளில் காணும்போது பிறருடைய புகழ்ச்சியினால் நமக்கு என்ன பிரயோஜனம்? ஆனால் இந்த சர்தேயு சபையின் மூப்பனோ "மதியீனமாய்" மனுஷருடைய புகழ்ச்சியில் திருப்தி கொண்டிருந்தான்.

மேலும், "தன்னுடைய பிள்ளைகள் மூலமாக தனக்குப் புகழ்ச்சி வேண்டும்" என விரும்பும் தகப்பனைப்போல நாம் இருக்கிறோமா? ஒரு வேளை நம் பிள்ளைகளுக்கு சகலமும் நேர்த்தியாய் நடந்திருக்கலாம். இதனிமித்தம் நாம் கர்த்தரை ஸ்தோத்தரிப்பது சரியானதேயாகும். ஆனால், நம் பிள்ளைகளுடைய மேன்மையைப் பிறரும் அறிந்து கொள்ள வேண்டுமென விரும்பி, அதன் மூலமாய் வரும் மகிமையை பெற்றிட நாம் நாட்டம் கொண்டிருக்கிறோமா? "ஆஹா, இவர்

எவ்வளவு சிறந்த தகப்பன்!" என மற்றவர்கள் நம்மைப் புகழுவதைக் கேட்க விரும்புகிறோமா? இதெல்லாம் என்ன? நம்முடைய பிள்ளைகளை நாம் தேவனுடைய மகிமைக்காக வளர்க்கிறோமா? அல்லது நம்முடைய சொந்த மகிமைக்காகவா?! இவ்விஷயங்களில் நம்மை சீர்தூக்கிப் பார்த்திடக்கடவோம்.

நம்முடைய பிள்ளைகளை முழு இருதயமான கிறிஸ்தவர்களாய் வளர்ப்பதற்கே நாம் யாவரும் விரும்புகிறோம். இந்த நோக்கத்தை "தேவன் மாத்திரமே" கண்டால் அது போதாதா? அவ்வாறு தேவன் கண்ட பின்பு இன்னமும் மனுஷருடைய அங்கீகாரத்தை நாம் ஏன் தேட வேண்டும்? மேலும், நம்முடைய பிள்ளைகள் உலகப் பிரகாரமானவர்கள் என மற்றவர்கள் நினைத்து விட்டால், அதனால் என்ன? எப்படி யிருந்தாலும், நாம் முடிவில் "**தேவன் ஒருவருக்கே பதில் சொல்ல வேண்டும்**" என்ற உண்மையை இன்னமும் அறியாதவர்களாய் இருக்கலாமா?

நாம் எப்போதுமே நம்மைக் குறித்தும், நம்முடைய சபையைக் குறித்தும் ஓர் தெளிந்த **தாழ்மையான மதிப்பீடு** கொண்டிருப்பதே நல்லது!

ஊழியத்தில் நம்முடைய பிரயாசங்களின் பலனை மற்றவர்களிடம் காட்டுவதற்கு நம்முடைய மாம்சத்தில் கொடிய இச்சை இருக்கிறது. இந்த இச்சையை நாம் மரணத்திற்கு உட்படுத்தாவிட்டால், நம்மீது எப்போதுமே சாத்தான் ஜெயம் பெற்றவனாய் ஓங்கி நிற்பான். ஆம், தனக்கென பெயரைப் பெறுவதற்குரிய விருப்பத்தை எந்த மூப்பனிட மாவது சாத்தான் கண்டால், அவர்களை அவன் நிச்சயம் ஜெயித்து விடுவான். இது போன்றவர்கள் சீஷத்துவத்தையும், பரிசுத்தத்தையும் கிறிஸ்துவின் சரீரத்தைப் பற்றியும் பிரசங்கிக்கிறவர்களாய் இருந்தாலுமே கூட, இவர்களையும் சாத்தான் எளிதில் வஞ்சித்து விடுவான்.

இவ்வித மூப்பர்கள் மற்றுமொரு, "பாபிலோனின் கிளை சபையையே" கட்டுவார்கள். நாம் நமக்கென ஓர் பெயர் பிரஸ்தாபத்தை நாடுகிறவர்களாக இருந்தால், நாம் ஒருக்காலும் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டவே முடியாது.

**ஜனங்கள் மத்தியில் தனக்கு எந்தப் பெயரையும் புகழையும் விரும்பாத ஒருவனே புதிய உடன்படிக்கை சபையினை கட்ட முடியும்.**

ஒரு வேளை உங்களுடைய பல ஆண்டுகால பிராயசங்களுக்குப் பின்பும், நீங்கள் இடுக்கமான வாசலை "ஊசியின் முனையைக்" காட்டிலும் அகலப்படுத்திட மறுத்தபடியால், வெறும் 3- சீஷர்கள்தான் சபையில் இருந்தாலும் அதனிமித்தம் நீங்கள் ஒரு துளியும் வெட்கமடையத் தேவையில்லை! ஒருநாள் வரும், அந்த நாளில் தேவன் உங்களிடம், "நல்லது உண்மையும் உத்தமுமான ஊழியக்காரனே!" எனக்கூறி அகமகிழ்வார்!!

ஒரு பட்டணத்தில் கர்த்தருடைய நாமத்திற்கு தூஷணம் கொண்டு வரும் 3000- உலகத்தோடு ஒத்தவேஷம் தரிக்கும் கிறிஸ்தவர்களைவிட, அப்பட்டணத்தில் கிறிஸ்துவுக்குத் தூய்மையுள்ள சாட்சியாக விளங்கும்

"மணியான 3 - சீஷர்கள்" இருப்பதே மெத்தவும் சிறந்ததாகும்!!

இருப்பினும் இவ்வாறு சபையில் இருப்பவர்களின் எண்ணிக்கை 'தரம் குன்றாத' மிகச்சிறியதாய் இருக்கும்போது, நாமோ அதிக எண்ணிக்கையைக் காட்டி பிறரை கவர்ச்சிக்கும் பொருட்டு, நம்முடைய உயர்ந்த தரத்தை குறைப்பதற்கு வலிமையாய் சோதிக்கப்பட முடியும்! இவ்வித "எண்ணிக்கை" என்ற இச்சையோடு நாம் வலிமையான யுத்தம் செய்யத் தவறிவிட்டால், முடிவில் சர்தேயு சபை மூப்பனுடைய பரிதாப நிலையையே நாமும் அடைவோம்!

இவ்வாறு "சபையில் தரமே முக்கியம்!" என்ற மேற்கண்ட சத்தியத்தில் "ஓர் மாயமான ஆறுதலைத்" தேடும் சபை மூப்பர்களுக்கு ஓர் எச்சரிப்பின் வார்த்தையை சேர்க்க விரும்புகிறேன். அது யாதெனில், உங்கள் சபை எண்ணிக்கையில் வளர்ச்சியடையாதிருப்பதற்கு ஓர் துயரமான காரணமும் இருக்க முடியும். ஆம், "தேவையோடிருந்த ஜனங்களுக்கு உங்கள் சபையை சுட்டிக்காட்டி பரிந்துரை செய்ய, தேவனால் முடியவில்லை!" என்ற காரணமேயாகும்!

சபையில் ஜனத்தை சேர்க்கும் பணியை கர்த்தரே செய்கிறார் (அப்.2:47) ஆதிநாட்களில் "அநேகரை" ஆண்டவர் சபையில் சேர்த்தார் (அப்.6:7) போன்ற வசனங்களை நாம் மறவாதிருக்க வேண்டும். இது போன்ற நிலையில் நீங்கள் கீழ்கண்டவாறு ஜெபிப்பது நலமாயிருக்கும்: "ஆண்டவரே, எங்கள் சபையில் உலகத்தோடு ஒத்துவாழும் ஜனங்களைச் சேர்த்து எண்ணிக்கையைக் கூட்டும்படி நாங்கள் ஜெபிக்கவில்லை. ஆனால், எங்கள் பட்டணத்தில்,"**தேவபக்தி நிறைந்த வாழ்க்கையை**" வாஞ்சிக்கும் ஜனங்களுக்காகவே நாங்கள் ஜெபிக்கிறோம். ஆண்டவரே இவர்களினிமித்தம் கீழ்காணும் மூன்று விண்ணப்பங்களில் ஒன்றை எங்களுக்கு நீர் செய்தருள்வீராக! 1) தேவபக்தியில் வாஞ்சை கொண்ட ஜனங்களுக்கு நாங்கள் உதவி செய்யும்படியாய் அவர்களை எங்களிடத்தில் நடத்தும்! அல்லது, 2) எங்களையாவது அவர்களிடத்தில் நடத்தும்! அல்லது 3) எங்களை அவர்களிடம் நீர் ஏன் பரிந்துரை செய்ய முடியவில்லை என்ற காரணத்தைக் காட்டும்!" என ஜெபித்திடக்கடவோம்!

இந்த ஜெபத்தை செய்தபின்பு, உங்கள் சபை "சட்டத்திட்ட பிரமாணங்களைக் கொண்ட...... ஓர் பாரமான **பரிசேயத்துவத்தைக்** கொண்டிருக்கிறபடியால்" பிறருக்கு உங்கள் சபையை பரிந்துரை செய்ய முடியவில்லை என்றும்கூட ஆண்டவர் உங்களிடம் கூறலாம். சபையின் இவ்வித பரிசேயத்துவ நிலைக்கு மூப்பனாகிய நீங்களே **ஓர் பரிசேயனாய்** இருந்ததே காரணமெனவும் ஆண்டவர் கூறலாம்!!

இந்த நிலையில் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், துயரமடைந்து மனந்திரும்புவது தான்!

நம்முடைய ஊழியத்தில் மனுஷருடைய அங்கீகாரத்தையும்,

*கனத்தையும் நாடுவதிலிருந்து நாம் முற்றிலும் விடுதலை பெற விரும்பினால் அதற்கு ஒரேவழி "ஆண்டவரோடு மணவாட்டிக்கொத்த உறவைக் கட்டி எழுப்புவதேயாகும்". சாலமோனின் உன்னதபாட்டில் தோன்றும் மணவாட்டி தன்னுடைய ஜீவியத்தையும் கிரியைகளையும் (ஊழியத்தையும்) "தன்னுடைய மணவாளனுக்கு கனிகளைத் தந்திடும் ஒரு தோட்டத்திற்கு" ஒப்பிட்டுப் பேசினாள் (உன்னத 4:16). இவ்வாறு நம்முடைய பரம மணவாளனைப் பிரியப்படுத்தவது மாத்திரமே நம்முடைய ஒரே நோக்கமாயிருந்தால், நம்முடைய இருதயம் எல்லா சமயங்களிலும் பூரண இளைப்பாறுதலில் தங்கியிருக்கும்.*

*ஆம், எத்தனையோ குறைகள் நிறைந்த நம்மை "நாம் இருக்கிற வண்ணமாகவே" ஆண்டவர் ஏற்றுக் கொண்டார் என நாம் அறியும் போது பூரண இளைப்பாறுதலின் நிறைவுக்குள் வந்துவிடுவோம். வேறுயாரும் பெற்றிருப்பதைப் போன்ற ஊழியத்தையே நாமும் பெற்றிருக்க வேண்டும் என தேவன் எதிர்பார்க்கவில்லை என்பதை தெளிவாய் அறிந்திருப்போம். இவ்வாறாக நாம் அறிந்திருப்பதால், இன்று கிறிஸ்துவ உலகில் மலிந்துகிடக்கும் ஒருவருக்கொருவர் "போட்டி போடும்" கேவலமான நிலையிலிருந்து நாம் பூரண விடுதலையைப் பெற்றிருப்போம். மேலும், நம்முடைய ஊழியத்தின் மூலம் ஏற்பட்ட பலனை பிறருக்கு அறிக்கைச் செய்யும் இச்சை யிலிருந்து நாம் பூரண விடுதலை பெற்றிருப்போம்.*

*கிறிஸ்துவின் சரீரத்திற்குத் தேவையான "***நம்முடைய** *விசேஷப் பங்கை" நாம் தரும்படிக்கே ஆண்டவர் நமக்கு வரங்களைத் தந்திருக் கிறார். அதன் மூலமாய்* **நாம்** *நிறைவேற்றும்படியான "விசேஷித்த பணியையும்" நமக்குத் தந்திருக்கிறார். இவ்வாறு அவர் நமக்குத்தந்த பணியை அவருடைய கிருபையினாலும் வல்லமையினாலும் நம்மால் முடிந்த முழு-பெலனையும் கொண்டு நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு நாம் அவருக்கு நிறைவேற்றும் இந்தப் பணியை "நாம் அவருக்காக என்னென்னவெல்லாம் செய்கிறோம்" என்பதை* **வேறுயாரும் அறிந்து கொள்ள வகைசெய்யவேகூடாது.** *இது எதற்கு ஒப்பானதென்றால், ஒரு மணவாட்டி தன் மணவாளனுக்கு அன்புடன் பணிசெய்திடும் மறைவான கிரியைகளை வேறுயாரும் அறிந்து கொள்ள அவள் விரும்பாததற்கு ஒப்பாகும்!*

*காரியம் இவ்வாறாய் இருப்பதால், நாம் நம்முடைய ஆண்டவரோடு "ஓர் மணவாட்டிக்குரிய உறவைக்" கட்டியெழுப்புவோமாக! இல்லா விட்டால், நாமும் சர்தேயு சபையின் மூப்பனைப் போலவே முற்றுப் பெறுவோம் என்பதில் சந்தேகமேயில்லை!!*

**தன்னுடைய நிர்பந்த நிலையை அறியாதிருந்த லவோதிக்கேயா சபை :**

*இங்கு லவோதிக்கேயா மூப்பன் "***பல** *காரணங்களினிமித்தம்" ஆண்டவரால் கடுமையாக கடிந்து கொள்ளப்பட்டார்.*

*இந்த மூப்பன் தன்னை மிகப்பெரிய (ஆவிக்குரிய) ஐசுவரிய*

*வானாகவும், இனி எதுவும் தனக்குத் தேவையில்லை எனவும் எண்ணிக் கொண்டிருந்தான். ஐசுவரியம் பணத்திற்கு மாத்திரமே தொடர்புடைய தல்ல. ஒருவன் தன்னுடைய அறிவிலும், வரங்களிலும் மற்றும் தாலந்துகளிலும் கூட ஐசுவரியவானாய் விளங்கி* "**சுயதிருப்தியின்**" *எண்ணம் கொண்டிருக்க முடியும்.*

*ஆகவே, திறமையான புத்திக்கூர்மையும், பேச்சுத்திறனும், வரமும் கொண்டவர்கள் மிகுந்த பயத்தோடு நடந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், இவ்வித மனுஷீகத்திறமைகளினிமித்தம் பெருமை யடையும் அபாயம் இப்படிப்பட்டவர்களுக்கு எப்போதும் இருக்கிறது! அது மாத்திரமல்லாமல், கர்த்தரைச் சார்ந்திருப்பதைக் காட்டிலும் தங்களின் திறமைகளைச் சார்ந்து கொள்ளும் அபாயமும் இவர்களுக்குத் தொடர்ச்சியாய் இருக்கிறது! இந்த லவோதிக்கேயா சபையின் மூப்பன் தன்னுடைய வேத அறிவிலும், தன்னுடைய வரங்களிலும், தான் செய்து முடித்த ஊழிய சாதனைகளிலும், ஓர் மூப்பனாய்விளங்கும் தன்னுடைய பதவியிலும் திருப்தி கொண்டவனாய் இருந்தான். ஆனால்* **தேவனுடைய பார்வையிலோ** *அவனுடைய ஆவிக்குரிய நிலை "நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கத்தக்கவனும், தரித்தரனும், குருடனும், நிர்வாணியுமாய் இருக்கிறதை" (வெளி.3:17) அறியாதவனாய் இருந்தான்.*

**இவ்வாறு தேவன் நம்மை காண்கிறவிதமாய் நம்முடைய உண்மையான ஆவிக்குரிய நிலையை அறியாதவர்களாய் இருப்பது வருந்தத்தக்க நிலையாகும்!!**

*இந்த மூத்த சகோதரன் "தான் ஒரு நிர்ப்பந்தமான மனிதன்" என்ற தன்னுடைய உண்மை நிலையை அறியாதிருக்கும்போது, அப்போஸ் தலனாகிய பவுலைப் போன்ற தேவ மனிதர்களோ, "நிர்பந்தமான மனுஷன் நான்!" (ரோமர். 7:24) எனக் கூக்குரலிட்டு கதறுகிறார்கள்!!*

*தேவமனுஷனாகிய பவுலே தன் சொந்த நிர்ப்பந்த நிலையை அறிந்திருக்கும்போது, லவோதிக்கேயா மூப்பனோ தன்னுடைய நிர்ப்பந்த நிலையை அறிய முடியாமல் இருந்ததற்கு என்ன காரணம்? ஏனென்றால் பவுல் தேவனுடைய முகத்திற்கு நேராய் தன்னை வைத்து ஜீவித்தார்! ஆனால், லவோதிக்கேயா மூப்பனோ அவ்வாறு ஜீவிக்க வில்லை!! தேவனுடைய வெளிச்சத்தில், தன்னுடைய மாம்சத்தில் தீமை குடி கொண்டிருப்பதைப் பவுல்* **தொடர்ச்சியாகக் கண்டார்** *(ரோமர்.7:18). இதனிமித்தமே, பவுல் தொடர்ச்சியாக தன்னுடைய ஆவியின் தரித்திரத்தில் நிலைத்திருந்து ஓர் தேவ மனிதனாய் விளங்கினார். ஆனால், இந்த லவோதேக்கியா மூப்பனோ தன் மாம்சத்தில் உள்ள நிர்பந்த நிலையைக் காணாததினால், ஓர் பரிதபிக்கும் மாம்ஷீகமான " வெது வெதுப்பான" ஜீவியத்தில் முற்றுப்பெற்றான்.*

*ஒரு தேவனுடைய ஊழியன் தேவனுடைய முகத்திற்கு நேராய் ஜீவிக்கத் தவறும்போது அவன் தன்னுடைய சொந்த தேவையை*

ஒருக்காலும் காணவே முடியாது. ஆகவேதான் இப்படிப்பட்ட வர்களின் வாழ்க்கையில் "**சுய-திருப்தி**" மிக எளிதில் பிரவேசித்து விடுகிறது. இதை நாம், அந்த சகோதரன் பேசுகிற அல்லது பிரசங்கிக்கிற விதத்திலிருந்து கண்டு பிடித்து விடலாம். தவிப்பான தேவையோடு இருப்பவன் பேசும் விதம், சுய திருப்தியில் தேங்கி நிற்பவன் பேசும் விதத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாய் இருக்கும்.

உபதேசங்களைத் திறமையாகப் பேசும் வரம்பெற்ற பிரசங்கிகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பேசும்போது அவர்களுடைய ஆவியை கவனித்தால், அவர்களுடைய ஆவியில் ஒருவித அகங்காரமும் இருப்பதை நீங்கள் உணர்ந்துவிட முடியும். அதாவது, தரித்திரமும், தேவையும் உள்ளவர்களைப்போல இல்லாமல் "ஓர் **தேர்ச்சி பெற்ற** திறமைசாலிகளைப்போல" இவர்கள் பேசுவார்கள்.

இவ்வாறு ஓர் வலிய அகங்கார ஆவியையுடைய மனுஷர்களால் கிறிஸ்துவின் சரீரம் ஒருக்காலும் கட்டப்படவே முடியாது! தாழ்மையும், சாந்தமுமான ஆவியை உடைய மனிதர்களால் மாத்திரமே கிறிஸ்துவின் சரீரம் கட்டப்பட முடியும்!! இவ்வித அகங்காரமான பிரசங்கி மிக எளிதில் தன் பிரசங்கங்களில் ஜனங்கள் மீது சாட்டையை சொடுக்கி விடுவான்! இங்குதான் இது போன்றவர்கள் இயேசு குறிப்பிட்டபடி பொல்லாத ஊழியக்காரர்களாய் மாறுகிறார்கள். இந்த ஊழியக் காரனோ மற்றவர்களுக்கு தகுதியான காலத்திலே அவர்களுக்குரிய படியை அளக்குபடி தன் எஜமானால் நியமிக்கப்பட்டிருந்தவன் என இயேசு குறிப்பிட்டார் (லூக் .12:42). ஆனால், அவர்களுக்குரிய படியை அல்லது போஜனத்தைக் கொடுப்பதற்குப் பதிலாக அவர்களை இவன் அடிப்பதற்குத் தலைப்பட்டான் (லூக்.12:45). துரதிருஷ்டவசமாய் இன்றைய கிறிஸ்துவத்தின் பிரசங்க மேடையிலிருந்து ஏராளமான சாட்டை அடிகளே ஜனங்கள் மீது சொடுக்கப்படுகிறது. இவ்வித சாட்டை அடிகள் தேவபக்தியான வாழ்க்கைக்கு ஒருவரையும் ஒருக்காலும் நடத்தவே முடியாது. இதற்கு மாறாக, இவ்வித சாட்டையடிகள், ஜனங்களைக் குற்ற உணர்வுக்குள் நடத்துவதற்கே அப்பிரசங்கிகளுக்கு உதவியாய் இருக்கிறது.

உதவியற்ற நிலையிலிருக்கும் ஒரு ஏழைப் பிச்சைக்காரன் பிறரிடம் எவ்வாறு பேசுகிறான் என்பதை கவனித்து பாருங்கள். அவன் எப்போதும் பிறரிடம் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் பேசுவதையே நாம் காண முடியும். ஏனென்றால் இந்த உலகில் தான் ஒரு பொருட்டானவனல்ல என்பதை இவன் அறிந்திருக்கிறான். நாமும் இவ்வுலகில் நம்மை ஒரு பொருட்டானவர்களாகக் கருதாதபடியால், எல்லா மனுஷர்களிடமும் இந்த பிச்சைக்காரன் போலவே சாந்தத்தோடும் வணக்கத்தோடும் இருக்கவேண்டுமென வேதாகமம் நமக்குப் போதிக்கிறது (1பேதுரு. 3:15). ஆனால், ஓர் கொடுங்கோல் சர்வாதிகாரி எவ்வாறு பேசுவான்? அவனுடைய தொனியில் **அகங்காரம்** எப்போதும் இழையோடியிருக்கும்!

*நாம் ஜனங்களிடத்தில் பேசியவைகள் ஓர் ஏழ்மையான ஆவியிலிருந்து புறப்பட்டு வந்ததா? அல்லது அகங்கார ஆவியிலிருந்து புரண்டோடியதா? என்பதை நம்மை நாமே சோதித்தறியக்கடவோம்.*

*"எல்லாரையும் கனம் பண்ணுங்கள்" என 1 பேதுரு. 2:17 நம் யாவருக்கும் கட்டளை கொடுக்கிறது. 'எல்லாரிடத்திலும்' என்ற இந்த கட்டளையில், இந்த பூமியில் யாராகிலும் ஒருவரையாவது நாம் விலக்கி வைத்திடக் கூடுமா? ஒருக்காலும் கூடாது!!*

*ஒரு சகோதரரிடம் பேச்சுத்திறனும் அதிகமான வேத அறிவும் இல்லாதிருந்தும், அவரிடம் தாழ்மையும் சாந்தமுமான ஆவியும் இருந்தால், அது போதுமே!*

**ஏனெனில், வரங்களும் பேச்சுத்திறமையும் கொண்ட 'அகங்கரமான' சகோதரனைக் காட்டிலும், இந்த தாழ்மையின் ஆவி நிறைந்த சகோதரனே கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்கு ஏற்றவனாய் இருக்கிறான்!**

*வரம் பெற்றதோர் சகோதரன் இந்த பூமியில் ஆவிக்குரிய மனிதனைப்போல் தோற்றமளிக்கலாம். "அவர் சபைக்குக் கிடைத்த சம்பத்து!" என்றுகூட மற்றவர்கள் நினைக்கலாம். ஆனால் நாம் கடைசி நாளில் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வந்து நிற்கும்போது "தாழ்மையான சகோதரர்களைக் கொண்டே" கிறிஸ்துவின் சரீரம் கட்டப்பட்டது என்ற உண்மையைக் கண்டறிவோம்! ஆம், பிரதானமாக வேத அறிவைக்கொண்டோ அல்லது ஆவிக்குரிய வரங்களைக் கொண்டோ அல்ல,* **நம் ஜீவியத்தைக் கொண்டே** *கிறிஸ்துவின் சரீரம் கட்டப்படுகிறது என்பதை நாம் நன்கு அறிந்தவர்களாய் இருக்க வேண்டும்.*

*ஆவியில் தன் ஏழ்மையை உணர்ந்தவர்கள் மாத்திரமே தேவனுடைய ராஜ்யத்தைக் கட்ட முடியும் (மத்தேயு.5:3). நாம் தொடர்ச்சியாக நம் ஆவியின் தரித்திரத்தை உணர்ந்தவர்களாய் இருப்பதற்கு ஒரே வழி, நாம் எப்போதும் "இயேசுவை நோக்கிக் கொண்டிருப்பதுதான்". இவ்வாறு அவருடைய வெளிச்சத்தில் நாம் நம்மைக் காணும்போதுதான், நம்மைச் சுற்றியுள்ளவர்களைக் காட்டிலும் நாம் எவ்வளவுதான் மேன்மையுள்ளவர்களாய் இருந்தாலும்,* **"நான் இன்னமும் கிறிஸ்துவைப் போல இல்லையே"** *என்ற ஏக்கத்தைப் பெற்றிருப்போம். ஆம், அவருடைய வெளிச்சத்தில் நம்மை மாத்திரமே நாம் காண்கின்றபடியால், பிறருடைய பெலவீனங்களைக் காண்பதற்குக் கண் கூசுகிறவர்களாய் "நானே நிர்பந்தமான மனுஷன்!"என தேவ சமூகத்தில் கதறி விடுவோம் (ரோமர்.7:24). நம்மைக் குறித்த இந்த நேர்மையான அறிக்கை செய்வதற்கு வேறு யாருடைய தூண்டுதலும் தேவனுடைய சமூகத்திலிருக்கும் நமக்குத் தேவையாய் இருப்பதில்லை. இந்தக் கதறல் இல்லையென்றால், லவோதிக்கேயா மூப்பனைப்போல நாம் மிக எளிதில் பின்மாற்றம் அடைந்து, வெதுவெதுப்பும், மாம்ஷீகமும் அகங்காரமும் நிறைந்த படுகுழிக்குள் வீழ்ந்து விடுவோம்!*

*பழைய உடன்படிக்கையில் பிரதான ஆசாரியன் வருடத்திற்கு ஒருமுறைதான் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல முடியும். அங்கே தேவனுடைய மகிமையைக் காணும் இவன், அந்த மகிமையின் பிரவாகத்தில் தன்னுடைய சொந்த நிர்பந்த நிலையை வருடத்தில் ஒரேமுறைதான் காண்பான்!*

**ஆனால் இப்போதோ புதிதும் ஜீவனுமான மார்க்கம் இயேசுவினால் திறக்கப்பட்டுவிட்டபடியால் (எபி.10:20). நாம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் அதாவது தேவனுடைய சமூகத்தில் எல்லா நேரங்களிலும் ஜீவித்திட முடியும்!**

*அது மாத்திரமல்ல, நாம் பவுலைப் போல, நம் மாம்சத்தில் உள்ள நிர்பந்த நிலையை எல்லா நேரங்களிலும் கண்டிட முடியும்!!*

*பழைய உடன்படிக்கை தீர்க்கதரிசிகள் தேவனுடைய மகிமையை எப்போதாவது ஒரு முறைதான் காண முடிந்தது. அவருடைய மகிமையை ஏசாயா கண்டபோது, "ஐயோ அதமானேன்" எனக் கதறினான்(ஏசாயா.6:5). நாமோ இந்த பரம தரிசனத்தை தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ளும் பாக்கியத்தை இப்போது பெற்றிருக்கிறோம். ஆகவே நாம் பிறருக்கு "ஐயோ" சொல்லுவதிலிருந்து விலகி "ஐயோ* **நான்** *அதமானேன்"என தொடர்ச்சியாய் கதறும் நிலைக்கு வருகிறோம். "இவ்வாறாக பரிசுத்த ஆவியில் நிறைந்த ஜீவிக்கிற" யாவரும் தங்கள் தேவையை தொடர்ச்சியாய் கண்டு எல்லா சமயத்திலும் ஆவியின் தரித்திரத்தில் நிலைத்திருப்பார்கள்.*

*ஆம், தன் ஆவியின் தரித்திரத்தைக் கண்டவர்கள் மாத்திரமே "தேவனுடைய பார்வையில்" ஐசுவரியவான்களாய் இருக்கிறார்கள். இந்த பாக்கியமான நிலையிலிருக்கும் ஒருவன் நம்மோடு உரையாடும் போது அல்லது ஓர் கூட்டத்தில் பேசும்போது நாம் மெய்யாகவே அவனுடைய ஆவிக்குரிய ஐசுவரியத்தில் பங்கு பெறுகிறோம். இதற்கு மாறாக, சொற்பொழிவுத் திறமை கொண்டதோர் பிரசங்கி தன் ஆவியில் தரித்திரத்தை உணராதிருக்கிறபடியால், ஆவிக்குரிய ஐசுவரியங்களின் "சித்திரங்களை" அல்லது 'போட்டோக்களை' மாத்திரமே நமக்கு காண்பித்துக் கொண்டிருப்பார்! ஆம், மெய்யான ஐசுவரியத்தை நமக்குத் தந்திட அவரால் முடியாது. காரியம் இவ்வாறாய் இருப்பதால், நம்முடைய சபை ஊழியங்களில் "ஆவியின் தரித்திரம்" கொண்டவர்களுக்கே முதலிடம் தரவேண்டும்..... வரங்களைப் பெற்ற சகோதரர்களுக்கு அல்ல! ஏனென்றால் தன் ஆவியில் தரித்திரத்தை உணராத வரம் பெற்ற சகோதரர்கள் சபைக்கு நாசத்தையே கொண்டு வருவார்கள்!!*

*ஆம் விபச்சாரர்களாலும், திருடர்களாலும் சபை ஒருக்காலும் நாசமாவதில்லை. ஏனென்றால் இது போன்ற ஜனங்கள்* **வெளிப்படையாகவே** *பாவிகளாய் இருக்கிறபடியால், அவர்களை அவர்கள் இருக்கிற வண்ணமாகவே யாவரும் அறிந்துகொள்ளமுடியும். ஆனால் லவோதிக்கேயா சபை மூப்பனை போல தங்கள் சொந்த தேவையை உணராமல்,*

தொடர்ந்து பரிசுத்தத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் வரம் பெற்ற பிரசங்கிகள் அல்லது போதகர்கள் மூலமாய் சபை அழிக்கப்பட்டுவிட முடியும்!?

இவ்வாறு, யாரெல்லாம் ஆவியின் தரித்திரத்தை உடையவர்கள்? யாரெல்லாம் தங்கள் ஆவியில் அகங்காரம் கொண்டவர்கள்? என்ற வித்தியாசத்தை நாம் பகுத்தறிய முடியவில்லையென்றால், அதற்கு காரணம் நாமே நம்முடைய ஆவிக்குரிய தரித்திரத்தை உணராதவர்களாய் ஜீவித்திருக்கிறோம் என்பதே வெளிப்படையாகும். இதைப் போலவே, சபை மூப்பர்களாய் இருக்கிற நாம் நம்முடைய தேவையை முதலாவது காணமுடியவில்லையென்றால், மற்றவர்கள் தங்களுடைய தேவையைக் காணும்படி நாம் எங்ஙனம் உதவிபுரிய முடியும்?

நம்முடைய சபைகள் ஆண்டவருக்கென தூய்மையாய் காக்கப்படுவதற்கு, தேவன் முதலாவது நமக்கே வெளிச்சத்தைத் தரும்படி ஜெபிக்க வேண்டியது எவ்வளவு அவசியமாயிருக்கிறது!

**ஆண்டவரிடமிருந்து நேரடியாகக் கேட்பதே உத்தமம் :**

நாம் மேற்கண்ட ஐந்து மூப்பர்களைக் குறித்த மிக வருத்தமானதோர் உண்மையாதெனில்: “தேவன் இவர்களிடம் **நேரடியாகப்** பேசுவதைக் கேட்க முடியாத அளவிற்கு செவிடர்களாயிருந்தார்கள்!” என்பதுதான். அப்போஸ்தலனாகிய யோவான் மூலமாகவே ஆண்டவர் அவர்களைக் கடிந்துகொள்ள முடிந்தது. இத்துயரநிலை புதிய உடன்படிக்கையின் காலத்தில் சம்பவித்திட அவசியமேயில்லை. பழைய உடன்படிக்கையில் தான், ஜனங்கள் தேவனுடைய செய்தியை ஒரு **தீர்க்கதரிசியின் மூலமாய்** கேட்கவேண்டிய நிலை இருந்தது. இந்த மூத்த சகோதரர்கள் தாழ்மையிலும் தெய்வ பயத்திலும் நிலைத்திருப்பார்கள் என்றால், தேவன் அவர்களிடம் நேரிடியாகப் பேசவும்..... அதை அவர்கள் தொடர்ச்சியாகக் கேட்டிருக்கவும் முடியும். ஆம், அவர்களுக்குரிய செய்தியை ஆண்டவர் யோவானிடம் கூறவும், அதை யோவான் அவர்களுக்கு எழுதித் தெரிவிக்கவும் வேண்டிய பின்தங்கிய நிலை ஏற்பட்டிருக்காது.

இவ்வாறு, யோவானிடமிருந்து இந்த மூப்பர்கள் நிருபங்களை அல்லது கடிதங்களைப் பெற்றபின்பு, அவர்கள் மனந்திரும்பினார்களா அல்லது இல்லையா என்பது நமக்குத் தெரியாது. அவர்கள் அனைவரும் மனம் திரும்பியிருக்கக்கூடும் என்றே நாம் நம்புகிறோம். ஒருவேளை தீயத்தீரா சபை மூப்பன் உண்மையாய் மனந்திரும்பித் தன்னுடைய மனைவியிடம், “இனிமேலிருந்து சபை விஷயங்களிலெல்லாம் நீ தலையிடவே கூடாது! உனக்குரிய வேலையை மாத்திரம் நீ பார்!!” என அவளைத் திருத்தும்படி கூறியிருப்பாரா என ஆச்சரியப்படுகிறேன். அல்லது, அவனுடைய மனைவி தன் கணவரைத் பார்த்து, “யோவானின் கடிதத்திற்கு போய் பெரிதாக அலட்டிக் கொள்ளாதீர்கள்” என உதாசீனம் செய்து கூறியிருப்பாளோ என்றும்

வியக்கிறேன்!! எப்படியிருந்தாலும், இந்த மூப்பர்கள் யோவான் மூலமாய் வந்த ஆண்டவருடைய கடிந்து கொள்ளுதலை மனப் பூர்வமாய் ஏற்றுக் கொண்டிருந்தால், அவர்களுடைய ஜீவியமும், ஊழியமும் நிச்சயமாய் வியக்கத்தக்க வகையில் சீர்ப்படுத்தப் பட்டிருக்கும் என்பதில் சந்தேக மேயில்லை!!

ஒருவேளை இச்சபைகளின் மூப்பர்களில் யாராகிலும் ஒருவர் யோவனுடைய கடிதத்தை ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்திருப்பார் களோ என்பது நமக்குத் தெரியாது. இருப்பினும், யோவான் தனது மூன்றாவது நிருபத்தில் **'தியோத்திரேப்பு'** என்ற மூப்பன், சபையில் தன்னுடைய முதன்மை ஸ்தானத்தை (மூப்பன் ஸ்தானத்தை) இச்சித்த படியால், யோவானின் கடிந்து கொள்ளுதலை ஏற்றுக் கொள்ளவில்லை என அவரே எழுதி வைத்ததை நாம் 3 யோவான் 2- ல் வாசிக்கிறோம்.

நாம் கர்த்தைரை வலிமையாய் சேவிக்க வேண்டுமென்றால் நம்முடைய சகோதரர்கள் நம்மைக் காண்கிறபடியல்ல, ஆண்டவர் நம்மைக் காண்கிறபடியே எல்லா நேரங்களிலும் நம்மைக் கண்டிட வேண்டும். தேவன் நம்மிடம் நேரடியாகப் பேசும் வார்த்தைகள் மாத்திரமே, நம்மை ஒவ்வொரு ஆவிக்குரிய அபாயத்திலிருந்தும் காத்துக் கொள்ள முடியும். நாம் தேவனுடைய முகத்திற்கு முன்பாக தொடர்ச்சியாய் ஜீவித்து, அவருடைய ஆவியின் சத்தத்தைக் கேட்பதற்கு **கவனம் கொண்டிருந்தால் மாத்திரமே** அபாயத்திலிருந்து காத்துக்கொள்ள முடியும். நாம் தேவனுடைய முகத்திற்கு முன்பாக தொடர்ச்சியாய் ஜீவித்து, அவருடைய ஆவியின் சத்தத்தைக் கேட்பதற்கு கவனம் கொண்டிருந்தால் மாத்திரமே அபாயத்திலிருந்து விலகிநிற்கும் பாதுகாப்பை நாம் பெற்றிட முடியும். ஆகவேதான், ஆண்டவர் நம்மோடு நேரடியாகப் பேசும் போது, மற்ற சகோதரர்கள் மூலமாய் பேசும்போது அதைக் கருத்தாய் கேட்டிட நாம் கவனம் கொண்டிருக்க வேண்டும்.

கடைசியாக, நம்முடைய கடந்தகால தோல்விகளினிமித்தம் நம்மைக் குற்றப்படுத்துவதெற்கன ஆண்டவர் ஒருபோதும் கடிந்து கொள்ளாமல், **நல்லதோர் எதிர்காலத்தை** நமக்குத் தருவதற்கென்றே அவர் எப்போதும் கடிந்து கொள்ளுகிறார் என்பதை ஒருக்காலும் மறவா திருக்கக்கடவோம்!

# பிறர் பின்பற்றும்படியான மாதிரியான ஜீவியம்!

4

பழைய உடன்படிக்கையில் வாழ்ந்த எல்லா தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் யோவான்ஸ்நானகன் ஓர் தலை சிறந்த தீர்க்கதரிசியாய் விளங்கினான். ஆனால் இயேசு கூறும்போது "புதிய உடன்படிக்கையின்" கீழ் உள்ள சிறியவன், யோவான்ஸ்நானகனைக் காட்டிலும் உயர்ந்த ஸ்தானத்திற்கு சென்றிட முடியுமென கூறினார் (மத்.11:11). இவ்வாறு யோவான்ஸ்நானகனைக் காட்டிலும் மேன்மையான இடத்திற்கு நாம் அழைக்கப்பட்டிருப்பது மெய்யாகவே ஓர் ஆச்சரியமான அழைப்பாகும்!

பழைய உடன்படிக்கையின் கீழ் உள்ள ஊழிய அழைப்பைக் காட்டிலும் புதிய உடன்படிக்கையின் கீழான ஊழிய அழைப்பு ஓர் மகா மேன்மையான அழைப்பேயாகும். பழைய உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்த மோசே, எலியா, யோவான்ஸ்நானகன் போன்ற தேவ ஊழியர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் ஏராளமாய் இருக்கின்றன. ஆனால் அவர்களோ "கற்பனைகளைப் பின்பற்றி" தேவனுக்கு ஊழியம் செய்தார்கள். இன்று நாமோ, "ஓர் மாதிரியைப் பின்பற்றி" தேவனுக்கு ஊழியம் செய்ய அழைக்கப் பட்டிருக்கிறோம்.

ஓர் தேவனுடைய ஊழியனாய் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு இப்போது இயேசுவே நம்முடைய நல்ல மாதிரியாய் இருக்கிறார். நமக்கு இயேசு எவ்வாறு பிரதான ஆசாரியனாய் மாறினார் என்பதை அறிவீர்களா? அவருடைய அற்புத ஊழியத்தின் மூலமாய் அல்ல, மாறாக.... அவர் "எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு (நமக்கு) ஒப்பாயிருந்து" (எபி.2:17) நம் யாவருக்கும் ஓர் நல்ல மாதிரியாய் மாறியதினிமித்தமே அந்த ஊழியத்தைப் பெற்றார்.

யோவான் 17- ம் அதிகாரத்தில், "மாம்சமான யாவர் மேலும் (எல்லா மானிடர் மேலும்) நீர் எனக்கு அதிகாரம் கொடுத்தீர்" என இயேசு கூறினார் (யோவான்.17:2). இந்த அதிகாரத்தை எதற்காக பிதா இயேசுவுக்கு கொடுத்தார்? இதே வசனத்தில் அதற்குரிய விடையை இயேசு கூறினார், "நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்திய ஜீவனை கொடுக்கும் பொருட்டே" பிதா இயேசுவுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். "நித்திய ஜீவன்" என்பதற்கு 'ஒருபோதும்' முடிவடையாத ஜீவன்(வாழ்க்கை) என்பது பொருளல்ல. மாறாக, "**துவக்கமும் முடிவுமில்லாத ஓர் ஜீவன்**" என்பதே இதன் பொருளாகும்! இதை விளக்கமாய் சொல்ல வேண்டுமென்றால், "தேவனுடைய வாழ்க்கையை அல்லது திவ்விய சுபாவத்தை விவரிப்பதே நித்திய ஜீவன்."

பழைய உடன்படிக்கையின் ஊழியர்களாயிருந்த மோசே, யோசுவா, சிம்சோன், தாவீது போன்றவர்கள் இஸ்ரவேலை ஆளுவதற்குரிய அதிகாரத்தையும், தங்களுக்குண்டாயிருந்த மானிட எதிரிகளை மேற்கொள்ளுவதற்குரிய அதிகாரத்தையும் பெற்றிருந் தார்கள். ஆனால் புதிய உடன்படிக்கையின் தேவனுடைய ஊழியர்களோ, மற்றவர்களை "திவ்விய சுபாவத்தில் (நித்திய ஜீவனில்) பங்கு பெறும்படி நடத்தி, அவர்கள் தங்கள் மாம்சத்தில் உள்ள இச்சைகளை மேற்கொள்ள வழிநடத்தும்" அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

இவ்வாறு தன் வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளிலும் திவ்விய சுபாவத்தை விளங்கிடச்செய்த இயேசுவைப் போலவே மாறுவதற்கு சகோதர சகோதரிகளை நடத்துவதே இப்போது நாம் சபையில் பெற்றிருக்கும் அதிகாரமாகும். இதைத் தவிர, வேறு எந்த அதிகாரமும் நமக்கு இல்லை. நாம் பிறரை நித்திய ஜீவனுக்குள் நடத்துவதற்குரிய அதிகாரத்தை செயல்படுத்தவில்லையென்றால், நாம் தோல்வியடைந்து விட்டோம் என்றே நம்மைக்குறித்து கருத வேண்டும்!

துரதிருஷ்டவசமாக இன்று அநேக கிறிஸ்தவ தலைவர்கள் பழைய உடன்படிக்கையின் தேவஊழியர்களைப் போல ஜனங்களையே ஆளுகை (Ruling) செய்கிறார்கள். ஆனால் இயேசுவும், அப்போஸ்தலர்களுமோ எல்லா மனுஷருக்கும் 'வேலைக்காரர்களாய்' (Servants) இருந்தார்கள். இந்த சத்தியத்தின் அடிப்படையில், "நீங்கள் பழைய உடன்படிக்கையின் ஜீவியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? அல்லது புதிய உடன் படிக்கையின் ஜீவியமா?" என உங்களை நீங்களே கேட்டுப்பாருங்கள்.

இயேசு "நமக்கு முன்னோடியானவர்" (FORERUNNER) என்றே அழைக்கப்படுகிறார் (எபி.6:20). அதாவது, நாம் செல்ல வேண்டிய அதே வழியில் **நமக்கு முன்பாக** அவர் சென்றார். இவ்வாறாக "தன் ஜீவ காலமெல்லாம் சிலுவையை சகித்த... இயேசுவை நோக்கிப் பார்த்து இந்த ஓட்டத்தை ஓடக்கடவோம்" (எபி.12:1,2) என்றே நாம் புத்தி சொல்லப்பட்டிருக்கிறோம். மேலும் அவர் "எல்லாவிதத்திலும் **நம்மைப்போல்** சோதிக்கப்பட்டும் பாவமில்லாதிருந்தபடியால்" (எபி 4:15),

இப்போது நாம் "பாவம் செய்யாதிருந்த அவருடைய **அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படி**" அழைக்கப்படுகிறோம் (1பேதுரு.2:21,22).

நம் எல்லோருக்கும் இயேசு மாதிரியாய் இருக்கும் பொருட்டே நமக்கு ஏற்படும் எல்லா சோதனைகளையும் அவர் சந்தித்தார்! இதனிமித்தமே "என்னைப் பின்பற்றுங்கள்" எனக்கூறிய அவருடைய வார்த்தைகள் மிகுந்த வல்லமையுடையதாய் இருக்கிறது. இப்போது தேவனுடைய மந்தைக்கு மேய்ப்பர்களாய் இருக்கும் நாமும் இதே வழியிலேயே மந்தையை நடத்திட வேண்டும். பவுல் கூறியதைப்போலவே நாமும் பிறரைப் பார்த்து, "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல... **நீங்களும் என்னுடைய மாதிரியைப் பின்பற்றுங்கள்**" எனக் கூறுபவர்களாய் இருக்க வேண்டும்.

இன்று அநேக பிரசங்கிகள், "என்னைப் பின்பற்றாதீர்கள், கிறிஸ்துவை மாத்திரம் பின்பற்றுங்கள்" எனக் கூறுகிறார்கள். இவ்வாறு இவர்கள் கூறுவது மிகுந்த தாழ்மையான அறிக்கை போல நமக்குத் தோன்றுகிறது. ஆனால் இந்த அறிக்கை "வசனத்திற்குப் புறம்பான" அறிக்கையாகும். ஏனெனில் எந்த அப்போஸ்தலர்களும் இது போன்ற மாயமான அறிக்கையை கூறவேயில்லை. தாங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல மற்றவர்களும் தங்களைப் பின்பற்ற வேண்டும் என்றே எப்போதும் புத்தி சொன்னார்கள்.

இயேசுவை "பிரதான மேய்ப்பன்" என வேதம் கூறுகிறது. இப்போது அவருக்கு கீழாக நாம் தேவனுடைய மந்தைக்கு மேய்ப்பர்களாய் இருக்கிறோம். இதைப்போலவே, முன்னோடியானவராகிய இயேசுவின் கீழ், நாமும் சபையில் உள்ள மற்றவர்களுக்கு "குட்டி- முன்னோடிகளாய்" இருந்திட அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆம், அவர் சென்ற அதே வழியிலேயே நாமும் செல்ல வேண்டும். ஜெயித்து வாழ்ந்தால் மாத்திரமே "நான் ஜெயங்கொண்டதைப் போலவே நீங்களும் ஜெயம் பெறுங்கள்" (வெளி.3:21) என பிறருக்கு நாம் புத்தி சொல்ல முடியும்!!

**புதிய உடன்படிக்கை ஊழியத்தின் இரகசியம் :**

புதிய உடன்படிக்கையின் ஊழியனாக பவுல் அவ்வூழியத்தை மிகுந்த வல்லமையோடு செய்து முடித்தார்! இவ்வாறு, தான் நிறைவேற்றிய வல்லமையான ஊழியத்தின் இரகசியத்தை கீழ்காணும் வசனத்தின் மூலமாய் பவுல் வெளிப்படுத்தினார், "... எந்த உபத்திரவத்தினாலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்ய (பெலனடையச் செய்ய) திராணியுடையவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் (பெலன் தருகிறவர்)" (2 கொரி .1:4).

ஓர் ஆவிக்குரிய கல்வியை கற்றுக்கொள்வதற்கு பவுல் அநேக உபத்திரவங்களுக்கு ஊடாய் செல்ல வேண்டியிருந்தது. இவ்வாறு அநேக உபத்திரவங்கள் மூலமாய் பவுல் பெலனைப் பெற்றுக்கொண்ட

பின்பு தான், அப்பெலனை மற்றவர்களுக்கும் அவரால் தரமுடிந்தது. இத்தகைய கல்வித்திட்டம் இல்லாமல் ஒருவராகிலும் புதிய உடன்படிக்கையின் ஊழியனாய் ஒருக்காலும் மாறிடவே முடியாது.

பழைய உடன்படிக்கையின் கீழ் அபிஷேகிக்கப்பட்ட சிம்சோனுக்கும், புதிய உடன்படிக்யையின்கீழ் அபிஷேகிக்கப்பட்ட பவுலுக்கும் இடையில் ஏராளமான வித்தியாசங்கள் இருக்கின்றன. சிம்சோன் ஆவியின் வல்லமைபெற்று **வெளியிலிருந்த** சிங்கங்களை வென்றான். ஆனால் பவுலோ ஆவியின் வல்லமையை பெற்று, சிம்சோன் வென்றிட முடியாதிருந்த, தன் சொந்த **மாம்சத்திலேயே** குடிகொண்டிருந்த "பாலிய இச்சை" போன்ற சிங்கங்களை ஆவியின் வல்லமையினால் வென்றார்.

பழைய உடன்படிக்கையின்கீழ், தேவ ஊழியர்கள் தேவனுடைய சமூகத்திற்கு முன்பாக நின்று, தேவன் சொல்ல விரும்பியதைக்கேட்டு, அவைகளை மற்றவர்களுக்குச் சொன்னார்கள். ஆனால், புதிய உடன்படிக்கையில், இதுபோன்ற செயல் மாத்திரமே போதாது:

> இப்போதோ தேவனை சேவிக்கும் ஊழியர்கள் உபத்திரவங்களுக்குள்ளும் பாடுகளுக்குள்ளும் சென்று அவ்வெல்லா உபத்திரவங்களையும் ஜெயிப்பதற்கு உதவும் தேவ கிருபையை அனுபவபூர்வமாய் அனுபவித்து... பின்பு, தங்கள் மாதிரியை மற்றவர்களும் பின்பற்றும்படி புத்தி சொல்ல வேண்டும்!

பழைய உடன்படிக்கையின் ஊழியத்தைவிட, புதிய உடன் படிக்கையின் ஊழியம் அதிக மேன்மையாய் இருப்பதற்கு இதுவே காரணம்! இதனிமித்தமே இவ்வூழியம் அதிக விலைக்கிரயம் கொண்டதாய் இருக்கிறது.

காரியம் இவ்வாறாய் இருப்பதால், நாம் **வேதகாமப் பள்ளிக்குச்** செல்வதின் மூலமாய் ஓர் புதிய உடன்படிக்கையின் ஊழியனாய் மாறிவிட ஒருக்காலும் முடியாது! வேதப்புத்தகத்தில் நாம் காணும் எந்த உண்மையான அப்போஸ்தலனும், தீர்க்கதரிசியும் வேதகலாசாலைக்கு சென்று கற்று வந்ததே இல்லை. ஏனென்றால் நாம் இரசாயணப் பாடத்தை ஓர் வகுப்பறைக்குச்சென்று கற்றுவருவது போல வேதப் புத்தகத்தை ஒருவன் ஒருக்காலும் கற்றுக்கொள்ள முடியாது. நம் வாழ்வின் பல்வேறு சூழ்நிலையின் மத்தியில்தான் பரிசுத்த ஆவியானவர் வேதவாக்கியங்களின் விளக்கங்களை நமக்குப் போதிக்கிறார். இவ்வாறாகவே அப்போஸ்தலரும் கற்றுக்கொண்டார்கள்! இன்று நாம் காணும் எந்த உண்மையான தேவ ஊழியரும் இவ்விதமாகவேதான் கற்றுக் கொள்கிறார்கள். இவ்வாறு கற்றுக் கொண்டால் மாத்திரமே, நாம் பிறரை நித்திய ஜீவனை சுதந்தரிக்கும்படி நடத்திட முடியும்.

பழைய உடன்படிக்கையின் கீழ் ஜனங்கள் **பூரணத்தை** நோக்கி கடந்து செல்வது கூடாதகாரியமாய் இருந்தது. ஆனால் புதிய உடன் படிக்கையில் பூரணத்தை நோக்கி கடந்து செல்வது இப்போது சாத்தியமாய் இருக்கிறது. (எபி.6:1) வசனத்தை எபி.7:19-வது வசனத்தோடு ஒப்பிட்டுப்பாருங்கள்).

இங்கேயும் "நாம்" முதலாவது பூரணத்தை நோக்கிக் கடந்து செல்லாமல், பிறரை பூரணத்திற்குள் ஒருக்காலும் வழி நடத்தவே முடியாது. ஆம், "மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க **நம்மை** சுத்திகரித்துக்கொண்டும்" "அவர் சுத்த முள்ளவராய் இருக்கிறது போல **தன்னைத்தானே** சுத்திகரித்துக் கொண்டும்" (2 கொரி.7:1; 1யோவான்3:3) இருந்தால் மாத்திரமே நாம் பிறரையும் இவ்வித ஜீவியத்திற்குள் வழி நடத்த முடியும். இதைத்தவிர புதிய உடன் படிக்கையில் வேறேந்த வழியும் இல்லவே இல்லை!

புதிய உடன்படிக்கை ஊழியர்கள் பிறருக்கு "குட்டி முன்னோடி களாகவே" இருத்தல் வேண்டும். இதற்காகவே அவருடைய ஊழியக் காரராகிய நம்மை, நம் சபைகளிலுள்ள மற்ற விசுவாசிகள் கடந்து செல்வதைக் காட்டிலும் பலதரப்பட்ட கடினமான சூழ்நிலைகளுக்குள் தேவன் நடத்துகிறார். அப்போது மாத்திரமே நாம் அவர்களுக்கு உண்மையான மேய்ப்பர்களாய் இருந்திடமுடியும். அவ்வாறு இல்லாத பட்சத்தில், நம் சொந்த ஆதாயமாகிய பணத்தையோ, அல்லது மனுஷர்களுடைய கனத்தையோ தேடிடும் கூலிக்காரர்களாகவே மாறுவோம் என்பதில் சந்தேகமே இல்லை.

நாம் மேற்கண்ட சத்தியத்தின் பொருள், நம் சபையில் உள்ளவர்கள் சந்திக்கும் எல்லா **சூழ்நிலைகளையும்** நாமும் சந்தித்தாக வேண்டும் என்று பொருள் அல்ல! அது நிச்சயம் கூடாத காரியம். நமக்கு ஏற்படும் எல்லா சூழ்நிலைகளையும் இயேசு சந்தித்ததால் அல்ல... மாறாக, நாம் சந்திப்பது போன்ற எல்லா சோதனைகளாலும் அவர் சோதிக்கப்பட்ட தினிமித்தமே நமக்கு அவர் முன்னோடியானார் (எபிரெயர்.4:15). எப்படியெனில், இயேசுவுக்கு ஒரு குடிகார தகப்பனோ அல்லது தொந்தரவு தரும் ஒரு மனைவியோ அல்லது கீழ்படியாத பிள்ளைகளோ நம்மில் சிலருக்கு இருப்பதுபோல் அவருக்கு இருந்ததில்லை. அல்லது இன்று நாம் அரசாங்கத்திற்கு முன்பாக "லைசன்ஸ்" வாங்குவதிற்கு நீண்ட வரிசையில் காத்திருப்பதுபோல் இயேசு வரிசையில் நின்று காத்திருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதில்லை. ஆகிலும், அவருடைய நாட்களில் **வெவ்வேறான** சூழ்நிலைகளின் மூலமாய் இன்று நாம் சந்திப்பதைப் போன்ற **எல்லா சோதனைகளையும்** அவர் சந்தித்த படியால் நமக்கு அவர் முன்னோடியாய் மாறினார்!

ஓர் ஊழியனாய் இருக்கும் நம்மை, நம்முடைய சகோதர சகோதரிகள் சந்திக்கும் எல்லா சோதனைகளுக்குள்ளாகவும் தேவன் நடத்திச் செல்ல வேண்டியது அவசியமாயிருக்கிறது. நாம் ஜனங்களுக்கு ஊழியம் செய்து அவர்கள் நித்திய ஜீவனில் பங்குபெறும்படி நடத்த வேண்டுமென்றால், தேவன் நமக்குத்தந்தருளிய எல்லா சோதனை களிலும் ஜெயம் பெற்றவர்களாய் விளங்கவேண்டும்! இவ்வாறாகவே நாம் புதிய உடன்படிக்கையின் ஊழியர்களாய் மாறுகிறோம்.

பேதுரு மூப்பர்களுக்கு எழுதும் போது "மந்தைக்கு **மாதிரிகளாய்**

இருங்கள்" (1பேதுரு5:3) என எழுதினார். அதேபோல பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது "நீ வார்த்தையிலும் நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு **மாதிரியாயிரு**" (1 தீமோ.4:12) என புத்தி கூறினார்.

பவுல் கூறியவைகளில் 'முதலாவதாய்' நாம் மாதிரியாய் திகழ வேண்டியபகுதி, நம்முடைய வார்த்தை அல்லது **சம்பாஷனை**யாகும். நம்முடைய சம்பாஷனை எப்போதும் சாந்தமாயும், கிருபை பொருந்தினதாயும் இருக்க வேண்டும். மேலும் புறங்கூறுதலிருந்து நாம் முற்றிலும் விடுதலை பெற்றவர்களாயும் இருக்க வேண்டும். யாராகிலும், நமக்கு மாத்திரமே தெரிந்திருக்கும்படி நம்பிக்கைக்குரிய விஷயங்களைச் சொன்னால், அதை மனைவிகூட அறியாதபடிக்கு இரகசியமாய் வைத்திருக்கத் தெரிந்தவர்களாய் இருக்க வேண்டும்.

இரண்டாவதாக, நாம் **அன்பிலே** மாதிரியாய் இருக்க வேண்டும். பிறர் நம்மிடம் எதைப் பேசினாலும் அல்லது நமக்கு எதைச் செய்தாலும் அவர்கள் மீது நாம் கொண்ட அன்பு மாறாததாய் இருப்பதை அவர்கள் காணவேண்டும்.

மூன்றாவதாக, நாம் **விசுவாசத்திலே** மாதிரியாய் இருக்க வேண்டும். நாம் சந்திக்கும் எல்லா கடுமையான சூழ்நிலைகளிலும் ஒருபோதும் பீதி அடையாதிருப்பதையும், அதற்கு மாறாக, தேவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் என்ற பூரண நம்பிக்கை கொண்டிருப்பதையும் ஜனங்கள் நம்மிடம் காண வேண்டும்.

நான்காவதாக, நாம் **கற்பிலே** மாதிரியாய் இருக்கவேண்டும். இப்பகுதியில் நாமே அனல் வீசும் முதல் தரமான மாதிரியாய் இல்லாத பட்சத்தில், நம் சபையிலுள்ள வாலிப சகோதர, சகோதரிகளிடம் தூய கற்பு நடக்கையை நாம் ஒருபோதும் எதிர்பார்த்திடவே முடியாது.

### கிறிஸ்துவின் அடிமையாய் இருத்தல் :

பவுல் தன்னை இயேசுவின் ஓர் அடிமையென (Bond slave ஆங்கில வேதாகமம்) ரோமர்.1:1-ல் குறிப்பிட்டார். ஆதி அப்போஸ்தலர்கள் யாவருமே இதே நிலையில்தான் இருந்தார்கள். இன்று இயேசு, வேலைக்காரர்களுக்காய் அல்ல அடிமைகளுக்காகவே தேவையுடன் ஏங்கி நிற்கிறார். ஓர் வேலைக்காரனுக்கும் ஓர் அடிமைக்கும் மிகப்பெரியதோர் வித்தியாசம் உண்டு. ஆம், ஓர் வேலைக்காரன் சம்பளத்திற்காக வேலை பார்க்கிறான். ஓர் அடிமைக்கோ சம்பளம் என ஏதும் தரப்படுவதில்லை. புதிய உடன்படிக்கையில் தேவனுக்கு அடிமைகள் மாத்திரமே உண்டு, வேலைக்காரர்கள் இல்லை!

தன்னுடைய அப்போஸ்தலர்களாய் அழைக்கப்பட்டவர்களுக்கு இயேசு ஒருபோதும் எவ்வித சம்பளமும் வழங்கவில்லை. நாம் முழுநேர கிறிஸ்தவ ஊழியத்திற்காய் அழைக்கப்பட்டிருந்தால் ஏதாகிலும் சம்பளத்திற்கென ஒருபோதும் வேலைசெய்யாதவர்களாய் நம்மை

*காத்துக் கொள்ளக்கடவோமாக! அப்படியில்லையென்றால் நாம் வெகுசீக்கிரத்தில் மனுஷருடைய வேலையாட்களாய் மாறிவிடுவோம்!*

**ஜனங்கள் நமக்கு ஏதாகிலும் காணிக்கை கொடுப்பார்களென்ற எதிர்பார்ப்போடு நாம் ஒருக்காலும் ஊழியம் செய்யாதிருக்கக்கடவோம்.**

*நாம் அவர்களிடமிருந்து ஏதும் எதிர்பார்க்காத நிலையில், அவர்களாகவே விரும்பித் தருவார்களென்றால் அதில் தவறேதுமில்லை. ஆனால் நாமோ ஒன்றையும் ஒருவரிடமிருந்தும் ஒருக்காலும் எதிர்பார்க்கவே கூடாது!*

*மேலும், "என்னுடைய ஜீவியதரத்திற்கு கீழானவர்களிடமிருந்து நான் ஒரு போதும் எந்த பணமும் பெறமாட்டேன்" என்ற கோட்பாட்டை நாம் அனைவரும் கொண்டிருத்தல் வேண்டும்.*

*நம் ஆண்டவருக்கு முழு நேர ஊழியம் செய்வதற்கு, பவுல் ஓர் அப்போஸ்தலனாய் ஊழியம் செய்த வழியே உயர்ந்த வழியாகும். அவர் தனக்கென ஓர் உத்தியோகத்தை வைத்துக்கொண்டு ஊழியம் செய்தார். நாம் இவ்வாறாக இருந்தால் நம்முடைய தேவைக்கென யாருடைய காணிக்கையும் நாம் சார்ந்திருக்க வேண்டிய அவசியமிருக்காது (1 கொரி. 9:14-18; 2 கொரி 11:7-15; அப்.20:33,34).*

*நாம் சம்பளத்திற்காக ஊழியம் செய்தால், புதிய உடன்படிக்கையின் ஊழியர்களாய் நாம் ஒருக்காலும் இருக்கவே முடியாது. அடிமைகளாய் இருப்பதற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்! வசதியையும், சௌகரியத்தையும் தேடுவதற்கு நமக்கு உரிமையுண்டு என நாம் எண்ணினால், நாம் சம்பளம் வாங்கும் ஊழியர்களேயல்லமால் அடிமைகளல்லவே அல்ல!! ஓர் அடிமைக்கு யாதொன்றின் மேலும் உரிமை கிடையாது! தன் சொந்த கௌரவம், மதிப்பு என்று கூட அவனுக்கு ஏதும் உரிமை இல்லை!*

*ஊழியர்களாகிய நாம் வசிப்பதற்கென தேவன் ஒரு வீடு கொடுத்தால், அதற்கு நாம் நன்றியுடையவர்களாய் இருக்கக்கடவோம். ஆனால், நாம் வசிப்பதற்கென சொந்த வீடு இல்லாதிருந்தாலும் நாம் இன்னமும் அவருக்கு மகிழ்வுடன் ஊழியம் செய்து கொண்டுதான் இருப்போம். நாம் மெய்யான அடிமைகளாய் இருந்தால், கிறிஸ்துவின் சரீரத்தை நாம் கட்டும்படியாக தேவன் தந்த சிலாக்கியமே நமக்குப் போதுமானதாயிருக்கும்!*

*ஓர் மெய்யான தேவனுடைய அடிமையின் கடந்தகால நிகழ்கால, எதிர்கால சரித்திரத்தை ஒரே வசனத்தில் உள்ளடக்கி ரோமர் 6:22 கூறுகிறது.*

*1) கடந்தகாலத்தில் - அறிந்த பாவங்களிலிருந்து விடுதலையை பெற்றிருப்பான்.*

*2) நிகழ்காலத்தில் - பரிசுத்தமாகுதலின் பலனை நாளுக்கு நாள் அதிகம் பெற்று வருவான்.*

3) எதிர்காலத்தில் - நித்திய ஜீவனாகிய திவ்ய சுபாவத்தின் முழு நிறைவையும் பெற்றுவிடுவான்!

தேவ ஊழியனுக்குரிய இவ்வித வாழ்க்கையில் நாம் மேற்கண்டபடி **முதலாவது** நடைபெற வேண்டிய செயல், **அறிந்த பாவங்களிலிருந்து நாம் விடுதலை பெறுவதேயாகும்**. ஆனால், அநேகர் தங்கள் அந்தரங்கத்தில் ஏற்படும் தோல்விகளுக்காக ஆழ்ந்த துயரம் அடையாதிருப்பதால் "பாவத்தின் மேல் பூரண வெற்றியை சுதந்தரிக்கும்" ஒப்பற்ற ஜீவியத்திற்குள் இன்னமும் வராதிருக்கிறார்கள். நம்முடைய சிந்தை வாழ்க்கையை வேறுயாரும் காணாதிருக்கிறபடியால், நமக்கு உண்டாகும் அசுத்த சிந்தைகளால் ஏற்படும் கறைகளை மிக எளிதாக எண்ணி நாம் உதாசினம் செய்பவர்களாய் இருக்க முடியும்! ஆனால், இந்த **அந்தரங்கப் பகுதியில்தான்** தேவன் நம்மை சோதித்து, நாம் மெய்யாகவே அவருக்குப் பயப்படுகிறோமா அல்லது இல்லையா என்பதைக் கண்டறிகிறார்!!

**இரண்டாவதாக,** நாம் தேவனுடைய உண்மையான ஊழியர்களாயிருந்தால், நம் ஜீவியத்தில் பரிசுத்தமாகுதலின் பலன் நாளுக்கு நாள் பெருகிவரும் அனுபவத்தை நிச்சயமாய் ருசித்திட முடியும். இதுவே ஓர் தேவனுடைய அடிமைக்கு கிடைக்கும் பிரதான பலனாகும்! அநேகரை கிறிஸ்துவுக்குள் கொண்டுவருவது..... அவர்களை விசுவாசத்தில் ஊன்றக் கட்டுவது..... போன்ற கிரியைகள் இவர்களுக்கு இரண்டாவது தரமான பலனாகவே இருக்கும். நாம் மெய்யாகவே கர்த்தரைச் சேவிப்ப வர்களாய் இருந்தால், கர்த்தருக்கான நம்முடைய எல்லா பிரயாசங்களின் முடிவான பலன் "நம்முடைய தனிப்பட்ட ஜீவியம் அதிகமான தேவபக்தியில் வளர்ச்சியடைந்திருக்கும்" என்பதேயாகும். பரிசுத்த மாகுதலுக்குரிய கிரியை என்பது, நம்முடைய மாம்சத்தில் குடிக் கொண்டிருக்கும் தீமைகளைப் பற்றிய வெளிச்சத்தை அதிகமாய் பெறுவதும்.... அவ்வாறு வெளிச்சத்தைப் பெற்ற பகுதியில் நாம் "கிறிஸ்துவின் மரணத்தை" நம் சரீரத்தில் சுமக்கிறபடியால், நம் ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியாக "கிறிஸ்துவின் ஜீவனில்" அதிகமதிகமாய் பங்கு பெறுவதுமே பரிசுத்தமாகுதலின் கிரியையாகும். இவ்வாறு நாம் பரிசுத்தமடைகிறவர்களாய் இருந்தால் நாம் வெளிச்சத்தின்மேல் வெளிச்சத்தைப் பெற்றுக்கொண்டே இருப்போம்! உதாரணமாய், நம்முடைய குடும்பத்தில் உள்ளவர்களோடு பேசும்போது நம்முடைய குரலில் உண்டாகும் 'கடுந்தொனி', நம்மோடு இசைந்து போகாதவர்களிடம் நமக்கு ஏற்படும் அன்பின் தாழ்ச்சி, நம்முடைய ஊழியத்தில் புகழ்ச்சியைத் தேடுதல், வீண்வார்த்தைகள் நிறைந்த நம்முடைய சம்பாஷணைகள், பகடிசெய்து புண்படுத்தும் கேலிப் பேச்சுக்கள், ஜீவனற்ற நமது பிரசங்கங்கள்... இன்னும் இது போன்ற ஏராளமான பகுதிகளில் வெளிச்சத்தை ஒன்றன்பின் ஒன்றாய்ப் பெற்றுக் கொண்டேயிருப்போம்.

**கடைசியாக,** இந்த கிறிஸ்துவின் அடிமை தேவனுடைய திவ்விய

*சுபாவத்தில் (நித்தியஜீவனில்) நிறைவான பங்கடைந்திடும் நாளுக்காகவே வாஞ்சையுடன் எதிர்நோக்கி இருப்பான்! இந்த இலக்கை நோக்கியே ஒவ்வொரு உண்மையான தேவனுடைய அடிமைகளும் (ஊழியர்களும்) ஆர்வமுடன் முன்னேறிச் சென்று கொண்டிருப்பார்கள்.*

*தேவனுக்கு அடிமைகளாய் இருக்கும் நாம் இப்பூமியில் ஏராளமான பாடுகளையும், தவறாய் புரிந்து கொள்ளப்படுவதையும், பொய்க் குற்றம் சாட்டப்படுவதையும், கடந்து செல்ல வேண்டிய நிலையில் இருக்கலாம்! நாம் மாத்திரம் முடிவுபரியந்தம் அன்பில் நிலைத்திருப்பவர்களாய் இருந்தால், கடைசிநாளில் நாம் இயேசுவைப் பார்க்கும் போது இத்தனைப் பாடுகளும் 'தகுமென்றே' எண்ணிடுவோம்!!*

*புதிய உடன்படிக்கையின் ஊழியர்களாய் இருக்கும் நாம் எவ்வாறு இருக்கவேண்டுமென பவுல் குறிப்பிட்டு எழுதிய வசனங்களை சற்று கவனியுங்கள்... "இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு நாங்கள்* **யாதொன்றிலும்** *இடறல் உண்டாக்காமல் எவ்விதத்தினாலேயும் எங்களை தேவ ஊழியக்காரர்களாக (தேவனுக்கு அடிமைகளாக) விளங்கப் பண்ணுகிறோம்... மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும், அடிகளிலும், காவல்களிலும், கலகங்களிலும், பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும், உபவாசங் களிலும், கற்பிலும், அறிவிலும், நீடிய சாந்தத்திலும், தயவிலும், பரிசுத்தாவியிலும், மாயமற்ற அன்பிலும்..... கனத்திலும், கனவீனத்திலும், துர்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும், எத்தரெனப்பட்டாலும் நிஜஸ்தரா கவும், (மனுஷரால்) அறியப்படாதவர்களெனப்பட்டாலும் (தேவனால்) நன்றாய் அறியப்பட்டவர்களாகவும்..... தரித்திரர்களென எண்ணப் பட்டாலும் அநேகர்களை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென எண்ணப்பட்டாலும் சகலத்தையும் உடை யவர்களாகவும்... எங்களை குறித்து நெருக்கமான (குறுகிய) உள்ளம் கொண்டவர்களிடம் எங்கள் இருதயமோ எப்போதும் பூரித்து இருக்கிறவர்களாயும்" (2கொரி.6:3-12) எங்களை விளங்கப்பண்ணு கிறோம் என மனப்பூரிப்புடன் எடுத்துக் கூறினார்.*

**நம்முடைய சரீரங்களை ஒடுக்கிக் கீழ்ப்படுத்த வேண்டும் :**

*1 கொரிந்தியர். 9:27-ம் வசனத்தில் பவுல் தன் வாழ்க்கையில் கொண்டிருந்த மற்றுமோர் இரகசியத்தை நமக்கு எடுத்துரைக்கிறார்: "என் சரீரத்தை கடினமாய் நடத்தி,* **என் சரீரம் என்னசெய்ய வேண்டுமோ அதைச் செய்யும்படியும், அது செய்திட விரும்புவதைச் செய்யாத படிக்கும்** *அப்பியாசப்படுத்தியிருக்கிறேன்"* (LIVING BIBLE-*மொழிபெயர்ப்பு*). *இவ்வாறு தான் செய்யவில்லையென்றால், மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிற 'தானே' ஆகாதவனாய் போய்விட முடியும் என பவுல் அஞ்சினார்.*

*மகா வலிமையான செயல்களை கர்த்தருக்கென்று செய்த பவுலே தான் ஆகாதவனாய் போகாதபடிக்குப் பயந்திருக்கிறேன் என*

கூறுவதைக் காண்பது நமக்கு மிகுந்த ஆச்சரியமாய் இருக்கிறது. பயத்தில், ஆரோக்கியமான பயமென்றும் ஆரோக்கியமற்ற பயமென்றும் இருவகை இருக்கிறது. "**தேவன்** எனக்குத் தீங்கு செய்து விடுவார்" என அஞ்சுவதே ஆரோக்கியமற்ற பயமாகும். ஆனால் நான் ஏதோ ஒன்றைப் பேசியதில் அல்லது செய்ததில் "**நான்** தேவனுக்கு தீங்கு செய்து விடுவேனோ? என் ஜீவியத்தின் கடைசியில் நான் ஆகாதவனாய் போய் விடுவேனா?" என அஞ்சுவது ஆரோக்கியமான பயமேயாகும். இந்த பயமே நம்மை எப்போதும் விழிப்புள்ளவர்களாய் காத்துக் கொள்ளும். மேலும், இந்தபயம் நம்முடைய சரீரங்களை அடக்கி அவைகளை நமக்கு அடிமைகளாய் கீழ்ப்படுத்துகிறது.

"உங்கள் இரட்சிப்பு நிறைவேற பயத்தோடும் நடுக்கத்தோடும் பிரயாசப்படுங்கள்" (பிலி.2:12) என தேவனுடைய வார்த்தை நமக்கு போதிக்கிறது. இந்த புத்திமதி குறிப்பாக பிரசங்கிகளாய் இருக்கும் நமக்கே உரியதாகும். ஏனென்றால் ஒவ்வொரு பிரசங்கியும் "ஓர் மாய்மாலக்காரனாய்" மாறிவிடும் அபாயம் எப்போதும் அவனை நெருங்கி நிற்கிறது. **தான் இன்னமும் அப்பியாசப்படுத்தாதையெல்லாம் பிரசங்கித்துவிடும் அபாயத்தில் அவன் இருக்கிறான்.** தன்னைக் குறித்து முழுவதும் உண்மையல்லாத உயர்ந்த தோற்றத்தைப் பிறருக்கு தரும் அபாயத்திலும் அவன் இருக்கிறான். மேலும் தன் பரிசுத்த ஜீவியத்தை பூரணப்படுத்துவதைக்காட்டிலும், தன் பிரசங்கங்களை வடிவமைத்து பூரணப்படுத்துவதற்காக அதிக நேரம் செலவழித்துவிடும் அபாயமும் அவனுக்கு இருக்கிறது!

பவுல், தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதில் ஓர் நிச்சயமான இலக்கை உடையவராய் இருப்பதாக 1கொரி 9:26-ம் வசனத்தில் கூறினார். நிச்சயமில்லாத ஓட்டத்தை அவர் ஓடவில்லை, ஆகாயத்தில் நிச்சயமற்ற சிலம்பம் பண்ணவுமில்லை. ஓர் திட்டமான இலக்கை நோக்கியே அவர் ஓடினார். ஆம், தான் செய்து முடித்திட தீர்மானம் கொண்டவைகளை 'குறிவைத்து' சுட்டார்! என்றே கூறலாம்.

இச்சமயத்தில், என்னுடைய வாலிப நாட்களில் நான் சென்றிருந்த **ராணுவப் பள்ளியை** நினைவு கூறுகிறேன். அங்கு துப்பாக்கியால் சுடுவதை எங்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள். நாங்கள் ஒருவருக்கொருவர் சில அடிதூரம் இடைவெளிவிட்டு எங்கள் கையில் துப்பாக்கியுடன் தரையில் வரிசையாய் படுத்துக்கொள்ள வேண்டும். எங்களுக்கு முன் சற்று தொலைவில் ஒவ்வொருவருக்கும் உரிய ஓர் 'குறிகாட்டும் பலகை' வைக்கப்பட்டிருக்கும். அந்தப் பலகையில், மேல் தொடங்கி நடுப்பகுதி வரை பலவட்டங்கள் போடப்பட்டிருக்கும். மையப்பகுதியின் சிறிய வட்டம் "எருதுவின் கண்" என அழைக்கப்படும் "எருதுவின் கண்னை" குறிவைத்தே நாங்கள் சுட வேண்டும்!

நாங்கள் முதலாவது சுட ஆரம்பித்தபோது எங்களுடைய குறி மிக மோசமாய் இலக்கைவிட்டு விலகியிருந்தது. எங்களில் சிலர் எங்களு

டையதற்குப் பதிலாக பக்கத்தில் உள்ளவர்களுடைய குறியீட்டுப் பலகையை சுட்டுக்கொண்டிருந்தோம்! சில நாட்களுக்குப் பிறகுதான் எங்களுடைய இலக்கை குறிவைத்து சுடப் பழகினோம்!

இதேநிலைதான் இன்று அநேக கிறிஸ்தவர்களிடம் காணப்படுகிறது. இவர்கள் தங்களுக்குரிய இலக்கைச்சுடாமல் தங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களுடைய இலக்கை நோக்கியே சுட்டுக் கொண்டிருக் கிறார்கள். இவ்வாறு பிறருடைய காரியத்தில் தலையிடுவதற்காக மனம்வருந்தி, மெய்யாகவே **தங்களுடைய இரட்சிப்புக்காக** பிரயாசப் படுவார்களென்றால், கொஞ்சம் கொஞ்சமாய் தங்களுக்குரிய இலக்கை குறிவைத்து சுட ஆரம்பித்துவிடுவார்கள். முடிவில் "எருதுவின் கண்ணையும்" சுட்டுவிடுவார்கள்! இப்போதுதான் இவர்களுடைய இலக்கு பூரணமடைந்துள்ளது!! இவ்விதமே பவுலுடைய இலக்கும் பூரணமானதாய் இருந்தது. அவர் பிறரை நியாயந்தீர்க்கவில்லை. அவர் தன்னையே நியாயந்தீர்த்து தன் சரீரத்தைக் கீழ்படித்தினார். இதனிமித்தமே பவுல் ஓர் நல்ல போரட்டத்தை போரடி தனது ஓட்டத்தை முடித்தார் (2தீமோ.4:7).

இங்கு நாம் அதிகமாய் ஒடுக்கி கீழ்ப்படுத்த வேண்டிய முக்கியமான இரண்டு அவயம் நம்முடைய "கண்ணும்" "நாக்குமே" ஆகும்!

இதே போலவே, நம்முடைய நாக்குகளைக் குறித்தும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். எல்லா நேரங்களிலும் சாத்தான் உபயோகித்திட அனுமதிக்கும் ஒருவனுடைய நாக்கை தன்னுடைய வார்த்தை பிரசங் கிப்பதற்கு தேவன் ஒருக்காலும் உபயோகிப்பதேயில்லை! எரேமியா தீர்க்கதரிசியிடம் ஆண்டவர் கூறும்போது, "நீ தீழ்ப்பானதினின்று விலையேறப் பெற்றதை (உன் சம்பாஷணையினின்று) பிரித்தெடுத்தால், என் வாய்போல் இருப்பாய்" (எரே.15:19) எனக்கூறினார்.

ஓர் நல்ல இருதயத்திலிருந்து வராத எதையும் நாம் பேசவே கூடாது. இந்தப் பகுதியில் நாம் பெலஹீனமாய் இருக்கிறபடியால், இந்த புத்தி மதியை நிறைவேற்றுவது அவ்வளவு எளிதானதல்ல! எனினும் நாம் ஆணித்தரமாய் நம்முடைய நாவை கட்டுப்படுத்துவதற்கு தீவிரம் கொண்டால் இது சாத்தியமாகும்.

நம்முடைய இந்திய தேசத்தில், அநேக வாலிபர்களை தன்னுடைய தீர்க்கதரிசிகளாக இருக்கும்படி தேவன் அழைத்தார் என நான் நிச்சயம் நம்புகிறேன். ஆனால் இவ்வாறு அழைக்கப்படும் அநேக வாலிபர்கள் தங்களுடைய "கண்களையும்" "நாக்கையும்" அடக்கி கீழ்ப்படித்திட கவனம் கொள்ளாதபடியால் **இன்று** அவர்கள் தீர்க்கதரிசிகளாய் மாறவில்லை!!

பாருங்கள், நாம் "கிறிஸ்துவின் சரீரம்" என்றே அழைக்கப் படுகிறோம். ஏனென்றால் நமது மானிட சரீரத்தில் உள்ள அவயவங்கள் நமது மூளையோடு இணைக்கப்பட்டிருப்பதைப் போல, நாமும்

*அவருடைய அவயங்களாய்த் தலையாகிய கிறிஸ்துவோடு இணைக்கப் பட்டிருக்கும் "நெருக்கமான ஐக்கியத்தையே" இது உணர்த்துகிறது.*

*இயேசுவும் இவ்வாறாகவே தன் சரீரத்தின் ஒவ்வொரு அவயங் களையும் தன் பிதாவுக்கு (தலைக்கு) எப்போதும் அர்ப்பணிப்பதற்கு உண்மையுள்ளவராயிருந்தார். ரோமர்.15:3 ம் வசனத்தில் வாசிக்கிறபடி "அவர் தமக்கே பிரியமாய் நடக்கவில்லை". ஆம், தான் இன்பத்தை ருசிக்கும்படியான வகையில் தன் கண்களையும், நாவையும் அவர் பயன்படுத்தவே இல்லை. அவர் மனம் விரும்பியதையெல்லாம் தன் கண்களால் அவர் காணவில்லை! அதே போல தான் விரும்பியதை யெல்லாம் அவர் பேசவும் இல்லை!! பிதாவுக்கு பிரியமானது எதுவோ அதை மாத்திரமே எப்போதும் செய்திட அவர் விரும்பினார். இவ்வாறாக, அவர் தன்னுடைய சரீரத்தை தன்னுடைய பிதாவுக்கு "பழுதற்ற பலியாக ஒப்புக்கொடுத்து" இவ்வுலகில் அவருடைய ஸ்தானதிபதியாய் விளங்கினார் (எபி.9:14). இவ்வாறாகவே அவருடைய ஆவிக்குரிய சரீரத்தில் அவயங்களாய் இருக்கிற நாமும் ஜீவித்திட வேண்டும்.*

**இயேசுவுக்கு முழு இருதயமாய் வாழும் அவருடைய சீஷன். தன்னை தேவனுக்கு பழுதற்ற பலியாக அர்ப்பணிப்பதற்கு எப்போதும் "பற்றிஎரியும் வேட்கை" கொண்டிருப்பான்!**

*இவ்வித குணாதிசயம் கொண்ட "கிறிஸ்துவின் சரீரமாகிய" அவருடைய சபையை நாம் கட்ட விரும்பினால், நாம் மேற்கண்டபடி யாரெல்லாம் தங்கள் சரீரங்களை அவருக்கு அர்ப்பணித்திட வேட்கை கொண்டிருக்கிறார்களோ, யாரெல்லாம் தங்கள் சரீரங்களை ஒடுக்கி கீழ்ப்படுத்தியிருக்கிறார்களோ "அப்படிப்பட்டவர்களையே" அவருடைய சரீரமாய் ஒன்றுகூட்ட வேண்டும்!*

*எப்போதெல்லாம் நாம் "எருதுவின் கண்ணை" இலக்காக வைத்து சுடத்தவறுகிறோமோ, அப்போதெல்லாம் நாம் நம்முடைய தோல்விக்காக துயரமடைய வேண்டும். நம்முடைய கண்கள் "முழுமையான தூய்மை" அற்றிருந்தால் அதற்காக நாம் துயரமடைய வேண்டும்! நம்முடைய நாக்கு "நற்குணத்தின் நிறைவில்லாமல்" ஏதாகிலும் பேசி விட்டால் உடனடியாக நாம் துயர கொள்ள வேண்டும்!! ரோமர் 7:23-ல் பவுல் "என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய் போராடுகிற வேறொரு பிரமாணத்தை (கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு விரோதமானதை) என் அவயங்களில் இருக்கக் காண்கிறேன்" என நேர்மையாய் அறிக்கை செய்தார். "காண்கிறேன்" என நிகழ்காலத்தில் அவர் கூறியபடியால் "ஒவ்வொருநாளும்" தன்னுடைய அவயவங்களில் கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு விரோதமானவைகளைத் தொடர்ச்சியாக கண்டு கொண்டே இருந்தார். இதற்கு மாறாக, "கடந்தகாலத்தில்" இவைகளைக் கண்டதாக அவர் கூறியிருந்தால் அதை ஒரு பொருட்டாய் கருதமுடியாது. ஆனால் அவரோ "நன்மையேதும் இல்லாத தன் மாம்சத்தில்" தொடர்ச் சியாக வெளிச்சத்தைப் பெற்றுக் கொண்டேயிருந்தார். இவ்வாறாக, அவர்*

*தன்னுடைய மாம்சத்திலும் ஆவியிலும் இருந்த அசுசிகளைத் தொடர்ச்சியாய் கழுவிக் கொண்டு பரிசுத்த மாகுதலை தெய்வபயத்தோடு பூரணப்படுத்தினார். ஆம், பவுல்* **தன்னுடைய சரீரத்தைக் கீழ்ப்படுத்தி** *தன் ஜீவியத்தின் முடிவு பரியந்தம் தேவனுக்கு உண்மையுள்ளவராய் இருந்தார். எனவேதான், இன்றும் நாம் காணும் ஏராளமான பிரசங்கியைப்போல் "ஆகாதவனாய்" தள்ளப்படாமல் தன்னுடைய ஓட்டத்தை மகிழ்ச்சியுடன் ஓடிமுடித்தார்.*

**மெய்யான தேவபக்தியும் போலியான தேவபக்தியும் :**

*பழைய உடன்படிக்கையின் கீழ் ஜனங்கள் "கர்த்தருடைய வேதத்தில் அல்லது* **பிரமாணத்தில்**" *தியானமாய் இருப்பதற்குப் புத்தி சொல்லப் பட்டார்கள் (சங்.1:12). ஆனால் புதிய உடன்படிக்கையின் கீழோ நாம்* "**கர்த்தருடைய மகிமையை**" *தியானிப்பதற்கே புத்தி சொல்லப் பட்டிருக்கிறோம் (2கொரிந்தியர்.3:18).*

*தேவ வசனத்தின் வார்த்தைகளை மாத்திரம் நாம் நோக்குகிறவர்களாய் இருந்தால், முடிவில்* **பரிசேயர்களாய்** *மாறிவிடுவோம். நாம் கட்டுவதும் "பரிசேய சபையாகவே" இருக்கும். ஆனால் நாம் அவருடைய வார்த்தையில், இயேசுவின் வாழ்வில் மிளிர்ந்த மகிமையைக் காண்கிறவர்களாய் இருந்தால் நாம் நிச்சயமாய் அவருடைய சாயலுக்கு ஒப்பாய் அதிகமதிகமாய் மறுரூபம் அடைவோம் என்பதில் சந்தேகமேயில்லை.*

*பரிசுத்தாவியானவர் 1தீமோத்தேயு.3:16-ல் சொல்லுகிறபடி தேவபக்தியின் இரகசியம் "இயேசுவின் மாதிரியில்" தெளிவாய் விளங்குகிறது. அவர் இந்த பூமியில் நம்முடைய மாம்சத்தின் வரையறைக்கு உட்பட்டவராய் வாழ்ந்தார். அவருக்கு நம்மைப் போலவே "பரிசுத்தாவியின் பெலன்" ஒன்றைத்தவிர வேறு எந்த உதவியும் இல்லாதிருந்தது. ஆகிலும் அவர் தன்னுடைய ஆவியில் பூரண பரிசுத்தத்தோடு வாழ்ந்தார்.* **நம்மைப் போன்ற மாம்சத்தில் வந்த அவர் இவ்வாறு ஜீவித்திட முடியுமென்றால், நாமும் அவரைப் போல் ஜீவித்திட முடியும்.** *மெய்யான தேவபக்தியின் இரகசியம் இதுவேயாகும்.*

*"அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன்,* **அவர் நடந்தபடியே** *தானும் நடக்க வேண்டும்" (1 யோவான்.2:7) என வேதம் தெளிவாய் கூறுகிறது. ஆகவே நாம் பாவம் செய்து கொண்டிருப்பதற்கு இனியும் நாம் நம்முடைய மாம்சத்தை குறை கூறிக்கொண்டிருக்க முடியாது. ஏனெனில் நம்மைப் போன்ற இதே மாம்சத்தில் இந்த பூமிக்கு வந்த ஒருவர் பாவம் செய்யாமல் வாழ்ந்து விட்டார். ஆம், தேவனுடைய கிருபையின் வல்லமை மூலமாய் ஜெயித்து வாழ்ந்தார்! ஆகவே, இப்போது நாமும் ஜெயித்திட முடியும்!!*

*ஓர் ஜெயம் பெற்ற வாழ்க்கையில் நாம் எந்த அளவு இயேசுவைப் பின்பற்றுகிறோமோ,* **அந்த அளவின்படியே** *நம்முடைய சகவிசுவாசிகளை இயேசு நடந்தது போல நடப்பதற்கு வழிகாட்ட முடியும்*

*1தீமோத்தேயு.3:16-ல் தேவபக்தியின் இரகசியத்தை விளக்கி கூறிய பின், கடைசிநாட்களில் வெளிப்படும் வஞ்சிக்கும் ஆவிகளைக் குறித்தும் பரிசுத்தாவியானவர் எச்சரித்தார். இவர்கள் தங்களுடைய மாயத்தினாலே அநேக விசுவாசிகளை இந்த மெய்யான தேவ பக்தியின் வழியைவிட்டு விலகச்செய்து பரிசுத்தமாவதற்கு வேறொரு போலி மார்க்கத்தைக் காட்டி நடத்துவார்கள். இதைக் கூறும்போது, "ஆவியானவர் வெளிப் படையாய் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே..... சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்" என 1 தீமோ 4:1 கூறுகிறது.*

*வஞ்சிக்கிற ஆவிகளின் பிரதான அடையாளம் "மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாதவர்கள்" (2யோவான். 7) என வேதம் தெளிவாய் கூறுகிறது. அதாவது, இயேசு நம்மைப் போன்றதோர் மாம்சத்தில் வெளிப்பட்டு எல்லாப் பாவங்களையும் ஜெயித்தார் என்ற சத்தியத்தை இவர்கள் அங்கீகரிக்க மாட்டார்கள். இவ்வித வஞ்சக ஆவிகளுக்கு செவிகொடுக்கும் விசுவாசிகள், முடிவில் "பிசாசின் உபதேசங்களை" விசுவாசிக்கும்படியே நடத்தப்படுவார்கள் (1தீமோ.4:1). பிசாசின் உபதேசங்களாகிய* **போலி பரிசுத்தத்திற்கு** *குறிப்பாக இரண்டு உதாரணங்களை மாத்திரம் பவுல் குறிப்பிட்டார் 1)விவாகம் பண்ணாதிருப்பது 2) 'இறைச்சி' புசியாதிருப்பது, போன்ற சில போஜன பதார்த்தங்களை விலக்கி வைப்பது, என்பவைகளேயாகும்.*

*ஓர் சந்நியாசத்திற்குரிய பிரமச்சாரியமும், உண்ணாநோன்பும் பரிசுத்தமாவதற்குரிய சிறந்த வழி என புறஜாதி மார்க்கங்களில் கருதுகிறார்கள். கடைசி நாட்களில் இவ்வித பிசாசின் உபதேசங்கள் "கிறிஸ்துவத்திற்குள்ளும்" நுழைந்துவிடும் என்றே வேதம் எச்சரிக்கிறது. அந்த எச்சரிப்பு இப்போது நம்முடைய நாட்களில் நிறைவேறி விட்டதை நாம் கண்கூடாக காண்கிறோம். நாம் திருமணமாகாதிருப்பதினிமித்தமும் அல்லது ஓர் நீண்ட தொடர்ச்சியான உபவாசம் இருப்பதினி மித்தமும் அதிகமான பரிசுத்தத்தை அடையலாம் என போதிக்கும் கிறிஸ்தவ குருக்கள் இன்று நம் மத்தியில் இருக்கிறார்கள். இவைகளெல்லாம் பிசாசின் உபதேசங்களா? என கேட்கலாம். அதற்கு வேதம் 'ஆம்' என்றே பதில் சொல்லுகிறது. ஏனென்றால் இந்த உபதேசங்கள் "தேவபக்தியின் இரகசியத்திலிருந்து" நம்முடைய கவனத்தைத் திருப்பி 'துறவற' பரிசுத்தத்திற்கே ஈர்ந்திட முயற்சிக்கிறது. அதாவது, நாம் இயேசுவைப் பரிசுத்தாவியின் பெலனைக் கொண்டு பின்பற்றுவதற்கு பதிலாய், "ஓர் துறவற சுய-கட்டுப்பாட்டை" பின்பற்றும்படி இவ் உபதேசங்கள் நம்மைத் தவறாய் நடத்துகிறது.*

*நாம் திருமணமாகாதிருப்பதோ அல்லது உபவாசம் கொண்டிருப்பதோ எந்த தவறும் இல்லை. ஆனால் இவைகளையே "தேவ பக்தியின் இரகசியமாகப்" போற்றிப் பேசுவது நம்மைப் பிழையான ஆபத்திற்குள் நடத்திவிடும் என்பது உறுதி. ஆகவே, எந்த உபதேசம்*

“கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்ட தேவபக்தியின் இரகசியத்திலிருந்து” ஜனங்களை வழிதவறும்படி நடத்துகிறதோ, அந்த உபதேசமே பிசாசின் உபதேசமாகும்! மெய்யான பரிசுத்தம் “யோகசனம்” அல்லது “தியான நிலை” அல்லது “சுயக்கட்டுப்பாடு” போன்றவைகளின் மூலமாய் அல்ல, **பரிசுத்தாவியின் பெலனைக் கொண்டே** மெய்யான பரிசுத்தத்தை நாம் அடைய முடியும்.

பவுல் கொலோசெயர் 2:20-23 வசனங்களில் கூறும்போது, “தொடாதே, ருசிபாரதே...” போன்ற சரீர - ஒடுக்க போதனைகள் வெளியரங்கமான பலனைத் தருவதைப்போல் காட்சியளித்தாலும், அவைகள் மெய்யான திவ்விய சுபாவம் (DIVINE NATURE) நம்முடைய மாம்சத்திலும் வெளிப்படுவதற்கு ஒருபோதும் நடத்தாது என தெளிவாகக் கூறினார். நாமோ, இப்போது நம்முடைய சபையிலுள்ள ஜனங்களை, இவ்வித போலிமார்க்க அனுசார கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துவிட வேண்டும். அவ்வாறு நாம் செய்யாவிட்டால், ஓர் கிறிஸ்தவப் போர்வை கொண்ட இந்து மார்க்கத்தையும், யோகா வழியையும் போற்றுகிறவர்களாகவே நாம் முற்றுப்பெறுவோம்!

பார்த்தீர்களா! பிசாசு மிகத் தந்திரமாய் ஒன்று, கிறிஸ்தவ விசுவாசிகளை “ஐசுவரியவான்களாவதற்குரிய” பொருளாசையின் உச்சகட்டத்திற்குள் நடத்துகிறான்... அல்லது “துறவற” கட்டுப்பாட்டின் உச்சகட்டத்திற்குள் நடத்திவிடுகிறான்!

நாம் ஒப்பிட்டுப்பார்க்கும்போது, அநேக சமயங்களில் பொருளாசை கொண்ட ஐசுவரியம் அவ்வளவு அபாயகரமானதாய் இருப்பதில்லை. ஏனென்றால் சாதாராண மாம்ஷீக கிறிஸ்தவர்கள்கூட அவைகளை “லௌகீகமானது” எனக் கண்டுகொள்ள முடியும். ஆனால் துறவற கட்டுப்பாட்டு ஒழுக்கமோ அதிக அபாயம் நிறைந்ததாகும். ஏனென்றால், ஒருவனை தேவபக்திக்குள் நடத்துவதைப் போன்றதொரு **தோற்றத்தை** இது கொடுத்து விடுகிறது! ஆகவே, இந்த இரண்டுமே அபாயகரமான ஒன்றுக்கொன்று முரணான குன்றுகளாகும்! ஆனால், இந்த இரு குன்றுகளும் ஒருவனை பாதாளத்திற்கே நடத்திச்செல்கிறது!! மார்க்க பக்தியற்ற பணஆசை கொண்டவர்களும், மார்க்க பக்தியுடன் கூடிய சுயக்கட்டுப்பாட்டு பரிசேயர்களும் ஆகிய இருவருமே நரகத்தை நோக்கியே பயணம் செய்கிறார்கள். தேவனுடைய ஊழியர்களாய் இருக்கும் நாம் இதை ஒருபோதும் மறந்து விடவேகூடாது .

**இவ்வுலகத்தின் கண்களில் மேன்மையும் அருமையுமாய் எண்ணப்படுபவைகள்:**

சபையைக் கட்டும் பணியில் ஈடுபடும் நாம், “மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாய் இருக்கிறது” (லூக்கா. 16:15) என்ற சத்தியத்தை எப்போதும் மனதிற் கொள்ள வேண்டும். மனுஷீக மேன்மையை நாம் ஒருபோதும் சபைக்குள் கொண்டுவந்து விடவே கூடாது. நாம் தேவனுடைய வார்த்தையை

*பிரசங்கிக்கும் போது நம்முடைய திறமையையும் அல்லது நம்முடைய அறிவையும் அல்லது சொல்லங்காரத்தையும் உபயோகித்து ஜனங்களைக் "கவர்ச்சிக்க" முயலவே கூடாது! ஏனெனில், இது போன்ற செயல், நாம் நம்முடைய "மனுஷீக-ஆத்துமவல்லமையை" சபையில் அரங்கேற்றுவதாகவே இருக்கும்!!*

*சபையில் நாம் மேன்மையாகக் கருதுபவைகள், இவ்வுலக ஜனங்கள் கருதும் மேன்மைக்கு நேர் எதிரானவைகளாகும். உலக ஜனங்கள் பணத்திற்கு அதிகமான மதிப்பைத் தருகிறார்கள். ஆனால், நாமோ அதற்கு சபையில் ஒருமதிப்பும் தருவதில்லை. உலக ஜனங்கள் அந்தஸ்தும் செல்வாக்கும் உடையவர்களை கனம் பண்ணுகிறார்கள் நாமோ அவர்களை ஒரு பொருட்டாய் எண்ணுவதில்லை. இதற்கு நேர்மாறாக, நாமோ தாழ்மையும், தெய்வபயமும் கொண்டவர்களை அதிகமாய் கனம் பண்ணுகிறோம். இவ்வுலகம் "புத்திசாலித்தனத்திற்கு" அதிகம் மதிப்பு தருகிறது. நாமோ மானிட புத்திசாலித் திறமையை ஒரு பொருட்டாய் எண்ணுவதில்லை. இதிலிருந்து நாம் அறிவதுயாதெனில், உலகத்திற்கும் சபைக்கும் ஏதோ லேசான வித்தியாசம் இருப்பதாய் காணவில்லை. ஆம், அவைகள் கிழக்குக்கும் மேற்குக்கும் உள்ள நேர்எதிரான திசைகளாகவே நாம் காண்கிறோம்!*

*சபையில் நம்முடைய திறமையையும் அல்லது நம்முடைய மேன்மையையும் காட்டுவது தேவனுக்கு முன்பாக அருவருப்பானதாகும். இது எப்படியென்றால், பழைய உடன்படிக்கையின் பலிபீடத்தில், தேவனுக்கு ஒரு பன்றியைக் காணிக்கையாகச் செலுத்துவதற்கு ஒப்பானதாகும்! ஆகவே, நாம் தேவனுக்குச் செய்யும் ஊழியத்தில் நம்முடைய மனுஷீக அருவருப்புகளைக் கொண்டுவந்துவிடாதபடி ஓர் ஆரோக்கியமான பயத்துடன் எப்போதும் ஜீவித்திடக்கடவோம்.*

**ஒரு சிறுபிள்ளைக்கு ஒப்பான தாழ்மை வேண்டும் :**

*இயேசு இந்த பூமிக்குத் திரும்பி வரப்போகும் அவருடைய 1000 வருட அரசாட்சியில் சகலமும் மிகுந்த சமாதானமாய் இருக்கும் என ஏசாயா.11:6 எடுத்துக்கூறுகிறது. அந்த ஆட்சியில் 'கொடிய' மிருகங்கள் எதுவும் இருக்காது. இந்த பூமியின் வாழ்க்கை அந்நாளில் அவ்வளவு மனரஞ்சிதமாய் இருக்கும்! இவ்வாழ்க்கை "அன்று" மாத்திரமல்ல, அந்த அற்புத வாழ்க்கையின் முன்ருசியை நாம் ஏற்கனவே சபையில் ருசித்திட முடியும்!! ஏனென்றால் சபைக்குள் தேவனுடைய ராஜ்யம் ஏற்கனவே வந்து விட்டது. ஆம், "ஒநாய்கள்" ஏற்கனவே சபைக்குள் ஆட்டுக் குட்டிகளோடு படுத்திருக்கின்றன. அதே போல் "புலிகளும்" "வெள்ளாடுகளும்" சபையில் சமாதானமாய் வாழுகின்றன. மேலும் "சிங்கங்களின்" மத்தியில் "கால்நடைப் பிராணிகள்" பாதுகாப்புடன் சபையின் ஐக்கியத்தில் இருக்கின்றன. இந்த உலகத்தில் இதுபோன்ற வேற்றுமை கொண்டவர்கள் ஒருவரோடொருவர் இசைந்து போவது கூடாத காரியமாகும்.* **ஆனால் சபையிலோ, இவர்கள் தங்களுடைய சுய**

**வாழ்விற்கு மரிக்கிறபடியால் ஒருவரோடொருவர் ஓர் மகிமையான சமாதானத்தில் ஜீவிக்கிறார்கள்!** மேலும், இந்த தேவனுடைய ராஜ்ஜியத்தில், "ஒரு சிறுபையன் தலைவனாய் இருந்து நடத்துவான்" என்றும் ஏசாயா கூறினார் (ஏசாயா. 11:6). இதிலிருந்து, ஓர் சபையை நடத்துவதற்கு யார் மெய்யான தகுதி கொண்டவன் என்பதை நாம் காண்கிறோம். ஆம் "யாரெல்லாம் ஒரு சிறு குழந்தையைப்போல் அதிகமதிகமாய் மாறியிருக் கிறார்களோ" அவர்களே இதற்குத் தகுதி கொண்டவர்கள்.

சபையிலிருக்கும் ஓர் உண்மையான தலைவன், ஓர் சிறுகுழந்தையைப் போலவே கபடற்றவனாயும், தாழ்மையாயும் இருப்பான். இதுபோன்ற சகோதரனிடம் "ஐக்கியம் கொள்ளுவது" மிகவும் எளிதாயிருக்கும். இவ்வாறு, "தான் தானாகவே" இருந்துகொண்டு, தன்னுடைய ஆள்த்துவ கவர்ச்சியினாலேயோ (Personality) அல்லது தன்னுடைய வரங்களினாலேயோ பிறரைக் கவர்ச்சிக்காமலும், யாரோ சில அனுபவமிக்க மூத்த சகோதரர் களைப்போல் பாவனை செய்ய முயலாமலும் இருக்கும் இது போன்ற சகோதரர்களிடமே ஜனங்களின் நம்பிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கும்.

ஆனால் இன்றோ, அநேக கிறிஸ்தவ குழுக்களில் தலைமைப் பொறுப்பானது..... சுறுசுறுப்பும், திறமையும் கொண்டவர்களாய், நகைச்சுவைப் பேச்சுடையவர்களாய், சிறந்த பாடகர்களாய், கூட்டங்கள் போன்ற ஏற்பாடுகளைத் திறமையுடன் செய்பவர்களாய் (Organizers) இருப்பவர்களிடமே ஒப்படைக்கப்படுகிறது. 'ஆனால்' புதிய உடன் படிக்கையின் சபையிலோ தேவன் **சிறு குழந்தையைப்போல்** உள்ளவர் களையே தலைமைப் பொறுப்பில் நியமிக்கிறார். ஏனென்றால் இவர்களே தேவனுடைய இராஜ்ஜியத்தில் மிகவும் பெரியவர்கள்!!

ஒரு சபையில் ஓநாய்கள், ஆட்டுக்குட்டிகளைக் கிழித்துப் பட்சித்துக் கொண்டிருந்தால், அது போன்ற சபையில் இன்னமும் தேவனுடைய இராஜ்யம் வரவில்லை என்பதே பொருளாகும்! இந்த நிலை ஏன்? ஏனென்றால் அந்த சபையின் தலைவன் இன்னமும் ஒரு சிறுபிள்ளையைப் போல் மாறவில்லை, அவ்வளவுதான்!! இவ்வாறு சபையில் ஏதாவது முரண்பாடு நிகழும்போது அங்குள்ள தலைவர்கள்தான் தங்களைத் தாங்களே நியாயந்தீர்த்துப் பார்க்க வேண்டும்!!

தன்னுடைய சீஷர்கள் சிறு பிள்ளையைப்போல தங்களைத் தாழ்த்த வேண்டும் என இயேசு அவர்களிடம் கூறினார் (மத்தேயு.18:4). ஏனென்றால் ஒரு சிறு பிள்ளையே பரலோக இராஜ்ஜியத்தில் பெரியவனாய் இருக்கிறான். பரலோக இராஜ்ஜியத்தில் இப்போது இயேசுதான் மிகப்பெரியவர் என நம் எல்லோருக்கும் தெரியும். இதிலிருந்து நாம் அறிவது யாதெனில், இயேசு தன் ஜீவிய காலம் வரை ஒரு சிறுபிள்ளையைப்போல் தன்னைத்தானே தாழ்த்தி வாழ்ந்திருக்கிறார் என்பதேயாகும்.

இங்குதான், எல்லா கிறிஸ்தவ தலைவர்களும் பின்பற்றுவதற்குரிய மாதிரியாய் இயேசு திகழ்கிறார்.

ஒரு நிகழ்ச்சியில் இயேசு திராளான வியாதியஸ்தரை சுகமாக்கின பின்பு, அவ்வாறு சுகமான அற்புதங்களை யாரிடமும் சொல்ல வேண்டாம் என ஜனங்களிடம் கூறியதை நாம் வாசிக்கிறோம். ஆம், அவர் தனக்கென்று எந்த பிரஸ்தாபத்தையும் விரும்பவில்லை! இவ்வாறாக "அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை"(மத்.12:15-20) அதாவது,"அவர் தன்னைக்குறித்து ஒருபோதும் **விளம்பரம்** செய்திட மாட்டார்" என்றே தேவ வசனத்தை இயேசு நிறைவேற்றினார்!!

மேற்கண்ட வசனம் "இதோ நான் தெரிந்துகொண்ட என்னுடைய தாசன்**(பிள்ளை!)**" என்றேத் துவங்குகிறது. ஆகவே இங்கு தேவன் உள்ளம் புளகாங்கிதமடைந்து நமக்குச் சொல்வது யாதெனில்: "**இதோ, தேவனுடைய இராஜ்யத்தில் பெரியவனாயிருக்கும் என்னுடைய பிள்ளையைப் பாருங்கள்! திரளான வியாதியஸ்தரை இவர் சுகமாக்கினாலும் தான் எதுவுமே செய்யாததைப் போல மறைந்து விட்டதைக் கவனியுங்கள்" என்றே கூறுகிறார்.**

இன்று சபையிலும், இயேசுவிற்கு ஒப்பான இதே ஆவியை யுடைய ஒருவனே உண்மையானத் தலைவனாய் இருக்கிறான்! ஒரு சிறுபிள்ளை, ஒருபோதும் தன்னை ஒரு பொருட்டாக எண்ணுவதில்லை! தன்னைக் குறித்து கிட்டத்தட்ட எதுவுமே அறியாமலும் யோசிக்காமலும் இருக்கும்!! இவ்வித 1) தான் ஒரு பொருட்டல்ல என்ற உணர்வும் 2)ஆவிக்குரிய விஷயங்களை தான் கிட்டத்தட்ட ஒன்றுமே அறிய வில்லை என்ற உணர்வும், நம்மை "சிறு பிள்ளைகளாய்" எப்போதும் காத்துக்கொள்ளும்! ஆம், இத்தகைய ஒருவனையே சபையில் தன்னுடைய பிரதிநிதியாக தேவன் அங்கீகாரம் செய்கிறார்.

நாம்தாழ்மையைக் கற்றுக்கொள்வதற்கு இரண்டு உதாரணங்களை மாத்திரமே இயேசு நமக்கு காட்டினார். அது யாதெனில், 1) தன்னையும் 2) சிறுகுழந்தையையுமே மாதிரிகளாகக் காட்டினார். சுவிசேஷங்களில், இயேசு எவ்வாறு வாழ்ந்தார் என்பதைக் கண்டு **அவருடைய மாதிரியி லிருந்து** தாழ்மையை நாம் கற்றுக்கொள்ள முடியும். அதே போல, நம்மைச் சுற்றிலும் ஏராளமான சிறு குழந்தைகளைக் கண்டும் அவர்களிடமிருந்து தாழ்மையைக் கற்றுக் கொள்ள முடியும்.

தொட்டிலில் படுத்திருக்கும் ஒரு சிறு குழந்தையின் மனதில் என்னென்ன சிந்தனைகள் ஓடிக்கொண்டிருக்கும்? தான் எவ்வளவு அழகாய் இருக்கிறோமென்றோ அல்லது மற்றவர்கள் தன்னை எப்படியெல்லாம் புகழுவார்கள் என்றோ அந்த குழந்தை சிந்தித்துக் கொண்டிருக்குமா? அப்படி இல்லவே இல்லை! ஆம் , அக்குழந்தைக்கு 'தன்னைக் குறித்த' சுய உணர்வு ஏதும் இருப்பதில்லை!! மாறாக, "தான் எவ்வாறு இருக்கிறதோ அவ்வாறாகவே" இந்த குழந்தை எந்தவித போலியான நடிப்பும் அல்லது எந்தவித செயற்கையான தன்மையும்

இல்லாமல் "**இயற்கையாய்**" இருக்கிறது! இதுவே நாம் பின்பற்ற உகந்த சிறந்த மாதிரி. நம்மைக் குறித்தும் அல்லது நம் ஊழியத்தைக் குறித்தும் மற்றவர்கள் என்ன எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்ற சிந்தையால் நாம் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறோமா? அப்படியானால் நாம் சிறு குழந்தையைப் போல இல்லை என்பது தெளிவாகிறது. ஆகவே நமக்குள் ஓடும் இவ்வித உயர்வான சிந்தைகளையெல்லாம், நாம் **சிறு குழந்தைகளாய் மாறும்வரை** கடுமையாய் எதிர்த்துப் போரட வேண்டும். அப்போது மாத்திரமே தேவனுடைய ஜனங்களை நடத்துவதற்கு முழு தகுதியையும் பெற்றவர்களாய் நாம் இருக்கமுடியும்.

இந்த மாற்றம் நம்மில் நிகழ்ந்துவிட்டால், நாம் அவருடைய பணியை நிறைவேற்றும் பொருட்டு தேவன் நம்மை இந்தப் பூமியின் எந்த ஒரு "சிறிய மூலை முடுக்கில்" வைத்திருந்தாலும் பெருமகிழ்ச்சி கொண்டவர்களாய் இருப்போம். மனுஷருடைய கண்களுக்கு முன்பாய் மேன்மையாய் மாற வேண்டும் என்ற எவ்வித "சுய நல விருப்பங்களும்" நம்மிடம் இருக்காது. மாறாக, கிறிஸ்துவின் சரீரத்திற்குள் "**நாம்** நிறைவேற்றும் பொருட்டு" தேவன் **நமக்கு** ஒப்படைத்திருக்கும் ஊழியத்தை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சியுள்ளவர்களாய் இருப்போம். மேலும், எல்லா வற்றிற்கும் முக்கியமாக, வேறு யாருடைய ஊழியத்தின் மீதும் நமக்கு ஒரு துளியும் பொறாமை ஏற்படாது!!

இவ்வாறாக, நமக்குள் "**பெரிதாய் வளர்ந்துவிட்ட** கறைபட்ட வழிகளையெல்லாம்" நம்மை விட்டு அகற்றி மீண்டுமாய் சிறு குழந்தை கைளைப் போல மாறவும்... அது மாத்திரமல்லமால் இத்தனை மகத்துவ மான சுவிசேஷத்தை நாம் செல்லுமிடமெல்லாம் பறை சாற்றிட அனுக் கிரகம் செய்கின்ற நம் தேவனுக்கு அளவில்லாத ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போமாக!!

இவ்வாறாக, நாம் புதிய உடன்படிக்கையின் உண்மை ஊழியர்களாய் மாறுகிறோம்!

## பரிசுத்தாவியையே
## சார்ந்து கொள்ள வேண்டும்!

5

"**மா**ய்ந்திடும் மனுஷர்மேல் தன் நம்பிக்கையை வைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டவன் சபிக்கப்பட்டவன். இவன் பாலைவனத்தின் கறளையாய்ப் போன செடியைப் போல இருக்கிறான். ஆனால், கர்த்தர் மேல் நம்பிக்கைவைத்து, **கர்த்தரையே** தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நதியோரமாய் நடப்பட்டு.... தப்பாமல் கனி கொடுக்கிற மரத்தைப் போலிருப்பான்"(எரே.17:5-8-Living மொழி பெயர்ப்பு).

ஓர் புதிய உடன்படிக்கை ஊழியன் தன் வாழ்விலோ அல்லது தன் ஊழியத்திலோ எதைச் செய்தாலும் தேவ கிருபையையும் அவரது வல்லமையையும் பெறும்படி முற்றிலுமாய் தேவனையே சார்ந்து ஜீவிக்க வேண்டும்!

இதனிமித்தமே "ஜெபம்" அவனுடைய ஜீவியத்தில் ஓர் பிரதானப் பகுதியாய் விளங்கிட வேண்டும். நாம் உதவியற்ற நிலையிலிருப்பதையும், தேவனை மாத்திரமே நம்பிக்கையோடு சார்ந்திருக்கிறோம் என்பதையும் நம்முடைய ஜெபமே விளங்கச் செய்வதாய் இருக்கிறது.

ஓர் சுய - நம்பிக்கை கொண்ட மனிதன் ஜெபித்திட மாட்டான்! அப்படியே ஜெபித்தாலும், ஓர் வழக்கமான "சடங்காச்சாரமாகவே" அதைச் செய்திடுவான். ஆம், **ஜெபிக்காத எந்த ஒரு கிறிஸ்தவ தலைவனும்** தேவனைச் சார்ந்து வாழுபவன் அல்ல! இந்த அவல நிலைக்கு காரணம் இவர்களுடைய "சுய - திருப்தியான" நிலையே ஆகும். துளியளவு சந்தேகத்திற்கும் இடமில்லாமல், இவர்கள் கனியற்ற மரங்களாயிருப்பார்கள்.... இவர் களுடைய சபைகள் வறண்ட பாலைவனங்களாய் இருக்கும்! இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் கூறிய வசனத்தில் குறிப்பிடப்

பட்டிருக்கும் நதி **"பரிசுத்தாவியே"** ஆகும். **எந்த உதவிக்கும் தன் ஆண்டவரை மாத்திரம் சார்ந்து கொள்கிறவனே. பரிசுத்தாவியினால் தொடர்ச்சியாய் நிரப்பப்படுவதற்கு தீராத தாகம் கொண்டிருப்பான்.**

சகரியா தீர்க்கதரிசி ஒருசமயம் "ஒரு பொன்குத்துவிளக்கின்" தரிசனத்தைப் பெற்றான். இந்த பொன்குத்துவிளக்கு சபைக்கு அடையாளமாய் இருக்கிறது (சக.4:2;வெளி.1:20). இந்த குத்துவிளக்கு இடைவிடாது எரிய வேண்டுமென்றால், அதில் எண்ணெய் எப்போது இருக்க வேண்டும் (சக.4:3). இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கென்றே குத்துவிளக்கின் இரு பக்கமும் இரண்டு "ஒலிவ மரங்கள்" நாட்டப்பட்டு இருந்தன. இவைகளில் ஒன்று கனியையும், மற்றொன்று வரங்களையும் சுட்டிக் காட்டும் அடையாளமாய் இருக்கிறது. ஆம், சபையானது ஆவிக்குரிய கனிகளினாலும், வரங்களினாலுமே கட்டப்படுகிறது. சகரியா தீர்க்கதரிசியிடம் தேவதூதன் தொடர்ந்து பேசும் போது, தேவனுடைய ஊழியங்கள் "(மனுஷீக) பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, பரிசுத்தாவியின் வல்லமையினாலேயே நிறைவேறும்" மேலும் "இவ்வித கர்த்தருடைய பணிக்கு இடையூராய் எழும்பிடும் **ஒவ்வொரு பர்வதமும்** சமபூமியாகத் தரைமட்டமாக்கப்படும்" (சக.4:6,7) என்றும் பேசினான்.

**பர்வதங்கள் ஒவ்வொன்றும் சமபூமியாகும் விந்தை :**

தேவனுடைய ஊழியத்தில் நாம் எத்தனையோ இடையூறுகளையும் தடைகளையும் சந்திக்க நேரிடும். தேவனுடைய சித்தம் ஒன்றையே முழு இருதயமாய் செய்திட நாடும் நாம், இது போன்ற 'பர்வதங்களைச்' சந்திப்பதற்கு தேவன் ஏன் அனுமதிக்கிறார்? என நாம் ஆச்சரியப்படக் கூடும். ஆம், இச்சமயங்களில் நாம் நம்முடைய விசுவாசத்தை அப்பியாசப்படுத்த வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார். அதன் மூலமாய் "தடையாக வரும் எல்லாப் பர்வதங்களையும் தவிடு பொடியாக்கிடும்" அவருடைய பராக்கிரம வல்லமையை நாம் அனுபவிக்கச் செய்கிறார்.

சுவிஷேத்தில், ஒரு சமயம் இயேசு தன்னுடைய சீஷர்களைக் கலிலேயா கடலைக்கடக்கும்படி துரிதப்படுத்தினார். சீஷர்கள் போக விரும்பாவிட்டாலும் இயேசுவோ அவர்களைப் போகும்படி கூறினார் (மத்.14:22). அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து சென்றபோது, ஓர் கடும்புயலைச் சந்தித்தார்கள். இதற்கு மாறாக, சீஷர்கள் அவருக்குக் கீழ்படியமறுத்து கடலைக்கடக்காமல் இருந்திருந்தால் இவ்வித கடும் புயலை சந்தித்திருக்கமாட்டார்கள்! ஆனால் அதே சமயம், அந்தோ! ஆண்டவருடைய வல்லமை "புயலை அடக்கிய" மகத்துவத்தையும் அனுபவித்திருக்க மாட்டார்கள்!! ஆம், நாம் புயல்களைச் சந்திக்கும் போதுதான் தேவனுடைய வல்லமையை அறிந்து அனுபவித்திட முடியும்.

கீழ்ப்படியாத ஒத்தவேஷம் தரிக்கும் கிறிஸ்தவர்கள் மாத்திரமே தங்கள் ஜீவியத்தில் சுமுகமான வழியைப் பெற்றிருக்கிறார்கள்! ஆனால்,

*இவர்கள் தேவனுடைய வல்லமையை ஒருக்காலும் அனுபவித்திட முடியாதே!! இயேசுவின் சீஷர்கள் "அநேகமான துன்பங்களுக்குள்" போக நேரிடலாம். ஆனால் "கர்த்தர் அவைகள் எல்லாவற்றிலும் நின்று அவர்களை விடுவிக்கும்" அவரது வல்லமையை இவர்கள் திட்ட வட்டமாய் ருசிப்பார்கள் (சங்.34:19).*

**எந்த மனிதனும் தீர்க்க முடியாத 'இமயம்' போன்ற பிரச்சனைகள் மத்தியிலும் தன்னுடைய ஜனங்கள் தன்மீது நம்பிக்கையாய் இருப்பதைக் கான்பதில் தேவன் மகிழ்ச்சியடைகிறார்!** *இது போன்ற சூழ்நிலைகளில்தான் "ஓர் சர்வவல்ல தேவனை விசுவாசிக்கிறேன்!" என்ற நம்முடைய விசுவாசத்தை நிரூபிக்கிறோம். ஆனால், இன்று அநேக கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் சொந்த 'கற்பனைக்குள் அடங்கும்' ஓர் தேவனையே விசுவாசிக்கிறபடியால், மனுஷர் மூலமாகவோ அல்லது பிசாசு மூலமாகவோ உருவாகும் புயல் களையும், மலைகளையும் சந்திக்கும் போது "* **இவர்களின்** *தேவன்" உதவி செய்திட சத்துவமற்றவராய் இருக்கிறார். இந்த தேவன் வேதாகமம் உயர்த்திக்காட்டும் "நம்முடைய தேவன்" அல்ல! ஆம், தங்கள் சொந்த கற்பனையில் இவர்கள் உருவாக்கி வைத்திருக்கும் "ஓர் தேவன்" ஓர் ஊமையான சிலையேயாகும்!! தேவன் என்ற 'எண்ணத்தில்' இக்கிறிஸ்தவர்கள் வடித்திருக்கும் சிலை புறஜாதிகள் வைத்திருக்கும் சிலையைக் காட்டிலும் மேலானதொன்றும் அல்ல!!*

*எந்த பிரச்சனையாகிலும் "இது மிகப்பெரிய பிரச்சனை " என நம்முடைய தேவனுக்கு உண்டோ? இல்லவே இல்லை! அவ்வாறு இருக்க மனுஷர்களோ அல்லது பிசாசுகளோ நமக்கு முன்பாக தோன்றச் செய்யும் மலைகளுக்கு நாம் ஏன் பயப்பட வேண்டும்?*

*கானான் தேசத்திலிருந்த அரக்கர்களின் உருவத்தைப்பற்றி இஸ்ரவேலர்கள் கேள்விப்பட்டவுடன் "இது போன்ற அரக்கர்களை எல்லாம் கையாளுவது* **எங்கள் தேவனுக்கு** *கடினம்!" என சிந்திக்கத் துவங்கி னார்கள். யார்* **இவர்களுடைய** *தேவன்? இவர்களை எகிப்திலிருந்து விடுதலை செய்தாரே அந்த தேவனா? இல்லை, இவர்கள் தங்களுடைய 'கற்பனையில்' கொண்டிருந்த ஓர் சத்துவமற்ற தேவனே இவர்களுடைய தேவனாகும். ஆம், இப்படிப்பட்டவர்களை வனாந்திரத்தில் 38 வருடங்கள் அலையும்படி தேவன் தந்த தண்டனை நமக்கு ஒன்றும் ஆச்சரியமாய் இல்லை (உபா2:14). இந்த இஸ்ரவேலர்கள் அவிசுவாசம் கொண்டிருந் தார்கள்! இவர்களுடைய அவிசுவாசம் தேவனை நிந்தித்து, அவர்களுக்காக எந்த கிரியையும் அவர் செய்ய முடியாதபடி அவருடைய கரத்தை கட்டிப்போட்டு விட்டது. இன்றைக்கும் தங்களுடைய அவிசுவாசத்தினால் தேவனுடைய கரத்தை கட்டிப்போடும் கிறிஸ்தவத் தலைவர்கள் ஏராளமாய் இருக்கிறார்கள்!!*

*ஆனால் தேவனோ இன்று யோசுவா, காலேப் போன்ற மனிதர்களையே நோக்கிக்கொண்டிருக்கிறார். ஏனென்றால் இவர்களே "தேவனால் கூடாதது ஒன்றுமில்லை!" என விசுவாசித்து அதைப் பெருமகிழ்வுடன் பிரகடனம் செய்கிறவர்கள்.*

*சாத்தானுக்கு விரோதமாக தேவன் எப்போதும் நம் பட்சத்திலேயே நிற்கிறார்! அவர் நமக்காக கிரியை செய்வதை "நம்முடைய அவிசுவாசம் ஒன்றைத்தவிர" வேறு எதுவும் தடை செய்யவே முடியாது. இவ்வுல கிலுள்ள 5500 மில்லியன் ஜனங்களும் கோடிக்கணக்கான பிசாசுகளின் கூட்டங்களும் சேர்ந்துவந்து நம்மை எதிர்த்தாலும்,* "**நாம் தேவனை நம்பியிருக்கிறபடியால்**" *நம் மீது தேவன் கொண்ட நோக்கத்தை இவர்கள் அத்தனை பேராலும் ஒன்றும் செய்திட முடியாது! ஆகவேதான் நமக்கு என்ன நடந்தாலும் நாம் ஒரு போதும் தைரியத்தை இழப்பதோ அல்லது எதையும் கைவிடுவதோ இல்லை! சாவே நமக்கு வந்தாலும், சரி! வல்ல தேவன் மீது கொண்ட நம்பிக்கையில்தான் நாம் சாவோம்! நம்முடைய சாவின் மூலமாகவும் அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறோம் என்பதே நம்முடைய பேரின்பமாய் இருக்கும்!!*

*"மலைகளை" நம்மை எதிர்த்துப் போராடும் பிசாசுகளின் வடிவத் திலோ அல்லது நம்மீது குற்றம் சுமத்தி எதிர்த்து நிற்கும் நூற்றுக்கணக்கான ஜனங்களின் வடிவத்திலோ நாம் சந்திக்கும்படி தேவன் அனுமதிப்பதின் நோக்கம் "நாம் பெலசாலிகளாய்" மாறும்படிக்கேயாகும். "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்?" (ரோம.8:13) என்பதே நம்முடைய முழக்கமாய் மாறவேண்டும்!*

*இவ்வாறு மெய்யாகவே நாம் மலைகளைச் சந்திக்கும்போது தான் சகரியா 4 : 6, 7 - ல் வாசித்த வசனங்கள் நம்முடைய வீட்டில் தொங்கும் "வசனபோர்டைக் காட்டிலும்" மிகுந்த அர்த்தமுள்ளதாய் மாறுகிறது. ஆம், வசனங்கள் இப்போது மெய்யாகவே நம்முடைய இரத்த ஓட்டத்தில் எழுதப்பட்டு விட்டன!!*

*இவ்வாறெல்லாம் நாம் வாழ்ந்து அனுபவித்திட, நம் முழு இருதயத்துடன் கீழ்க்கண்டவாறு சொல்லக் கூடியவர்களாய் இருக்க வேண்டும்: "ஆண்டவரே, இந்த சூழ்நிலையில் என்ன விலைக்கிரய மானலும் நான் உமக்காக நிற்க விரும்புகிறேன்.* **என்னுடைய எல்லா சக விசுவாசிகளும் பின்தங்கினாலும், என்னுடைய மனைவி எனக்கு எதிர்த்து நின்றாலும்,** *இந்த சூழ்நிலையிலும் நான் உமக்காக நின்றிட எனக்கு கிருபைதாரும். நான் முற்றிலும் உமக்குரியவன்! என்னுடையவைகள் எல்லாம் உம்முடையவைகள்! என்னுடைய முழு ஜீவிய கால சம்பாத்தியத் தையும் உம்முடைய ஊழியத்திற்காக செலவழித்திடவும் நான் ஆயத்தமாய் இருக்கிறேன்" எனக் கூற வேண்டும். இவ்வாறு முழு இருதயத்தோடு உங்களால் சொல்ல முடியுமென்றால், நாம் எங்கு சென்றாலும் நமக்கு முன்பாகத் தோன்றும் ஒவ்வொரு மலைகளையும் தேவன் சமபூமியாக்குவதை நம் கண்களால் காண முடியும்!!*

*நம்முடைய தேசத்தில் எத்தனை அரக்கர்கள் தோன்றினாலும் தோன்றட்டும்! அவர்கள் ஒவ்வொருவரையும் எதிர்த்து கையாண்டிட நம் தேவனால் முடியும்! ஆம், "நம்முடைய சத்துருக்களுக்கு* **அவர்** *சத்துருவாய் இருப்பார்" (யாத்.23:22). "நம்மோடு வழக்காடி சண்டை*

போடுகிறவர்களிடத்தில் **அவர்** வழக்காடி சண்டையிடுவார்'' (ஏசா.49:25) இதைத்தான், "உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்..... இது **அவரால்** உண்டாகும்'' என (ஏசாயா 54:17)-ல் தேவன் நமக்கு வாக்குதத்தமாய் தந்திருக்கிறார். ஆகவே, நாம் எப்போதெல்லாம் பொய்யாய் குற்றம் சாட்டப்படுகிறோமோ, அச்சமயங்களில் நம்மை நாமே நியாயப்படுத்தி நம்மைத் தற்காத்துக் கொள்ளவேண்டிய அவசியமேயில்லை. அதற்கு பதிலாக, "நியாயமாய்த் தீர்ப்புச் செய்பவருக்கு நம்மை ஒப்புவித்து'' (1பேதுரு2:23) நாம் அமைதியாய் இருந்து விட முடியும். இவ்வித உயர்ந்த ஆவிக்குரிய அந்தஸ்தின்படியே எந்த புதிய உடன்படிக்கை ஊழியனும் நடந்து கொள்வான்.

ஆம் தேவன் நம்மை ஒரு போதும் கைவிடமாட்டார் என்பதை **நாம் அறிந்திருக்கிறபடியால்,** அவரை நாம் சம்பூர்ணமாய் சார்ந்து கொள்ள முடிகிறது. நம் முன்னோடியாகிய இயேசுவுக்கு தேவன் என்ன செய்தாரோ, அதை நமக்கும் செய்வார் என **நமக்குத் தெரியும்.**

நம்முடைய இந்திய தேசத்தில் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்கு முனைந்திருக்கும் பிரயாசங்களில் நாங்கள் எதிர்கொண்ட அனுபவங்களே வலிமையான சாட்சியாய் ஓங்கிநிற்கிறது. கர்த்தருக்காக கொண்ட பிரயாசங்களில் எத்தனையோ மலைகளை எங்கள் ஜீவிய பாதைகளில் சந்தித்திருக்கிறோம் - 'மனுஷருடைய' 'பிசாசுடைய ' எதிர்ப்புகள், பொய்யான குற்றச்சாட்டுகள், தீமையான புறங்கூறுதல் "கள்ள சகோதர்களால் காட்டிக் கொடுக்கப்படுதல்'' (2கொரி.11:26) இன்னும் இதுபோன்ற 'மலைபோன்ற' பிரச்சனைகளை சந்தித்திருக் கிறோம். இந்த எல்லாச் சூழ்நிலைகளிலும் எங்களுடைய நியாயத்தை எடுத்துக்கூறி எங்களை ஒரு போதும் பாதுகாத்துக் கொள்ள முயலவில்லை. அதற்கு மாறாக, தேவனுக்கு முன்பாய் முகம்குப்புற விழுந்து, "ஆண்டவரே, இந்த ஊழியப்பணி எங்களுடையதல்ல, உம்முடையது! நாங்கள் உம்முடைய வர்கள்! நாங்கள் உம்முடைய வேலைக்காரர்கள்! ஆகவே, எங்கள் தேசத்தில் நீர் செய்த முடிக்கத் தீர்மானித்த கிரியைகளை எந்த மனுஷனும் அல்லது எந்த பிசாசும் தடை செய்ய முடியாது என்பதை உறுதியாய் விசுவாசிக்கிறோம். இப்போதும் கர்த்தாவே, இயேசுவின் நாமத்தில் "இந்த மலை'' எங்கள் பாதையிலிருந்து பெயர்ந்து தள்ளுண்டு போகும்படி கட்டளை யிடுகிறோம்!!'' எனக் கூறி ஜெபித்திருக்கிறோம். ஆம், இது எங்களுடைய சொந்த அனுபவ சாட்சியாய் இருக்கிறது.

இன்று, சுமார் 20 - ஆண்டுகளுக்குப் பின்பு எங்களுடைய வெற்றிக்களிப்பூட்டும் சாட்சியாதெனில், "எங்கள் வழியில் தோன்றிய ஒவ்வொரு மலையையும் தேவன் தள்ளுண்டு போகச் செய்திருக்கிறார்'' என்பதேயாகும். எங்களுடைய விரோதிகளுக்கு அவர் விரோதி யாயிருந்து, அவரோ எங்கள் பட்சமாய் நின்று, அவரே எங்கள் நியாயத்தை நிலைநிறுத்தி, எங்களை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

அவருடைய நாமத்திற்கே சகல மகிமையும் உண்டாகட்டும்! இவ்விதமாகவே எதிர்காலத்திலும் தொடர்ந்து செயல்படுவார் என்பதை நாங்கள் உறுதியாக அறிந்திருக்கிறோம்.

**விசுவாசிகள் கர்த்தரையே சார்ந்திருக்கும்படி நடத்துதல் :**

தேவனுடைய ஊழியர்களாகிய நாம், நம்முடைய விசுவாசிகள் பரிசுத்தாவியானவரைச் சார்ந்திருக்கும்படியே அவர்களை நடத்த வேண்டும்... ஆம் நம்மை சார்ந்து கொள்ளும்படியல்ல! அவர்கள் குழந்தைகளாய் இருந்தபோது எத்தனையோ சமயங்களில் நம்முடைய உதவி அவர்களுக்குத் தேவையாய் இருந்திருக்கலாம். ஆனால், சில மாதங்களுக்குப் பின்பு, அவர்கள் கர்த்தரை அறிந்தவுடன், இனி எந்த உதவிக்கும் கர்த்தரை மாத்திரமே அவர்கள் சார்ந்திருக்கும்படி கர்த்தரிடத்தில் அவர்களை நடத்த வேண்டும்.

குழந்தை பிறந்து ஒரு வருடத்திற்கு பின்பு அக்குழந்தை தன் சொந்தகாலில் நிற்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதே தேவன் பிள்ளைகளுக்கென்று நியமித்த நியமனமாகும். இதே போல்தான் நம்முடைய சபைகளிலும் இருக்க வேண்டும். அவர்கள் மறுபடியும் பிறந்து **ஒரு வருடத்திற்குள்,** கர்த்தரோடு நடக்கக் கற்றுக்கொண்டு பாவத்தை ஜெயிக்கிறவர்களாய் இருக்க வேண்டும். இந்த விசுவாசிகள் இப்போது **இரண்டுவயது** ஆனவுடன் தங்களுடைய சொந்தகாலில் உறுதியாய் நடக்கும் நிலைக்கு வந்து விடுவார்கள். இவ்வாறாகவே தேவனும், இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு வெளியே வந்து இரண்டு வருடங்களில் அவர்களை **"காதேஸ்பர்னயா"** என்ற இடத்திற்குக் கொண்டு வந்து வாக்குத்தத்த பூமிக்குள் பிரவேசிக்கும்படிச் சொன்னார். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லை. இவர்களுடைய கீழ்ப்படியாமை நம் யாவருக்கும் ஓர் எச்சரிக்கையாய் இருக்கும்படி திரும்பத்திரும்ப புதிய ஏற்பாட்டில் வலியுறுத்தப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம் (1கொரி.10; எபி.2).

விசுவாசிகளின் வாழ்க்கைக்குரிய தேவசித்தத்தை **நாம்** கண்டு பிடித்துச் சொல்லும்படி அவர்கள் நம்மிடத்தில் சார்ந்து கொள்வதை நாம் ஒரு போதும் அனுமதிக்கவே கூடாது. அவர்களை கர்த்தருக்கே ஒப்புவித்திட வேண்டும். அப்போது மாத்திரமே அவர்களால் ஓங்கி வளர்ந்திட முடியும்! இப்போது புதிய உடன்படிக்கையின்கீழ் தேவன் நமக்குத் தந்திருக்கும் வாக்குத்தத்தம் யாதெனில், **"சிறியவன் முதற்கொண்டு** பெரியவன் வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால் கர்த்தரை அறிந்து கொள் என்று ஒருவன் தன் அயலானுக்கு, ஒருவன் தன் சகோதரனுக்கு போதிக்க வேண்டுவதில்லை" என்பதேயாகும் (எபி.8:11).

"என் ஆடுகள் **என் சத்தத்திற்கு** கீழ்ப்படியும்" என இயேசு கூறினார். ஆம், நம்முடைய விசுவாசிகள் அவருடைய சத்தத்தை நம்மூலமாகவே எப்போதும் கேட்டுக்கொண்டிருக்கும் பரிதாப நிலை இருக்கக்கூடாது.

இந்த இடத்தில் அநேக கிறிஸ்தவத் தலைவர்கள் தேவனுடைய எதிர் பார்ப்பின்படி நடக்கத் தவறிவிட்டார்கள். இவர்கள் விசுவாசிகளை பழைய ஏற்பாட்டின் வாழ்க்கைக்கு நேராகவே நடத்தியிருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டில் ஜனங்கள் ஏதாவது தீர்மானம் எடுக்க வேண்டு மென்றால், "தாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்பதைச் சொல்லும்படி தங்கள் தலைவரையே சார்ந்து கொள்வார்கள்!

ஆனால், ஓர் புதிய உடன்படிக்கை ஊழியனோ தங்கள் விசுவாசி களை தலையாகிய கிறிஸ்துவோடு நேரடியான தொடர்பு கொள்ளும் படியே நடத்துவான். நாம் சபையை கிறிஸ்துவின் சரீரமாய்க் கட்டுவதற்கு இதைத் தவிர வேறுவழியே இல்லை.

**கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்கு அக்கறை வேண்டும் :**

சகரியா 4:9 - ல் சொல்லப்பட்டிருக்கும் **செருபாபேல்** ஆண்டவராகிய இயேசுவுக்கு மாதிரியாய் இருக்கிறார். இந்த வசனத்தில், ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்ட செருபாபேல் அதை முடிக்கவும் செய்வார் என வாசிக்கிறோம். ஆண்டவர் தன்னுடைய ஊழியங்கள் எதையும் ஆரம்பித்து விட்டு பின்பு அதை நிறைவேற்றி முடிக்காமல் விட்டுவிடுபவர் அல்ல.

ஒரு பட்டணத்தில், ஆண்டவர் தன்னுடைய நாமத்திற்கென்று தூய சாட்சியை கட்டும்படி இரண்டு சீஷர்களைத் தெரிந்து கொண்டிருந்தால், அவர் கிரியைசெய்யும்படி ஏற்கனவே தன்னுடைய அஸ்திபாரத்தை அவர்களிடம் போட்டுவிட்டார்! **இந்த இருவரும் அஸ்திபாரமாய் இருக்கிறபடியால் தங்களுக்குள் எந்த இடைவெளியும் ஏற்பட்டுவிடாதபடி அல்லது அஸ்திபாரத்தில் வெடிப்பு ஏற்படாது இருக்கும்படி கவனமாய் இருக்க வேண்டும்.** இவ்வாறு இவர்கள் தங்களுக்குள் ஐக்கியத்தைக் கட்டிகாத்துக்கொள்ள உண்மை உள்ளவர்களாய் இருந்தால், ஆண்டவர் தன் பணியை நிச்சயமாய் நிறைவேற்றிமுடித்து விடுவார். ஆம், அவர்களுடைய ஸ்தலத்தில், ஆண்டவர் தன்னுடைய சபையை நிச்சயமாய் கட்டிவிடுவார்!

உங்கள் சொந்த ஊரில் கிறிஸ்துவின் சரீரம் கட்டப்படவேண்டுமே என உங்கள் உள்ளம் தவிக்குமென்றால், தேவனுடைய இருதயம் உங்களைக்காட்டிலும் அதிகமாய் தவிக்கும் என்ற உண்மையை அறிந்து கொள்ளுங்கள். **சபையைக் கட்ட வேண்டும் என்ற உங்களுடைய அக்கறை, தேவனுடைய அக்கறையோடு ஒப்பிடும்போது ஆழ்ந்த பரந்த சமுத்திரத்தில் அது "ஒரு துளியேயாகும்!"** ஏனெனில், இந்தப் பாரத்தை அவரே உங்கள் இருதயத்தில் ஒரு சிறு விதைக்கொப்பாய் விதைத்தார்! ஆகவே "இது எனக்குச் சொந்தமான பாரம்" என நீங்கள் எண்ணுவதெல்லாம் அகங்காரமான பெருமையேயாகும். இப்போது நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் தேவன் விதைத்த அந்த விதைக்கு நீர்ப்பாய்ச்சு வதேயாகும். அவர் அதை விளைவிக்கச் செய்துவிடுவார்!

"சபையைக்கட்டுவதை" **தேவனுடைய ஊழியமென** நீங்கள் முதலாவதாகக் கருதாவிட்டால், ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு வரும் போது தேவன்

உங்களுக்கு உதவி செய்வாரோ, மாட்டாரோ என எண்ணத்துவங்கி விடுவீர்கள். இவ்வித எண்ணம் கொண்ட நீங்கள் அன்று சீஷர்கள் கேட்டது போலவே, "ஆண்டவரே நாங்கள் மடிந்து போகிறது **உமக்குக் கவலையில்லையா?**" என்றும் கேட்டு விடுவீர்கள்! (மாற்கு.4:38).

"நாம்தான் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுகிறோம்" என்ற எண்ணத்திற்கு பெருமையே காரணமாகும். இந்த சிந்தையே நம்மை அவிசுவாசம் கொள்ளச் செய்கிறது. ஆம், பெருமைக்கும், அவிசுவாசத் திற்கும் நெருங்கிய தொடர்பு எப்போதும் உண்டு!

விசுவாசம்கொண்ட மனிதர்களுக்கு நேர் எதிரிடையானவர்கள் அவிசுவாசம் கொண்ட மனிதர்கள் அல்ல... மாறாக, பெருமை கொண்ட மனிதர்களேயாவர் என (ஆபகூக் 2:5) தெளிவாய் எடுத்துக் கூறுகிறது. யோவான்.5:44-ல், "மனுஷரால் வரும் மகிமையை அதாவது **பெருமையைத்** தேடும் நீங்கள் எப்படி **விசுவாசிப்பீர்கள்?**" என இயேசு மிகத்தெளிவாய் கேட்டார். விசுவாசம் கொள்வதற்கு பெருமையே நம்மைத் தடை செய்கிறது. இதிலிருந்து, அவிசுவாசம் பெருமையிலிருந்தே தோன்றுகிறது. என்பதை நாம் தெளிவாய்க் காண்கிறோம். பெருமையான ஜனங்கள் தேவனைச் சார்ந்துகொள்ள வேண்டிய தேவையற்றவர்களாய் இருக்கிறார்கள். ஆகவேதான் அவர்களிடத்தில் விசுவாசம் இருப்பதில்லை!

இதைப் போலவே **தாழ்மைக்கும்,** விசுவாசத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை நாம் காண்கிறோம். தன்னைத் தானே சார்ந்து கொள்ளாத ஒருவனே தாழ்மையுள்ள மனிதனாவான். இந்தத் தாழ்மையான மனிதன், **தேவனை மாத்திரமே** சார்ந்து ஜீவிப்பான்.

**நம்மில் நாம் எவ்வித நம்பிக்கையும் வைக்காதிருக்க வேண்டும் :**

பழைய உடன்படிக்கையின் கீழ் ஒரு இஸ்ரவேலனின் பிரதான அடையாளமாய் இருப்பது "விருத்தசேதனமாகும்" இவ்வாறு விருத்த சேதனம் பெறாத யாராய் இருந்தாலும் அவர்கள் தேவஜனத்தோடு இராதபடிக்கு அறுப்புண்டு போவார்கள் (ஆதி.17:4).

புதிய உடன்படிக்கையிலோ விருத்தசேதனத்தை குறித்த ஆவிக்குரிய விளக்கம், "தன் மாமிசத்தின் மீது நம்பிக்கை வைக்காதிருப்பதேயாகும்" (பிலிப்பியர்.3:3).

தன்மீது எவ்வித நம்பிக்கையும் வைக்காத ஒருவனையே தேவன் தன் வல்ல கரத்தினால் ஆதரித்து தாங்கி, தன்னுடைய ஆவியினால் இடை விடாது அபிஷேகிக்கிறார். இயேசு கிறிஸ்துவைக் குறித்து, "இதோ, நான் ஆதரிக்க (தாங்குகிற) என் தாசன் அல்லது அடிமை... என் ஆவியை அவர் மேல் அமரப் பண்ணினேன்" (ஏசா.4:21; மத். 12:18) என தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்ட வசனத்தைக் கவனித்துப் பாருங்கள்.

ஓர் புதிய உடன்படிக்கையின் ஊழியனாய் இருப்பதற்கு பரிசுத்தா வியின் நிறைவு பிரதான தேவையாய் இருக்கிறது. நாம் மேற்கண்ட வசனத்தின் படி தேவன் யாரைத் தாங்குகிறாரோ அவர்களுக்கே தன்னுடைய அபிஷேகத்தைத் தருகிறார்.

**ஆம், தேவன் யாரைத் தாங்குவார்? யாதொரு உதவியற்ற நிலையில் தன்னைச் சார்ந்து கொள்பவர்களையே அவர் தாங்குகிறார்!**

*நம்மிலே நாம் பலவீனர்களாகாத பட்சத்தில், தேவன் மீது கொண்டிருக்கும் விசுவாசத்தை நாம் ஒருக்காலும் அப்பியாசப் படுத்தவே முடியாது. இல்லாவிட்டால் நம்முடைய விசுவாசம் மாம்ச புயத்தை சார்ந்ததாய் மாறிவிடும். இந்த "மாம்சபுயம்" நம் சொந்த புத்திசாலித்தனமோ, திறமையோ, பணமோ அல்லது நாம் மிகுந்த நம்பிக்கையோடு காத்திருக்கும் சிலருடைய உதவியாகவோ இருக்கக்கூடும்!*

*இதை நான் கீழ்க்கண்டவாறு விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். ஐசுவரியம் உள்ள ஒரு சகோதரனுக்கும், இன்னொரு ஏழை சகோதரனுக்கும் திடீரென்று பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால், யார் தேவனை அதிகமாய் நம்பி சார்ந்து கொள்வார்கள்? அந்த ஏழை சகோதரனே அவ்வாறு தேவனை சார்ந்து கொள்வான்! ஆனால் ஐசுவரியவனுக்கோ போதுமான பணம் இன்னும் அவனிடத்தில் இருக்கிறது. ஆகவே ஜெபிப்பது கூட அவனுக்குத் தேவையாய் தோன்றுவதில்லை. ஆனால் இந்த ஏழை, விசுவாசம் நிறைந்த சகோதரனாய் இருந்தால், அவ்வேளையில் தேவனை நோக்கி முறையிட்டு ஜெபிப்பான். ஆம், அவன் தேவனிடம் ஒரு போதும் ஏமாந்து போகவே மாட்டான்!* **நாம் சார்ந்து கொள்வதற்கென மனுஷீக மூலதனங்கள் இல்லாதிருக்கும் நிலையில்தான்,** *நாம் விசுவாசத்தில் ஜீவிப்பதற்கு துரிதமாய் கற்றுக்கொள்ள முடியும்.*

*தங்களை "முழுநேரஊழியக்காரர்கள்" என கூறிக்கொள்ளும் அநேகர், தாங்கள் விசுவாசத்தில் ஜீவிப்பதாக, "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (ரோ1:17) வசனத்தை உரிமை கொண்டாடுவார்கள். ஆனால் இவர்களில் பெரும்பாலானோர் கணிசமான அளவு மனுஷீக மூலதனங்களையே சார்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் தங்களுக்குப் பணம் அனுப்பும் சகோதரர்களை இவர்கள் ஆயத்தம் செய்து வைத்திருப்பார்கள். ஆம், தேவன் ஒருவேளை இவர்களைக் கைவிட்டாலும் இவர்களைக் காத்துக் கொள்ள இந்த மனுஷர் துணை வேண்டுமே! அதற்காகத்தான்.*

*"விசுவாசம் கேள்வியினாலே வரும்" (ரோமர்.10:17). தேவன் சொல்வதை நாம் கேட்கும்பொழுதெல்லாம் நம் இருதயத்தில் விசுவாசம் பிறக்கிறது. தேவன் தம்முடைய வேதவாக்கியங்களின் மூலமாகவும், தம்முடைய ஆவியின் மூலமாகவும் நம்முடன் பேசுகிறார். தேவன் சொல்வதைக் கேட்க நாம் மனதில்லாதவர்களாய் இருந்தால் நமக்கு ஒருக்காலும் விசுவாசம் இருக்காது. நாம் எந்த வேலை செய்து கொண்டிருந்தாலும் நம்முடைய ஆவிக்குரிய 'உணர்வு கொம்புகள்' அந்த நாள் முழுவதும் தேவன் நம்மோடு என்ன பேசுகிறார் என்பதைக் கவனிப்பதற்கு தூண்டப் பட்ட நிலையில் இருக்க வேண்டும்.*

*தேவன் சொல்வதை எப்போதும் கவனித்து கேட்க வேண்டியது, ஓர் தேவ ஊழியனுக்குரிய முக்கியமான பண்புகளில் ஒன்றாகும். பரிசுத்தாவியின் உணர்த்துதலுக்கு* **ஒவ்வொருநாளும்** *செவிகொடுத்து இயேசு கீழ்படிந்து வாழ்ந்தார் (ஏசாயா.50:4). இயேசு தன்மீது எவ்வித நம்பிக்கையும் கொண்டிருக்கவில்லை என்பதை இவ்வசனம் நிரூபிக்கிறது. அதாவது, எவை நித்தியத்திற்குரிய பயனுடையவைகள், எவைகள் நித்திய பலனுக்குரியவைகளல்ல என்பவைகளையெல்லாம் பிதா மாத்திரமே தனக்கு காண்பிக்க முடியும் என்பதை இயேசு நன்கறிந்திருந்தார். ஆனால் நாமோ நமக்கிருக்கும் இவ்வுலக அவசரத்தில் தேவனிடம் சென்று கவனித்து கேட்பதற்கு நேரமில்லாதவர்களாய் மாறிவிட்ட படியால், நித்திய பலனை ஈட்டித்தராத கிரியைகளில் ஈடுபட்டு நம்முடைய அதிகமான நேரங்களை வீணாக்கிப் போடுகிறோம்!*

*நாம் அவருக்குள் எவ்வாறு ஜீவிப்பது என்பதை நமக்கு கற்றுத்தர தேவன் ஆர்வம் கொண்டிருக்கிறார். இதனிமித்தமே, "***விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்***" என்ற வசனம் வேதாகமத்தில் நான்கு முறை எழுதப்பட்டிருக்கிறது. இவ்வசனம் முழுநேர ஊழியர்களுக்காக அல்ல..... மாறாக ஒவ்வொரு விசுவாசிகளுக்காகவும் கூறப்பட்ட வசன மேயாகும். இதனிமித்தமே தேவன் நமக்கு வெவ்வேறான சூழ்நிலை களை ஏற்படுத்தி, நாம் தேவ நடத்துதலைப்பெறும்படி அவரிடம் திரும்பத் திரும்ப வரும்படியானதோர் நிலையை ஏற்படுத்துகிறார். நாம் மெய்யாகவே தேவனுக்கான மேலானவைகளைத் தேடுவதில் நாட்டம் கொண்டவர்களாய் இருந்தால், தேவன் நம்மை கொஞ்சம் கொஞ்சமாய் மனுஷரைச் சார்ந்திருக்கும் ஜீவியத்திலிருந்து நம்மை மீட்டு, நம்முடைய பொருளாதார தேவைகளோ அல்லது சரீர பிரமாரமான தேவைகளோ அல்லது எந்த தேவைகளாய் இருந்தாலும் நாம் தேவனை மாத்திரமே சார்ந்திருக்கக்கூடிய மேன்மையான இடத்திற்கு நம்மைக் கொண்டுவந்து விடுவார்!*

*யூதாவின் ராஜாவாகிய* **ஆசா** *வியாதிப்பட்டிருந்தான் என 2 நாளாகமம் 16:12-ம் வசனத்தில் வாசிக்கிறோம். ஒரு ராஜா வியாதிப் பட்டிருந்தால் தனக்கு வைத்தியம் பார்ப்பதற்கென சிறந்த டாக்டர்களை வைத்துக் கொள்ள முடியும். இருப்பினும்,* **ஆசா** *மரித்தான்! ஏன்? ஏனென்றால், "அவன் நோவு மிகவும் உக்கிரமாய் இருந்தது. அவன் தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல, பரிகாரிகளையே* (DOCTOR) *தேடினான்" (வசனம்.12) என்பதே காரணமாகும்!*

*இஸ்ரவேல் தேசத்தில் ஓர் ஏழை வியாதிப்பட்டிருந்தால் அவன் கர்த்தரை மாத்திரமே தேடியிருந்திருப்பான். ஆண்டவரும் அவனை சுகப்படுத்தியிருப்பார். இவ்வாறு நம்மிலே நாம் பெலஹீனமாய் மனுஷீக உதவிகள் நமக்கு குறைந்த அளவில் இருக்கும்போதுதான் நாம் கர்த்தரைத் தேடுகிறவர்களாய் இருப்போம்!*

*நம் கிறிஸ்தவ ஜீவியத்தில் விசுவாசம் மிக முக்கியமான ஒன்றாய் காணப்படுகிறது. எனவேதான், "விசுவாசமில்லாமல் தேவனுக்கு*

பிரியமாயிருப்பது கூடாத காரியம்'' (எபி.11:6) என வேதம் கூறுகிறது. இதற்கு அர்த்தம் யாதெனில், நாம் எவ்வளவுதான் பரிசுத்தத்திலும் நற்குணத்திலும் ஜீவித்து, ஒருபோதும் புறங்கூறாமலும் அல்லது யாரையும் ஏமாற்றாமலும் அல்லது பொய்யே சொல்லாமலும், மேலும் நம்முடைய பெரும்பாலான எல்லாப் பணத்தையும் தேவனுடைய ஊழியங்களுக்குக் கொடுத்தாலும்... நாம் விசுவாசத்தில் ஜீவிக்கவில்லையென்றால் (நம்மில் நாம் நம்பிக்கை வைக்காமல் உதவியற்றதோர் நிலையில் தேவனையே சார்ந்து ஜீவிக்கவில்லையென்றால்) நாம் ஒருக்காலும் தேவனைப் பிரியப்படுத்தவே முடியாது!

புதிய உடன்படிக்கையின் ஊழியர்களாகிய நாம் சபையில் உள்ள ஜனங்களுக்கு வெறும் வேத அறிவை மாத்திரமல்ல, நம்முடைய விசுவாசத்தையே பகிர்ந்தளிக்கிறவர்களாயிருக்க வேண்டும். எவ்வித சூழ்நிலைகளிலும் ஆண்டவரை எவ்வாறு சார்ந்துகொள்ள வேண்டும் என்பதை நம்முடைய சொந்த அனுபவத்திலிருந்து நாம் அவர்களுக்கு போதிக்கிறவர்களாய் இருக்க வேண்டும்!

**மனுஷீக வல்லமை, எலக்ட்ரானிக் சாதன வல்லமை, பணத்தின் வல்லமை :**

தேவனுடைய ஊழியர்களாய் இருக்கிற நாம் அறிந்து கொள்ள வேண்டிய மற்றொரு முக்கியமான பகுதி நம்மிடமுள்ள ஆத்மீக (மனுஷீக) வல்லமைக்கும், பரிசுத்தாவியின் வல்லமைக்கும் உள்ள வித்தியாசத்தைக் கண்டறிவதேயாகும்.

பேதுரு ஒரு தடவை "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து!'' என ஆண்டவரிடம் கூறினான். அப்போது இயேசு உடனடியாக, "மாம்சமும் இரத்தமும் (மனுஷீகம்) இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை'' என பதிலுரைத்தார். அதாவது இந்த ஆவிக்குரிய சத்தியத்தை பேதுரு தன்னுடைய மனுஷீக புத்திசாலித்தனமும் அறிவுமாகிய தன்னுடைய ஆத்மீக வல்லமையைக் கொண்டு கண்டுபிடிக்கவில்லை என்பதுதான்.

நம்முடைய ஆத்துமா அல்லது நம்முடைய சொந்த மனது வெளிப்பாட்டை ஒருக்காலும் தரவேமுடியாது. நாம் அறிவுக்கூர்மை கொண்டவர்களாய் இருந்தால் வேதாகமத்திலிருந்து "சாமர்த்தியமான கருத்துக்களைப்'' பெற்றிடக்கூடும். இந்த நம்முடைய சாமர்த்தியமான கருத்துக்களை "பகுத்தறியும் திறனற்ற சபை மக்களிடம்'' பகிர்ந்து கொண்டு அவர்களைக் கவர்ச்சித்திட முடியும். ஆனால், மனுஷீக (ஆத்மீக) சாமார்த்திய கருத்துக்களுக்கும், திவ்விய வெளிப்பாட்டிற்கும், பூமிக்கும் வானத்திற்கும் எவ்வளவுதூரமோ அவ்வளவு தூரம் ஒன்றுக் கொன்று முரணானதாகும்!

தேவனுடைய வார்த்தையை பவுல் பிரசங்கித்தபோது "தன்னுடைய சொந்த ஞானத்தை'' உபயோகித்திடக் கூடாதே என பயந்திருந்தபடியால், கொரிந்தியர்களிடம் "பயத்தோடும் நடுக்கத்தோடும்'' தான் பிரசங்கித்ததாக கூறினார். ஏனென்றால் கொரிந்தியர் தங்களுடைய விசுவாசத்தை "தேவனுடைய பெலத்தில்'' இல்லாமல், தன்னுடைய

ஞானத்தில் வைத்து விடக்கூடாது என்பதே அவருடைய அக்கறை யாயிருந்தது (1கொரிந்தியர்.2:1-5).

நாம் மனுஷீகமாய் சொல்ல வேண்டுமென்றால், பவுல் வேத வாக்கியங்களை நன்கு கற்றுத்தேர்ந்தவராய் இருந்தபடியால், அவர் யூதர்களிடம் ஊழியம் செய்வதே மிகவும் பொருத்தாமானதாயிருக்கும். அதேபோல, பேதுரு புறஜாதிகளிடத்தில் ஊழியம் செய்வது அவருக்குப் பொருந்தமாயிருக்கும். இருப்பினும், தேவனோ இவர்களுக்கு நேர் மாறான ஊழியங்களையே தந்தார் (கலா.2:8). ஆம், இவர்கள் தங்கள் சொந்த திறமைகளைச் சார்ந்திருக்காமல் பரிசுத்தாவியை சார்ந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே அப்படிச்செய்தார்.

பொதுவாய், நம்முடைய சொந்த சாமர்த்தியமான கருத்துக்களை நாம் பிரசங்கிப்பதின் நோக்கம் “ஜனங்களிடத்தில் புகழ்ச்சியைப் பெற வேண்டும்” என்பதாகவே இருக்கிறது. ஆனால் “திவ்விய வெளிப்பாடோ” இதற்கு மாறாக, நம்மை ‘வெறுமையாக்கி’ தேவனுக்கு முன்பாக முகம் குப்புற விழுந்திருக்கும்படி நடத்துகிறது! **நம்முடைய சொந்த ஞானத்தினால் ஜனங்களை கவர்ச்சித்து விடலாம். ஆனால் “திவ்விய வெளிப்பாடு” இருந்தால் மாத்திரமே, நாம் ஜனங்களுக்கு உதவிசெய்திட முடியும்.**

தேவனுடைய மகிமையைக் குறித்த வெளிப்பாட்டை ஏசாயா பெற்றபோது “அந்த தரிசனம்” தன்னுடைய அடுத்த பிரசங்கத்துக்கு கிடைத்து விட்ட “குறிப்பு” என அவர் சிந்திக்கவில்லை! ஆம், அவர் முகம்குப்புற விழுந்து தேவனைப் பணிந்து தொழுது கொண்டார். இதே நிலைதான் பத்மு தீவுக்குச் சென்ற யோவானுக்கும் நிகழ்ந்தது. இவ்வாறு இவர்கள் இருவரும் **ஆண்டவருக்கு முன்பாக முகம்குப்புற விழுந்த** பிறகுதான், தேவன் தன்னுடைய செய்தியை ஜனங்களிடத்தில் போய் பிரசங்கிக்கும்படி அவர்களிடம் சொன்னார். ஆம், நாம் அவருக்கு ஊழியம் செய்வதற்கு முன்பாக கர்த்தர் சமூகத்தில் நெருங்கி அவரைத் தொழுது கொள்கிறவர்களாய் இருக்க வேண்டும்!

இன்றோ, மனுஷீக ஆத்தும வல்லமையை உபயோகித்து ஊழியம் செய்யும் பிரசங்கிகளே ஏராளமாய் இருக்கிறார்கள். இவர்கள் சுபாவமாய் பெற்றிருக்கும் ஒருவித “மயக்கும்-வல்லமையின் மூலமாய்” (Hypnotic power) ஜனங்களை “சடிதியாய்” கீழே விழும்படிச் செய்கிறார்கள்! தங்கள் சுய நினைவை இழந்த நிலையில் அவர்களைப் “**பரிசுத்த – சிரிப்பு**” சிரிக்க வைக்கவும் செய்கிறார்கள்!! தங்கள் ஆத்மீக வல்லமையை உபயோகித்து ஜனங்களை ஈர்த்துக் கொண்ட இச்சரியான நேரத்தில், பிரசங்கிகளாகிய தங்களுக்குப் பணத்தை வாரிக்கொடுக்கும்படித் தூண்டி விடுகிறார்கள்!!! மேலும், இது போன்ற கூட்டங்களில் “மனநிலை பாதிக்கப்பட்டதினிமித்தம்” ஏற்படும் பல்வேறு வியாதிகள் சுகமாவதையும் நாம் காண முடியும்! இவ்வித வல்லமையான செய்கைகள் யாவும் மனுஷீக - ஆத்தும வல்லமையினால் செய்யப்படுபவைகளேயாகும். ஆனால் துயரம் யாதெனில், தங்கள் மனுஷீக ஆத்தும-வல்லமையை

“இயேசுவின் நாமத்தில்” பயன்படுத்துகிற படியால், இன்று ஏராளமான விசுவாசிகள் வஞ்சிக்கப்பட்டு விட்டார்கள்! தேவனுடைய ஊழியர்களாகிய நாமோ இந்த “போலிகளின்” முகத்திரையைக் கிழித்து வெளியரங்கப் படுத்திட எப்போதும் தைரியம் கொண்டவர்களாய் இருக்க வேண்டும்.

இன்று கிறிஸ்தவ தலைவர்களில் அநேகர் தங்களைப் பின் தொடரும் ஜனங்களிடத்தில், ஒருவித கவர்ச்சிக்கும் தங்களுடைய ஆள்தத்துவத்தைப் பயன்படுத்தி, அவர்களின்மேல் அதிகாரம் செலுத்தவும் தங்கள்பால் ஈர்த்துக்கொள்ளவும் செய்கிறார்கள். இவையாவும், முழுக்க முழுக்க மனுஷீக - ஆத்தும வல்லமையே ஆகும்! இதுபோன்ற தலைவர்களை ஜனங்கள் வியப்புடன் பார்த்து அவர் களுக்கு “தேவனுடைய மிக உயர்ந்த பரிசுத்தவான்கள்” என்ற மதிப்பையும் மரியாதையையும் மதியீனமாய் தந்துவிடுகிறார்கள். இந்த தலைவர்களும் இவ்வித புகழ் மாலைகளைத் தங்களைப் பின்பற்றுவோர் களிடமிருந்து பெற்றுக்கொள்ள துடியாய் துடித்து நிற்கிறார்கள்!!

“இசையும்” (Music) தன்னகத்தே வலிமையான ஆத்தும - வல்லமையைப் பெற்றிருக்கிறது. இசை நம்முடைய உணர்ச்சிப் பிரவாகத்தை தூண்டிவிட முடியும். ஆனால் இதை “பரிசுத்தாவியின் வல்லமை” என எண்ணி நாம் ஒருக்காலும் வஞ்சிக்கப்பட்டு விடக் கூடாது. **நல்ல இசைத் திறமையை உபயோகித்து நம்முடைய சபைக்கு ஏராளமான ஜனங்களை ஈர்த்து கூட்டிச்சேர்த்து விட முடியும்! ஆனால் இவ்வாறு நாம் கூட்டிச் சேர்த்த ஜனங்கள் எப்படிப்பட்டவர்கள்?** தங்கள் ஆவிக்குரிய தரித்திரத்தை உணர்ந்து, தேவபக்தி நிறைந்த வாழ்க்கைக்காக பரம உதவியை தவிப்புடன் நாடியவர்கள் அல்ல! பின் யார் இவர்கள்? இக்காலத்து நாகரீகவான்களும், தங்கள் சிந்தையில் அகந்தை கொண்டவர்களும், இசையின் ரசிகர்களுமேயாவார்கள்!! ஆ, இது கொடிய துயரம்!!

ஒரு ஞாயிற்றுக்கிழமை, பெங்களூரில் உள்ள எங்கள் சபைக் கூட்டத்திற்கு இசையில் வரம் பெற்ற தம்பதிகள் வந்திருந்தார்கள். எங்கள் சபையில் பாடிய “இசையின் சுருதி” மிகவும் தாழ்வாக இருக்கிறதென அவர்கள் கண்டபடியால், அடுத்து அவர்கள் கூட்டத்திற்கு வரவேயில்லை! இவ்வாறு, ஓர் தேவபக்தியுள்ள சபைக்கு பதிலாய் “ஓர் இசை - வெள்ளம் பாயும்” சபையை நாடும் ஜனங்களிடத்திலிருந்து நாங்கள் பாதுகாக்கப் பட்டிருப்பதை அறிந்து, நாங்கள் ஆண்டவருக்கு நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம்.

சபைக்குத் தேவையாய் இருப்பது “ஓர் திறமையான இசைக்குழு அல்ல!” ஆம், பரிசுத்தாவியின் வல்லமையே இன்று சபையின் தேவை!! அன்று பெந்தேகொஸ்தே நாளில் “யமாகா - ஆர்கனையும் “ட்ரம் - செட்டையும் ” வைத்து பேதுரு ஜனக்கூட்டத்தைக் கூட்டவில்லை! மாறாக, தேவனுடைய அபிஷேகத்தின் வல்லமையை வைத்தே அன்று அந்த ஜனங்கள் கூட்டப்பட்டார்கள். காரியம் இவ்வாறாக இருப்பதால், **இந்த அபிஷேகத்தை ஜனங்கள் இழந்தவுடன்,** அந்த அபிஷேகத்திற்குப்

*பதிலாக இன்னிசையையும், சிரிக்க வைக்கும் பிரசங்கங்களையும், கவர்ச்சியான கட்டிடங்களையும்..... வைத்து "தங்கள் வெறுமையை" நிறைத்துவிடப் பார்க்கிறார்கள்!*

*"எலக்ட்ரானிக் - உபகரணங்களும்" நமக்கு ஓர் கண்ணியாய் வர முடியும். அபிஷேகம் நிறைந்த தேவனுடைய ஊழியர்களின் "வேத - பாட ஒளிநாடாக்கள்" நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு நிச்சயமாய் உதவிட முடியும். ஆனால், தேவன் நம்மோடு பேசும்படி பரிசுத்தாவியைச் சார்ந்திருப்பதற்கு பதிலாய், இவ்வித ஒளிநாடாக்களை சார்ந்து கொள்ளா திருக்க நாம் கவனமாய் இருக்க வேண்டும். இன்று அப்போஸ்தலனாகிய பவுல் பேசிய ஒளிநாடாக்கள் நம்மிடத்தில் இருந்தால் கூட,* **அவைகளை வைத்து** *நாம் கிறிஸ்துவின் சரீரத்தை ஒருக்காலும் கட்டவே முடியாது.*

*அடுத்ததாக "***பணம்***" இவ்வுலகத்தில் அதிக வல்லமை கொண்டிருக்கிறது. ஆகவே, நாம் மிக இலகுவாய் பணத்தைச் சார்ந்து கொள்ள முடியும்! கிட்டத்தட்ட இன்று நாம் காணும் ஒவ்வொரு கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் தங்கள் பணத் தேவைகளை பிரசங்கிக்கிறார்கள். தங்கள் தேவையை வெளிப்படுத்தும் சுற்றறிக்கைக் கடிதங்களையும், பத்திரிக்கை களையும் அனுப்புகிறார்கள். எதற்காக? "சர்வவல்லப் பணத்தை" பேதையான இந்த ஜனங்களிடமிருந்து, உண்மையான..... அதே சமயம் எளிதில் ஏமாந்து போகும் மேற்கத்திய நாட்டு விசுவாசிகளிடமிருந்தும் வாரிக் கொள்ளும்படியே இவ்வாறு செய்கிறார்கள்.*

*ஆனால் ஆதி அப்போஸ்தலர்களோ தங்கள் விசுவாசிகளிடம் தங்களுக்காகவோ அல்லது தங்கள் ஊழியத்திற்காகவோ ஒரு தடவை கூட பணம் கேட்டு விண்ணப்பம் செய்ததே இல்லை. ஆனால் அதற்கு மாறாக "தரித்தரை நினைத்துக் கொள்ளும்படிக்கு" மாத்திரமே உற்சாகப் படுத்தினார்கள் (கலா.2:10). மேலும், குறைச்சலிலுள்ள பரிசுத்தவான்களுக்கு உதவும்படியும் கூறினார்கள் (2கொரி. 8:9)* **ஆனால் அந்தோ! அன்று அப்போஸ்தலர்களால் ஒரு தடவை கூட (பணத்தேவையைப்பற்றி) பேசப்படாத ஒன்று. இன்று கிறிஸ்தவ ஊழியங்களில் "எல்லா சமயங்களிலும்" பேசப்படுகிறது!**

*தேவன் ஒரு சமயம் சொன்ன வாக்கியத்தைக் கேளுங்கள், "***நான் பசியாய் இருந்தால் உனக்குச் சொல்லேன்!*** பூமியும் அதன் நிறைவும் என்னுடையவைகளே!!" என்றார் (சங்.50:12).*

*இப்பேற்பட்ட தேவனுக்கு ஊழியக்காரர்களாய் இருக்கும் நம்முடைய நிலை என்ன? நமக்கு உணவோ அல்லது பணமோ தேவையாய் இருக்கும்போது நாம் என்ன செய்கிறோம்? நம்முடைய பரமதகப்ப னிடத்தில் மாத்திரமே அத்தேவைகளைச் சொல்லு கிறோமா? அல்லது மனுஷரிடத்தில் சொல்லுகிறோமா? நாம் மெய்யாகவே தேவனால் அழைக்கப்பட்டவர்களாய் இருந்தால், இப்பூமிக்குரிய தேவைகள் யாதொன்றிலும் குறைவுபட்டிருக்கவே மாட்டோம். ஆம், தேவனிடத்தில் பணத்தட்டுப்பாடே கிடையாது! அவருக்குத் 'தட்டுப்பாடாய்' இருப்ப தெல்லாம் நொறுங்குண்ட, தாழ்மையான, உண்மையும் நம்பிக்கையும்*

*நிறைந்த ஊழியர்களே இன்று அவருக்குத் தட்டுப்படாய் இருக்கிறது!!*

*ஆம், நொறுங்குண்ட தாழ்மையான ஜனங்களைக் கண்டு அவர்களைப் பரிசுத்தாவியின் வல்லமையினால் இடைகட்டி, தன் சபையைக் கட்டும்படி பயன்படுத்திடவே தேவன் தவிப்புடன் இருக்கிறார்.*

*நம்முடைய தேவன் வைராக்கியம் நிறைந்தவர்! அவர் தன்னுடைய மகிமையை ஒருக்காலும் வேறொன்றிற்கும் கொடார்! ஆகவே, தன்னுடைய சொந்த வல்லமையைத் தவிர வேறெந்த வல்லமையையும் வைத்து அவர் தன் சபையைக் கட்டவே மாட்டார்!*

*இவ்வாறு எத்தனையோ தாறுமாறுகள் நம்மைச் சூழ இருந்தாலும், ஆதி நாட்களைப் போலவே இன்றும் தேவன் தன்னுடைய ஊழியத்தை மனுஷீக - ஆத்ம வல்லமையினாலோ அல்லது எலக்ட்ரானிக் வல்லமையினாலோ அல்லது பொருளாதார வல்லமையினாலோ அல்ல... பரிசுத்தாவியின் வல்லமையினாலேயே தனது ஊழியத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்!*

**இயேசுவின் ஜீவியமும் அவருடைய ஊழியமும் :**

*ஆவியில் நிறைந்ததோர் வாழ்க்கையை நாம் நினைக்கும் போதெல்லாம், இயேசுவின் வாழ்க்கையையும் அவருடைய ஊழியத்தையுமே நோக்கிப் பார்க்கவேண்டும். ஆம், அவரே "ஆவியில் நிறைந்த மனிதனுக்கு" தலைசிறந்த மாதிரியாய் இருக்கிறார்.*

*ஆவியின் வரங்களா? அல்லது ஆவியின் கனியா? இவை இரண்டில் இயேசு எதைப் பெற்றிருந்தார்? "இரண்டையுமே" இயேசு பெற்றிருந்தார்! என்பதே சரியான பதிலாகும். அப்படியானால் நாமும் இவை இரண்டையுமே தேடக்கடவோம்.*

*வேத வசனத்தின் கண்ணாடியில் "இயேசுவின் மகிமையை" பரிசுத்தாவியானவர் நமக்கு காட்டி, அவருடைய சாயலுக்கு ஒப்பாகவே நம்மை மறுரூபப்படுத்துகிறார் (2 கொரி .3:10).*

*ஆம், ஆவியானவர் நமக்கு "இயேசுவின் ஜீவியத்தையே" முதலாவது காட்டுகிறார். உதாரணமாய், ஜனங்கள் அவரை அறைந்து, அவரது தாடிமயிரைப் பிடுங்கி இழுத்து, பொய்யாய் குற்றம்சாட்டி..... ஆகிய சமயங்களில் அவர் ஒரு துளியும் எரிச்சலடையாதிருந்த அவருடைய பூரண பொறுமையை நமக்கு ஆவியானவர் காட்டுவார்! இன்னும் இந்த ஆவியானவர் இயேசு தன்னுடைய வீட்டிலும், தன்னுடைய தச்சுக் கூடத்திலும் சம்பவித்த பல்வேறு சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதையும் ஆவியானவர் காட்டுவார்!! இச்சமயங்களில் நம்மை ஆவியானவருக்கு சம்பூரணமாய் ஒப்புக்கொடுத்துவிட்டால், இயேசுவில் நாம் கண்ட சுபாவங்களை நாமும் அடையும்படி அவர் நமக்குள் கிரியை செய்யத் துவங்கிவிடுவார்.*

*தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும்*

*செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறவராய் இருக்கிறார். இருப்பினும் "நாம்தான்" அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் "நம்முடைய இரட்சிப்பு" நிறைவேறப் பிரயாசப்பட வேண்டும் (பிலி.2:12,13). இவ்வாறு சம்பவித்து விட்டால், நம்முடைய ஜீவியத்தில் நாம் கொஞ்சம் கொஞ்சமாய் மறுரூப மடைவதை நம் கண்ணாரக் கண்டிட முடியும்.*

*தேவனுடைய சுபாவத்தில் "பங்கு பெறுவது" என்பதே காரிய மாகும்..... அதை நாமாக முயற்சித்து "உற்பத்தி செய்வது" என்பது மாறுபாடானதாகும்! நாம் ஒருக்காலும் தேவனுடைய சுபாவத்தை நாமாக உற்பத்தி செய்துவிட முடியாது. நாம் தேவனுடைய சுபாவத்தில் பங்குபெற விருப்பம் கொண்டவர்களாயிருந்தால், "அதை நாமாக உற்பத்தி செய்துவிட முடியாது" என்ற நம்முடைய இயலாமையை உணர்ந்தவர்களாய் நொறுங்குண்ட நிலையில் தேவனைக் கிட்டிச் சேர்ந்து, மிகுந்த தாழ்மையுடன் இயேசுவின் சுபாவங்களை பரிசுத்தா வியிடமிருந்தே பெற்றிட வேண்டும். ஆனால், இவ்வாறு திவ்விய சுபாவங்களைத் தாங்களாகவே உற்பத்தி செய்துவிட முடியாது. என அறிந்து கொள்வதற்கே இன்று அநேகருக்கு அதிக காலமாகிவிடுகிறது.*

*நாம் இன்று "பொறுமையை" அடைந்ததற்கு, முழு இருதயத்தோடு* **நம்மை நாமே** *கட்டுப்படுத்தி வாழ்ந்த வாழ்க்கையே என நாம் எண்ணினால், நாம் மெய்யாகவே சாத்தானால் வஞ்சிக்கப்பட்டவர் களாயிருப்போம். இவ்விதமாகவே சாத்தான் நம்மைப் பெருமையில் உப்பச் செய்து அதன் மூலமாய் நம்மை அழித்து விட முயற்சிக்கிறான். நாம் பெற்றுக்கொண்ட பொறுமை நம்முடைய சொந்த உற்பத்தியாய் இருந்தால், அது ஒன்றுக்கும் உதவாத "மனுஷீகப் பண்புகளேயாகும்" ..... அது, "மனித சாணியைப் போல்" ஒரு பிரயோஜனமற்றது!*

*ஆனால் இதற்குமாறாக, நாம்* **தேவனிடத்திலிருந்தே** *நம்முடைய பொறுமையை பெற்றுக்கொண்டோம் என்பதையும், அதை நாமாக உற்பத்திச் செய்யவில்லை என்பதையும், நன்கு அறிந்தவர்களாய் இருந் தால், அவர் நம்முடைய ஜீவியத்தில் நடப்பித்த இந்த செயலுக்காக தேவனுக்கே சகல மகிமையும் செலுத்திவிட நமக்கு கடினமாய் இருக்காது!*

*ஆகவே, பரிசுத்தாவியானவர் இயேசுவின் மகிமையை நமக்குக் காண்பித்து கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் நம்மை மாற்றிவிடும்படி ஆவியானருக்கு நாம் தாராளமாய் இடம் தருவோமாக.*

*மேலும், பிதாவுக்கு இயேசு எவ்விதத்தில் ஊழியம் செய்தார் என்பதையும் பரிசுத்தாவியானவர் நமக்குக் காட்டுகிறார். இயேசு பரிசுத்தாவியினால் அபிஷேகிக்கப்பட்டு உன்னதத்தின் வரங்களை நிறைவாய் பெற்றிருந்தார்.* **ஆம், முதலாவது அபிஷேகிக்கப்படாமல் இயேசு ஒருபோதும் தன் பிதாவுக்கு ஊழியம் செய்யத் துணியவேயில்லை.** *ஆனால் இன்றோ, திரளான விசுவாசிகள் அபிஷேகம் ஏதுமின்றி கர்த்தருக்கு ஊழியம் செய்யத் துணிகிறார்கள்!*

“இயேசுவை தேவன் பரிசுத்தாவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகித்து...” என்று அவரைப்பற்றி எழுதப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். இதனால் நடந்த விளைவு யாது? ஆம், தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே “அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்!” (அப்போஸ்தலர்10:38).

நம்மைச் சுற்றிலும் ஏதாகிலும் ஒரு வகையில் சாத்தானால் கட்டப்பட்டு துன்பமடையும் ஜனங்களால் இந்த உலகம் நிறைந்திருக்கிறது. தேவன் நம்முடனே கூட இருந்தால் நாமும் இயேசுவைப் போலவே, அவர்களுக்கு நன்மை செய்து அவர்களை சாத்தானின் கட்டிலிருந்து விடுதலை செய்வதற்கு சென்றிட முடியும். ஆனால், இவ்வித ஊழியத்தை பரிசுத்தாவியின் அபிஷேகத்தை பெறாமல் நாம் ஒருக்காலும் செய்திடவே முடியாது.

இவ்வித ஊழியத்தை பரிசுத்தாவியின் அபிஷேகமில்லாமல் இயேசுவால்கூட நிறைவேற்ற முடியாதிருந்தால், நாம் எம்மாத்திரம்?

“அபிஷேகத்தையும், ஆவியின் வரங்களையும்” இயேசுவின் ஊழியத்தோடு தொடர்புடையதாய் நாம் காணமுடியுமென்றால், நாம் ஒருக்காலும் தவறிச் சென்றிட மாட்டோம்! ஆம், இயேசு பரிசுத்த ஜீவியத்தில் வாழ்வதை மாத்திரமே கொண்டிராமல், **பிறருக்கென்று** ஒரு ஊழியத்தையும் பெற்றிருந்தார். (இயேசு பிரசங்கித்தார், வியாதிஸ்தரை சொஸ்தமாக்கினார், பிசாசுகளை துரத்தினார். சீஷர்களை உருவாக்கினார்! எனவே இயேசுவை பொறுத்தவரையில் அவரிடமிருந்து பரிசுத்த ஜீவியத்தையும், ஊழியத்தையும் வேறு பிரிக்கவே முடியாது.

சபையிலிருக்கும் அவருடைய ஊழியர்களாகிய நாம் இயேசுவைப் போலவே அபிஷேகம் பெறாவிட்டால், நாம் ஒருக்காலும் தேவனுக்கு வலிமையாய் ஊழியம் செய்யவே முடியாது.

இன்று அநேகர் வேதாகமத்தை கவனமாய் கற்று, மிகத் துல்லியமாய் பிரசங்கிக்கிறார்கள். **ஆகிலும் அவர்களின் மீதோ பரிசுத்தாவியின் அபிஷேகம் இல்லை!** எனவேதான் அவர்களுடைய ஊழியம் வறண்ட மரித்த நிலையில் இருக்கிறது.

ஆனால் புதிய உடன்படிக்கையின் ஊழியர்களாகிய நமக்கோ, நம்முடைய பிரசங்கங்கள் யாவும் “எப்போதுமே” பரிசுத்தாவியின் வல்லமையினால் நிறைந்ததாய் இருக்க வேண்டும். இயேசு பிரசங்கித்த எந்த சமயத்திலும் அவருடைய பிரசங்கங்கள் சாரமற்றதாகவோ அல்லது போரடிப்பதாகவோ இருந்ததேயில்லை. அதற்கு ஒரே காரணம், அவர் அபிஷேகத்தால் நிறைந்திருந்தார் என்பதேயாகும். அவரைப் போலவே நாமும் அபிஷேகத்தின் நிறைவைப்பெற்றிருந்தால், நம்முடைய ஊழியங்களும் ஒருக்காலும் சாரமற்றதாயும், போரடிப்பது போலவும் இருக்காது. இதற்கு மாறாக, நம்முடைய ஊழியம் பிறருக்கு எப்போதும் ஓர் **பசுமை நிறைந்த** ஆசீர்வாதமாகவே இருக்கும்.

*எம்மாவூருக்குச் செல்லும்வழியில், இயேசு அந்த சீஷர்களுக்கு பிரசங்கித்து கொண்டு வந்தபோது, அவர்களுடைய இருதயம் அவர்களுக்குள்ளே கொழுந்துவிட்டு எரிந்தது (லூக்.24:32). ஆம் மெய்யாகவே அபிஷேகத்தைப்பெற்ற ஊழியம், ஜனங்களின் இருதயத்தை கொழுந்துவிட்டு எரியச்செய்வதாகவே இருக்கும். இவ்விதமாகவே நம்முடைய ஊழியமும் எப்போதும் இருக்க வேண்டும். ஆவியின் அபிஷேகத்தை இழந்த நிலை நமக்கு ஒருபோதும் இருக்கவே கூடாது. அவ்வாறிருந்தால் மாத்திரமே நாமும் இயேசுவைப்போலவே நம்மிடம் தேவையோடுவரும் ஒவ்வொருவருக்கும் கொடுக்கும் படியான ஜீவ வார்த்தைகளைப் பெற்றவர்களாய் இருக்க முடியும் (ஏசா.50:4 கவனித்து வாசியுங்கள்).*

*அப்போஸ்தலர் நடபடிகளில் "இயேசு செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையும் குறித்து" லூக்கா சுவிசேஷமாக எழுதினார் (அப்.1:1). ஆகவே, அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகம், இயேசு தொடர்ச்சியாய் செய்து உபதேசித்தவைகளின் விபரங்கள் அடங்கிய புத்தகமாகவே இருக்கிறது. சுவிசேஷ புத்தகங்களிலோ இயேசு தன்னுடைய* **மானிட சரீரத்தின் மூலமாய்** *செய்தவைகளின் விபரங்கள் அடங்கியிருக்கின்றன. "அப்போஸ்தல நடபடிகைகளின் புத்தகமோ, அவர் தன்னுடைய "***ஆவிக்குரிய சரீரத்தில்***" செய்தவைகளின் விபரங்கள் அடங்கியிருக்கின்றன. எனவே, "அப்போஸ்தல நடபடிகைகள்" என்று சொல்வது உண்மையில் இயேசு தன் அப்போஸ்தலர்களின் மூலமாய் நிறைவேற்றிய "இயேசுவின் நடபடிகளேயாகும்!".*

*இப்போது நாம் தெளிவாக அறிந்து கொள்வது யாதெனில்,* **அன்று** *2000 வருடங்களுக்கு முன்பாக இயேசு இப்பூமிக்கு வந்த போது செய்த ஊழியத்தை விட வேறுவிதமான ஊழியத்தை, இன்று இந்த பூமியில் இயேசு செய்து கொண்டிருக்கவில்லை என்பதேயாகும். ஆம், அவர்* **இன்றும்,** *"பிசாசுகளின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கும்படி... நன்மை செய்கிறவராய்" சபையாகிய தன்னுடைய ஆவிக்குரிய சரீரமாய் இருக்கும் அங்கங்களின் மூலமாய் சுற்றித்திரிகிறார்!!*

*எனவேதான், "அவருடைய சரீரத்தில்" நாம் கர்த்தருடைய ஊழியனாய் இருக்கும் நம்முடைய பொறுப்பு மகா பெரிதாயிருக்கிறது. ஆகவே, கர்த்தருடைய ஊழியத்தை நாம் ஒருபோதும் மிகச் சாதாரணமாய் எண்ணாதிருக்கக்கடவோம். 30 வருடங்களாய் ஓர் பரிபூரண ஜீவியத்தில் இயேசு வாழ்ந்தாலும்கூட, தன் பிதாவுக்கு ஊழியம் செய்திட ஆரம்பிப்பதற்கு முன்பாக பரிசுத்தாவியினால் அபிஷேகிக்கப்பட வேண்டியது தேவையாய் இருந்தால், இப்போது* **அதே போன்ற அபிஷேகம் இல்லாமல்** *நாம் ஊழியத்தில் ஈடுபடுவது எவ்வளவு பெரிய விபரீதமான துணிச்சல் என்பதை எண்ணிப்பாருங்கள்.*

*நாம் இன்னமும் ஆவியினால் அபிஷேகிக்கப்படாதவர்களாயிருந்தால், அதற்கு காரணம் "நாம் போதுமான அளவு அபிஷேகத்தின் மீது வாஞ்சை*

கொண்டு தேடவில்லை" என்பதேயாகும். இவ்வாறாக நாம் ஏன் தேடவில்லையென்பதற்கு, அபிஷேகத்தின் **உயர்ந்த மதிப்பை** நாம் "போதுமானளவிற்கு உணரவில்லை" என்பதே காரணமாகும். அபிஷேகத்தின் உயர்ந்த மதிப்பை நாம் ஏன் உணரவில்லை? என்பதற்கு, நாம் "சுயதிருப்தி கொண்டவர்களாய்" இருக்கிறோம் என்பதே காரணமாயிருக்க வேண்டும்! இவ்வித அவலநிலையில் நாம் இப்போதும் இருந்தால், மிகத்துரிதமாய் நம்முடைய எல்லா சுய-திருப்தியின் நிலையிலிருந்து மனம் திரும்பக்கடவோம்! நம்முடைய எல்லா சுயதிருப்தியையும் களைந்து போடும்படி, தேவன் நம்முடைய இருதயங்களில் விருத்தசேதனம் செய்திட தேவனை அனுமதிப்போமாக!!

**பரிசுத்தாவியின் நிறைவான அபிஷேகம் :**

சகோதரர்களே, நாம் நம் முழு இருதயத்தோடும் பரிசுத்தாவியின் நிறைவான அபிஷேகத்தை வாஞ்சித்து தேவனை நோக்கித் தேடுவோமாக. இந்த அபிஷேகமில்லாமல் நாம் ஒருபோதும் தேவனுக்கு ஊழியம் செய்யவோ அல்லது அவருடைய சபையைக் கட்டவோ முடியாது! இன்று, இதுவே நம்முடைய மிகப்பெரிய பிரதானத் தேவையாகும். ஆகவே, அன்று இயேசு பெந்தேகொஸ்தே நாளில் தன் அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த "அக்கினியின் அபிஷேகத்திற்குக்" குறைவாய் எதையும் பெற்றுக்கொண்டு திருப்தியடைய ஒருக்காலும் இடம் தராதிருக்ககடவோம். எப்போதெல்லாம் இந்த தேவ அக்கினி நம் ஊழியத்திலிருந்து விலகுகிறதோ, அப்போதெல்லாம் நாம் உடனடியாக ஆழ்ந்த துயரம் கொள்ளக்கடவோம்!

மேலும் **பிறருடைய** தேவையின் அளவை வைத்தே ஆவியின் நிறைவு நம் ஒவ்வொருவருக்கும் அருளப்படுகிறது என்பதை கீழ்காணும் வசனத்தில் காண்கிறோம், "**தரித்திரருக்கு** சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், **இருதயம் நருங்குண்டவர்களைக்** குணமாக்கவும் **சிறைப்பட்டவர்களுக்கு** விடுதலையையும், குருடருக்கு பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், **நொறுங்குண்டவர்களை** விடுதலையாக்கவும், கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்" (லூக்கா.4:18). பார்த்தீர்களா, ஆவியின் அபிஷேகம் பிறருடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கென்றே நமக்கு அருளப்படுகிறது என்பதை இந்த வசனம் நேர்த்தியாய் எடுத்துக்கூறுகிறது. **ஆம், "தரித்திரர், நருங்குண்டவர்கள், சிறைப்பட்டவர்கள், குருடர்கள், நொறுங்குண்டவர்கள்" ஆகியோர்களின் தேவைகளையே அல்லாமல், நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கென பரிசுத்தாவியின் அபிஷேகம் அருளப்படுவதேயில்லை!** ஆகவே நம்முடைய சபைகளில் "தரித்திரர்களும்..... சாத்தானால் சிறைப்பட்டவர்களுமாகிய ஜனங்கள் மீது நாம் அக்கறையும் பாரமும் கொள்ளும்போது மாத்திரமே தேவன் நம்மை அபிஷேகிக்கிறார்!"

பரிசுத்தாவியின் வல்லமையை நாம் எவ்வாறு கேட்க வேண்டும் என்ற போதகத்தை ஓர் உவமையாக இயேசு கூறினார் (லூக்.11:5-13). ஒருநாள் இரவில் ஒரு மனுஷனுடைய வீட்டிற்கு அவனுடைய சிநேகிதன் வந்தான். ஆனால்

அவனுக்குத் தருவதற்கென்று உணவு ஏதும் வீட்டிலில்லாதிருந்தது. உடனே அந்த மனுஷன் தன் சினேகிதனுக்காக பக்கத்து வீட்டுக்குச் சென்று உணவிற்காக கதவைத் தட்டினான். ஆனால் அவனோ உடனே எழுந்து வந்து உணவு தரவில்லை. எனவே இந்த மனுஷன் தன் பக்கத்து வீட்டுக்காரர் படுக்கையை விட்டு எழுந்து தன் சிநேகிதனுக்கு தேவையான உணவைத் தரும் வரை இடைவிடாது கதவைத் தட்டிக்கொண்டே யிருந்தான். இந்த உவமையை கூறியபின்பு "நாமும் இவ்வாறாகவே" நம்முடைய பரமதகப்பனிடத்தில் பரிசுத்தாவியின் வல்லமையைக் கேட்க வேண்டும் என இயேசு குறிப்பிட்டார் (வசனம்13).

ஆனால், நம்முடைய வீட்டிற்கு (சபைக்கு) தேவையோடு வரும் ஜனங்கள்மீது நமக்கு எவ்வித அக்கறையும் இல்லாதிருந்தால் நாம் அவர்களை ஆசீர்வதித்து, அவர்களுடைய கட்டுகளிலிருந்து விடுதலை யாக்கும்படி தேவனுடைய உதவியை நாம் ஒருபோதும் தேடவே மாட்டோம்.

ஒரு சகோதரன் சாத்தனால் சிறை பிடிக்கப்பட்டதைக் காணும் போது நாம் என்ன செய்கிறோம்? நாம் வெறுமனே ஜெபித்து அவரை அனுப்பிவிடுகிறோமா? அப்படியானால் சாத்தானுடைய கட்டு களிலிருந்து ஜனங்களை விடுதலையாக்கும்படி வந்த நம்முடைய ஆண்டவரின் பிரதிநிதியாய் இருப்பதற்கு நாம் தகுதியற்றவர்கள்! இச்சமயத்தில்தான், நம்முடைய சகோதரர்களுக்குத் தேவையானது எதுவோ அதை நாம் பெறும்படி தேவனைத் தேடுகிறவர்களாய் இருக்க வேண்டும். நாம் ஆண்டவரிடத்தில் சென்று "ஆண்டவரே! இவருக்கு உதவியானதை தருவதற்கு எங்களிடம் ஒன்றுமில்லை. இவரை விடுதலைசெய்து உதவுவதற்கு ஏற்ற **வல்லமையை** எங்களுக்குத் தந்தருளும்" என ஜெபிக்க வேண்டும். இந்த ஜெபத்தை, நாம் கேட்டதைப் பெற்றுக் கொள்ளும் வரை இடைவிடாது ஜெபிக்க வேண்டும். அப்போது தான் நாம் பெற்றுக்கொள்ள முடியும்! இந்தச் செய்தியைத் தான் இயேசு மேற்கண்ட உவமையின் மூலமாய் நமக்குப் போதித்தார்.

நம்மில் ஒருவராகிலும், இயேசு பெற்றதைப்போல "எல்லா வரங்களையும்" பெற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில், ஆவியானவர் தம்முடைய வரங்களை கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள எல்லா அவயவங்களுக்கும் தம்முடைய சித்தத்தின்படியே பகிர்ந்தளிக்கிறார். ஆரம்பக் கட்டத்தில் இயேசு மாத்திரமே "கிறிஸ்துவின் சரீரமாய்" விளங்கினார். ஆகவேதான், இயற்கையாகவே இயேசு எல்லா ஆவியின் வரங்களையும் பெற்றிருந்தார். ஆனால், இன்றோ கிறிஸ்துவின் சரீரம் அநேக அங்கங்களையுடையதாயிருக்கிறது. எனவேதான் வரங்கள் ஒவ்வொரு அங்கத்திற்கும் வெவ்வேறாகப் பகிர்ந்தளிக்கப் பட்டிருக்கிறது. ஒருவேளை ஆவியானவர் உங்களுக்கு போதக வரத்தையோ அல்லது சுகமாக்கும் வரத்தையோ கொடுத்திருக்க மாட்டார். இதனிமித்தம் நாம் வேறுவிதமாய் எண்ணத்தேவையில்லை. ஒருவேளை ஆவியானவர்

உங்களுக்கு "பிறரை உற்சாகப்படுத்தும்" வரத்தைக் கொடுத்திருக்கக் கூடும். இந்த வரத்தை நீங்கள் பெற்றிருந்தால் அதை நீங்கள் உண்மை யுள்ளவர்களாய் இருந்து அப்பியாசப்படுத்தலாமே! அதே சமயம், மற்றவர்கள் "அவரவர்களுடைய வரத்தை" அப்பியாசப்படுத்துவதற்கும் தாராளமாய் இடம் கொடுங்கள்!!

நீங்களே எல்லாமுமாய் இருப்பதற்கு முயற்சிக்காதீர்கள்... அது உங்களால் ஒருக்காலும் கூடாததாகும்!!

தானே எல்லாமுமாய் இருக்கத்தகுந்த ஒரே நபர் இயேசு மாத்திரமே. இன்று நாமோ அவருடைய சரீரத்தின் ஒருபகுதியாகவே இருக்க முடியும். எனவே, நாம் பெற்றிடாத வரங்களை தேவன் நம் இளைய சகோதரர்களுக்குக் கொடுத்திருந்தால் இதனிமித்தமாய் நாம் களிகூரக் கடவோம். இதன் மூலமாய் சரீரத்தின் அக்குறிப்பிட்ட பகுதியின் பணிகளை அவர்கள் நம்மைக் காட்டிலும் சிறப்பாய் நிறைவேற்றிட வழி உண்டாகிறது! கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!!

இவ்வாறாக, நாம் கிறிஸ்துவின் சரீரத்தைக் கண்டு விட்டோமென்றால், நாம் ஒருபோதும் யாரையும் குறித்து பொறாமை கொள்ளவே மாட்டோம். அதற்கு பதிலாய் தேவன் அவர்களுக்குத் தந்த ஊழியத்தினிமித்தம் மகிழ்ச்சியடைகிறவர்களாகவே இருப்போம்.

நாம் ஜனங்களுக்கு ஊழியம் செய்து உதவிட குறிப்பிட்ட சில பகுதிகளிலேயே தேவன் நமக்கு கிருபையளிக்கிறார். அதேபோல் மற்றொரு பகுதியில் ஊழியம் செய்து உதவுவதற்கு வேறுசிலருக்கு தன் கிருபையைத் தருகிறார். தேவன் இவ்வாறு கிரியை செய்வதி னிமித்தமாய், ஒவ்வொரு சகோதரனுக்காகவும் சகோதரிக்காகவும் நம்முடைய இருதயத்தில் மெய்யாகவே தேவனுக்கு நன்றி சொல்லிட முடியும்.

சபையிலுள்ள பெலஹீனமான சகோதரர்களும் சகோதரிகளும் கூட முக்கியமான ஊழியங்களைப் பெற்றிருக்க முடியும். உண்மையாச் சொல்வோமென்றால், ஒருவர் எவ்வளவு பெலஹீனமாய் இருக்கிறாரோ அவ்வளவு அதிகமாய் பரிசுத்தாவியை சார்ந்து கொண்டவர்களாய் இருப்பார்கள்!

நம்முடைய ஸ்தலசபைகளிலுள்ள எல்லா சகோதர, சகோதரிகளின் ஊழியங்களையும் நாம் சிறக்கச் செய்கிறவர்களாய் இருந்தால் மாத்திரமே, நாம் தேவனுடைய வலிமையான ஊழியர்களாய் திகழ முடியும். **ஒரு கிறிஸ்தவத் தலைவர் தானே எல்லாவற்றையும் செய்கிறவராய் காணப்பட்டால், அவர் தேவனுடைய ஊழியக்காரனாய் இருப்பதிலிருந்து தோல்வி கண்டவரேயாவர்!** துரதிருஷ்டவசமாய், இந்த நிலையே இன்றுள்ள ஏராளமான 'பாஸ்டர்களிடம்' காணப்படும் பரிதாபமான நிலையாகும்!!

**சீரான சமநிலையே வேண்டும் :**

நம்முடைய ஜீவியமானது இன்றைய கிறிஸ்தவக் குழுக்களில் ஒரு

தலைபட்சமாய் செயல்படும் (Extremes) சீர்கேடுகளைக்கண்டு அதனிமித்தம் 'எதிர்மறையாய்' பிரதிபலிக்காதிருக்க ஜாக்கிரதை கொண்டிருக்க வேண்டும்.

கிறிஸ்தவ உலகின் சரித்திரத்தில் எத்தனையோ குழுக்கள் பரிசுத்தத்தை மாத்திரமே முக்கியப்படுத்தி ஆவியின் வரங்களை "பேய்த் தனமானது" என சொல்லுமளவுக்கு உதாசினம் செய்ததைக் கண்டிருக்கி றோம்! இவர்கள் யாவரும், இயேசு செய்து முடித்ததைப் போல தேவனுடைய தீர்மானங்களை நிறைவேற்றத் தவறி விட்டார்கள்.

இதற்கு நேர்மாறான திசையில் செயல்பட்ட குழுக்களோ ஆவிக்குரிய வரங்களை மாத்திரமே முக்கியப்படுத்தி "தங்கள் சொந்த ஜீவியத்தின்" பரிசுத்தத்தை கூட உதாசினம் செய்த நிலைக்குச் சென்று விட்டார்கள்! இவ்விதக் குழுக்கள் சொல்லி முடியாத அளவுக்கு வழிதப்பிச் சென்று, மதவாத ஆவிகளினால் வஞ்சிக்கப்பட்டு விட்டார்கள்!

இதற்கு ஒப்பாகவே வேறு சில குழுவினர்கள் "வேத ஆராய்ச்சியின் அறிவை" முக்கியப்படுத்துகிறார்கள். இதற்கு நேர்மாறான குழுவினர் களோ "உணர்ச்சிவயப்படும் பரவச அனுபவங்களை" முக்கியப்படுத்து கிறார்கள். ஆனால் இந்த இரு குழுவினருமே தங்களிடம் உள்ள "ஆத்தும - மனுஷீகத்தைக்குறித்து" அறியாமையிலேயே மூழ்கி யிருக்கிறார்கள். அறிவுமயம், பரவச உணர்ச்சிமயம் ஆகிய இரண்டுமே மனுஷீகமானவைகளேயாகும்! இந்த இரண்டிற்கும், உண்மையான ஆவிக்குரியதன்மை எதுவுமே இல்லையெனக் கூறலாம். பரிசுத்தாவி யானவரே தேவனுடைய பிள்ளைகளைத் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும் ஜீவியத்திற்கே நடத்துகிறார்.

நாம் மேற்கண்ட குழுக்களில், எந்தக் குழுவை நாம் பின்பற்றலாம்? ஒன்றையும் நாம் பின்பற்றமுடியாது!

நம் **ஆண்டவரின் "நிறைவான மாதிரியே"** நாம் பின்பற்றத் தகுந்ததாகும். அவரிடம் ஆவியின் கனியும், ஆவியின் வரங்களும் ஆகிய இரண்டுமே இருந்தது. அவர் தேவனுடைய வார்த்தையைக் கற்று வெறுமனே பரவசமடைந்துவிடாமல், அவைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தார். இயேசுவின் இந்த நல்ல மாதிரியை பின்பற்றி விட்டால் நாம் ஒருக்காலும் வழிதப்பிச் சென்றிட மாட்டோம்.

ஆகவே, நம் முழு இருதயத்தோடும் "அன்பை நாடி ஞானவரங்களை விரும்பக்கடவோம்" (1 கொரி.14:1). இந்த வேதவசனத்தின்படி நாம் கருத்தாய் நடந்து விட்டால் நாம் சந்திக்கும் ஒவ்வொருவரையும் அன்பு கூறவும், நம் ஜீவியப்பாதையில் குறுக்கிடும் "சாத்தானால் பீடிக்கப்பட்ட" ஒவ்வொரு வரையும் விடுதலை செய்யத் துவங்கி விடுவோம். ஆ, இது அருமையன்றோ!

**பிறருக்கு ஆசீர்வாதமாக இருந்திட வேண்டும் :**

1 கொரிந்தியர்.12-ம் அதிகாரத்தில் ஆவியின் வரங்களை, மானிட சரீரத்தின் கண், காது, கரங்கள், கால்கள் போன்றவைகளுக்கு ஒப்பிடப்பட்டு

கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். நம் யாவருக்கும் காண்பதற்குக் கண்களும், கேட்பதற்குச் செவிகளும், உதவி செய்திட கரங்களும், உலகத்தின் பல பகுதிகளுக்கும் நம்மை எடுத்துச் சென்றிட கால்களும் தேவையாயிருக்கிறது. இதைப்போலவே தேவன் நமக்கு ஆவியின் வரங்களைத் தந்து, அவைகளின் மூலமாய் நம்மைச் சுற்றியுள்ள தேவை நிறைந்த இந்த உலகம் ஆசீர்வதிக்கப்பட விரும்புகிறார். **ஜனங்களை சாத்தானின் பிடியிலிருந்தும் அவர்களுடைய மனச்சோர்விலிருந்தும் அவர்களுடைய பயங்களிலிருந்தும் விடுவிக்கும்படியே தேவன் நமக்கு வல்லமையைத்தர விரும்புகிறார்.**

தேவன் நம்முடைய தலையை தம்முடைய எண்ணையால் அபிஷேகிக்கும்போது, நம்முடைய பாத்திரங்கள் நிச்சயமாய் ஆசீர்வாதத்தினால் பிறருக்கும் பாய்ந்து சென்றுவிடும்! இவ்வாறு நிறைவாய் நம்மிடத்தில் பெற்ற எண்ணையை பிறருடைய பாத்திரங்களில் நாம் ஊற்றும் பொழுது, எலியாவின் நாட்களில் அந்த விதவைக்கு நடந்த நிகழ்ச்சியைப்போல் (2 இராஜ 4 : 1-7), நம் ஜீவியத்தில் நாம் சந்திக்கும் "ஒவ்வொருவருக்கும்" உதவும்படியான போதுமான வல்லமையும், ஆசீர்வாதமும் தேவனுடைய அபிஷேகத்திலிருப்பதை நாம் கண்டு கொள்ள முடியும். அந்த ஏழை விதவையின் வீட்டில் வைக்கப்பட்ட ஒரு பாத்திரம் கூட எண்ணையினால் நிரப்பப்படாதிருக்கவில்லை. அவள் மூலமாய் அவளுடைய அண்டைவீட்டார் யாவரும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதைப் போலவே நம்மைச் சுற்றியுள்ள அண்டை வீட்டார் யாவரும் ஆசீர்வதிக்கப்பட முடியும்.

ஆனால் நாமோ பிறருடைய ஜீவியத்தில் ஊற்றிக் கொண்டேயிருக்க வேண்டும். இது ஒரு திவ்விய சட்டமாகும். **இதற்கு மாறாக தேவனுடைய ஆசீர்வாதங்களை சுயநலமாய் நமக்காக மாத்திரமே நாம் வைத்துக் கொண்டால், அந்த ஆசீர்வாதம் அன்று 'மன்னா' கெட்டது போலவே நாற்றமெடுத்துவிடும்.** மன்னாவைப் போலவே நம்முடைய ஆசீர்வாதம் பரலோகத்திலிருந்து வந்திருந்தாலும் பிறரை ஆசீர்வதிக்க அது பயன்படவில்லையென்றால் "நாற்றமே" அதன் பரிதாப நிலையாய் மாறிவிடும்.

நாம் நீதிமொழிகள் 11:25 -ல் வாசிக்கிறபடி, "எவன் தண்ணீர் பாய்ச்சு கிறானோ அவனுக்கு (தேவனால்) தண்ணீர் பாய்ச்சப்படும்!"

ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதத்தையும், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பரிசுத்தாவியையும் நாம் பெற வேண்டும் என்பதற் காகவே கல்வாரி சிலுவையில் இயேசு நமக்காக சாபமானார் (கலா.3:13). "பூமியில் உள்ள வம்சங்களெல்லாம் (குடும்பங்களெல்லாம்) உனக்குள் ஆசீர்வதிக் கப்படும்" என்பதே **ஆபிரகாமின் ஆசீர்வாதம்** என ஆதி. 12:3- ல் விவரிக்கப்பட்டுள்ளது. ஆம், இதுவே ஒரு புதிய உடன்படிக்கையின் ஊழியனாயிருப்பதற்குரிய சரியான பொருளாகும்: அதாவது, நாம் இந்த பூமியில் சந்திக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆசீர்வாதமாய் இருப்பது! இது, கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கும் நமது சுவீகார

*உடைமையாகும்!!*

*ஆகவே, இனியும் நாம் "அற்பமான ஆரம்பத்தின் நாளை அசட்டை செய்யாதிருக்கக்கடவோம்" (சக.4:10). ஒருவேளை இந்நாளிலேதான் ஆவியானவர் உங்களைத் தூண்டி, தேவன் உங்கள் இருதயத்தில் பாரமாய் வைத்த ஒரு நபருக்கு உற்சாகப்படுத்தும் கடிதம் எழுதச் சொன்னால், ஓர் நல்ல துவக்கத்தை இன்றே துவங்கி விடுங்கள்.*

*அல்லது நாம் தேவனுக்கு ஊழியம் செய்யவேண்டுமென்ற நம்முடைய வாஞ்சையை சோதித்தறியும்படி, தேவபக்திக்குரிய தாகமும் தேவையும் நிறைந்த ஒரு சகோதரனை தேவன் நம்மிடத்தில் அனுப்புவார். இப்போது நாம் என்ன செய்யபோகிறோம்? இவ்வேளையில் அந்த சகோதரனுக்கு உதவி செய்யும்படியாய் பரத்தின் வல்லமையை தேவனிடத்தில் கேட்டு கெஞ்சி நிற்பவர்களாய் நாம் இருக்கிறோமா?*

*இதுபோன்ற* **சின்னச்சின்ன விஷயங்களிலெல்லாம் நாம் உண்மை யுள்ளவர்களாய்** *இருப்பதற்கு தவறினால், தேவன் நமக்கென்று தீர்மானித்த "அத்தனையையும்" நாம் இழந்து விடுவோம்! நாம் தொடர்ச்சியான அபிஷேகத்தில் ஜீவிப்பதற்கு, ஒவ்வொரு சிறிய விஷயங்களிலும் நாம் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். ஆம், இவ்வித சின்ன சின்ன விஷயங்களில் காட்டிய உண்மையான உத்தமமே இன்று நாம் காணும் வலிமையான பல ஊழியங்களுக்கும் அடிகோலியாய் திகழ்ந்திருக்கின்றன! இவ்வாறாகவே (இயேசு குறிப்பிட்ட) ஜீவநதி பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்ந்தோடத் துவங்குகின்றது. ஆனால், இந்த நதியின் துவக்கம் முதலாவது ஒரு சில துளிகளில் ஆரம்பித்து அதற்குப் பின்பே ஓர் வலிமையான நதியாய் மாறியது என்பதை கவனியுங்கள் (எசே.47:1,9).*

*ஆகவே, சின்னச்சின்ன விஷயங்களில் நாம் யாவரும் உண்மையுள்ள வர்களாய் நடப்பதற்கு தேவன் நமக்கு உதவி செய்வாராக!*

# பிறருக்கு ஓர் தகப்பனாய் இருந்திட வேண்டும்!

6

பவுல் வாழ்ந்த நாட்களில் "ஆயிரக்கணக்கான உபாத்தியாயர்கள்" இருந்ததாகவும் "தகப்பன்மார்களோ" அவ்விதமாய் அநேகரில்லை எனவும் எடுத்துக் கூறினார் (1 கொரி.4:5). இதே பரிதாப நிலை தான் இன்றைக்கும் நம்முடைய நாட்களில் நிலவுகின்றது.

ஒவ்வொரு தேவனுடைய ஊழியனும், சபையில் உள்ள தங்கள் சகோதரர்களிடமும், சகோதரிகளிடமும் "ஓர் தகப்பனின் ஆவியை உடையவர்களாய்" நடந்து கொள்ள பிரயாசப்பட வேண்டும். ஓர் தகப்பனாய் மாறுவது எளிது.... ஆனால் ஓர் தகப்பனாகவே இருப்பது கடினம்! ஒரு மனிதன் எந்த கஷ்டமுமில்லாமல் 10-பிள்ளைகளை உருவாக்கிவிட முடியும். ஆனால் அந்தப் பிள்ளைகளை வளர்த்து முதிர்ச்சியடைந்த புருஷர் களாய் கொண்டுவருவது அவ்வளவு லேசான காரியமல்ல!

இதற்கொப்பாகவே சபையும் இருக்கிறது. ஒரு வகையில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஜனங்களை "மறுபடியும் பிறக்கும்படி" நடத்துவது எளிது! ஆனால் அவர்களை கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாய் பிதாவுக்கு முன் நிறுத்துவது அதிக கடினமானதேயாகும்!!

ஆகவேதான், நம்முடைய இலக்கு "பெரிய சபை" என்று இல்லாமல் "தூய்மையான சபை" என்பதாய் இருக்க வேண்டும். ஜனங்கள் **முதிர்ச்சியடைந்து பூரணத்தை நோக்கி வளராத பட்சத்தில், நம் சபையில் நிறைய பேர்கள் இருக்கிறார்கள் எனக் கூறுவதில் ஒரு பிரயோஜனமுமில்லை.** இவ்வாறு நம்முடைய பிள்ளைகளெல்லாம் "வளர்ச்சி குன்றியவர்களாய்" இருக்கும் போது "நிறையபிள்ளைகள்" எங்களுக்கு இருக்கிறார்கள் என மார்தட்டிக் கொள்வதில் என்ன பிரயோஜனம்? நம்முடைய வளர்ந்துவிட்ட

மகன்களும், மகள்களும் ஒழுங்காக 'பாத்-ரூம்' சென்று வருவதைக்கூட கற்றுக்கொள்ளமால் இன்னமும் தங்களுடைய ஆடைகளின் 'கழிவு' செய்து கொண்டிருந்தாலோ, இன்னமும் ஒழுங்காக நடக்கக் கற்றுக் கொள்ளாதிருந்தாலோ வளர்ந்து விட்ட நம்முடைய வாலிபப் பிள்ளைகள் 'பால்பாட்டில்' வைத்துக் குடித்துக் கொண்டிருந்தாலோ..... இதனிமித்தம் யாராவது பெருமை கொள்வது தகுமா?

ஆனால், இன்று ஏராளமான சபைகளில் 'நெடுநெடுவென்று' வளர்ந்து விட்ட குழந்தைகள்தான் ஏராளம் இருக்கிறார்கள்! இவர்கள் 20- வருடங்களாய் அந்த சபையில் விசுவாசிகளாய் இருப்பார்கள். ஆனால் அவர்களோ இன்னமும் அசுத்த சிந்தை கொண்டவர்களும், வெற்றி வாழ்க்கையில் நடக்கத் தெரியாதவர்களும், **வெறும் பாவமன்னிப்பாகிய பாலைக்குடித்துக்** கொண்டிருப்பவர்களுமாகவே இருக்கிறார்கள். இவ்வித குன்றிய வளர்ச்சிக்குக் காரணம் இவர்களுடைய தலைவர்கள் "உபாத்தியாயர்கள்" மாத்திரமேயல்லாமல் "தகப்பன் மார்களாய்" இல்லையென்பதேயாகும்!! ஆ, இது பரிதாபம்.

**உபாத்தியாயர்கள் அல்ல, தகப்பன்மார்கள் வேண்டும் :**

ஓர் ஆவிக்குரிய தகப்பனாயிருந்த பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதும்போது "உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் அவைகளை எழுதவில்லை" (1கொரி.4:14) எனக்கூறினார். உபாத்தியாயர்கள் பரீட்சையில் பெயிலாகும் தங்கள் மாணாக்கர்களை பகிரங்கமாய் இழிவுபடுத்தி வெட்கப்படுத்தவே விரும்புவார்கள். ஆனால் தகப்பன் மார்களோ இதற்கு வித்தியாசமானவர்கள். இவர்கள், தங்கள் பிள்ளைகள் தடுமாறிவிழும் ஒவ்வொரு பாவத்தையும் மறைத்து, ஓர் உயர்ந்த ஜீவியத்திற்கு வளர்ந்து வரும்படி அவர்களைத் தொடர்ச்சியாய் உற்சாகப்படுத்திக் கொண்டேயிருப்பார்கள்.

ஒரு சபையில், ஓர் தகப்பனாய் இருப்பதைக் காட்டிலும் ஓர் உபாத்தியாயனாய் இருப்பது மிகவும் எளிது. ஏனெனில் அவர்களுடைய பாரங்களை நம்முடைய இருதயங்களில் சுமந்து கொள்வதற்கு, நம்மை நாமே வெறுப்பதற்கான கிரயம் மிகவும் அதிகமாகும். உபாத்தியாயர்கள் ஒரு போதும் ஒரு குடும்பத்தைக் கட்டவே முடியாது! அவர்கள் வகுப்புகளை (CLASSES) மாத்திரமே கூட்டிச் சேர்க்க முடியும். இன்று ஏராளமான சபைகள் பள்ளிக் கூடங்களேயல்லாமல், குடும்பங்களாய் இல்லை!! ஆம், தகப்பன் மாத்திரமே ஓர் குடும்பத்தையும், வீட்டையும் கட்ட முடியும்.

இன்று நம்முடைய சபை குடும்பமாய் இல்லாதிருந்தால், அதற்கு என்ன காரணம்? சந்தேகத்திற்கு இடமில்லாமல், நாம் தகப்பன் மார்களாய் இல்லாமல் உபாத்தியாயர்களாய் இருக்கிறோம் என்பதே காரணமாகும். நம்முடைய சபைகளிலுள்ள சகோதர சகோதரிகளுக்குப் போதிக்கும்படியாக அவர்களை 'மாணாக்கர்களைப்போல' நாம்

*காண்கிறோமா? அப்படியானால், நமக்குள் தவறான ஆவியே குடிகொண்டிருக்கிறது! நாம் தகப்பன்மார்களாய் இருந்தால் அவர் களைப் பொறுமையாகத் தாங்கிக் கொண்டு, அன்போடும் அக்கறை யோடும் அவர்கள் புரிந்து கொள்ளும் விதமாய் நடந்து கொள்பவர் களாய் இருப்போம். நாம் உண்மையாகவே தகப்பன்மார்களாய் இருக்கிறோமா? அல்லது உபாத்தியாயர்களாய் இருக்கிறோமா? என நம்மை நாமே சீர்தூக்கி நியாயந்தீர்த்துக் கொள்வது மிகவும் நல்லது. இதைத் தவிர்த்து சபையிலுள்ள சகோதர சகோதரிகளை "மாம்ஷீகத்திற் குரியவர்கள்" என குறை சொல்வதில் பிரயோஜனம் ஏதுமில்லை. நாம் முதலாவது நம்மையே நியாயந்தீர்த்துக் கொள்ளக்கடவோம்.*

**ஓர் உண்மையான ஆவிக்குரிய தகப்பன் யாதொன்றிலும் தன் சொந்த ஆதாயத்தை தேடாமல்,** *தன்னுடைய ஆவிக்குரிய பிள்ளைகளின் நன்மை யையும் நலனையுமே எப்போதும் தேடுவான். இதைப் பவுல் கூறும்போது, "நான் உங்களுக்கு பாரமாயிருப்பதில்லை; நான் உங்களுடையதையல்ல உங்களையேத் தேடுகிறேன்; பெற்றாருக்கு பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்கு பெற்றார்களே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டும்..... மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காக செலவுபண்ணவும், செலவு பண்ணப்படவும் விரும்புகிறேன்" (2கொரி 12:14,15) எனக் கூறினார். இவைகள்தான் ஒரு உண்மையான தகப்பனுடைய வார்த்தைகளாகும்!*

*ஓர் தகப்பனாய் இருப்பதற்கு பவுல் எல்லாவிதத்திலேயும் கிரயம் செலுத்த வேண்டியதாயிருந்தது.* "**கிறிஸ்துவை ஆதாயம் கொள்ளும்படி**" *இவ்வுலகில் தனக்கு ஆதாயமாக அல்லது லாபமாகப் பெற்றிருந்த யாவற்றையும் பவுல் குப்பையாகக் கருதினார். இதற்கொப்பாகவே தான் கிறிஸ்தவண்டை கொண்டுவந்த ஆத்துமாக்களுக்கு* **ஓர் தகப்பனாய் மாறும்படி** *தனக்குண்டான எல்லாவற்றையும் தியாகம் செய்ததையும் "தகுமென்றே" பவுல் கருதினார்.*

*ஓர் உபாத்தியாயன் சம்பளத்திற்காகவே வேலை செய்கிறான். தன் மாணாக்கர்களின் நலனைப் பிரதானமாய்த் தேடாமல் தன் சொந்த ஆதாயத்தையே இந்த உபாத்தியாயன் தேடுவான். ஒருவேளை நாம் எதிர்பார்க்கும் ஆதாயம் பணமாக இல்லாதிருக்கலாம். ஆனால் அதற்குபதிலாக "கனத்தை" நாம் பிறரிடமிருந்து தேடிட முடியும்! மற்றவர்கள் நம்மை 'தேவனுடைய ஊழியர்கள்' என அங்கீகரிக்கவும் மரியாதை செலுத்தவும் நாம் விரும்புகிறோமா? அப்படியானால் "கனம் செய்யப்படுதல்" என்ற சம்பளத்தையே நாம் பிறரிடமிருந்து எதிர்பார்க்கிறோம். ஆம், இப்போது நீங்கள் உபாத்தியாயர்கள்!..... தகப்பன்மார்கள் அல்லவே அல்ல!!*

*தகப்பன்மார்கள் தன் பிள்ளைகளுக்காகச் செய்யும் எல்லா வற்றிற்கும் பிரதியுபகாரமாக யாதொன்றையும் பிள்ளைகளிடமிருந்து எதிர்பார்க்கவே மாட்டார்கள். பவுல் தனக்கென மரியாதையையோ*

அல்லது அவர்களிடமிருந்து "அடங்கியிருத்ததலையோ கூட" (even submission) எதிர்பார்க்கவில்லை. ஆம், அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி ஒன்றையே பவுல் நாடினார். இப்போது நம்மைக் குறித்த காரியம் எப்படியிருக்கிறது? நாம் எதைச் செய்தாலும் அவையாவற்றிலும் நம் சகோதர சகோதரிகளின் நலன் ஒன்றையேத் தேடுகிறோமா?

இன்று கிறிஸ்தவ உலகில் நாம் காணும் "**பாஸ்டர் – நியமன அமைப்புகள்**" (pastor- system) ஆதி அப்போஸ்தல காலங்களில் கேள்விப் படாத ஒன்றாகும். வேத வசனத்துக்குப் புறம்பான இவ்வித அமைப்புகள் தான் இன்றைய கிறிஸ்தவ உலகில் ஏராளமான உபாத்தியாயர்களை உருவாக்கி விட்டன! இந்த உபாத்தியாயர்கள் எடுக்கும் வகுப்புகளுக்கு மாதாமாதம் சம்பளம் தரப்பட வேண்டும்!! இந்த மாணவர்கள் தங்கள் வாழ்வில் எடுக்க வேண்டிய ஒவ்வொரு தீர்மானங்களையும் குறிப்பாக "திருமணம் அல்லது வேலை வாய்ப்புகள்"..... போன்ற யாவையும் உபாத்தியாயர்களாகிய இவர்களைச் சார்ந்தே தீர்மானம் எடுக்கும்படிச் செய்து விடுகிறார்கள்!!

இது போன்ற சபைகளிலுள்ள சகோதர சகோதரிகள் **ஒருக்காலும்** வளரவே மாட்டார்கள். ஆம், இவர்கள் ஆவிக்குரிய குழந்தைகளாகவே என்றென்றுமாய் தேங்கி இருந்துவிடுவார்கள்! ஏனெனில் நாம் கண்ட "மனுஷீக அமைப்புகள்", தலையாகிய கிறிஸ்துவோடு இவர்கள் நேரடியாக தொடர்பு கொள்ளும் பாக்கியத்தைப் பறித்துவிடுவதாய் இருக்கிறது!!

தலையாகிய கிறிஸ்துவோடு இணைந்து வாழ்வதன்றோ புதிய உடன்படிக்கையில் யாவரும் பெற்றிருக்கும் சுவீகார சுதந்திரம்!! அந்தோ, இச்சுதந்திரத்தை ஒருவன் இழப்பது கொடிய பரிதாபம்!!

ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்காக எவ்வாறு அக்கறை கொண்டிருப்பான்? ஓர் ஏழை வீட்டில் போதுமான உணவு இல்லையென்றால், தன் பிள்ளைகள் சாப்பிடும்படி அந்த வீட்டிலுள்ள தகப்பனும் தாயும் சாப்பிட மாட்டார்கள்! தங்களைத் தாங்களே சந்தோஷமாய் வெறுக்கும் இவர்கள், தாங்கள் சாப்பிடாதிருந்ததை தங்கள் பிள்ளைகள் அறிந்து கொள்வதைக் கூட விரும்ப மாட்டார்கள்!! ஏனெனில் அதனிமித்தமாய் தங்கள் பிள்ளைகள் மனவருத்தம் அடைந்துவிடக் கூடாதென எண்ணுவார்கள். ஆம், ஓர் நல்ல தகப்பன் தன் சுய - ஒடுக்கத்தை தன் பிள்ளைகளிடத்திலிருந்து மறைத்துக் கொள்வான். இவ்விதமாய், சகோதர சகோதரிகளின் நன்மைகளுக்காய் தன் சுயத்தை ஒடுக்கி அதை அவர்கள் அறிந்து கொள்ளாதிருக்கும் படியான "நல்ல ஆவி" நம்மிடத்தில் இருக்கிறதா?

ஓர் நல்ல தகப்பன் தன்னுடைய பிள்ளைகள் தன்னைக் காட்டிலும் கல்வியிலும் மற்றும் உள்ள ஒவ்வொரு பகுதியிலும் முன்னேறிச் செல்வதைக் காண வாஞ்சை கொண்டிருப்பான். இது ஒரு தகப்பனுக்கு இருக்கவேண்டிய மற்றொரு குணாதிசயமாகும். உயர்நிலைப்பள்ளிக்கு மேலாக கல்வி கற்காத பல தகப்பன்மார்கள், ஏராளமான தியாகம்

*செய்து தங்கள் பிள்ளைகளுக்கு கல்லூரிப் படிப்பை தருவதை நாம் காண்கிறோம். இதற்காக இவர்கள் தங்கள் சொந்த சௌகரியங்களை ஒடுக்கிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறார்கள்! தங்கள் பிள்ளைகள் பட்டம் பெறும் நாளில் பேரானந்தம் அடைகிறார்கள்!! தன்னுடைய தகுதி அல்லது தன்னுடைய கவ்வியளவைக் காட்டிலும் தன் மகன் முன்னேறிச் செல்வதைக் கண்டு எந்த ஒரு தகப்பனும் பொறாமை கொள்ளவே மாட்டான்!!*

*இந்த தகப்பனுக்கு ஒப்பாகவே ஓர் உண்மையுள்ள தேவனுடைய ஊழியனும் இருப்பான். இளைய சகோதரர்கள் முழு இருதயம் கொண்டவர்களாய், வேத வாக்கியங்களில் வெளிப்பாடு பெறுகிறவர் களாய், மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்கும்படி ஆண்டவரால் உபயோகப்படுத்தப்படுவதை காண்பதில் இந்த உண்மை ஊழியன் பெருமகிழ்ச்சியடைவான். மேலும், அவர்கள் தன்னைக் காட்டிலும் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேற வேண்டுமென உண்மையாகவே வாஞ்சிப்பான். ஆம் தன்னை ஆண்டவர் உபயோகித்ததைக் காட்டிலும் அவருடைய கரத்தில் அவர்கள் அதிக உபயோகமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் எனவும் விரும்புவான்!*

**ஒரு நல்ல தலைமையின் கீழ் பாதுகாக்கப்பட்டதினிமித்தம்,** *தங்கள் ஜீவியத்தில் மதியீனமான யாதொன்றையும் செய்யாமல், இளைய சகோதரர்கள் ஓங்கி வளர்வதை நாம் காணும்போது, நம்முடைய இளமை காலத்தில் பெற்றிராத ஆசீர்வாதத்தை அவர்கள் பெற்றிருப் பதைக் கண்டு நாம் களிகூர்ந்திட வேண்டும்! நாம் தகப்பன்மார்களாய் இருந்தால் நம்மில்* **'பொறாமை' கடுகளவும் கூட** *உண்டாகாது!! அதற்குபதிலாக நாம் களிகூர்ந்திட மாத்திரமே செய்திருப்போம். சகலமும் அவர்களில் நேர்த்தியாய் நடப்பதைக் கண்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகிறவர்களாகவே இருப்போம்.*

*ஒரு இளைய சகோதரனின் ஊழியத்தினிமித்தம் அல்லது சபையில் அவர் பெற்றிருக்கும் மதிப்பினிமித்தம் அல்லது அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியினிமித்தம் நாம் பொறாமை கொண்டால், நாம் உண்மையில் உபாத்தியாயர்களாகவே இருக்கிறோம்! ஆம், தகப்பன் மார்கள் அல்லவே அல்ல!! ஒரு பள்ளிகூடத்தில், உபாத்தியாயர் போட முடியாத கணக்கை ஓர் மாணவன் போட்டுத் தீர்த்து வைத்துவிட்டால், அந்த உபாத்தியாயர் கடுங்கோபங்கொண்டு, பொறாமையும் அடைந்து விடுவார். மேலும், அதுமாத்திரமல்லாமல் அவர் அந்த மாணவனை ஏதாகிலும் ஒருவகையில் இழிவுபடுத்தவும் சந்தர்ப்பத்தை நாடுவார். சரி, இப்போதும் நம்மைப் ஒப்பிட்டுப் பார்ப்போம்! தேவனுடைய ஊழியர்களாகிய நம்மிடம், சில குறைகளை யாராவது சுட்டிக் காட்டினால் அதை நாம் எவ்விதமாய் எடுத்துக்கொள்கிறோம்?*

*ஆம், உபாத்தியாயர்கள் பாபிலோனை மாத்திரமே கட்ட முடியும். தகப்பன்மார்கள் மாத்திரமே உண்மையான சபையாகிய புதிய எருச*

லேமைக் கட்ட முடியும். நாம் புதிய உடன்படிக்கையின் சத்தியங்களை நன்றாக புரிந்து கொண்டவர்களாய் அவையாவற்றையும் விளக்கத்துடன் பிரகடனம் செய்கிறவர்களாய் இருக்க முடியும். இருப்பினும், இவைகள் நாம் ஓர் உபாத்தியாயனுடைய ஆவியில் செய்வோமென்றால் நாம் இன்னமும் பாபிலோனைத்தான் கட்டிக் கொண்டிருப்போம்!

ஒரு உபாத்தியாயன், தன்னுடைய மாணாக்கர்களுக்கு உழைத்த பிரயாசங்களை எப்போதும் தன் மனதின் ஞாபகக்கணக்கில் வைத்திருப்பான். தன்னுடைய மாணவர்கள் நேர்த்தியாய்ச் செய்தால் அதனிமித்தம் வரக்கூடிய **"புகழ்ச்சியை" எதிர்பார்த்துக்** காத்திருப்பான் 'நல்ல மாணாக்கர்களை' உருவாக்கிய உபாத்தியாயனும் கூட, அதன் மூலம் தனக்கு என்ன லாபம் வருமென்றே சதா எண்ணிக் கொண்டிருப்பான். ஆனால் ஒரு தகப்பனோ இவையாவற்றிற்கும் வேறுபட்டவனாயிருக்கிறான். இவனுடைய விருப்பங்கள் யாவும் தன்னுடைய பிள்ளைகளின் நலன்கள் மாத்திரமேயாகும்! ஆம், தகப்பன் தனக்கென யாதொரு ஆதாயத்தையும் விரும்பவே மாட்டான்!!

ஒரு உபாத்தியாயன் தன்னுடைய மாணவர்களை தாராளமாய் குறை சொல்லிப் பேசுவான், ஒரு தகப்பனோ தன் பிள்ளைகளை உற்சாகப்படுத்தவே செய்வான். சபையில் உள்ள சகோதர சகோதரிகளை குறை கூறிப் பேசுபவைகள் யாவும் உண்மையாக இருக்கலாம்.... ஆனால் ஒரு தகப்பனோ தன் பிள்ளைகளை உற்சாகப்படுத்துவதின் மூலமாய் ஆக்கபூர்வமான பலனை பெற்றிருப்பான்!

ஓர் நல்ல தகப்பன் நன்றியில்லாத பிள்ளைகளிடத்திலும், பொல்லாத பிள்ளைகளிடத்திலும் **தொடர்ச்சியாய் அன்புடன் நடந்து** கொள்வான். ஆனால் ஒரு உபாத்தியாயனோ நன்றியில்லாத மாணவர்களைத் துரிதமாய் ஒதுக்கி வைத்துவிடுவான்.

சபையில், கடினமான சகோதரர்கள் மூலமாய் பிரச்சனைகள் தோன்றும்போது, அவர்கள் சபையைவிட்டே போய்விட்டால் நலமா யிருக்கும் என நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தால், நம்மிடத்தில் உள்ள ஆவி உபாத்தியாயனுடைய ஆவியே என்பதை தெளிவாக அறிந்து கொள்ளக்கடவோம். ஏனெனில் ஒரு தகப்பன் தன்னுடைய எந்த பிள்ளைகளுக்கும் இவ்வாறு சம்பவித்திட விரும்பவேமாட்டான்!

பரமண்டலங்களிலிருக்கிற நம்முடைய பிதா இரக்கம் உள்ளவராய் இருப்பதைப் போலவே நாமும் இரக்கம் உள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்றும், நன்றியில்லாத பொல்லாத ஜனங்களிடம் அன்புள்ள வர்களாய் நடக்கும்படிக்குமே இயேசு போதித்தார் (லூக்கா 6 : 35,36).

நாம் நீதியைப் பின்பற்றி வாழும் வாழ்க்கையில் தொடர்ச்சியாக 'இரக்கமுள்ளவர்களாய்' இருப்பதை நாம் தேடவில்லையென்றால், நாம் வெகு சீக்கிரத்தில் பரிசேயர்களாகவும் உபாத்தியாயர்களாகவும் மாறிவிட முடியும்!

**தன் தகப்பனிடம், மூத்த மகன் கொண்டிருந்த வேறுபாடு :**

கெட்ட குமாரனின் உவமையிலிருந்து தேவ அன்பின் ஆழத்தை நாம் ஒரளவு கற்றுக்கொள்ள முடிகிறது. தன்னை விட்டு பின்மாற்றம் அடைந்து, தன்னுடைய (தேவனுடைய) நன்மையான ஈவுகளை இச்சையின்படி செலவிட்டு சீரழித்த மகனிடம் அவர் காட்டிய அன்பை நாமும் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் இங்குதான் அதிகமான திவ்விய சுபாவத்தை நாம் கற்றுக் கொள்ள முடிகிறது. இப்போது இதே திவ்விய சுபாவத்தில்தான் நாமும் பங்கடைந்திட வேண்டும்!

வழிதப்பிப்போன பையனின் மூத்த சகோதரனுக்கும், அவனுடைய தகப்பனுக்கும் இடையே காணும் நேருக்கு - மாறான மனப்பான்மையை இந்த உவமையின் மூலமாய் நாம் அறிந்து கொள்கிறோம். இந்த வித்தியாசமே ஒரு உபாத்தியாயனுக்கும் ஒரு தகப்பனுக்கும் உள்ள வித்தியாசமாகும்.

மூத்த சகோதரன் உண்மையிலேயே நேர்மையுள்ளவன். ஆனால் அவனுக்கோ தன்னுடைய இளைய சகோதரன் மீது எந்த அன்பும் அக்கறையும் இல்லாதிருந்தது. அவனிடத்தில் உள்ள குறைகளை மாத்திரமே இந்த மூத்த சகோதரன் கண்டான். இன்று அநேக கிறிஸ்தவ தலைவர்களும் இவ்விதமாகவே இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் சகோதர, சகோதரிகளிடம் துரிதமாய் நிதானமிழந்து, அவர்களைக் குறைகூறி கடிந்துகொள்கிறார்கள்.

ஆனால் இந்த உவமையில் காணும் தகப்பனை சற்று கவனித்துப் பாருங்கள். அவரிடத்தில் காணப்பட்ட ஆவிதான் எத்தனை மேலானது! தேவன் எவ்வாறு இருக்கிறார் என்பதை உண்மையிலேயே இந்த தகப்பன் நேர்த்தியாய் சித்தரிக்கிறார். நாம் தேவனுடைய சுபாவத்தில் பங்கு பெறும்போது **நாமும் இந்த தகப்பனைப் போலவே** மாறிவிட முடியும். மூத்த சகோதரன், தன்னுடைய இளைய சகோதரன் செய்த தீமையான யாவையும் மறக்காமல் மனதில் வைத்திருந்தான். அவைகளை யெல்லாம் பகிரங்கப்படுத்துவதில் மகிழ்ச்சியும் கொண்டான். ஆனால் அந்த தகப்பனோ அத்தீமைகளை யோசித்துப் பார்க்கக்கூட விரும்பவில்லை!

ஆரம்பத்தில் அவிசுவாசியாய் இருந்த நாம் மனந்திரும்பி ஓர் விசுவாசியாய் மாறினோம். ஆனால் ஓர் புதிய உடன்படிக்கை ஊழியர் களாய் நாம் இருக்க வேண்டுமென்றால் நமக்குள் இரண்டாவது மாற்றம் ஏற்பட வேண்டும். அதாவது "மூத்த சகோதரனாய்" இருப்பதிலிருந்து "கிறிஸ்துவைப் போல்" மாறிட வேண்டும்!!

தேவனுடைய ஊழியனாயிருக்கும் உங்கள் அதிகாரத்தை யாராகிலும் ஒரு சகோதரன் எதிர்த்து முரட்டாட்டம் செய்திருக்கிறாரா? நீங்கள் பல வருடங்களில் நன்மை ஒன்றையே செய்திருக்க அவர் உங்களுக்கெதிராக ஏராளமான தீமைகளைப் பேசினாரா? இப்போது அவரைக்குறித்து உங்கள் மனநிலை எப்படியிருக்கிறது? ஒரு உபாத்தியாயனுக்குரிய மனப்பா

ன்மையா? அல்லது ஓர் தகப்பனுக்குரிய மனப்பான்மையா? சபையில் உள்ள முழு இருதயமான நல்ல சகோதரர்கள் மூலமாய் நாம் அவ்வளவாய் சோதிக்கப்படுவதில்லை. ஆனால், முரட்டாட்டம் செய்யும் சகோதரர்கள் மூலம் நாம் அதிகமாய் சோதிக்கப்பட முடியும்.

நூறு சிறந்த ஆவிக்குரிய சகோதரர்களை விட ஒன்று அல்லது இரண்டு முரட்டாட்டமான சகோதரர்கள் **நம்முடைய உண்மையான ஆவிக்குரிய நிலையை** வெளியரங்கப்படுத்தி காண்பித்துவிட முடியும். ஏனெனில், கடினமான சகோதரர்கள் தான், நம்முடைய மாம்சத்தின் மூலை முடுக்குகளில் மறைந்திருக்கும் இச்சைகளைக் காண்பதற்கு வெளிச்சத்தைக் கொண்டுவரும் 'வழியாய்' அமைகிறார்கள்.

இதனிமித்தமே, நாம் முழு இருதயமான விசுவாசிகளுக்காக மாத்திரமல்லாமல் "எல்லா மனுஷருக்காகவும் எப்போதும் ஸ்தோத்திரம் செய்யும்படி" புத்தி சொல்லப்பட்டிருக்கிறோம் ( 1தீமோ. 2:1) நம்முடைய வாழ்வில் நாம் சந்திக்க நேரிடும் "ஒவ்வொருவரும்" ஏதாகிலும் ஒரு வழியில் நம்முடைய பரிசுத்தமாகுதலுக்கு உதவுகிறவர் களாகவே இருக்கிறார்கள்.

உங்கள் ஸ்தலத்தில் பல வருடங்களாய், உங்களை "ஆவிக்குரிய தகப்பன்" என நீங்களாக எண்ணிக்கொண்ட வஞ்சகத்தில் வாழ்ந்து கொண்டிருக்க முடியும். இப்போதோ உங்கள் சபையில் ஓர் கடினமான சகோதரன் எழும்பி விட்டார்! அந்த சகோதரன் மீது உங்களுக்கு உண்டாகும் மனப்பான்மையை வைத்து நீங்கள் ஒரு தகப்பனாய் இல்லையென்பதையும், உண்மையில் ஓர் உபாத்தியாயனாகவே இருந்தீர்கள் என்பதையும் மிகத் துரிதமாய் இப்போது நீங்கள் கண்டுகொள்ள முடியும்!

**ஆம், சபையில் பல வருடங்களாய் உங்களோடிருந்த முழு இருதயமான சகோதரர்கள் காண்பிக்க முடியாத உங்கள் உண்மை நிலையை இந்த கடினமான சகோதரர்கள் காட்டிவிட்டார்கள்!!** இவ்வாறு உங்களை நீங்களே எந்நாளும் ஏமாற்றிக் கொண்டிருந்த நிலையிலிருந்து உங்களை இரட்சித்த இவ்வித சகோதரர்களுக்காக நீங்கள் நன்றியுள்ளவர்களாய் (ஸ்தோத்திரம் செய்கிறவர்களாய்) இருக்க வேண்டுமல்லவா?

உங்களுக்கு தவறான விதத்தில் 'உரசல்' ஏற்படுத்தும் சகோதரர்களை உங்களால் தாங்கிக்கொள்வது கஷ்டமாயிருப்பதை உணரும் வேளையில், நீங்களும் உங்களை அறியாமலே அந்த சகோதரர்களுக்கு கஷ்டத்தையும் பிரச்சனையையும் உண்டாக்கியிருக்க முடியும் என நீங்கள் அறிந்து கொண்டால், அது எவ்வளவு நலமாயிருக்கும்!!

நம்மில் ஒருவராகிலும் பூரணமானவர்கள் அல்ல. நம் யாவருக்கும் ஓர் மாம்சம் இருக்கிறது. இவ்வாறு ஓர் மாம்சத்தையுடைய ஒவ்வொருவரும் இதே மாம்சத்தையுடைய மற்றவர்களைத்தாங்க வேண்டியது நியாயமான நியதியேயாகும்!! நம்மைக் காட்டிலும் அதிக முதிர்ச்சியடைந்தவர்கள்,

*நம்மிலே நாம் காண முடியாத 'கிறிஸ்துவைப் போல் அல்லாத' நம்முடைய சுபாவங்களை அவர்கள் காண முடியும். "இந்நிலையில்" இளையவர்களாகிய நம்மை முதிர்ச்சியடைந்த சகோதரர்கள் தாங்கிக் கொள்வது எவ்வளவு அவசியமாயிருக்கிறது!*

*உங்களுக்கு ஓர் கடினமான மனைவியிருந்தாலும் அந்த மனைவியை நீங்கள் தாங்கிக்கொண்டு அவளை அன்புகூர்ந்து அவளைக் குறித்து ஒரு குறையும் சொல்லாதவர்களாய் நீங்கள் இருப்பதாக நீங்களே எண்ணிக் கொள்ளலாம். இவ்வித உங்களின் "கிறிஸ்துவைப் போன்ற சுபாவத்தை" நீங்களாகவே இரகசியமாய் மெச்சிக் கொள்ளவும் செய்யலாம்! ஆனால், உங்கள் மனைவியும் உங்களைக்குறித்து நீங்கள் எண்ணுவதைப் போலவே உணரமுடியும் என்ற உண்மையை நீங்கள் அறியாதவர்களாய் இருக்கலாமா? ஆம், இவ்வளவு கஷ்டமான கணவனோடு வாழ்ந்த அவரைத் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறதே என அவள் தனக்குள் எண்ணிக் கொண்டிருக்க முடியும்!!*

*காரியம் இவ்வாறாய் இருப்பதால், நம்மைக்குறித்து எப்போதும் "தாழ்மையான சிந்தை கொண்டிருப்பது" நமக்கு நல்லது. நாம் நம்மில் காண முடியாத பிழைகள் நமக்குள் இருக்கிறது என்ற உண்மையை அறிந்து கொள்வது எத்தனை நல்லது!!*

> கெட்டகுமாரனுடைய நடத்தை அவனுடைய தகப்பன் இருதயத்திலிருந்து சொல்லி முடியாத நன்மைகளைக் காண்பதற்கு வகை செய்தது. அவன் நல்லமகனாகவே வீட்டிலிருந்தபடியால், தகப்பனின் இத்தனை அருமையான நற்குணங்களை அவன் கண்டிருக்கவே முடியாது!

*இந்த கெட்ட குமாரனுக்கு ஒப்பாக ஏதாவது பிரச்சனை நம்முடைய சபையில் (அல்லது நம்முடைய வீட்டில்) ஒரு சகோதரன் நிமித்தம் (அல்லது நம்முடைய குடும்பத்திலுள்ள யாரோ ஒருவரினிமித்தம்) உண்டாகலாம். அச்சமயம், தேவன் நம்மூலமாக "அவருக்குரிய தகப்பனின் இருதயத்தை" தவறு செய்யும் அந்த சகோதரனுக்கோ அல்லது மனைவிக்கோ அல்லது மகனுக்கோ, மகளுக்கோ வெளிப்படுத்த விரும்பும் ஓர் அரிய சந்தர்ப்பமாகவே நாம் கருத வேண்டும்.*

*இதற்கு மாறாக, இது போன்ற சூழ்நிலைகளில் "ஒரு உபாத்தியாய னுடைய இருதயத்தை" நாம் வெளிப்படுத்துவோமென்றால் தேவன் எவ்வளவாய் ஏமாற்றமடைவார் என்பதை எண்ணிப்பாருங்கள்!*

*யாரோ ஒரு சகோதரன் உங்கள் உடைமைகளை எடுத்துக் கொண்டுபோனதினிமித்தம், உங்களுடைய பெயரும் சபையின் நற்பெயரும் அவனுடைய நடத்தையால் பாதிக்கப்பட்டு விட்டதா? இந்த சகோதரன் ஒருநாளில் மனந்திரும்பி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? "இவருடைய மனந்திரும்புதல் உண்மை யானதுதானா?" என்பதை அறிவதற்கு சில மாதங்கள் அந்த சகோதரனை உங்கள் வீட்டு வேலைக்காரர் தங்குமிடத்தில் குடியமர்த்தி விடுவீர்களா?*

*அல்லது கெட்டகுமாரனின் தகப்பனைப் போல மகிழ்ச்சியுடன்*

ஓடிச்சென்று, அச்சகோதரனை அணைத்துக் கொண்டு வீட்டிற்கு அன்புடன் வரவேற்பீர்களா? இச்சமயத்தில் நீங்கள் என்ன செய்வீர்கள் என்பது - நீங்கள் ஓர் தகப்பனா? அல்லது உபாத்தியாயனா? என்பதையே சார்ந்திருக்கிறது. ஒரு உபாத்தியாயன்கூட கெட்ட மனிதனை மீண்டும் ஏற்றுக்கொள்ள முடியும்..... ஆனால், அது பாசமுள்ள அன்பின் வரவேற்பாய் நிச்சயம் இருக்காது! பரலோகத்திலோ, மனந்திரும்பும் ஒவ்வொரு பாவியினிமித்தமும் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கிறதே! அதே சந்தோஷத்தை நாமும் பகிர்ந்து கொள்ள வில்லையென்றால், நம்மில் ஏதோ பிழை இருக்கிறது என்றே காண வேண்டும்.

கெட்டகுமாரனின் மூத்த சகோதரனுக்கோ "ஒரு உபாத்தியாயனு டைய ஆவி" இருந்தது. அவன் தன்னுடைய தகப்பனிடத்தில் திரும்பி, "நான் இத்தனை வருடங்களாய் எவ்வாறு வாழ்ந்தேன் என்பது உமக்குத் தெரியும். நான் ஒரு தவறும் செய்யவில்லை. நான் எப்போதும் வைராக் கியமும் முழு இருதயமும் கொண்டவனாய் இருந்தேன். உண்மையுள்ள வனாய் உங்களிடத்தில் வேலை செய்துகொண்டிருந்தேன். ஆனால் உம்முடைய இந்த மகன் எப்படியெல்லாம் நடந்து கொண்டான் என்பதை சற்றே ஒப்பிட்டுப் பாரும்!" எனப் பொருமலுடன் கூறினான்.

இதற்கொப்பாகவே, ஒரு 'உபாத்தியாயனும்' தன் சபையில் வீழ்ச்சியுறும் மாம்ஷீகமானவர்களோடு, தன் நற்குணத்தையும் உண்மை யையும் ஒப்பிட்டுப் பார்ப்பவனாகவே இருப்பான். **தேவனுடைய கிருபையின் ஐசுவரியத்தை விட சகோதரனின் குறைகளே அவனுடைய மனதில் நிறைந்திருக்கும்.** இந்த குணாதிசயமே இயேசுவின் காலத்தில் வாழ்ந்த பரிசேயர்களிடம் பிரதானமாய் காணப்பட்டது. ஆம், ஓர் உபாத்தியாயனின் ஆவியை உடையவர்கள் யாவரும் பரிசேயர்கள்!

கெட்டகுமாரனின் மூத்த சகோதரன் கூறியவைகளில் கொஞ்சம் உண்மை இருக்கத்தான் செய்தது. அதாவது, அவன் கூறியபடி கெட்ட குமாரன் "தகப்பனின் ஆஸ்திகளை அழித்துப்போட்டான்" என்பது உண்மைதான். ஆனால், ஆஸ்திகளை அவன் "வேசிகளுக்கு விற்றுப் போட்டான்" என்ற தகவலை இவனிடத்தில் யார் கூறினார்கள்? அதெல்லாம் அவனுடைய சொந்த கற்பனைகளேயாகும். இவ்வாறாக அனுமானமான அபாண்டங்களை வீசுவது ஓர் உபாத்தியாயனுடைய குணாதிசயமேயாகும். இந்த உபாத்தியாயனுக்கு எதிராக யாராவது எழும்பிவிட்டால், அந்த நபரைக் குறித்த கெட்டவைகளையே இந்த உபாத்தியாயன் எப்போதும் எண்ணிக் கொண்டிருப்பான்..... கெட்டவை களையே நம்பவும் செய்வான்! மேலும் அந்த நபருடைய பாவங்களை வெளி யரங்கப்படுத்தி வெட்கத்திற்குள்ளாக்குவதில் மகிழ்ச்சியும் அடை வான்!!

நாம் பிறரைக் குற்றப்படுத்தும்போது, நாம் சொல்லிய யாவும் நூற்றுக்கு நூறு உண்மை எனக் கூறுவதில் ஒரு அர்த்தமுமில்லை. **ஏனெனில் நாம் சொல்லிய அனைத்தும் உண்மையாக இருந்தாலும், நம்முடைய ஆவியோ நூற்றுக்கு நூறு தவறாய் இருக்க முடியும்!** ஏனெனில் நம்முடைய ஆவி

'சகோதரனைக் குற்றம் சாட்டுகிறவனோடு' (சாத்தனோடு) ஐக்கியம் கொண்டிருக்கிறதே!! (வெளி.12:10).

எப்படியெனில், தேவனுடைய பிள்ளைகளை, சாத்தான் ஆண்டவரிடத்தில் குற்றம் சாட்டும்போது, அவன் சொல்லிடும் தகவல் யாவும் நூற்றுக்கு நூறு உண்மையாகத்தான் இருக்கும் என்பதை நாம் யாவரும் எளிதாக ஒத்துக்கொள்ள முடியும். ஏனெனில், சாத்தான் "தேவனுக்கு முன்பாக" துணிந்து பொய் சொல்லிட முடியாது. ஆனால், அவனுடைய ஆவியோ முழுக்க முழுக்க குற்றம் சாட்டும் ஆவியேயாகும். நாம் கவனமாயிராவிட்டால், நமக்கு அவ்விதமே சாத்தானுக்குரிய ஆவி பீடித்திட முடியும். ஆகவே, "நான் எல்லாவற்றையும் கவனமாய் சோதித்த பின்பே உண்மையைக் கண்டறிந்தேன்" என எளிதாய் கூறி நாம் திருப்தி கொள்ளாதிருக்கக்கடவோமாக! ஏனெனில் எல்லாம் உண்மையாய் இருந்தாலும், நம்முடைய ஆவியோ நரகத்தின் நாற்றத்தால் பீடிக்கப்பட்டிருக்க முடியும்.

இதற்கு நேர்மாறாக, நாம் தகப்பனாய் இருந்திருப்போமென்றால், ஒரு சகோதரன் செய்த **திரளான பாவங்களை "மூடுவது"** மாத்திர மல்லாமல், அந்த சகோதரன் மனந்திரும்பும்போது மகிழ்ச்சியும் அடைந்திடுவோம். ஆம், "கொழுத்த கன்றை அடித்து.... சந்தோஷ மாயிருப்போம்!" (லூக்.15:23). இவ்வாறு இருப்பது உண்மையிலேயே ஓர் உயர்ந்த நிலையை அடைவதாகும். இருப்பினும் நாமோ அந்த இடத்தை அடையும் வரை முன்னேறிச் செல்பவர்களாய் இருக்க வேண்டும். இதற்கு மாறாக, நாம் ஏற்கனவே இந்த நிலையை அடைந்து விட்டதைப்போல் நாமாகவே எண்ணிக்கொண்டு நம்மை நாமே வஞ்சித்துக் கொள்ளாதிருப்போமாக!

இவ்வாறு, நாம் பிறருக்கு ஓர் உண்மையான தகப்பனாய் இருப்பதற்கு வேண்டிய தேவனுடைய கிருபையைப் பெறும்படி அவரிடம் மன்றாடி கெஞ்சி நிற்போமாக!

**தாவீதும் அப்சலோமும் :**

ஒரு சமயம் தாவீதின் ஜீவியத்தில் அவனுடைய மகன் அப்சலோம், தன் தகப்பனுக்கு விரோதமாகவே திட்டம் தீட்டினான். அதன் மூலமாய் திரளான இஸ்ரவேலர்களின் இருதயங்களைத் தன் பக்கமாய் கவர்ந்து கொண்டு, முடிவில் தன் தகப்பன் தாவீதை சிம்மாசனத்திலிருந்தே துரத்தி விட்டான்.

ஆனால், அச்சமயத்தில் சில நண்பர்கள் தாவீதோடு கூடி துணையாய் நின்றார்கள். அவர்கள் யாவரும் முதல்தரமான போர் வீரர்களாயும், போர்களத்தில் நின்று தாவீதுக்காக யுத்தம் செய்ய ஆயத்தம் உள்ளவர்களாயும் இருந்தார்கள். இந்த வீரர்கள் ஒருநாளில் அப்சலமோடு யுத்தம் செய்வார்கள் என தாவீதுக்கு நன்றாகத் தெரியும். ஆகவேதான், தன் படைத்தளபதியாகிய யோவாபிடம் "பிள்ளை

*யாண்டானாகிய அப்சலோமை என்னிமித்தம்* **மெதுவாய் நடப்பியுங்கள்** (Deal Gently)'' *என கட்டளை கொடுத்தான் (2 சாமு.18:5).*

*இவ்வாறாகவே, நாமும் எப்போதெல்லாம் சபையிலுள்ள கடினமான சகோதரர்களோடு இடைபட வேண்டியிருக்கிறதோ, அச்சமயங்களில்* **தாவீது அப்சலோமுக்காக சொன்னவார்த்தைகள்** *நம்முடைய மனதிற்கு முன்பாக கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கக் கடவதாக! ஆம், "கர்த்தர் நிமித்தமாய் அந்த சகோதரனை மெதுவாய் நடப்பியுங்கள்* (DEAL GENTLY)'' *என்பதே தாவீதோடு இணைந்து நாமும் கூறவேண்டிய அற்புத வார்த்தைகளாகும்.*

*பின்நாட்களில் "அப்சலோம் கொல்லப்பட்டான்'' என்ற செய்தியை தாவீது கேட்டவுடன், தாவீது மிகவும் அழுது, "என் மகனாகிய அப்சலோமே,* **நான் உனக்குப்பதிலாக செத்தேனானால்** *நலமாயிருக்கும்''(2சாமு.18.33) எனக் கூறினான். பார்த்தீர்களா, தாவீது ஒரு உபாத்தியாயன் அல்ல! முரட்டாட்டம் செய்த மகனிடத்தில்* **ஓர் தகப்பனின் இருதயம்** *கொண்டவனாகவே இருந்தான். இந்த தாவீது "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷன்'' என அழைக்கப்பட்டதில் ஆச்சரியமேது மில்லை!! ஏனென்றால் தாவீதின் இருதயத்தைப் போலவே, தேவனுடைய இருதயத்தின் விருப்பமும் இருந்தது. அதாவது, "நான் உன்னுடைய இடத்தில் மரித்திடவே விரும்புகிறேன்'' என்பதுதானே அவருடைய விருப்பம்!! தேவனுடைய இந்த விருப்பத்தின் பிரதிபலிப்பாகவே, இயேசு கல்வாரியில் நமக்காக மரித்தார். இவ்வாறு தேவனுடைய இருதயத்தோடு நாம் ஐக்கியத்தில் பிரவேசிக்கும்போதுதான், நாம் தகப்பனாய் மாறுகிறோம்!*

*மனுஷனிடமுள்ள பாவத்தை கடிந்து கொள்வதற்கு இயேசு உரிமை உடையவராய் இருந்தார். ஏனெனில், மனுஷனைப் பாவத்திலிருந்து விடுவிக்கும்படி, தான் மரிப்பதற்கு அவர் ஆயத்த மாயிருந்தார். இதைப்போலவே, நாமும் பிறரை பாவத்திலிருந்து விடுவிப்பதற்காக மரிப்பதற்கும் ஆயத்தமாயில்லையென்றால், பிறருடைய பாவத்தை கடிந்து கொள்வதற்கு நமக்கு எவ்வித உரிமையுமில்லை!!*

*இயேசு சுட்டிக்காட்டிய* "**மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கும்**'' *இந்த இடத்திற்கு வந்தால் மாத்திரமே நாம் உண்மையான தகப்பனாய் இருக்க முடியும். இல்லாவிட்டால், நாம் உபாத்தியாயர்களாக மாத்திரமே தேங்கி நின்றுவிடுவோம்!*

**மேய்ப்பர்களும் கூலியாட்களும் :**

*ஆண்டவர், எசேக்கியேல் 34:3-6 வசனங்களில் "இஸ்ரவேலின் மேய்ப்பர்களைக்'' கடிந்து கொண்டார். இந்த மேய்ப்பர்கள் ஆட்டின் நிணத்தை சாப்பிட்டு, தங்கள் மந்தையின் ஆட்டு மயிரினால் தங்களை உடுத்திக் கொண்டார்கள்! இவ்வாறெல்லாம் சகித்துக் கொண்டு பலவீனமானவைகளை பலப்படுத்தவோ, நசல் கொண்டவைகளை*

*குணமாக்கவோ, எலும்பு முறிந்தவைகளை காயம் கட்டவோ இல்லை! மேலும், இவர்கள் சிதறுண்ட ஆடுகளைத் திரும்பக் கொண்டுவரும்படி அவைகளைப் பின்தொடரவோ அல்லது காட்டு மிருகங்களிடமிருந்து அவைகளைக் காக்கவோ இல்லை! ஆனால் அதற்குப் பதிலாக இவர்கள் மந்தையை பலாத்காரமாயும், கொடூரமாயும் ஆண்டார்கள்! யார் இவர்கள்? உண்மையான மேய்ப்பர்களா? அல்லவே அல்ல, கூலியாட்கள்!!*

*கூலியாட்கள், உபாத்தியாயருக்கு ஒப்பானவர்கள்! இவர்கள் தங்களுக்கானதைத் தேடி, சம்பளத்திற்காய் ஊழியம் செய்பவர்கள்!!*

*இதற்கு மாறாக 11-16 - வசனங்களில் ஓர் உண்மையான மேய்ப்பன் எவ்வாறு நடந்து கொள்வான் என கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இந்த மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக அக்கறை கொள்கிறான். அவைகளைப் போஷிக்கிறான். இளைப்பாறி இருக்கும்படி நடத்து கிறான். காணாமற் போனவைகளைத் தேடுகிறான். பின்மாறிச் சென்றவைகளைத் திரும்பவும் கொண்டுவருகிறான். வியாதிப்பட்ட ஆடுகளை பெலனடையச் செய்கிறான்..... ஆம் ஓர் நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனையே கொடுத்து விடுவான்!*

**ஓர் ஆவிக்குரிய தகப்பன் இவ்வாறாகவே தன் மந்தைக்கு ஓர் நல்ல மேய்ப்பனாய்த் திகழ்கிறான். இதுவே புதிய உடன்படிக்கையின் ஊழியர்களாகிய நம்முடைய அழைப்பு ஆகும்!**

*நாம் ஏதோ கூட்டங்களில் பிரசங்கிப்பதை மாத்திரமே நம்முடைய ஊழியமாய் ஒருக்காலும் எண்ணிவிடக்கூடாது. ஒருவேளை எங்கேயோ இருக்கும் சோர்வுற்ற சகோதரனைச் சந்தித்து அவரை உற்சாகப்படுத்தும் வார்த்தைகளைப் பேச வேண்டியதாய் இருக்கலாம், அல்லது சாத்தனால் பீடிக்கப்பட்ட சிலரை விடுவிக்க வேண்டியதாயிருக்கலாம். இது போன்ற ஜனங்களை, சாத்தானாகிய "சிங்கத்தின் வாயில் அகப்பட்ட" ஆடுகளைப் போலவே நாம் காண வேண்டும் (1பேது.5:8). இவ்வேளையில் நாம் என்ன செய்ய வேண்டும்? ஆம், தாவீதைப் போலவே சிங்கத்தை எதிர்கொண்டு, முறியடித்து, ஆடுகளை அதன் வாயிலிருந்து தப்புவிக்க வேண்டு (1சாமு.17:34,35). ஓர் உண்மையான மேய்ப்பன் இவ்விதமாகவே செயல்படுவான். எப்படியெனில், ஓர் கடினமான சகோதரனைச் சந்திக்கும் வேளையில், அந்த சகோதரனை குறை கூறுவதற்குப் பதிலாக சாத்தானை எதிர்த்தே போரிடுவான்! இவ்விதமாய் சிங்கத்தின் வாயிலிருந்து ஆட்டுக்குட்டியை அவன் மீட்டு விடுவான்!!*

*தங்களுடைய வியாதிப்பட்ட பிள்ளைகளிடம் தகப்பனும் தாயும், அப்பிள்ளைகளின் படுக்கையின் அருகே இராமுழுவதும் அமர்ந்து கவனித்துக் கொள்வதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம். ஆனால் 'உபாத்தியாயர்களோ' இவ்விதமாய் தங்கள் சுயத்தை ஒடுக்கி அக்கறை கொள்வதற்கு நேரமற்றவர்கள்!! வேண்டுமானால் சுகவீனமடைந்த*

*தங்கள் மாணாக்கர்களைப் பார்த்து, "பூரண சுகமடைந்த பின்பு பள்ளிக்கூடத்துக்கு வா!" என்றே கூறுவார்கள்.*

*இவ்வாறு ஆவிக்குரிய நோய் கொண்ட சகோதரர்கள் நம் மத்தியில் இருக்கும் போதுதான், நாம் மெய்யாகவே தகப்பன்தானா? அல்லது உபாத்தியாயனா? என்பதை நாம் கண்டு கொள்ள முடியும்!*

*உங்களுக்கு ஓர் கடினமான மனைவி இருந்தால், நீங்கள் மெய்யாகவே மேய்ப்பனின் உள்ளம் கொண்ட கணவன்தானா? அல்லது கூலியாளைப் போன்ற கணவனா? என்பதை வெகு சீக்கிரத்தில் கண்டுபிடித்து விடுவீர்கள். ஆனால் இதற்கு மாறாக ஓர் ஆவிக்குரிய மனைவியை நீங்கள் பெற்றிருந்தால்,* **உங்கள் உண்மை நிலையை** *நீங்கள் ஒருபோதும் கண்டிருக்க முடியாது!*

*எசேக்கியேல் தீர்க்கதரிசியின் காலத்தில் வாழ்ந்த மேய்ப்பர்களிடம், "நீங்கள் நல்ல மேய்ப்பனாய் இருப்பதற்குத் தவறியதினிமித்தமே இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோனுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது!" என தேவன் ஆதங்கத்தோடு கூறினார்.*

*இன்றும் இந்தக் காரணத்தினிமித்தமே ஏராளமான தேவ ஜனங்கள் பாபிலோனில் தங்கியிருக்கிறார்கள்! ஆம், "இவர்களுக்கு இருந்த மேய்ப்பர்கள் இவர்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கி விட்டார்கள்". ஆ, இது எவ்வளவு பரிதாபம்!*

*தன் சபையில் மூப்பனாய் இருப்பதற்கு விரும்புகிறவன் 'நல்ல வேலையை ' விரும்புகிறான் என 1 தீமோத்தேயு 3:1 கூறுகிறது.* **ஆம், அது உண்மைதான்..... ஓர் ஆவிக்குரிய தகப்பனாயிருந்து, சபையில் உள்ள அநேகருக்கு உதவியாயும், ஆசீர்வாதமாயும் இருப்பது. ஓர் ஒப்பிட முடியாத நல்ல வேலையாகும்.** *ஆனால் அதே வேளையில், நம்மில் ஒருவராகிலும் நம்மை நாமே மூப்பர்களாகவும், தேவனுடைய ஊழியர்களாகவும் வெளிக்காட்டுவதற்குரிய பட்டத்தையோ அல்லது அதன் மூலமாய் வரும் கனத்தையோ தேடாதிருப்போமாக!*

*இக்குறிப்பிட்ட விஷயத்தில் நாம் மிகுந்த கவனம் கொண்டிருக்க நம் யாவருக்கும் தேவன் உதவி செய்வாராக!*

# மாசில்லா சபை கட்டும் பணி!

7

புதிய உடன்படிக்கையின் முடிவான நோக்கம் "கிறிஸ்துவைப் போன்ற" ஏராளமான தனிநபர்களை உருவாக்குவதல்ல! மாறாக "ஒரே புதிய மனிதனாகிய" கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரத்தை உருவாக்கி கட்டுவதே அதன் நோக்கமாகும்!! (எபே.2:15,16).

பழைய உடன்படிக்கையின் கீழ் தேவன் **ஒரு** மோசே, **ஒரு** எலியா.... **ஒரு** யோவான்ஸ்நானகன் போன்றவர்களை எழுப்பினார். இவர்கள் யாவரும் தங்கள் சந்ததியில் தேவனுக்கு சாட்சிகளாய் நின்ற **தனி மனிதர்களாய்** இருந்தார்கள் ஆனால் "சபை என்பதோ" அவர்களுக்கு மறைக்கப்பட்ட ஓர் இரகசியமாகவே இருந்தது. ஆம், இஸ்ரவேல் "தனிநபர்கள் கூடிவரும் கூட்டமாக" மாத்திரமே இருக்க முடிந்தது. அவர்கள் **ஓர் சரீரமாய்** இல்லை. ஒரு சரீரத்தில் எல்லா அவயங்களும் 'ஒன்றோடொன்று' தொடர்புடையதாகவும் அதே சமயம் ஒவ்வொரு அவயமும் 'தனிப்பட்ட விதத்தில்' தலையோடு இணைக்கப்பட்டதாயும் இருக்கும்.

புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசு வந்தவுடன், தன் சீஷர்களை "இரண்டு இரண்டு பேராக" அனுப்பினார். ஆம், இனியும் அவர்கள் தேவனுக்கென "தனிமையான சாட்சியாய்" நிற்க வேண்டியதில்லை! மேலும், சீஷர்களிடம் அவர் கூறும்போது, "குறைந்தது இரண்டு சீஷர்களாவது அவருடைய நாமத்தில் எங்கெல்லாம் ஒன்றாக இணைந்திருக்கிறார்களோ, அங்கெல்லாம் தன்னுடைய வலிமையான பிரசன்னத்தை வெளிப்படுத்துவேன்" எனக் கூறினார் (மத்.18:18-20). பார்த்தீர்களா, இயேசுவின் நாமத்தில் குறைந்தது இரண்டு பேர் இணைந்திருக்கும் இடமே கிறிஸ்துவின் சரீரத்தின் மாறாத அடையாளமாயிருக்கிறது!

*ஆகவே, புதிய உடன்படிக்கையின் ஊழியர்களாகிய நாம், சபையிலுள்ள சகோதர, சகோதரிகள் 'தனித்தனியாக' தேவ பக்தியுள்ளவர்களாய் மாறியதினிமித்தம் ஒருக்காலும் திருப்தியடைந்திடவே கூடாது. நாம் கூடும் ஸ்தலசபை கிறிஸ்துவின் சரீரத்தின் பிரதிபலிப்பாகவே இருக்க வேண்டும். அவ்வாறில்லையென்றால், நாம் தேவனுடைய உயர்ந்த நோக்கத்தை நம்முடைய ஊழியத்தில் நிறைவேற்றத் தவறியவர்களாய் காணப்படுவோம்! ஆ, இது எத்தனை பெரிய இழப்பு!!*

**தேவ பிரசன்னத்தின் முக்கியத்துவத்தை அறிந்தவர்களாயிருங்கள் :**

*ஒரு புதிய உடன்படிக்கை சபையின் பிரதான அடையாளம் என்ன? இன்று அநேகர் எண்ணுவதெல்லாம் சபையை நிர்வாகிக்கும் ஓர் குறிப்பிட்ட முறை, ஓர் குறிப்பிட்ட விதத்தில் கூடிவரும் சபைக்கூட்டம் ஆகிய* **வெளித்தோற்றத்தையே** *சபையின் அடையளாமாக எண்ணுகிறார்கள். ஆனால். இவை யாதொன்றும் புதிய உடன்படிக்கை சபையின் அடையாளம் அல்லவே அல்ல! சபையின் பிரதான அடையாளமாய் இருப்பது "அங்கு திவ்விய வாழ்க்கையாகிய* (Divine Life) **ஜீவன்**" *காணப்பட வேண்டும் என்பதேயாகும்.*

*ஒரு தாயின் கருவில் குழந்தை உருவாகும்போது, ஆரம்ப வாரங்களில் அந்த கருவிற்கு ஒரு மானிட உருவின் "தோற்றம்" இருப்பதில்லை. மாறாக, அக்கருவில் "ஜீவன்" மாத்திரமே இருக்கும்! அதனுடைய தோற்றம் அல்லது "வடிவம்"* (PATTERN) *பின்பு தான் தாமதமாய் தோன்றும். இதைப்போலவே, எங்கெல்லாம் ஓர் புதிய சபை ஸ்தாபிக்கப்படுகிறதோ, அங்கேயும் இவ்வாறாகவே இருக்கும். அதாவது, சரியான வடிவம் தோன்றுவதற்கு அதிக காலமானலும் அங்கு 'ஜீவன்' முதலிலிருந்தே கண்டிப்பாய் இருக்க வேண்டும்!*

*ஓர் புதிய உடன்படிக்கை சபையின் பிரதான அடையாளம் "தேவன் அதன் மத்தியில் பிரசன்னமாய் இருக்கிறார்" என்பது தான். இது போன்ற சபை ஒன்றாய் கூடி வந்து, அங்குள்ள யாவரும் பரிசுத்தாவியின் அபிஷேகத்தோடு ஒவ்வொருவராய் தீர்க்கதரிசனம் சொல்லும்போது, அக்கூட்டத்திற்கு வந்திருப்பவர்கள் தங்கள் பாவத்தினிமித்தம் உணர்த்தப்பட்டு* "**மெய்யாகவே தேவன் இந்த சபையில் இருக்கிறார்!**" *என அறிக்கை செய்வார்கள் (1 கொரி .14:24,25). இவ்வித அறிக்கைக்குரிய தகுதியைக் கொண்ட சபை மாத்திரமே "சரியான வடிவத்தை அல்லது தோற்றத்தை" கொண்ட சபையென நிருபணமாய் கூற முடியும்.*

*இதற்கு மாறாய், கூட்டங்களில் தேவனுடைய பிரசன்னம் இல்லையென்றால், நாம் ஏதோ ஒரு வகையில் "தேவனுடைய பூரணதிட்டத்திலிருந்து விலகியிருக்கிறோம்" என்பதை உணர்ந்து உடனடியாக மனம் திரும்ப வேண்டும்!*

*இஸ்ரவேலர்கள் வனாந்திரத்தில் அமைத்த கூடாரத்தை எண்ணிப் பாருங்கள். அக்கூடாரத்தின் வடிவம் எப்படியிருக்கவேண்டுமென்ற*

*விபரங்கள் யாத்திராகமப் புத்தகத்தில் மிகத் தெளிவாக எழுதப் பட்டுள்ளது. "இந்த விபரங்களை வைத்து" பெலிஸ்தியர்கள்கூட அதே போன்ற கூடாரத்தை மிக எளிதில் அமைத்துவிட முடியும்.* **ஆனால், அவர்கள் ஒருக்காலும் உருவாக்க முடியாத முக்கியமான அம்சம் யாதெனில், மகா பரிசுத்த ஸ்தலத்தின் அக்கினி ஜீவாலையாய் பிரகாசித்துக் கொண்டிருந்த தேவ பிரசன்னமேயாகும்!** *இதுவே முழு கூடாரத்திற்கும் அதிமுக்கியமான அம்சமாகும். ஆம் இதுவே இன்றைய சபைக்குரியதுமாகும்!! நீங்கள் எங்கேயாகிலும் ஓர் வலிமையான சபையைக் கண்டிருக்கலாம். அதற்குரிய இரகசியத்தைக் குறித்து நீங்கள் உடனடியாக எண்ணுவ தெல்லாம்: 1) அவர்கள் கூட்டங்களில் பின்பற்றும் வழிமுறைகள் 2)அவர்கள் பிரசங்கிக்கும் உபதேசங்கள், ஆகிய இவைகளே காரணமென எண்ணுகிறீர்கள்! நீங்கள் உடனடியாக அதே வழிமுறைகளைப் பின்பற்றி, அதே உபதேசங்களைப் பிரசங்கித்து... இப்போது ஓர் புதிய உடன் படிக்கையின் சபையை நீங்கள் பெற்று விட்டதாக எண்ணிக் கொள்ளலாம். ஆனால் உண்மையில் உங்களை நீங்களே ஏமாற்றிக் கொண்டீர்கள், அவ்வளவுதான்!! ஆம், உங்கள் நடுவில் "தேவனுடைய மகிமையின் பிரசன்னம்" வல்லமையாய் இல்லாத பட்சத்தில், அங்கு புதிய உடன்படிக்கை சபை என்ற பேச்சுக்கே இடமில்லை!!*

*ஓர் சபையில் கூடிவந்திருக்கும் நம் மத்தியில் தேவன் வல்லமை யோடு பிரசன்னமாய் இருந்தால்,* **அவருடைய வெளிச்சத்தின் பிரசன்னம்** *"எவைகளெல்லாம் அவருக்கு பிரியமானது, எவைகளெல்லாம் அவருக்குப் பிரியமானதல்ல" என்பவைகளை நமக்குத் தொடர்ச்சியாக காட்டிக் கொண்டேயிருக்கும்! மேலும் இனிவரப்போகும் அபாயத்தைக் குறித்தும் இந்த வெளிச்சம் நம்மை எச்சரிக்கும்! இப்பிரகாசிக்கும் வெளிச்சம் இருளை மாத்திரமல்லாமல், இருளின் அதிபதியையே துரத்தி அடித்து விடும்!! இதுபோன்ற ஒரு சபையைத்தான் பாதாளத்தின் சத்துவங்கள் ஒருக்காலும் மேற்கொள்ளவே முடியாது.*

*நம் சபையில் உபதேசங்கள் சரியாய் இருந்தால் மாத்திரமே போதாது..... எல்லாவற்றிற்கும் மேலாக நமக்கு தேவைப்படுவதெல்லாம் "தேவ பிரசன்னமாகும்".*

**தீர்க்கதரிசன ஆவியின் அவசியத்தை உணருங்கள் :**

*மெய்யாகவே தேவன் நம் மத்தியில் இருந்தால், நாம் சபையாகக் கூடிவரும் போதெல்லாம் தேவன் நம்மோடு வல்லமையாகப் பேசுவதைக் கேட்டிட முடியும். இதுவே "தீர்க்கதரிசனத்தின்" பொருளாகும்.*

*பழைய உடன்படிக்கையின் நாட்களில் தீர்க்கதரிசனம் எதிர் காலத்தை முன் அறிவிப்பதாயும், ஜனங்கள் என்ன செய்ய வேண்டும்? என நடத்துவதாயும் இருந்தது.* **ஆனால், இப்போது புதிய உடன் படிக்கையில் தீர்க்கதரிசனமானது** *பக்திவிருத்திக்கும், புத்திக்கும் (அதாவது, சவாலிட்டு அழைப்பதற்கும், கடிந்து கொள்வதற்கும், ஜனங்களைத் திருத்துவதற்கும்).....*

இவ்வாறு சபையை பக்தி விருத்தியடையச் செய்து கட்டப்படுவதற்கே பயன்படுவதாய் இருக்கிறது.

ஆவியின் வரங்களில் முக்கியமான வரம் "தீர்க்கதரிசனம்" சொல்லுதலாகும், இந்த வரத்தை வைத்தே இன்று சபையானது கட்டப்படுகிறது. தீர்க்கதரிசன வார்த்தைகள், "இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்றது!" என வேதம் அருமையாய் எடுத்துரைக்கிறது (2 பேதுரு.1:19). சபையில் "இந்த விளக்கின் வெளிச்சம்" **தொடர்ச்சியாய்** இருந்து கொண்டிருக்கவில்லையென்றால், இருளின் அதிபதியின் தந்திர மோசங்களுக்கு நாம் தப்பித்துக் கொள்வது அரிதாயிருக்கும். முடிவில் சபை இருளில் மூழ்கிவிடும்! இன்று அநேக சபைகள் ஆரம்ப நாட்களில் நன்றாய்த் துவங்கி, பின்வரும் நாட்களில் வளர்ச்சியில்லாமல் தேய்ந்து போவதை நாம் காண்கிறோம். இந்த அவல நிலைக்குக் காரணம் "தீர்க்கதரிசன வரம்" அவர்கள் மத்தியில் படிப்படியாக குறைந்து தேய்வுற்றதேயாகும்.

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலை விட்டு எப்போதெல்லாம் தேவனுடைய பிரசன்னம் விலகியதோ, அதை அறிந்து கொள்வதற்கான பிரதான அடையாளங்களில் ஒன்று "அவர்கள் மத்தியில் **தீர்க்கதரிசி** இல்லாமல் போவதேயாகும்" (சங்.74:1,9). ஆம், தேவன் இஸ்ரவேலரை கைவிட்டு விட்டார் என்பதற்கு இதுவே அடையாளமாயிருந்தது.

இஸ்ரவேலில் ஏலியின் நாட்களைப் போல எப்போதெல்லாம் ஒரு தீர்க்கதரிசியில்லாதிருந்தாரோ அப்போதெல்லாம் இஸ்ரவேல் தேய்ந்து பின்மாற்றமடைந்தது (1 சாமுவேல்.3:1). ஆனால் அதேசமயம் அவர்கள் மத்தியில் ஒரு சாமுவேல் தீர்க்கதரிசி எழும்பியவுடன், இஸ்ரவேல் உயர்ந்த இடத்திற்கு ஓங்கி வளர்ந்தது. (1சாமுவேல்.3:20). இந்த சாமுவேலின் மூலமாகவே, தாவீது இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகிக்கப்பட்டான்! இந்த நிகழ்ச்சியே இஸ்ரவேலின் சரித்திரத்தில் ஓர் மகிமையான புதிய சகாப்தத்தை தோன்றச் செய்வதாய் இருந்தது. இவை எல்லாவற்றிருக்கும் காரணம், நாம் வேதத்தில் வாசிக்கிறபடி, சாமுவேல் தீர்க்கதரிசனம் உரைத்த சமயங்களிலெல்லாம், "கர்த்தர் தம்முடைய எல்லா வார்த்தைகளில் ஒன்றையாகிலும் தரையில் விழுந்துபோக விடவில்லை" என்ற உண்மையேயாகும் (1 சாமுவேல்.3:19).

இவ்வித வலிமையான தீர்க்கதரிசன ஊழியம் இன்று சபையில் எப்போதும் இருக்க வேண்டுமென்றே நாம் வாஞ்சையுடன் ஜெபித்திட வேண்டும். **ஆம், நாம் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும் ஜனங்களின் இருதயங்களில் "இலக்கை நோக்கி விடப்பட்ட அம்பைப்போல்" ஊடுருவிச் சென்று தங்கி விடவேண்டும்.**

தீர்க்கதரிசன வரத்தின் மூலமாய், "ஜனங்களுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும்" (1 கொரி.14:25) என வாசிக்கிறோம். இவ்விதமாகவே **சபையில் உள்ள ஒவ்வொருவரும்** "வஞ்சிக்கும் பாவங்களைக் குறித்த" வெளிச்சத்தைப் பெறுகிறார்கள். இதனிமித்தமே,

“பாவத்தின் வஞ்சனையினால் கடினப்பட்டு போகாதபடிக்கு நாடோறும் (சபையில்) ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்” (எபி.3:13) என தேவனுடைய வார்த்தை நமக்கு கட்டளையிடுகின்றது! வெளியரங்கமாய் தோன்றும் பாவங்களும் உண்டு, ஆனால் மிகத் தந்திரமாய் மறைவாக பதுங்கியிருக்கும் பாவங்களும் உண்டு. ஆனால், தீர்க்கதரிசன ஆவியிருக்குமிடத்தில் எல்லாப் பாவத்தின் மறைவான வஞ்சனைகளும், சாத்தானுடைய தந்திரங்களும் வெளியரங்கமாவதால், நாம் சபையில் பாதுகாக்கப்பட்டிருக்கிறோம்!

இதற்கு ஓர் உதாரணத்தை பழைய ஏற்பாட்டில் நாம் காணலாம். அக்காலத்தில் சீரியாவின் ராஜா இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம் செய்தான். இவ்வாறு இஸ்ரவேலைத் தாக்குவதற்கு அவன் தன்னுடைய தளபதிகளோடு **‘இரகசியமாய்’** ஆலோசனை பண்ணினான். அந்த ஆலோசனையின்படி, இஸ்ரவேலுக்குத் தெரியாத ஒரு ஸ்தலத்திலிருந்து இஸ்ரவேலைத் தாக்குவதற்கு திட்டம் தீட்டினான். ஆனால், இவ்வித அவனுடைய ஒவ்வொரு இரகசியத் திட்டங்களும் தீர்க்கதரிசனத்தின் மூலமாய் இஸ்ரவேலின் இராஜாவுக்கு வெளிப்படுத்தப்பட்டது! ( 2 இராஜா.6:8-12). ஆகவே எதிரியின் படை எங்கிருந்து தாக்கும் என இஸ்ரவேல் இராஜா தீர்க்கத்தரிசனத்தின் மூலமாக சரியாக அறிந்து கொண்டபடியால், அங்கெல்லாம் **முன்கூட்டியே** தன் படைகளைப் பாதுகாப்பிறகு அனுப்பி தேசத்தைப் பாதுகாத்தான்!

இதைப்போலவேதான் சபையின் கூட்டங்களில் “தீர்க்கதரிசனத்தின் மூலமாக” சாத்தான் நம்மைத் தாக்க முயற்சிக்கும் பகுதிகளை தேவன் **முன்கூட்டியே** நமக்கு எச்சரித்து விடுகிறார். இதனிமித்தமாய் நாம் அந்த குறிப்பிட்ட பகுதிகளில் நம்மைக் காத்துக்கொள்ள முடிகிறது!

பவுல் தீமோத்தேயுவிடம் கூறும்போது, அவன் நல்ல போரட்டத்தை போரட வேண்டும் எனக் கூறினாரே? எதை வைத்து இந்த நல்ல போரட்டத்தைப் போராடும்படி சொன்னார்? ஆம், “தீமோத்தேயுவே, உன்னைக் குறித்து, முன் உண்டான **தீர்க்தரிசனங்களின்படியே...** நீ அவைகளை முன்னிட்டு நல்ல போரட்டம் பண்ணு” எனக் கூறினார்.

எங்களுடைய பெங்களூர் சபையில் நாங்கள் சபையாகக் கூடிவரும் போதெல்லாம் **தீர்க்கதரிசனத்தின் ஆவி** நிறைய சகோதர சகோதரிகளுக்கு அவர்கள் எதிர்கொள்ளப்போகும் சத்துருவின் தாக்குதலை முன் கூட்டியே எச்சரித்திருக்கிறது. இவ்வித தீர்க்கதரிசன வார்த்தைகளின் மூலமாய் சபையில் உள்ள எங்கள் ஒவ்வொருவருக்கும் தேவன் ஞானத்தை கொடுத்திருக்கிறார். இந்த ஞானம் எங்கள் ஒவ்வொருவருடைய தனி ஜீவியத்தையும், குடும்ப ஜீவியத்தையும், சபையின் ஜீவியத்தையும் காத்துக் கொள்ள வலிமை கொண்டதாய் இருந்து வருகின்றது.

நீதிமொழிகள் 24:3,4-குறிப்பிடுவது போல் “எங்கள் வீடு **ஞானத்தினாலே**

*கட்டப்பட்டு,* **விவேகத்தினாலே** *நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது.* **அறிவினாலே** *அறைகளில் அருமையும், இனிமையுமான சகலவித பொருட்களும் நிறைந்திருக்கிறது" என வாசிக்கிறோம். ஆம், அபிஷேகிக்கப்பட்ட போதகர்களால் சபையில் தேவனுடைய அறிவு போதிக்கப்படுகிறது. ஆனால், இந்த அறிவு எல்லாம் வீட்டில் உபயோகப்படுத்தும் சாமான்களுக்கு ஒப்பாகவே இருக்கிறது. இவ்வாறு பொருட்கள் போடப்படுவதற்கு முன்பாக, முதலாவது, ஞானத்தினால் வீடு கட்டப்பட்டிருக்க வேண்டுமே!*

*ஆகவே, நம் சபைகளில் வேத அறிவு மாத்திரமே இருந்தால் வீடு கட்டப்படாத காலி மனைகளில் குடிகொண்டிருக்கும் குடும்பத்தைப் போலவே நாம் இருப்போம்! நம்மைச் சுற்றிலும் ஏராளமான வீட்டிற்குத் தேவையான பொருட்கள் இருக்கிறது... ஆனால், வீடோ இல்லை! கூரையோ அல்லது சுவரோ இல்லை! ஆம் வெறும் தரை கூட இல்லை!! ஆகவேதான், நாம் முதலாவது ஞானத்தைத் தேட வேண்டுமென புதிய ஏற்பாடு நமக்கு புத்திச் சொல்லுகிறது, "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாய் இருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிற தேவனிடத்தில் கேட்கக்கடவன்" (யாக்.1:4) என வாசிக்கிறோம்.*

*எனவே, ஞானத்தைக் கொண்டுதான் சபைகட்டப்பட முடியும்.* **இந்த தேவஞானம் "தீர்க்கதரிசன வரத்தின் மூலமாக" சபைக்கு உண்டாயிருக்கிறது.** *ஆகவேதான், "தீர்க்கதரிசன வரத்தை நம் சபையின் ஒவ்வொரு கூட்ட நேரங்களிலும் நாடும்படி" (1கொரி.14:1,5) நாம் புத்தி சொல்லப் பட்டிருக்கிறோம். சபையில் வேத ஆராய்ச்சிக் கூட்டங்களும், சுவிஷேச கூட்டங்களும் நல்லதுதான். ஆனால், நாம் சபையை கிறிஸ்துவுக்கென தூய்மையுள்ள சாட்சியாய் கட்ட வேண்டுமென்றால் "தீர்க்கதரிசன வரம்" சபையில் முதலிடம் வகிக்க வேண்டும்!*

**சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாய் நிலைத்திருங்கள் :**

*1தீமோத்தேயு.3:5-ல், சபையானது சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமென அழைக்கப்படுகிறது. எல்லா மனுஷரும் சத்தியத்தை அறிகிற அறிவை அடைய வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார் (1தீமோ.2:4). இவ்வாறு எல்லா மனுஷரும் அறிய வேண்டுமென தேவன் விரும்பும் இந்த சத்தியம் யாது? அதை இயேசு யோவான் 8:32-ல், "சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என எடுத்துக் கூறினார்.* **அதாவது, ஜனங்களை பாவத்திலிருந்து விடுதலையாக்குவது எதுவோ, அதுவே சத்தியமாகும்! (யோ.8:34).**

*நாம் சத்தியத்தை அறியாததினால்தான், நம்மை அடிமைப் படுத்தும் எத்தனையோ 'கட்டுகள்' நமக்கு உண்டாகின்றன. "மார்க்க கண் மூடித்தன குழுவினர்கள்" (Cultists) தங்களைப் பின்பற்றுவோரை சத்தியத்தை அறியமுடியாத அறியாமையில் வைத்து அவர்களைத்*

தங்களுக்கு அடிமைகளாய் மாற்றிக் கொள்கிறார்கள். ஆனால் ஒருவன் எவ்வளவு அதிகம் சத்தியத்தை அறிந்து கொள்கிறானோ அவ்வளவு அதிகமாய் விடுதலையையும் ருசித்திவிடுவான். ஆம், கர்த்தருடைய ஆவி எங்கே உண்டோ அங்கே "விடுதலை" உண்டு! (2கொரி.3:17).

இயேசு தன் சீஷர்களிடம், "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (யோ.16:13) எனக் கூறினார். பார்த்தீர்களா, பரிசுத்தாவிக்கு "சத்திய ஆவி" என்றே இயேசு பெயர் சூட்டினார். ஏனெனில் பரிசுத்தாவியானவர் நம்மை "**சகல சத்தியத்திற்குள்ளும்**" நடத்துவதற்கே தீராத வாஞ்சை கொண்டுள்ளார்.

சத்தியமானது, பரந்த பூமியான கானான் தேசத்திற்கு ஒப்பானதாகும். கானான் தேசத்தை சுதந்தரிப்பதற்கு தேவன் இஸ்ரவேலர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் நடத்தியதைப் போலவே, நாம் சகல சத்தியத்தையும் சுதந்தரிக்கும்படி பரிசுத்தாவியானவரும் நம்மை நடத்த விரும்புகிறார். இவ்வாறு நாம் எவ்வளவு அதிகமாய் சத்தியத்தை அறிந்து கொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாய் "பாவத்திலிருந்தும், புறம்பான மார்க்க சடங்காசரங்களிலிருந்தும்" விடுதலையடைந்திடுவோம்!

ஆகவே சபையானது "சத்தியத்திற்கும் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது" என அழைக்கப்படுவதின் பொருள் யாதெனில், சத்தியத்தைக் கேட்கும்படி ஜனங்கள் கூடிவந்து அதனிமித்தம் அவர்கள் அதிகமதிகமாய் விடுதலையைப் பெறும் இடமாக சபை திகழவேண்டும் என்பதேயாகும். இவ்வாறாக ஜனங்கள் நம்முடைய சபைகளில் "விடுதலை" பெறவில்லையென்றால், நாம் நம்முடைய ஊழியத்தில் தோல்வியுற்றவர்களேயாவோம்!

ஜனங்களை விடுதலைசெய்வதற்கு "சத்திய வசனமும்" (தேவனுடைய வார்த்தை) "சத்திய ஆவியும்" (பரிசுத்த ஆவி) நமக்குத் தேவை. இயேசு தன் பிதாவிடம் ஜெபிக்கும்போது, "உம்முடைய சத்தியத்தினாலே அவர் களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே (வார்த்தையே) சத்தியம்!" எனக் கூறி ஜெபித்தார் (யோ.17:17). தேவனுடைய வார்த்தையே ஜனங்களைப் பரிசுத்தப்படுத்தும் சத்தியமாகும். சபையில், தொடர்ச்சியாய் பரிசுத்தாவியின் வல்லமையோடு "தேவ வசனம்" விளக்கமாய் போதிக்கப் படாத பட்சத்தில் நாம் சபையை ஒருக்காலும் கட்டவே முடியாது. நாம் தேவனுக்கு புதிய உடன்படிக்கைக்கும் உண்மையுள்ள ஊழியர்களாய் இருக்க வேண்டுமென்றால், நாம் "**வார்த்தை** நிறைந்த புருஷர்களாயும்" "**ஆவி** நிறைந்த புருஷர்களாயும்" மாறிட வேண்டும்!

சபையானது சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாய்த் திகழ வேண்டுமென்றால், **தாங்களே தூண்களாக மாறிவிட்ட,** அபிஷேகிக்கப்பட்ட சகோதரர்களும் சகோதரிகளும் சபையில் இருக்க வேண்டும்! வெளிப் படுத்தின விசேஷம் 3:12-ல் "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை... ஆலயத்தில் தூணாக்குவேன்" என ஆண்டவர் நம் யாவருக்காவும் கூறியுள்ளார். ஆம், நம்மை வேறுயாருமல்ல..... இயேசு மாத்திரமே

நம்மை சபைக்குத் தூணாக மாற்றிட முடியும்!! நாமாக நம்மைத் தூணாக மாற்றிக்கொள்வதோ அல்லது வேறு எந்த தேவனுடைய ஊழியராவது நம்மைத் தூணாக நியமனம் செய்வதோ ஒருக்காலும் முடியாது என்பதே இயேசுவின் கூற்றாகும்.

**ஆனால், ஜெயங்கொள்ளுகிற எல்லா சகோதரர்களையும் சகோதரிகளையும் தன்னுடைய சபையில் தூணாயிருக்கும்படி ஆண்டவர் செய்கிறார்.** ஆம், ஒரு சகோதரி ஜெயங்கொண்டவர்களாய் விளங்கும்பட்சத்தில், அந்த சகோதரியும் கூட "ஒரு தூணாய்" சபையில் விளங்கிட முடியும்!

இவ்வித சிலாக்கியத்தைப் பெறுகின்ற நாம், நம்முடைய பொறுப்பையும் உத்திரவாதத்தையும் மறந்துவிடவே கூடாது. ஆம், கட்டிடத்தின் பாரத்தை சுமப்பதற்காகவே "தூண்கள்" கட்டப்படுகின்றன! ஆகவே, ஆண்டவர் நம்மைத் தம்முடைய சபைக்குத் தூணாக விளங்கச் செய்வாரென்றால், அதன் நோக்கம் "பிறருடைய பாரத்தை நாம் தாங்கும்படிக்கேயாகும்!" இதற்கு மாறாக, யாரெல்லாம் பிறருடைய பாரத்தை சுமந்திட விருப்பமற்றவர்களாயும், சுயநலம் கொண்டவர்களாயும் இருக்கிறார்களோ, அவர்கள் "தூண்களாய் மாறுவதற்கு" கொஞ்சமும் தகுதியற்றவர்கள்!!

எத்தனையோ நல்ல சகோதரர்கள் 'மூப்பர்களாய்' இல்லாவிட்டாலும் கூட சபையில் 'தூண்களாய்' இருக்கிறார்கள்! நாம் மாத்திரம் நம்முடைய அன்றாட ஜீவியத்தில் "ஜெயங்கொண்டவர்களாய்த்" திகழ்ந்துவிட்டால், நாம் எவ்வித தலைமைப் பொறுப்பில் இல்லா விட்டாலும்கூட **தூண்களாய்** இருந்திட முடியும்! ஆம், தேவன் ஒருவரே ஜனங்களை "சபையின் தூண்கள்" என அங்கீகரித்து நியமனம் செய்கிறார்!!

**ஆவிக்குரிய அதிகாரம் பெற்றிருத்தல் :**

கர்த்தருடைய ஊழியக்காரன் எப்போதும் "ஆவிக்குரிய அதிகாரத்தோடு" பேசுகிறவனாய் இருத்தல் வேண்டும். வேதபாரகர்களைப்போல் இல்லாமல், இயேசுவோ ஆவிக்குரிய அதிகாரத்தோடு போதித்தார் என நாம் வாசிக்கிறோம் (மத்.7:29). ஆம், நம்மிடத்தில் இந்த ஆவிக்குரிய அதிகாரம் இல்லாதபட்சத்தில், நாம் ஒருக்காலும் சபையைக் கட்டவே முடியாது! வேதபாரகர்கள் 'உபதேசங்களை' நன்கு அறிந்திருந்தார்கள். ஆனால், தங்களுடைய ஊழியத்திலோ அவர்கள் ஆவிக்குரிய அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

நம்முடைய வயதைவைத்தோ, அல்லது நம்முடைய கல்வித்திறனை வைத்தோ, அல்லது வேத அறிவை வைத்தோ, அல்லது மனுஷீக - ஆத்தும வல்லமையை வைத்தோ, பிறர் மீது நமக்கிருக்கும் அதிகாரத்தை நமக்கு நாமே மதிப்பிட்டுக் கொள்ளக்கூடும். ஆனால், இவைகளில் யாதொன்றும் ஆவிக்குரிய அதிகாரம் பெறுவதற்குரிய ஏதுகரம் அல்லவே அல்ல! ஆம், நாம் **தேவனிடத்திலிருந்து அங்கீகாரம்** பெற்றிருக்க வேண்டும் என்பதே காரியமாகும்!!

நம்மிடத்தில் ஆவிக்குரிய அதிகாரம் இருக்குமென்றால், நாம் ஒருக்காலும் நம்முடைய கருத்துக்களைப் பிறரிடம் வலுக்கட்டாயமாய் திணித்திட முயற்சிக்கவே மாட்டோம். நம்மிடத்திலுள்ள **தேவனால் உண்டாயிருக்கும் அதிகாரத்தை** ஜனங்கள் அறிந்திருக்கிறபடியால், அவர் களாகவே நம்மிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பார்கள். இதற்கு மாறாக, நாம் சபையில் தலைவராய் இருப்பதினிமித்தம் நம்முடைய அதிகாரத்தைப் பிறரிடம் திணிக்கிறவர்களாய் இருந்தால், ஆவிக்குரிய அதிகாரம் இன்னது என்பதைத் துளியும் அறியாதவர்களாகவே நாம் இன்னமும் இருக்கிறோம்! யோபின் புத்தகத்தில் "எலிகூ" யோபுவிடம் கூறும்போது "இதோ, நீர் எனக்குப் பயப்பட்டுக் கலங்கத் தேவையில்லை; என் கை உன் மேல் பாரமாயிருக்க மாட்டாது"(யோபு.33:7) எனக் கூறினார். பார்த்தீர்களா, 'எலிகூ'வின் இந்த நல்ல மனப்பான்மைக்கு ஒப்பாகவே பிறரைக் குறித்த விஷயத்தில் நம்முடைய மனப்பான்மையும் இருத்தல் வேண்டும்.

ஜீவியத்தின் ஏதாவது ஒரு பகுதியில் உங்கள் மூலமாக மற்றவர்கள் "வலுக்கட்டாயம்" செய்யப்படுவதாக எண்ணுகிறார்களா? அல்லது, அவர்கள் தங்கள் மனசாட்சியின்படி வாழ்வதற்குரிய **பூரண சுதந்திரத்தை** அவர்களுக்கு நீங்கள் தந்திருக்கிறீர்களா?

> பரத்தின் திவ்விய அதிகாரம் நம்மிடத்தில் இருப்பதை ஜனங்கள் அறியும் போது, ஆலோசனை பெறும்படி அவர்களாகவே நம்மிடத்தில் வருவார்கள். அவ்விதமாய் ஆலோசனைபெற அவர்கள் நம்மிடத்தில் வரவில்லையென்றால், அவர்களுக்கு நம்மீது நம்பிக்கை இல்லை என்பதையே நிரூபிக்கிறது!

இதை நன்கு அறிந்து கொள்ள ஒரு உதாரணத்தை சீர்தூக்கிப் பாருங்கள்: நம்முடைய பிள்ளைகள் சிறியவர்களாயிருக்கும்போது, தகப்பன்மார்களாகிய நாம் அவர்களிடம் நம்முடைய விருப்பத்தைத் திணிப்பதும், அவர்கள் எதையும் செய்வதற்கு முன்பு நம்மிடம் வந்து கண்டிப்பாக ஆலோசனை பெறும்படிச் செய்வதும் நமக்கு எளிதான காரியமேயாகும். ஆனால் அவர்கள் வளர்ந்து தனித்தனியாய் குடும்பம் அமைத்த பின்புதான், அவர்களுக்கு நம்மிடம் மெய்யாகவே "நம்பிக்கை" இருக்கிறதா? இல்லையா? என்பதை நம்மால் கண்டுபிடிக்க முடிகின்றது. ஆம், அவ்விதம் அவர்களுக்கு நம்மீது நம்பிக்கை இருக்குமென்றால், **அவர்களாகவே** விரும்பி நம்மிடம் வந்து ஆலோசனை கேட்பார்கள்?

மேற்கண்ட குடும்பத்தின் காரியத்திற்கொப்பாகவே சபையிலும், மற்றவர்களுக்கு நம்மீது நம்பிக்கை இருக்கிறதா? இல்லையா? என்பதை கண்டு கொள்ள முடியும். அதாவது, அவர்களாகவே விரும்பி நம்மிடம் வந்து ஆலோசனை கேட்கிறார்களா? என்பதே அதற்குரிய நிரூபணமாகும்.

ஒருவேளை, சபையிலுள்ள ஓர் இளைய சகோதரனிடம் ஆலோசனை கேட்பதற்கே ஜனங்கள் அதிக ஆர்வம்கொண்டு செல்வார்களென்றால், அந்த சகோதரனிடம் ஜனங்களுக்கு அதிக நம்பிக்கை இருக்கிறது என்பதற்கு அதுவே அடையாளமாகும். அந்த சகோதரனிமித்தமாய்

*நாம் ஒருக்காலும் பொறாமை கொள்ளாதிருக்கக்கடவோம்! மாறாக, உதவி பெறும்படி ஜனங்கள் செல்லும்படியான ஓர் ஆவிக்குரிய சகோதரன் சபையில் இருக்கிறாரே என நாம் களிகூர்ந்திடவே வேண்டும்!!*

*மத்தேயு.18:18-ம் வசனத்தில், சாத்தானுடைய சத்துவங்களைக் கட்டுவதற்கும்; கட்டுண்ட ஜனங்களை விடுதலை செய்வதற்கும்;* **சபை பெற்றிருக்க வேண்டிய அதிகாரத்தைக் குறித்து** *இயேசு சீஷர்களிடம் பேசினார். ஆனால் அந்த அதிகாரத்தை ஒரு தனிநபர் மூலமாக அல்ல, குறைந்தது இரண்டுபேர் மூலமாகவே செயல்படுத்திட முடியும் என இயேசு தொடர்ந்து கூறினார். மேலும், அந்த இரண்டு பேர் தங்கள் ஆவியில் வலிமையான ஒருமனம் கொண்டவர்களாய் இருக்கவேண்டும் எனவும் இயேசு குறிப்பிட்டார். அவ்வாறு அவர்கள் ஒருமனதாய் கூடியிருக்கும் போதுதான், ஆண்டவர் இயேசு தன்னுடைய அதிகாரத்தை அவர்களுக்குத் தரும்படி, அவர்கள் நடுவிலே பிரசன்னமாயிருப்பார்!! (மத்தேயு.18:19,20).*

*"இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கின்றேன்" (மத்.18:20) என்ற இந்த அருமையான வசனத்தை இன்று அநேகர் தவறாய் அர்த்தம் கொண்டிருக்கிறார்கள். எந்த கிறிஸ்தவர்களாவது கூடுகிற ஒரு கூட்டத்தைப் பற்றி இந்த வசனம் குறிப்பிடவேயில்லை! இல்லவே யில்லை!! நீங்கள் முந்திய 15-ம் வசனத்திலிருந்து இவ்வசனத்தைத் தொடர்ந்து வாசித்தால்,* **சபையின் அதிகாரத்தை** *குறித்தே இவ்வசனம் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாய் காண்பீர்கள். அந்த அதிகாரம், தங்கள் ஆவியில் ஒருமனப்பட்டு பரிசுத்தாவியானவரால் சபையாகக் கூட்டப்படும் இரண்டு அல்லது மூன்று பேர் மூலமாக இயேசுவின் நாம மகிமைக்கென செயல்படுத்தப்படுகிறது எனவும் இவ்வசனங்கள் நமக்குப் போதிக்கின்றன. இதுபோன்ற சபையே "ஓர் சரீரமாய்" செயல்படும்! இந்த 'சரீரமே' சாத்தானுடைய கிரியைகளைக் கட்டுவதற்கும், தேவ ஜனங்களை சாத்தானுடைய பிடியிலிருந்து விடுவிப்பதற்குரிய சொல்லிமுடியா அதிகாரத்தைப் பெற்றிருக்கும். இந்த அதிகாரத்தையே, ஒவ்வொரு சபையிலுள்ள மூத்த சகோதரர்களும் தொடர்ச்சியாக செயல்படுத்திக் கொண்டிருக்க வேண்டும்.*

**சாத்தானையோ அல்லது அவனுடைய பிசாசுகளையோ** *நாம் இப்போது கட்டிப்போடவே முடியாது! இவ்விதம் செய்வதற்கு முயலும் விசுவாசிகள் அறியாமை கொண்டவர்களேயாவர். ஏனெனில், அந்த செயலைத் தேவன், இயேசு இரண்டாவதாகத் திரும்பவரும் நாளிலேயே செய்து முடிப்பார் (வெளி.20;1,2;மத்.8:29). ஆனால், இப்போது நாம்* **சாத்தானின் மற்றும் அவனுடைய தூதர்களின் கிரியைகளையோ** *நிச்சயமாய் "தடை செய்து" கட்டிப் போட முடியும்! (2தெச.2:7).*

*இரண்டு அல்லது மூன்று தலைவர்கள் நிறைவான ஒருமனதோடு செயல்படும்போது வெளிப்படும் அதிகாரத்தை சாத்தான் நன்கு*

அறிந்திருக்கிறான். இதனிமித்தமே, ஒவ்வொரு சபையிலும் அங்குள்ள மூப்பர்கள் ஒற்றுமையாகக் கூடிவருவதைத் தடைசெய்ய தன்னால் ஆனமட்டும் சாத்தான் முயற்சிக்கிறான். **இவ்வாறு மூப்பர்கள் அளவில் "ஒருமனம்" இல்லையென்றால், கிறிஸ்துவின் சரீரம் ஒருக்காலும் கட்டப்படவே முடியாது!**

சபையிலுள்ள இரண்டு அல்லது மூன்று விசுவாசிகள் ஒற்றுமையாய் இல்லையென்றால், அது ஒன்றும் அவ்வளவு "சீரியஸான" விஷயம் இல்லை. இந்த விசுவாசிகளின் ஒற்றுமையாய் இல்லாதது வருத்தாமனதுதான்..... ஆனால் அது, மூப்பர்கள் ஒற்றுமையாய் இல்லாததற்கு ஒப்பான 'சீரியஸான' விஷயம் இல்லை! எனவே ஒவ்வொரு சபையிலும் "கருவின்" மையத்தைப் போன்ற இரண்டு அல்லது மூன்று மூப்பர்கள் நிச்சயமாய் பூரண ஒற்றுமையில் எப்போதும் இருக்கவேண்டியது மிகமிக அவசியம். ஆம், 200 அல்லது 300 பேர் ஒற்றுமையாய் இருக்கிறார்களா? என ஆண்டவர் பார்ப்பதேயில்லை... ஆனால், குறைந்தபட்சமான இரண்டு அல்லது மூன்று மூப்பர்களின் ஒற்றுமையையே ஆண்டவர் எதிர்பார்க்கிறார்! அவ்வித "ஒருமனதின் மத்தியில்தான்" அவருடைய அதிகாரம் வல்லமையாய் தங்கியிருக்கும்!!

**தனக்கானதைத்தேடும் மனிதர்களாய் மாறாதிருக்க எச்சரிக்கையாயிருங்கள்:**

நாம் நம்முடைய சுய - இராஜ்ஜியத்தைக் கட்டுவதாகவோ, அல்லது நம்முடைய "தனி - மனிதனின் ஆதிக்கத்தை" நிலைநாட்டிட முயற்சிப்பதாகவோ தேவன் நம்மைக் கண்டால், நம்மைத் தனியே விட்டுச் சென்றுவிடுவார்! இன்றைய கிறிஸ்தவ உலகில் இவ்வித "தனி-மனிதனின் ஆதிக்கமே" ஏராளமாய் மாய்ந்து கிடக்கின்றது. ஆகிலும், இவர்களோ தாங்கள் "கிறிஸ்தவ ஊழியம்" செய்வதாகவே சொல்லிக் கொள் கிறார்கள்!! ஆனால், முழுக்க முழுக்க **தங்கள் ஊழியங்களை "சுய – ஆதாயத்தைக்" கருதியே** செய்கிறார்கள். அந்த 'ஆதாயத்தை' பணத்தை இலக்காகவோ அல்லது கனத்தை (புகழ்ச்சியை) இலக்காகவோ வைத்தே தேடுகிறார்கள். இவர்களுடைய லட்சணம் இப்படியாய் இவர்கள் யாவரும் "பாபிலோனையே" கட்டிக் கொண்டிருக்கிறார்கள்!!

தேவனை ஒருவரும் முட்டாளாக்கவே முடியாது! இதுபோன்ற பிரசங்கிகள் தங்களைப் பின்பற்றும் "ஏராளமானவர்களைக்" கூட்டி சேர்த்தாலும் தேவன் அவர்களை ஒருக்காலும் அங்கீகரிக்கவே மாட்டார். இவர்கள் "பழைய உடன்படிக்கையின் கூட்டத்தை" வேண்டுமானால் கூட்ட முடியுமேயல்லமால், "புதிய - உடன்படிக்கையின் சபையை" இவர்களால் ஒருக்காலும் கட்டவே முடியாது!!

"தெயுதாஸ்" என்பவனைக் குறித்து அப்போஸ்தலர்.5:36 - ல் நாம் வாசிக்கிறோம். அவன் தன்னைப் பின்பற்றும்படியான 400- பேர்களைச் சேர்ந்திருந்தான். 400-பேர்களைக் கொண்ட ஒரு சபை உண்மையிலேயே "கவர்ச்சிக்கத்தகு" பெரிய சபையேயாகும்! ஆனால் அவர்களோ "அவமாய்ப்

போனர்கள்" என வசனம் கூறுகிறது!! இதைப்போலவே "யூதாஸ்" என்பவனும் தன்னைப் பின்பற்றும் அனேக ஜனங்களைச் சேர்த்திருந்தான் என வாசிக்கிறோம்.... ஆனால் "அவனும் அழிந்து போனான்" என்றே வசனம் குறிப்பிடுகின்றது (அப்5:37).

இவ்விதமான ஜனங்கள் கிறிஸ்தவ சரித்திரத்தில் தொடர்ச்சியாக இருந்து கொண்டுதான் வருகிறார்கள். ஆனால், "கிறிஸ்துவின் சரீரத்தைக்" கட்டுவதென்பது முற்றிலும் வித்தியாசமானதோர் ஊழியமேயாகும்! நம்முடைய ஸ்தலத்திலும் 400-பேரைக் கூட்டி விடலாம். இருப்பினும், நாம் நமக்கானதைத் தேடுகிறவர்களாய் இருந்தால், நாம் "தெயுதாஸைக்" காட்டிலும் மேலானவர்கள் ஒன்றுமில்லை. ஆம், அதுபோன்ற ஊழியத்திற்குப் பின்பாக தேவன் ஒருக்காலும் ஆதரவாய் நிற்கவே மாட்டார். "ஆவிக்குரிய அதிகாரம்" என்பது அத்தனை சொல்லிமுடியா மதிப்புடையதாகும். தேவன் அதை யாதொருவனுக்கும் துரிதமாய் மிக எளிதில் தந்து விடவே மாட்டார்!!

இயேசுவின் குழுவில் "யூதாஸ்காரியோத்து" இருந்தபடியால், அவனுக்கு நிச்சயமாய் சிறந்த மதிப்பு இருந்திருக்கும். ஜனங்கள் இயேசுவை அதிகமாய் கனம் செய்தார்கள். அக்கனத்தில் நிச்சயமாய் யூதாஸ்காரியோத்தும் பங்கடைந்திருப்பான். ஆனால், அவை ஒன்றும் அவனுடைய "சுயத்தை - மையமாகக் கொண்ட சுபாவத்தை" மாற்ற வேயில்லை. அவனும், அழிந்து போனான்!

அதைப்போலவே, "தேமா" அப்போஸ்தலனாகிய பவுலின் உடன் ஊழியனாய் இருந்தான். உண்மையில், பவுலின் குழுவில் ஒருவன் இருப்பது அதிக மதிப்புடையதாகத் தான் இருந்திருக்கும்! அனேக விசுவாசிகள் பவுலை அதிகமாய் கனம் பண்ணினார்கள். இந்த தேமா பவுலோடு சேர்ந்திருந்தபடியால், அந்த கனத்தில் தானும் பங்கடைந்தான்! ஆனால், தன் இருதயத்தின் ஆழத்திலோ, பவுலின் சுய- வெறுப்பையும், தியாக ஆவியையும் அவன் கொண்டிருக்கவில்லையே!! மேலும், இந்த 'தேமா' கடுகளவும் **சுயநலமற்ற தீமோத்தேயு** போன்ற தேவ பக்தியான சகோதரர்களோடும் நெருக்கமாய் பழகி ஐக்கியப்பட்டிருந்தான். ஆனால் பரிதாபம், தேமாவோ "அவர்களின் ஆவியைப்" பருகாமலே இருந்து விட்டான்!!

இது போன்ற சம்பவங்கள் இயேசுவின் நாட்களில் நடந்தது, பவுலின் நாட்களிலும் நடந்தது... இப்போது, நம்முடைய நாட்களிலும் தொடர்ந்து சம்பவித்துக் கொண்டுதான் இருக்கிறது. சில சகோதரர்கள் தங்களுக்கென ஒரு மதிப்பை பெற்றிருக்கிறார்கள். ஆனால், அந்த மதிப்பு அவர்களின் சொந்த ஜீவியத்தினிமித்தமோ அல்லது ஊழியத்தினிமித்தமோ அல்ல... மாறாக, தேவனுடைய வலிமையான அதிகாரத்தைப் பெற்ற சில சகோதரர்களோடு இவர்கள் சேர்ந்திருந்தபடியால் கிட்டியதேயாகும்.

நம்முடையநிலை இப்படித்தான் இருக்குமென்றால், நம்முடைய

முடிவும் யூதாஸ்காரியோத்தைப் போலவும், தேமாவைப்போலவுமே முற்றுப் பெறும் என்பதில் ஒரு துளியும் சந்தேகமேயில்லை. தேவ பக்தியான சில சகோதரர்களோடு நாம் இணைந்திருப்பதினிமித்தமாக நாம் பரத்தின் திவ்விய அதிகாரத்தை ஒருக்காலும் பெற்றுவிட முடியாது. சுய லாபம், சுய பெயர் பிரஸ்தாபம், சுய- சொகுசு, சுய- வசதிகள்..... இவ்வாறு நமக்காகத் தேடும் யாவற்றிலிருந்தும் நம்மை நாமே கழுவிக் கொண்டவர்களாயிருந்தால் மாத்திரமே, தேவன் நம் பட்சத்தில் ஆதரவாய் நிற்பார். கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்குரிய ஆவிக்குரிய அதிகாரத்தையும் நாம் அப்போதுதான் பெற்றிட முடியும்.

நாம் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்ட வாஞ்சிக்கிறோமா? அல்லது நம்முடைய சொந்த ராஜ்ஜியத்தையா? தேவன் நம்முடைய இருதயங்களைக் காண்கிறார். பவுல் ஒரு முறை கூறும்போது, "தீமோத்தேயுவைப் போல சிறந்த உடன் ஊழியன் வேறொருவனும் என்னிடத்தில்லை" எனக் கூறினார். ஏனென்றால், "மற்றவர்களெல்லாரும் கிறிஸ்துவுக்குரியவைகளையல்லாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்" என பவுல் குறிப்பிட்டார். ஆனால், தீமோத்தேயு மாத்திரமே கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்குரிய உண்மையான அக்கறை கொண்டிருந்தான் (பிலி.2:19-21).

**எல்லாவற்றையும் தியாகம் செய்திட முழு மனம் வேண்டும் :**

பவுல் பெற்றிருந்ததைப் போன்ற ஆவிக்குரிய, அதிகாரத்தைப் பெற்றிட நாம் யாவருமே வாஞ்சிக்கக் கூடும். ஆனால், அவ்வாறு பெறுவதற்கு, பவுலைப்போலவே எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவைகளைக் குப்பையாகவும் மதிக்க வேண்டுமே! (பிலி.3:7-9).

இயேசு தன் பிதாவிடம் கூறும்போது, "என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள்" எனக்கூறினார். எனவே அவர் மிகுந்த உரிமையோடு "உம்முடையவைகள் யாவும் என்னுடையவைகள்" என அடுத்ததாக கூறினார் (யோ.17:10). நம்முடையவைகள் யாவும் தாராளமாய் தேவனுக்கு கொடுக்கப்பட்டுவிட்டால், தேவனுடைய யாவும் இப்போது நமக்கு தராளமாய் கொடுக்கப்பட்டு விடும்! நாம் அவருக்கு கொடுக்கின்ற அளவை வைத்தே அவர் நமக்கு கொடுக்கிறார். இதனிமித்தமே இன்றைய அனேக கிறிஸ்தவத் தலைவர்கள், "ஆவிக்குரிய அதிகாரத்தைப்" பெற்றிருக்கும் விஷயத்தில் கொடிய தரித்திரத்தில் இருக்கிறார்கள். ஆம், இவர்கள் **தங்களுக்குரிய யாவையும்** தேவனுக்கு கொடுக்கவேயில்லை!!

யோவான்.2:23-25 வசனங்களில், இயேசுவினிடத்தில் அனேகர் விசுவாசம் வைத்த போதிலும் கூட அவரோ அவர்களுக்கு இணங்கவில்லை என வாசிக்கிறோம். இவ்வாறு ஆண்டவர் இணங்க முடியாத (தன்னை ஒப்புக்கொடுத்திட முடியாத) ஜனங்களில் நாமும்கூட ஒருவராய் இருக்கக்கூடும்! ஏனெனில், அவர் நமக்குள் என்ன இருக்கிறது என காண்கிறார்... நம்முடைய மன நோக்கங்கள் என்ன என்பதையும் அறிந்திருக்கிறார்!!

நம்முடைய உத்தியோகமா? அல்லது, கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதா? என்றே தெரிந்து கொள்ளுதல் நமக்கு முன் வைக்கப் பட்டால், நாம் எதைத் தெரிந்து கொள்ளுவோம்? சபையைக் கட்டுவதற்கு அதிக நேரம் செலவிட வேண்டும் என்பதற்காக, நம்முடைய பூமிக்குரிய தொழிலின் முன்னேற்றத்தை இழப்பதற்கு ஆயத்தமாய் இருக்கிறோமா? அவ்வா றெல்லாம் இழப்பதற்கு நீங்கள் ஆயத்தமாய் இல்லாதபட்சத்தில், தேவன் தன்னை உங்களிடம் எதற்காக இணங்க வேண்டும்?

ஆண்டவருடைய ஜனத்திற்காக நாம் நம்முடைய இல்லத்தை தாராளமாய் திறந்தளித்திட ஆயத்தமாய் இருக்கிறோமா? அல்லது, நம்முடைய சொந்த சௌகரியம், தனிமை வசதி போன்ற இவைகள் நமக்கு அதிக முக்கியமாய் இருக்கிறதா? **இவ்வாறு, ஏதாகிலும் ஒரு பகுதியிலாகிலும் நாம் நமக்கானதைத் தேடுவோமென்றால், தேவனிடமிருந்து ஒருக்காலும் ஆவிக்குரிய அதிகாரத்தை நாம் பெற்றுக் கொள்ளவே முடியாது!** ஆம், நீங்கள் அதற்காக எவ்வளவுதான் உபவாசித்து ஜெபித்தாலும் கிடைக்காது!! தேவனை முட்டாளாக்கிட ஒருவராலும் கூடாதே!!

நாம் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்ட விரும்பினால் நம் ஜீவியத்தின் சகலமும். ... ஆம், "சகலமும்" தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு இரண்டாவது இடத்தைத்தான் பெற்றிருக்க வேண்டும். இவ்விஷயத்தில் தேவனிடம் பட்ச பாதம் ஒருதுளியும் கிடையாது. நாம் யாவரும் அவருக்கு முன் சமமானவர் களேயாவோம். அவர் மற்றவர்களுக்கு எதைச் செய்தாரோ அதை நமக்கும் செய்திடுவார். இயேசுவும் பவுலும் தங்கள் ஊழியங்களில் தேவனால் வல்லமையாய் அங்கீகரிக்கப்பட்டிருந்தார்கள்..... ஏனென்றால், அவர்கள் **ஓர் விலைக்கிரயத்தை** செலுத்தியிருந்தார்கள். அதே விலைக்கிரய த்தை நாமும் செலுத்துவதற்கு ஆயத்தம் கொண்டிருந்தால், அவர்களுக்கு செய்ததைப்போலவே நமக்கும் தேவன் நிச்சயமாய் செய்திடுவார்!!

நாம் சபையைக் கட்ட வேண்டுமென்றால், நம்முடைய பணமும், நம்முடைய எல்லா சேமிப்பும் தேவனுக்கே உரியதாய் இருக்க வேண்டும். பேழையைக் கட்டும்படி தேவன் நோவாவிடம் கூறியபோது, நோவா தேவனைப் பார்த்து "தேவனே, இவ்வளவு பெரிய பேழையைக் கட்டுவதற்குரிய செலவுகளை யார் கொடுக்கப்போகிறார்கள்?" என்று கேட்கவேயில்லை! ஒருவேளை அவ்வாறு கேட்டிருந்தால், அதற்கு தேவன், "இது என்ன கேள்வி நோவா? நீதான் செலவு செய்ய வேண்டும்! வேறு யாரிடமிருந்து எதிர்பார்க்கிறாய்?" என கூறியிருப்பார்!! ஆனால், நோவாவுக்கு இதுபோன்ற கேள்வியைக் கேட்பது அவசியமாய் இல்லை... ஏனெனில், அவருடைய ஊழியத்திற்கென்று யாரை அழைக்கிறாரோ, அவர்கள்தான் அவ்வூழியத்தின் பொருளாதாரத் தேவைகளை செலவு செய்ய வேண்டும் என்பது நோவாவுக்குத் தெரியும்!

ஆனால் இந்த உண்மையை நாம் அறிந்திருக்கிறோமா என்பதுதான் இப்போது கேள்வி! அப்பேழையைக் கட்டுவதற்கு தன்னுடைய சொந்த உடைமைகள் சிலவற்றை நோவா விற்க வேண்டியநிலை ஏற்பட்டிருக்கக்

*கூடும். இவ்வாறு தேவனுடைய ஊழியத்தின் பணத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தங்கள் சொந்த உடைமைகளையும் விற்றுவிட ஆயத்த மாயிருக்கும் தேவனுடைய ஊழியர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்?* **தங்களுடையவைகள் எல்லாவற்றையும் தேவனுக்குக் கொடுக்காதவர்கள், தேவனும் தன்னுடையவைகள் எல்லாவற்றையும் தங்களுக்குத் தரவில்லை என்ற உண்மையை சீக்கிரத்தில் கண்டுகொள்வார்கள்!**

*இன்றைய திரளான தேவஊழியர்களின் மனப்பான்மை எப்படி யுள்ளதென்றால் "கர்த்தருடைய ஊழியத்திற்குரிய பணம் வேறு யாரிடமிருந்தாவதுதான் வரவேண்டும், நிச்சயம் நம் சொந்த பையிலிருந்து அல்ல!!" என்றே எண்ணுகிறார்கள். காணிக்கை பெட்டியிலிருந்து கிடைக்கும் பணத்தை தாராளமாய் செலவழிப்பார்கள். ஆனால், கர்த்தருடைய ஊழியத்திற்கு தங்கள் சொந்த பணத்தை தாரளமாய் செலவு செய்வதில்லை!! தன் ஜீவியத்தில் பணத்தின் பிடிப்பிலிருந்து விடுபடாத ஓர் தேவனுடைய ஊழியன், ஒருக்காலும் "ஆவிக்குரிய அதிகாரத்தைப்" பெற்றிடவே மாட்டான்.*

*நாம் எப்போதாவது ஆண்டவரைப் பார்த்து "ஆண்டவரே உம்முடைய பணி என்னுடைய பணியேயாகும்! என்னுடைய பணத்திற்கும் உம்முடைய பணத்திற்கும் யாதொரு வித்தியாசத்தையும் நான் பார்க்கவே மாட்டேன்! எல்லாம் உம்முடையவைகளே!!" என சொல்லியிருக்கி றோமா? இவ்வாறு 'மெய்யான அர்த்தத்தோடு' நாம் ஆண்டவரிடம் சொல்லியிருக்கவில்லையென்றால், நாம் இன்னமும் பழைய உடன் படிக்கையின் கீழ்தான் இருக்கிறோம்! ஏனெனில், பழைய உடன் படிக்கையில்தான், ஜனங்கள் பணத்தில் 10% (தசமபாகம்) தேவனுக் கென்றும்; மீதமுள்ள 90% தங்களுக்கே சொந்தம் என்றும் எண்ணி யிருந்தார்கள். தங்களுடையவைகள் 10% தேவனுக்கு கொடுத்து விட்டால், அத்தோடு தங்கள் கடமை முடிந்துவிட்டது என்றும் எண்ணியிருந்தார்கள்.*

*ஆனால் இயேசுவோ, தன்னுடைய வருமானத்தில் 10 % மாத்திரமே தன் பிதாவுக்குத் தரும்படியாக இப்பூமிக்கு வரவில்லை. ஓர் புதிய உடன்படிக்கையை ஸ்தாபித்து, அதன்மூலம் ஓர் புதிய உடன்படிக்கை சபையைக் கட்டவே இயேசு இப்பூமிக்கு வந்தார். ஆகவேதான், அவர்* **தன்னுடைய பிதாவுக்கு 100% – யும் கொடுத்துவிட்டார்!!** *இப்போது நம்மைப்பார்த்து "என்னைப் பின்பற்றுங்கள்" என்றும் அழைக்கிறார். இவ்வாறு தன்னுடைய எல்லாவற்றையும் தேவனுக்குக் கொடுத்தவர்கள் மாத்திரமே ஆவிக்குரிய அதிகாரத்தைப் பெற்றிருக்க முடியும்!!*

*"என்ன விலைக்கிரயம் செலுத்தியாகிலும்" நாம் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்கு ஆயத்தம் கொண்டவர்களாய் இருந்திட வேண்டும். அக்கிரயம், நம்முடைய பணமோ, நம்முடைய கனமோ நம்முடைய சௌகரியமோ, நம்முடைய சரீர பெலனோ, நம்முடைய அந்தஸ்தோ, நம்முடைய வேலையோ அல்லது வேறு எதுவாயிருந் தாலும் அது நமக்கு ஒரு பொருட்டாய் இருந்திடக் கூடாது. ஆம், நம்*

ஆண்டவருக்காக நாம் தியாகம் செய்திட விரும்புவதில் "ஒரு வரையறை" நமக்கு இருக்கவே கூடாது! யாதொன்றிலும் நாம் நம்முடைய சொந்த வசதியையும் சொகுசையும் தேடவே கூடாது. எதைச் செய்தாலும், அவை கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்குக் தொடர்புடையதாகவே இருக்க வேண்டும். இப்பூமிக்குரிய உத்தியோகம் கூட, நம்முடைய 'பிழைப்பிற்காக' மட்டுமே சம்பாதிப்பதாக இருந்து, அதன்மூலம் யாருக்கும் பாரமில்லாத வர்களாய் இருக்க வேண்டும்.

இனியும் நாம் **தேவனிடத்தில் 'கஞ்ச' மனப்பான்மை** கொண்டிருக் கலாமா? நாம் மெய்யாய் மனந்திரும்பக்கடவோம்!

இனிவரும் நாட்களில், நாம் தேவனிடத்தில் ஐசுவரியவான்களாய் இருந்திடக்கடவோம்! அதன்மூலமாய், நம் ஜீவியத்தில் ஆவிக்குரிய அதிகாரத்தைப் பெற்று, நம் தேசத்தில் **கிறிஸ்துவின் சரீரத்தை** ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமைக்கென கட்டுவோமாக!!

## தகுதியான புருஷர்களே
## தேவனுக்குத் தேவை!

ஆம், இன்று அவருக்குத் தேவைப்படும் மனிதர்கள்.....

- அனுதினமும் **அவர் முகத்திற்கு முன் நின்று,** அவர் குரல் கேட்பவர்களாயிருக்க வேண்டும்,
- தேவனேயன்றி "தங்கள் இருதயத்தில்" வேறு எவர்மீதும் அல்லது வேறு எந்தப்பொருளின் மேலும் விருப்பமற்றவர்களாயிருக்க வேண்டும்,
- கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தினால் ஆட்கொள்ளப் பட்டு, 'பாவம்' அது எந்த ரூபமாயிருந்தாலும் அதைக் கடுமையாய் வெறுத்து, தங்கள் வழிகளிளெல்லாம் நீதியையும் சத்தியத்தையும் சிநேகிப்பவர்களாயிருக்க வேண்டும்,
- கோபத்தையும், பாவமான காம சிந்தைகளையும் ஜெயித்து, "சாகத்துணிவார்களேயல்லாமல்" அவைகளால் தங்கள் **சிந்தையிலும் பாவம்** செய்யாதவர்களாயிருக்கவேண்டும்,
- **சிலுவை சுமந்து வருவது,** அவர்களது தினசரி வாழ்க்கைக் கோலமாயிருந்து, பயத்தோடும் நடுக்கத்தோடும் தங்கள் இரட்சிப்பு நிறைவேறத் "தொடர்ச்சியாக" பிரயாசப்பட்டு பூரணத்தை நோக்கி கடந்து செல்பவர்களாயிருக்க வேண்டும்,
- என்னதான் கோபமூட்டும் சூழ்நிலை உருவானாலும், இன்னொரு மனிதரிடம் அன்பற்ற சுபாவம் கொள்ளும்படி சிறிதும் அசைக்கப்படாமல் "பரிசுத்தாவியினால் நிறைந்து" **அன்பில் வேரூன்றி** நிலைத்திருப்பவர்களாயிருக்க வேண்டும்,
- மனுஷீகப் புகழ்மாலையோ, ஆவிக்குரிய வளர்ச்சியோ, தேவனால் தரப்பட்ட ஊழியமோ, அல்லது வேறெதுவோ ஆனாலும் 'அவைகள்' அவர்களைத் "தாங்கள் பரிசுத்தவான்கள் எல்லாரிலும் மிகச் சிறியவன்" என்ற விழிப்புணர்வை இழக்கச் செய்யாமல், **தாழ்மையில் வேரூன்றி** நிலைத்திருப்பவர்களாயிருக்க வேண்டும்,

- தேவனுடைய சுபாவத்தையும்-நோக்கத்தையும் அவரது வார்த்தையின் மூலமாய் அறிந்து, அது எவ்வளவு **சிறிய கற்பனையானலும் அதற்குக் கீழ்படியாமல் போகாதபடிக்கு** அல்லது மற்றவர்களுக்கு அதைப் போதிப்பதற்கு அலட்சியமாயிராத படிக்கு, அவ்வார்த்தைகளுக்கு நடுங்குபவர்களாயிருக்க வேண்டும்,
- தேவனுடைய முழு ஆலோசனைகளையும் பறைசாற்றி, லௌகீக வேசி மார்க்கத்தையும், வசனத்திற்குப் புறம்பான மனுஷீகப் பாரம்பரியத்தையும், தைரியமாய் வெளியரங்க மாக்குகிறவர்களாயிருக்க வேண்டும்,
- தேவபக்தியின் இரகசியமான, கிறிஸ்து மாம்சத்தில் வெளிப் பட்டது குறித்தும், அந்த மாம்சத்தினூடே இயேசு திறந்து வைத்த "புதிதும் ஜீவனுமான மார்க்கத்தைக்" குறித்தும் **பரிசுத்தாவியின் வெளிப்பாடு** நிறைந்தவர்களாயிருக்க வேண்டும்,
- ஜாக்கிரதை உள்ளவர்களாயும் - கடின வேலை செய்பவர் களாயும், அதே சமயத்தில் நகைச்சுவை உணர்வுள்ளவர்களாயும், இளைப்பாறியிருக்க அறிந்தவர்களாயும், சின்னஞ் சிறுவர்க ளோடு மகிழ்ந்து விளையாட அறிந்தவர்களாயும்; தேவனுடைய இயற்கைவரங்களின் ரம்மியத்தை ரசித்து ருசிப்பவர்களாயிருக்க வேண்டும்,
- துறவறம் அற்றவர்களாய்..... **ஆனால்,** அதே சமயத்தில், கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்பவர்களாயும், எந்த கஷ்டத்திற்கும் அஞ்சாதவர்களாயும் இருக்க வேண்டும்,
- விலையுர்ந்த ஆடைகளை உடுத்த வேண்டுமென்ற ஆர்வமோ, புதுப்புது இடங்களை காண வேண்டுமென்ற விருப்பமோ அற்றவர்களாயும், பக்தி விருத்தி இல்லாத நிகழ்ச்சிகளுக்கு தங்கள் நேரத்தை வீணடிக்காதவர்களாயும், தங்கள் பணத்தை இஷ்டமான பொருட்களையெல்லாம் வாங்கி சீரழிக்காதவர் களாயும் இருக்க வேண்டும்,
- கவர்ச்சியான 'விதவிதமான' உணவுப் பதார்த்தங்களின் மேல் உள்ள விருப்பத்தைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்தியவர் களாயும், இசை-விளையாட்டு-மற்றும், பொழுதுபோக்கு களியாட்டுகளுக்கு அடிமையாகாதவர்களாயும் இருக்க வேண்டும்,
- அக்கினி போன்ற உபத்திரவங்கள், வசை மொழிகள், பாடுகள், **பொய்யாய் குற்றஞ்சாட்டப்படுதல்,** சரீரசுகவீனங்கள், பொருளாதார நெருக்கடிகள்,உறவினர்கள் மற்றும் மார்க்கத்

தலைவர்களிடமிருந்து எழும்பும் **எதிர்ப்புகள்,** ஆகியவை மூலம் தேவனுடைய கரத்தில் வெற்றிகரமாய்ப் பயிற்றுவிக்கப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்,

- எவ்வளவு இழிவான பாவியானலும், எவ்வளவு மோசமான விசுவாசியானாலும் அவர்களுக்காய் பரிதபித்து, "தாங்களே பாவிகளிலும் பிரதான பாவி" என்ற உண்மையை அறிந்தவர்களாய், அவர்களுடைய மீட்பில் நம்பிக்கை கொண்டு, **இரக்கத்தால்** நிறைந்தவர்களாய் இருக்க வேண்டும்,

- தங்கள் **பரலோகத் தகப்பனின் அன்பின் பாதுகாப்பில்** ஆழமாய் வேரூன்றி நிலைத்திருக்கிறபடியால், ஒன்றையும் குறித்து ஒருபோதும் மனக்கிலேசம் அடையாதவர்களாயும், சாத்தானுக்கோ; பொல்லாத மனிதர்களுக்கோ; நெருக்கடியான சூழ்நிலைகளுக்கோ; அல்லது வேறெதற்குமே ஆனாலும் கொஞ்சம் கூட **அஞ்சாதவர்களாய்** இருக்க வேண்டும்,

- ஆளுகை செய்யும் சர்வ வல்லவர், தங்கள் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் இடைப்பட்டு சகலத்தையும் தங்கள் நன்மைக்கென்றே கிரியை செய்கிறார் என்பதை விசுவாசிப்பதினிமித்தம், எல்லா மனிதர்களுக்காகவும் - எல்லாவற்றிற்காகவும் - எல்லா சூழ்நிலைகளுக்காகவும் எப்போதும் ஸ்தோத்தரித்து **தேவனுடைய இளைப்பாறுதலில்** பிரவேசித்தவர்களாய் இருக்க வேண்டும்,

- "மனசு சரியில்லாமற் " போகச் செய்யும் எல்லாவற்றையும் ஜெயித்து, கர்த்தரில் மாத்திரமே தங்கள் மகிழ்ச்சியைக் கண்டுகொண்டவர்களாயும், கர்த்தரின் மகிழ்ச்சியால் எப்போதும் நிரம்பியவர்களாயும் இருக்க வேண்டும்,

- தங்கள் மீதோ, சுபாவமான தங்கள் திறமை மீதோ சிறிதும் நம்பிக்கை வைக்காமல், தேவனே தங்கள் எல்லா சூழ்நிலைகளிலும் கொஞ்சமும் கைவிடாமல் உதவி செய்பவர் என்று **அவர் மீதே தங்கள் முழு நம்பிக்கையையும்** வைத்திடும் "உயிருள்ள விசுவாசம்" பெற்றவர்களாய் இருக்க வேண்டும்,

- தங்கள் சுய அறிவு உந்துகிறபடி ஜீவிக்காமல், பரிசுத்தாவியின் வழி நடத்துதலின்படி ஜீவிப்பவர்களாயிருக்க வேண்டும்,

- உணர்ச்சித் தூண்டுதலால் பெற்ற போலி அதிர்ச்சி அனுபவமாயும் அல்ல; அல்லது வேத அறிவு வாக்குவாதத்தின் மூலம் தாங்களாக அனுமானித்துக்கொள்ளும் அனுமானமாயும் அல்ல; மாறாக, கிறிஸ்துவால் **நிஜமாகவே** பரிசுத்தாவியாலும், அக்கினியாலும் **அபிஷேகிக்கப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்,**

- தேவனால் அருளப்பட்ட உன்னத வரங்களைப் பெற்று, "தொடர்ச்சியான ஆவியின் அபிஷேகத்தில்" ஜீவிக்கிறவர்களாய் இருக்க வேண்டும்,

- **சபையானது கிறிஸ்துவின் சரீரமென்ற** (ஓர் கூட்டம் அல்ல அல்லது ஓர் ஸ்தாபனமும் அல்ல) வெளிப்பாட்டைப் பெற்று, தங்கள் முழு பெலத்தையும், ஆஸ்தியையும், எனவே, ஆவிக்குரிய வரங்களையும் **அச்சபை கட்டப்படுவதற்கே** அர்ப்பணிக்கிறவர்களாய் இருக்க வேண்டும்,

- பரிசுத்தாவியின் உதவியால் தங்கள் **நாவை அடக்குவதற்கு** கற்றுக்கொண்டவர்களாயும், இப்போதோ அவர்களின் நாக்கு பரத்திற்குரிய வார்த்தைகளால் கொழுந்திட்டுப் பற்றி எரிவதாயும் இருக்க வேண்டும்,

- எல்லாவற்றையும் வெறுத்துவிட்டுவிட்டு, பணத்தின் மீதோ அல்லது உலகப் பொருட்களின் மீதோ கொஞ்சமும் பிடிப்பு இல்லாதவர்களாயும், பிறரிடத்திலிருந்து யாதொன்றையும் **அன்பளிப்பாய் பெற** ஒருபோதும் விருப்பம் அற்றவர்களாய் இருக்க வேண்டும்,

- இப்பூமிக்குரிய எல்லா தேவைகளுக்கும் "தேவனையே" நம்புகிறவர்களாயும், தங்கள் தேவையைக் குறித்து 'பேச்சு வாக்கில்' தெரியப்படுத்தாதவர்களாயும், தங்கள் உரையாடலின் போதோ அல்லது கடிதம் மூலமோ அல்லது சுற்றறிக்கை மூலமோ தங்கள் ஊழியத்தை விளம்பரமாக்கி ஜம்பம் செய்யாதவர்களாயும் இருக்க வேண்டும்,

- பிடிவாத குணம் இல்லாமல் மென்மையானவர்களாயும், குறை சொல்லப்படுவதற்கு மனம் திறந்தவர்களாயும், தங்களின் விவேகமுள்ள மூத்த சகோதரர்களால் திருத்தப்படுவதற்கு ஆர்வம் உள்ளவர்களாயும் இருக்க வேண்டும்,

- மற்றவர்களை ஆளுகை செய்யவோ அல்லது புத்தி சொல்லவோ ஆர்வம் அற்றவர்களாய் (ஆலோசனை கேட்கும் போது புத்தி சொல்வது தவறில்லை) **சாதரண சகோதரனாயும்,** மற்றெல்லார்க்கும் கீழாய் சென்று சேவிக்கும் **வேலையாளாய்** இருப்பதற்கு மாத்திரமே விருப்பம் கொண்டு, மூத்த சகோதரன் அல்லது லீடர் என எண்ணப்படுவதற்கு ஏக்கம் அற்றவர்களாய் இருக்க வேண்டும்,

- இசைந்து போவதற்கு இலகுவானவர்களாயும், பிறரால் அசௌகரியமாக்கப்படுவதற்கும்; பிறர் தங்களில் ஆதாயம் அடையும் படிக்குத் தங்களை விட்டுத்தருபவர்களாய் இருக்க வேண்டும்,

- கோடீஸ்வரனோ- பிச்சைக்காரனோ, வெள்ளைத் தோல் உடையவரோ- கருப்புத் தோல் உடையவரோ , புத்திமானோ - புத்தியீனனோ, நாகரீகவானோ - நாகரீகமற்றவனோ; ஆகிய இவர்களுக்குள் எந்த வேற்றுமை பாகுபாடும் காட்டாமல் **எல்லோரையும் சமமாய்** நடத்துகிறவனாய் இருக்க வேண்டும்,
- கிறிஸ்துவின் பிரமாணங்களுக்கு கீழ்படிவதற்கு அல்லது கிறிஸ்துவைப் பற்றும் தியானத்திலிருந்து "சிறிதேனும் கூட" குளிர்ந்து விடுவதற்கு..... தங்கள் மனைவியாலோ பிள்ளைகளாலோ, உறவினர்களாலோ, நண்பர்களாலோ, அல்லது வேறு விசுவாசிகளாலோ சிறிதும் வசப்படுத்தப்பட முடியாதவர்களாய் இருக்க வேண்டும்,
- சாத்தான் வழங்கும் புகழ் அல்லது பணம் அல்லது வேறு யாதொன்றிற்காகவும் **ஒத்தவேஷம் தரிப்பதற்கு "லஞ்சம்"** தரப்பட முடியாதவர்களாய் இருக்க வேண்டும்,
- கிறிஸ்துவுக்காய் **அஞ்சாநெஞ்சுடை சாட்சிகளாய்** விளங்கி மார்க்கத் தலைவர்களுக்கோ, அரசாட்சி தலைவர்களுக்கோ கிஞ்சித்தும் அச்சமற்றவர்களாய் இருக்க வேண்டும்,
- இந்த பூமியில் எந்த மனிதரையும் பிரியப்படுத்த விருப்பமற்றவர்களாய், தேவனை மாத்திரமே பிரியப்படுத்துவதற்கு 'ஒருவேளை' எல்லா மனிதரையுமே இடறச்செய்வதற்கும் ஆயத்தமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்,
- வாழ்க்கையின் தேவை, சொந்த வசதி என்ற எல்லையைக் கடந்து நின்று, தேவனுடைய இராஜ்ஜியத்தையே எக்காலமும் தலையானதாய்த் தேடும் மனிதர்களாய் இருக்க வேண்டும்,
- தேவனுக்கு "செத்த கிரியைகளைச்" செய்யும் கதியை அடையும்படி மற்றவர்களாலோ அல்லது தங்கள் சுயபுத்தியாலோ கட்டாயம் செய்யப்பட முடியாதவர்களாய், அதே சமயத்தில் தங்கள் வாழ்க்கையில்தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தத்தை நிறைவேற்றுவதற்கோ ஆர்வமும், அதில் மனநிறைவும் காண்பவர்களாய் இருக்க வேண்டும்,
- கிறிஸ்தவ ஊழியங்களில் மனுஷீகத்திற்கும், ஆவிக்குரியவற்றிற்கும் உள்ள வேறுபாட்டை சுட்டிக் காட்டும்படி ஆவியைப் பகுத்தறியக் கூடியவர்களாய் இருக்க வேண்டும்,
- உலகப்பொருட்களை பூமிக்குரிய கண்ணோக்கின்படி அல்லாமல், **பரலோக கண்ணோட்டத்தின்படி** காண்பவர்களாய் இருக்க வேண்டும்,

- தேவனுக்கு செய்யும் ஊழியத்திற்காக வழங்கப்படும் எவ்வித மான உலகப்புகழ்ச்சியையும், எந்தப் பட்டங்களையும் உதறித்தள்ளி அவைகளை ஏற்றுக்கொள்ள மறுத்து நிற்பவர்களாய் இருக்க வேண்டும்,
- தாராளமாயும், மனப்பூர்வமாயும், அந்தரங்கமாயும், **ஞானத்தோடு கொடுப்பதற்கு** கற்றுக் கொண்டவர்களாய் இருக்க வேண்டும்,
- எப்படியாகிலும் சிலரை இரட்சிப்பதற்கு, எல்லா மனுஷருக்கும் 'எல்லாமுமாய்' மாறுவதற்கு இணக்கம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்,
- பிறர் 'இரட்சிக்கப்பட்டது' மாத்திரமல்லாமல் அவர்கள் 'சீஷர்களாக்கப்பட்டு' சத்தியத்தை அறிகிற அறிவுக்கும், தேவனுடைய பிரமாணங்கள் எல்லாவற்றிற்கும் கீழ்படியும் ஸ்தானத்தை அவர்கள் அடைவதைக் காணும் பொருட்டு, வாஞ்சித்து தவிப்பவர்களாய் இருக்க வேண்டும்,
- இப்பூமியின் எல்லை எங்கும், தேவனுக்கென்று "**தூய்மை யான சாட்சிகள்**" நிலைநிறுத்தப்படுவதைக் காண்பதற்கு ஏக்கம் நிறைந்தவர்களாய் இருக்க வேண்டும்,
- சபையில் கிறிஸ்து மகிமைப்படுவதைக் காண்பதற்கு பட்சிக்கும் பக்தி வைராக்கியம் நிறைந்தவர்களாய் இருக்க வேண்டும்,
- எந்த விஷயமாயிருந்தாலும் அதில் **தனக்கானதை நாடாத வர்களாய்** இருக்க வேண்டும்,
- ஆவிக்குரிய அதிகாரமும், அந்தஸ்தும் நிறைந்தவர்களாய் இருக்க வேண்டும்,
- அவசியமேயானால், இப்பூவுலகில் தேவனுக்கென்று **தனித்து** நிற்கவும் துணிந்தவர்களாய் இருக்க வேண்டும்,
- தங்களுக்கு முன் சென்ற அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் போன்று, **முழுக்க முழுக்க ஒத்த வேஷம் தரியாத** புருஷர்களே, ஆ! அந்த மனிதர்களே தேவனுக்கு தேவை!!

இன்று உலகில், இப்பேர்ப்பட்ட மனிதர்கள் **மிக மிக கொஞ்சம் பேர்களே** இருக்கிறபடியால், தேவனுடைய தூயபணி பாதிக்கப்பட்டுள்ளது!

பாவமும் வேசித்தனமும் நிறைந்த இன்றைய சந்ததி நடுவில், ஒத்த வேஷத்தில் மூழ்கித்திளைக்கும் இன்றைய கிறிஸ்தவத்தின் மத்தியில், தேவனுக்கென்று **நீங்களே** இப்படிப்பட்ட மனிதராய் இருப்பதற்கு உங்கள் முழு இருதயத்தோடும் தீர்மானம் எடுங்கள். தேவனிடத்தில் பட்சபாதம் இல்லையே! ஆகவே, நீங்கள் மாத்திரம் இப்படிப்பட்ட

*மனிதராய் இருப்பதற்கு உங்கள் முழு இருதயமாய் வாஞ்சை கொண்டு விட்டால், இப்போது* **நீங்களும்** *இப்பேர்பட்ட மனிதராய் மாறி விடுவீர்கள் என்பது உறுதி!! தேவன் எதிர் நோக்கும் பூரண ஒப்புக் கொடுத்தலும், கீழ்படிதலும், நீங்கள் "உணர்ந்து செயல்படுகிற" உங்கள் வாழ்க்கையின் எல்லை மாத்திரமே! (அதுஒருவேளை மிகக் குறுகிய எல்லையாயும் இருக்கலாம்).*

*இந்த "உணர்ந்து செயல்படுகிற" எல்லைக்குள் நீங்கள் இப்படிப்பட்ட மனிதராய் மாறிவிடுவது அதிநிச்சயமே! உங்களின் இந்தக் குறுகிய எல்லையிலிருந்து பூரணத்தை நோக்கி நீங்கள் கடந்து செல்லும்போது, உங்கள் எல்லை விரிவடைந்து கொஞ்சம் கொஞ்சமாய் அது விசாலமடைந்து விடும்! இவ்வாறிருக்க, நீங்கள்.... ஆம்,* **நீங்களே** *அந்த மனிதராய் ஏன் மாற முடியாது என்பதற்கு எந்த வித சாக்குப் போக்கிற்கும் இடமேயில்லை!!*

*நம் மாம்சத்தில் நன்மை ஒன்றும் வாசமாயில்லையே! எனவே மேற்கண்ட குணாதிசயங்கள் நம்மில் காணப்படுவதற்கு தேவனிடத்திலிருந்து கிருபையை அதிகமாய் வாஞ்சித்துத் தேடுவோமாக!!*

*முடிவடையப்போகும் இக்கடைசிக் காலத்தில், நீங்களும் இப்படிப்பட்ட புருஷராய் மாறுவதற்கு அவர் தன் கிருபையைத் தரும்படி,* **அனுதினமும்** *தேவனை நோக்கி கதறி மன்றாடி ஜெபியுங்கள்!!*

*கேட்பதற்கு காதுள்ளவன் எவனோ அவன் கேட்கக்கடவன்!*

**"எனக்கு முன்பாக அவர்களில்.... ஒரு மனுஷனைத் தேடினேன்!" என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் (எசே.22:30).**

**ஆண்டவரின் மன ஏக்கம்:**

*"கொற்றவன் என் கை அழைப்பையும் கண் அசைவையும்*
*விழிப்புடன் நோக்கும் ஒருவனையே தேடுகின்றேன்!*
*அவனே, நான் வழங்கும் பணியை நான் மகிழ செய்திடுவான்!*
*அவனோ, நான் வழங்கா பணியை பாராமுகமாய் தள்ளிடுவான்!!*
*என் மனமொத்த அம்மனிதனை கண்டடைந்தால்....*
*ஆ, என் மகிழ்ச்சி அளவிடமுடியாதே....! ஆம், அவன்தான்*
*என் விருப்பம் அனைத்தையும் நிறைவேற்றிடுவான்!*
*எஜமானின் மனதறிந்த என் ஊழியன் அவனே!!*